
# தர்ம சாஸ்திரம்



ஸ்ரீ சுரபி ஜகத்குரு சதாப்தி பப்ளிகேஷன்ஸ்

# தர்மசாஸ்த்ர ஸங்க்ரஹம்

ஆசிரியர்
ஸ்ரீ S.V. ராதாக்ருஷ்ண சாஸ்த்ரிகள்

வெளியீடு

ஸ்ரீ சுரபி ஜகத்குரு சதாப்தி பப்ளிகேஷன்ஸ்
சென்னை – 600 033

புதிய எண்.84/12, லேக் வியூ ரோடு,
மேற்கு மாம்பலம், சென்னை – 600 033.
போன் : 4747066

வெளியீடு

முதற்பதிப்பு : அக்டோபர் 1994

இரண்டாம் பதிப்பு : ஜூன் 2000

மூன்றாம் பதிப்பு : ஜூலை 2002

*அச்சிட்டோர்:*

*ஸ்ரீ சுரபி பிரிண்டர்ஸ்*
*158/12, லேக் வியூ ரோடு,*
*மேற்கு மாம்பலம்,*
*சென்னை – 33.*

Phone : 22115

Sri Chandramouleeswaraya Namaha :

SRI SANKARA BHAGAVADPADACHARYA PARAMPARAGATHA

**His Holiness Sri Kanchi Kamakoti Peetadhipathi**

**JAGADGURU SRI SANKARACHARYA SWAMIGAL**

**Srimatam Samsthanam**

**No. 1, SALAI STREET, KANCHEEPURAM - 631 502.**

*CAMP* : காஞ்சீபுரம் *DATE* 19. 9. 94

பிரம்மசாரி, கிருஹஸ்தன் என்ற நிலைகளிலும், வேதம் ஸ்ம்ருதி முதலானதில் பெருநம்பிக்கையுடன் நம் பெரியோர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக கையாண்டு நடைமுறைக்கு கொணர்ந்த ஸதாசாரங்களைப் பின்பற்றுவதன் மூலம் "தன் சாகைக்குரிய வேதபாகத்தை நெருக்கமாக அத்யயனம் செய்வது, தனது நித்ய நைமித்திக கர்மாக்களை முறைப்படி வழுவாமல் சிரத்தையுடன் அனுஷ்டிப்பது இவற்றை ஈச்வரனுக்கு அர்பணம் செய்வதால் சித்த சுத்தி பெற்று ஆத்மஞானம் பெறுவது எனப்படி படியாக எல்லா சிரேயஸ்ஸுகளையும் பெறலாம்". வேதோ நித்ய மதீயதாம் தது திதம் கர்ம ஸ்வநுஷ்டீயதாம் தேநேசஸ்ய விதீயதாம் அபசிதி: என்று ஆதிசங்கர பகவத்பாதர்கள் அருளிசெய்தபடி இந்த நடைமுறையை நமக்கு தொகுத்து அளித்த ஸ்ம்ருதி முக்தாபலம், நிர்ணயஸிந்து முதலிய தர்ம சாஸ்திர நூல்களின் வாயிலாக உரியவற்றை தமிழில் சுருக்கமாக பல பெரியோர்கள் தொகுத்துள்ளார்கள். இன்றைய சமுதாய நிலையை கருத்தில்கொண்டு எளிய தமிழில் "தர்மசாஸ்திர சுருக்கம்" என்ற நூல் நமது பரம சிஷ்யர் திருச்சி சி.வே. ராதாகிருஷ்ண சாஸ்திரிகள் அழகாக தொகுத்து பவானி பதிப்பகத்தின் அதிபர். ஸ்ரீ M.S. அருணாசலம் அவர்கள் மூலம் வெளியிட இருப்பதை கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம்.

ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யர்களின் அருள்வாக்கு படி தார்மிகமான ஸதாசாரங்களை பின்பற்றி எல்லா சிரேயஸ்ஸுகளும் பெற்று நல்வாழ்வு வாழுமாறு வாழ்த்தி ஆசீர்வதிக்கிறோம்

பாவ - பாத்ரபத - பூர்ணிமா

நாராயண ஸ்ம்ருதி

# பதிப்புரை

ஒரு நூறாண்டு காலமாக நம்மேல் திணிக்கப்பட்ட - நமது நடைமுறைக்கு ஒவ்வாத - வெளிநாட்டுக் கலாசாரம் நமது உறுதியைக் குலைத்து நம் நடைமுறையை முற்றிலும் நமது மேன்மைக்கு ஒவ்வாததாக மாற்றி அமைத்து விட்டது. சக்கரம் சுழல்வது போல் மறுபடியும் நமக்கு நம் பண்பாட்டில் நம்பிக்கையும் பெருமையும் உண்டாகி அதன் அவசியத்தையும் உணரத் தொடங்குகிறோம். நம் பண்பாட்டைப் பற்றி நம் முன்னோர்கள் நமக்குத் தொகுத்தளித்த நூல்களை இன்று புரிந்து கொள்வது - இடையே ஏற்பட்ட கலக்கத்தின் விளைவாக - சற்று சிரமமளிப்பதாகிறது. அதனால் இன்றைய சூழ்நிலைக்கேற்பச் சுருக்கியும் தெளிவாகவும் தமிழில் தொகுத்தளிப்பதன் அவசியத்தை உணர்கிறோம்.

தமிழில் வர்ணாசிரம தர்மம், ஆந்ஹிக தர்மம், சிராத்த முறை முதலியவற்றை மிக அழகாக மிகச் சுருக்கமாக **தர்மசாஸ்திர ஸங்கிரஹம்** என்ற தலைப்பில் விளக்குகின்ற பொறுப்பை திருச்சி வைத்ய ஸ்ரீ எஸ.வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி அவர்கள் ஏற்றுக் கொண்டார்.

ஸ்ரீ ராதாகிருஷ்ண சாஸ்திரி சிறந்த வைதிக ஆசார ஸம்பன்னர்களின் குலத்தில் பிறந்தவர். தன் பிதாவான சிமிழி பிரும்மஸ்ரீ வெங்கடராம சாஸ்திரிகளிடம் வேதத்தையும் அத்தியயனம் செய்து சிஷ்டாசாரங்களைத் தெரிந்து கொண்டார். ஸ்ரீமாதாவான அம்பாளின் அருளால் சிறந்த வாக்கு வன்மை பெற்றவர். ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்திற்கு ஸ்ரீ பாஸ்கரராயரது பாஷ்யத்தை ஒட்டியும், ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்திரத்திற்கு ஸ்ரீசங்கர பகவத்பாதர்களின் பாஷ்யத்தை ஒட்டியும் விரிவுரை எழுதி வெளியிட்டுள்ளார். ஸம்ஸ்கிருத ஸ்ரீ என்ற ஸம்ஸ்கிருத பத்திரிகையின் ஆசிரியராக உள்ளவர். மற்றும் பல நூல்களை ஆராய்ந்து வெளியிட்டவர். வைதிக தர்மங்களைப் பற்றி கிருஹஸ்தர்களுக்கும் பிரும்மசாரிகளுக்கும் விளக்கம் தருகின்ற நோக்குடன் ஸ்ரீகாஞ்சீ காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்களால் அடிக்கடி நடத்தப்பெறும் வைதிகப் பண்பாட்டுப் பயிற்சி முகாம்களில் ஸ்ரீஆசாரியாளின் ஆஜ்ஞையால் பல்வேறு விஷயங்களில் விளக்கம் தந்து வருகிறார். ஸ்ரீ ஆசாரிய ஸ்வாமிகளின் பரம கருணைக்கு மிகவும் பாத்திரமானவர். அவர் இந்த நூலின் அமைப்பில் பொறுப்பேற்று மிக அழகாக பல நூல்களிலிருந்தும் அரிய விஷயங்களைத் திரட்டி எளிய தமிழில் எழுதித் தந்துள்ளார். அன்னாருக்கு நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம்.

எம்.எஸ். அருணாசலம்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பிரார்த்தனை | 1 |
| முன்னுரை – தர்மம் | 2 |
| தர்மத்தைப் போதிக்கின்ற நூல்கள் | 3 |
| **முதல் பாகம்** | |
| வர்ணதர்மமும் ஆசிரமதர்மமும் | 6 |
| ஸம்ஸ்காரங்கள் | 10 |
| கர்ப்பாதானம் | 13 |
| பும்ஸவனம் | 14 |
| ஸீமந்தோன்னயனம் | 15 |
| ஜாதகர்மம் | 16 |
| நாமகரணம் | 17 |
| கர்ணவேதனம் | 17 |
| சூர்ய சந்திர தர்சனம் | 18 |
| அன்னப்ராசனம் | 18 |
| அப்தபூர்த்தி | 19 |
| சௌளம் – சூடகர்மம் | 19 |
| அக்ஷராப்பியாஸம் | 20 |
| உபநயனம் | 21 |
| ஸமாவர்த்தனம் வேதவிரதம் | 29 |
| விவாஹம் | 32 |
| ஔபாஸனம் | 34 |
| ஸ்தாலீபாகம் மறுவிவாஹம் | 35 |
| வானப்ரஸ்தம் — ஸன்யாஸம் | 37 |

இரண்டாம் பாகம் – ஆந்ஹிகங்கள் 39

ஆந்ஹிக நியமங்கள் 41

விழித்தெழுதல் 44

நல்லதைக் காணல் – மலஜலநீக்கம் 45

கண்டூஷம் – ஆசமனம் 47

தந்ததாவனம் 50

ஸ்நானம் 51

ஸ்நானம் செய்ய ஏற்ற நீர்நிலைகள் 54

நைமித்திகஸ்நானம், கிரஹணஸ்நானம் 59

ஸங்கிரமணஸ்நானம் – ரஜஸ்வலைஸ்நானம் 60

நோயுற்றவன் ஸ்நானம் – புண்யகாலதேசஸ்நானம் 61

அப்யங்கஸ்நானம் 63

புண்யதீர்த்தஸ்நானம் 64

கௌணஸ்நானம் 65

வஸ்திரதாரணம் 66

புண்டிரதாரனம் 68

ஸந்தியாவந்தனம் 69

அக்னி உபாஸனை 75

வபனம் 80

கிருஹகிருத்யம் 80

பிரும்மயஜ்ஞம் 81

தேவருஷிபித்ருதர்பணம் 85

தேவபூஜை 86

பஞ்சமகாயஜ்ஞங்கள் வைச்வதேவம் 91

அதிதி – அப்யாகத பூஜை 93

போஜனம் 94

தாம்பூலம் – மாலைப் பொழுதைக் கழித்தல் 111

இரவில் நியமங்கள் 112
பொது நியமங்கள் 113
சுத்தமானதும் சுத்தமாக்குவதும் 120

மூன்றாம் பாகம்
ஆசௌசம் 124
ஜனனாசௌசம் 126
ஞாதி - ஸபிண்டர் 131
மரணா சௌசம் 132

நான்காம் பாகம்
பித்ருகாரியமும் நாற்பது ஸம்ஸ்காரங்களும் 147
ஷண்ணவதி சிராத்தங்கள் 151
மஹாளய சிராத்தம் 155
காருணிக பித்ருக்கள் 161
நாந்தீசிராத்தம் 162
அஷ்டகை முதலியவை 164

ஐந்தாம் பாகம்
பித்ருகார்யம் சிராத்தம் 166
வாழ்வின் இறுதியில் செய்ய வேண்டியவை 167
உத்தரக்ரியை செய்வது யார் 171
அந்திமக்கிரியை 175
கனனமும் தகனமும் 177
நக்னப்பிரச்சாதனம் 183
திலோதகம் - வாஸோதகம் 185
ஏகோத்தர விருத்தி சிராத்தம் 186
நவசிராத்தம் ஸஞ்சயனம் 187
தர்ப்பஸம்ஸ்காரம் 190

பத்தாம் நாளில் 194
பதினோராம் நாளில் 197
ஸபிண்டீகரணம் 198
ஏகோத்திஷ்டம் 204
கிருஹயஜ்ஞம் 211
தீக்ஷை - மாஸிகம் அநுமாஸிகம் ஸோதகும்பம் 212

ஆறாம் பாகம்
சிராத்தம் 217
சிராத்த தேவதைகள் 220
சிராத்த நியமங்கள் 224
இஷ்டப நதி - மற்ற நியமங்கள் 239

உ

**ஸ்ரீ குருப்யோ நம:**
**நமோ தர்மப்ரவர்தகேப்யோ மஹத்ப்ய:**

## பிரார்த்தனை

**சுக்லாம்பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்**
**ப்ரஸன்னவதநம் வந்தே ஸர்வவிக்நோபசாந்தயே.**

வெண்ணிற ஆடை அணிந்தவரும் எங்கும் நிரம்பியுள்ளவரும் நிலா போன்ற மேனி நிறம் கொண்டவரும் நான்கு கைகளுடன் கூடினவரும் அருள் நிரம்பிய முகம் உள்ளவருமான விநாயகப் பெருமானை எல்லா இடையூறுகளும் விலகவேண்டி வணங்குகிறேன்.

**மம தர்மே மதிம் குர்யா: அதர்மாத் மாம் நிவர்தய.**
**லோகோ(அ)யமனுகூலோ மே பவேத் த்வத்க்ருபயா ப்ரபோ.**

இறைவ! தர்மத்தில் என் நாட்டத்தைச் செலுத்துவீராக! அதர்மத்திலிருந்து என்னைத் திருப்புவீராக! அறநெறியில் செல்கின்ற எனக்கு உன் கருணையால் இந்த உலகமனைத்தும் அனுகூலமாக இருக்கட்டும்!

# தர்மசாஸ்திரஸங்கிரஹம்

## முன்னுரை

**தர்மம் :-**

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வு சிறப்படைவதற்காகச் செய்கின்ற செயல்களனைத்தும் தர்மமாகும். அப்படிப்பெறுகின்ற சிறப்பும் தர்மமே. அதேவழியில் சமுதாயமாக ஒவ்வொரு மனிதனும் இணைந்து அந்த சமுதாயத்தின் சிறப்பிற்காகச் செய்யும் பணிகளும் அவற்றால் பெறுகின்ற சிறப்பும் தர்மமாகும்.

தனி மனிதனையும் அவனது சமுதாயத்தையும் மீறி வெறொரு சக்தி உள்ளது. மழை வெயில் காற்று என்றவாறு இயற்கை சக்தியாக நின்று அவனுக்கு உதவுகின்ற சக்தியும், வெள்ளம், சூறாவளிக்காற்று என்றவாறு அவனுக்குக் கேடுவிளைவிக்கின்ற சக்தியும் அவனது எண்ணத்தையும் அறிவையும் பாதிக்கின்ற மற்றும் பல்வேறு சக்திகளும் இதனுள் அடங்கும். இந்த சக்தியை மனிதனுக்கு அனுகூல மாக்கவும், அது பிரதிகூலமாக இருப்பின் அதன் வேகத்தைத் தணித்து அதையும் அனுகூலமாக்கவும் உதவக்கூடிய பணிகளும் அவற்றால் பெறுகின்ற சிறப்பும் தர்மமாகும்.

பிறப்பும் இறப்பும் மாறி மாறித் தொடர்வதைப் பெரும் துன்பமாகக் கருதிப் பிறவாமையையே இன்பமாகக் கருதுகின்ற ஞானி, தான் அந்நிலையைப்

பெறச்செய்கின்ற பணிகளும் அவற்றால் பெறுகின்ற சிறப்பும் தர்மமே.

சுருங்கக்கூறின், மனிதனாகப் பிறந்தவன் தான்பிறந்த நிலையில் அடைந்த மனிதப்பிறவி என்ற பெரும்பேற்றைப் பயனுள்ளதாகச் செய்கின்ற நோக்குடன் மனிதத்தன்மை படைத்து மனிதனாக வாழ்ந்து, மென்மேலும் உயர்ந்து சிறப்பைப் பெறச் செய்கின்ற செயல்கள் அனைத்தும் தர்மம். இதற்கு மாறாக மனிதனாகப் பிறந்தவன் மிருகத்தன்மையுள்ள மனிதனாக வாழ்ந்து வரவரக் கீழ்நிலைக்குத் தள்ளுகின்றவாறு செய்கின்ற செயல்கள் அனைத்தும் அதர்மம். தர்மம் தாங்கும் தன்மை படைத்தது. அதர்மம் அதற்கு எதிரானது. தர்மமே வெல்லும்.

**தர்மத்தை போதிக்கின்ற நூல்கள்:**

மனிதன் தன் சூழ்நிலைக்கேற்றவாறு சுயவிருப்பு வெறுப்புகளுக்கு ஆட்பட்டிருப்பதால் தர்மம் எது? அதர்மம் எது? என்ற பாகுபடுத்துவது எளிதாயில்லை. தர்மமானது அதர்மமாகவும் அதர்மமானது தர்மமாகவும் தோன்றுகின்ற நிலைகளும் உண்டு. அதனால் சுய அறிவால் நிர்ணயிப்பது தவறாகக்கூடும். இந்நிலையில் நம்பகமாக வழிகாட்ட ஒரு பொதுக் கருத்து அமைதல் இன்றியமையாதது.

நம் பாரத தேசம் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக தர்மத்தைப் பல கோணங்களிலும் நின்று ஆராய்ந்து தார்மீகமான நன்முறைகளைத் தேர்ந்து அவற்றை நடைமுறைக்குக் கொணர்ந்து அதன்பயனாக மிகப்பண்பட்ட தேசமாகப்புகழ்

பெற்றுள்ளது. இந்த தார்மீகப்பண்பாடு வேதம் கண்ட மஹரிஷிகள் தொடங்கி நமது காலத்தவர் வரை நடைமுறையில் உள்ளது. இந்த தார்மீகப்பண்பாட்டிற்கு வேதமே மூலநூலும் முதல்பிரமாண , நூலுமாகும். அதனை ஒட்டி விளக்க நூல்களாக மனு, பராசரர், யாஜ்ஞவல்கியர், சங்கர் லிகிதர், வியாஸர் முதலானோர்களால் எழுதப்பட்ட ஸ்மிருதிகளும் பிரமாண நூல்களே.

வேதத்தையும் ஸ்மிருதிகளையும் ஆதாரமாகக் கொண்டு, தார்மீகமான வாழ்க்கை முறையைச் செப்பனிட்டு மனித சமுதாயத்தைக் கட்டுப்பாட்டிற்குள் அடக்கி நல்வழிகாட்டிய ஆச்வலாயனர் ஆபஸ்தம்பர் போதாயனர் முதலிய மஹரிஷிகள் தொகுத்தளித்த தர்மஸூத்திரங்களும் கிருஹ்ய — ச்ரௌத ஸூத்திரங்களும் அடுத்து நிற்கின்ற பிரமாண நூல்கள்.

இந்நூல்களில் காண்கின்ற முறைகளை விஷய வாரியாகத் விளக்கி எளியமுறையில் சந்தேகம் நீங்குமளவில் பல மகான்கள் தொகுத்துள்ளனர். அவற்றினுள் தமிழ்நாட்டில் தஞ்சை ஜில்லாவிலுள்ள கண்ட்ரமாணிக்கம் எனும் கிராமத்தில் 350 ஆண்டு களுக்கு முன்வாழ்ந்த வாதூல கோத்திரத்தைச் சார்ந்த வைத்யநாத தீக்ஷிதர் என்பவர் இயற்றிய ஸ்மிருதிமுக்தாபலம் என்ற நூலே பெரும்பாலும் தமிழ்நாட்டினரால் பிரமாணநூலாக ஏற்றுக்கொள்ளப் பட்டதாகும்.

நமது காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீசங்கராசார்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அவர்கள் தமது உபதேசங்களில் தர்மம், தர்மத்தின் பிரமாண நூல்கள், தர்ம அனுஷ்டானத்தின் அவசியம் என்ற விஷயங்களைப்பற்றி விரிவாகவும் தெளிவாகவும் கூறியுள்ளதனைத்தையும் இங்கு சேர்த்துக் கொள்வது மிக அவசியம். தெய்வத்தின் குரல் 2,3ம் பாகத்திலுள்ள இப்பகுதிகள் பல தடவைகள் படித்து உணர்ந்து செயலுக்குக்கொணரத்தக்கவை. ஸ்மிருதி – கிருஹ்யஸூத்திரம் – தொகுப்புநூல்கள் தந்த மகான்களின் வரிசையில் நம் குருநாதரும் இடம்பெறுகிறார். மகான்களான ஸ்ரீ ஸ்ரீவத்ஸ வே ஸோமதேவசர்மா, ஸ்ரீ M.A.V. அனந்தராம சாஸ்திரி முதலியவர்கள் தமிழில் தார்மீகமான ஆசார அனுஷ்டானங்களைத் தொகுத்து அளித்துள்ளனர். இவர்களது நூல்களே சென்ற தலைமுறையினருக்கும் இத்தலைமுறையினருக்கும் வழிகாட்டின.

# முதல் பாகம்

## வர்ணதர்மமும் ஆசிரமதர்மமும்

தர்மங்களும் அவற்றைக் கடைபிடிக்க உதவுகின்ற ஸம்ஸ்காரங்களும் மனித இனத்திற்குப் பொது வானவையே. எனினும் பிறப்பாலும் வளர்ப்பாலும் வேறு சிந்தனையற்றுத் தார்மீகமாக வாழ்வதில் முனைப்பாலும் தார்மீக வாழ்விற்கேற்ற ஜீவனத்தை அனைத்துக்கொண்டதாலும் பிராமணனுக்கு இவை எளிதில் செய்யக்கூடியவையாக அமைந்துள்ளன. மற்றவர்களுக்கு ஜீவனமாக அமைந்த தொழில் இந்த வகையில் அமையாததாலும் சூழ்நிலை மாறு படுவதாலும் சடங்குகளை அவர்கள் செய்யத் தகுதி பெற்றிருந்தும் வழக்கில் கொணராததால் இவை அவர்களுக்குச் சம்பந்தமில்லாதவையாகவே கருதப்பட்டு விட்டன. அதனால் பிராமணனைத்தவிர மற்ற சமுதாயத்தினரிடையே இவை வழக்கொழிந்துவிட்டன. அதனால் இந்த தர்மநூல்கள் பிராமணருக்காகவே பிராமணர்களே ஏற்படுத்திக் கொண்டவை என்ற தவறான எண்ணம் பரவலாகக்காணப்படுகிறது.

### தர்மத்தின் ப்ரமாண நூல்கள் வேதங்கள்

தர்மத்திற்கு முக்கியப்பிரமாண நூலான வேதம் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ருக்வேதம், யஜுர் வேதம், ஸாமவேதம் அதர்வவேதம் என. யஜுர்வேதம் மேலும் இரண்டு பகுதிகளாகப் பிரிந்துள்ளது. சுக்ல யஜுர் வேதம் கிருஷ்ண யஜுர் வேதம் என. ஒவ்வொரு வேதத்திற்கும் ஸம்ஹிதை,

பிராம்ஹணம்,ஆரண்யகம் உபநிஷத் என நான்கு பகுதிகள் உண்டு.

ஒவ்வொரு வேதத்திற்கும் பல சாகைகள் உண்டு. தான் சார்ந்த வேதத்தின் சாகையில் கூறியுள்ள மந்திரங்களைக் கொண்டே, அவரவர் தாம் செய்ய வேண்டிய சுரௌத–ஸ்மார்த்த காரியங்களைச்செய்ய வேண்டும். இந்த சடங்குகளைச்செய்யும் முறையை அந்தந்த வேதத்தைச்சார்ந்த ருஷிகள் தொகுத்துத் தந்திருக்கிறார்கள். அந்தச் செய்முறைத்தொகுப்பை ஸூத்ரங்கள் என்பர். ஸூத்திரங்கள் நான்குவகை. தர்ம ஸூத்திரம், கிருஹ்யஸூத்திரம், சுரௌத ஸூத்திரம், சுல்பஸூத்திரம் என. இவற்றைப் பொதுவாக கல்பஸூத்திரம் என்பர். தர்மஸூத்திரம் அவரவர் செய்ய வேண்டிய கடமைகளைத் தொகுத்துத்தரும். கிருஹ்ய ஸூத்திரம் வேள்விகளைத் தவிர பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே செய்ய வேண்டிய சடங்குமுறைகளைத் தொகுத்துத்தரும். சுரௌத ஸூத்திரம் வேள்வி முறைகளைக்காட்டும். சுல்பஸூத்திரம் வேள்விகளுக்கான மண்டபம் வேதி முதலியவற்றை அமைக்கும் வகையைக் குறிப்பிடும். 'இவற்றைத் தொகுத்துத்தருகின்ற ஸூத்திரகாரரை நான் சார்ந்திருக்கிறேன்' என்பதை ஆசுவலாயன ஸூத்திர: ஆபஸ்தம்ப ஸூத்திர: என்றெல்லாம் அபிவாதனம் செய்யும்போது தெரிவித்துக் கொள்கிறோம். ஒவ்வொரு வேதத்திற்கும் பல ஸூத்திரகாரர்கள் உண்டு.

ருக்வேதத்திற்கு 21 சாகைகள் உண்டு. அவற்றில் சாகலசாகை மட்டும் இன்று வழக்கில் உள்ளது. மற்றவை மறைந்துவிட்டன. ருக்வேதத்தின் ஸம்ஹிதை, அதற்கான ஐதரேய பிராம்ஹணம், கௌஷீதகீ பிராம்ஹணம் என்ற இருபிராம்ஹணங்கள், ஐதரேய ஆரண்யகம், ஐதரேய உபநிஷத்து, கௌஷீதகீ உபநிஷத்து இவை இன்று அத்தியயனம் செய்யப்படுகின்றன. ஆசுவலாயனரும் கௌஷீதகரும் இதற்கு ஸூத்திரங்கள் எழுதியுள்ளனர். அந்தந்த ஸூத்திரத்தைச்சார்ந்தவர்கள் தம்தம் ஸூத்திரகாரர் வழிகாட்டியபடி சுரௌத ஸ்மார்த்த கர்மங்களைச்செய்வர்.

சுக்ல யஜுர்வேதத்தின் 15 சாகைகளில் இன்று காண்வசாகை, மாத்யந்தின சாகை என்ற இருசாகைகள் மட்டுமே வழக்கில் உள்ளன. சதபதப்பிராம்ஹணமும் ஈசாவாஸ்ய உபநிஷத்தும் பிருஹதாரண்யக உபநிஷத்தும் இதனைச்சார்ந்தவை. பிருஹதாரண்யகோபநிஷத்து இதன் ஆரண்யகமாகவும் உபநிஷத்தாகவும் இருப்பது இதன் சிறப்பு. இதன் சடங்குகளை காத்யாயனர் என்பவர் தொகுத்துள்ளார். இந்த வேதத்தைச் சார்ந்தவர்கள் காத்யாயன ஸூத்ரகாரர்கள்.

கிருஷ்ணயஜுர் வேதத்திற்கு 94 சாகைகள். அதில் தைத்திரீய சாகை மட்டுமே இன்று வழக்கில் உள்ளது. தைத்திரீய ப்ராம்ஹணம் தைத்திரீய ஆரண்யகம் தைத்திரீய உபநிஷத் என்று இதன் எல்லாப்பகுதிகளும் அத்தியயன வழக்கில் உள்ளது

இதன் சிறப்பு. தைத்திரீய உபநிஷத்தின் நாலாம் பிரச்னத்தை மஹாநாராயண உபநிஷத்து என்பர். மற்ற சாகைகளில் கடசாகையின் உபநிஷத்தான கடோபநிஷத்தும் மைத்ராயணீசாகையைச் சார்ந்த ஆரண்யகமும் உபநிஷத்தும் ச்வேதாச்வதர உபநிஷத்தும் கிடைக்கின்றன. மற்ற பகுதிகள் மறைந்துவிட்டன. இந்த வேதத்திலுள்ள கர்மாக்களை போதாயனம் ஆபஸ்தம்பம் பாரத்வாஜம் ஸத்யாஷாடம் வைகானஸம் என்ற ஐந்து ஸூத்ரங்கள் தொகுத்துத் தருகின்றன. போதாயனர், ஆபஸ்தம்பர், பரத்வாஜர், ஸத்யாஷாடர், விகனஸ் என்ற ஐந்து மகரிஷிகள் ஸூத்ரங்களைத் தொகுத்தவர்கள். அவரவர் ஸூத்திரப்படி அவரவர் தன் தன் கர்மாக்களைச் செய்வர்.

ஸாமவேதத்திற்கு ஆயிரம் சாகைகள். அவற்றில் ஜைமிநீய சாகை (தலவகாரசாகை) ராணாயநீய சாகை, கௌதுமசாகை என்ற மூன்றும் வழக்கி லுள்ளன. ஜைமிநீயசாகையைச் சார்ந்த ஜைமிநீய ப்ராம்ஹணம் தலவகாராரண்யகம், கேநோபநிஷத்து, ஸம்ஹிதோபநிஷத் பிராம்ஹணம், சாந்தோக்ய ப்ராம்ஹணம், சாந்தோக்ய உபநிஷத்து தாண்டிய பிராம்ஹணம், ஷட்விம்சப்ராம்ஹணம், தைவத ப்ராம்ஹணம், ஆர்ஷேயப்ராம்ஹணம் ஸாமவிதான பிராம்ஹணம் வம்சபிராம்ஹணம் முதலிய சில பகுதிகள் வழக்கில் உள்ளன. இதற்கு த்ராஹ்யாயணம் ஜைமீநீயம் என்று இரு ஸூத்ரங்கள் உண்டு. த்ராஹ்யாயணரும் ஜைமிநியும் இவற்றைத்

தொகுத்தவர்கள். அதர்வவேதத்தின் 50 கிளைகளில் சௌனக சாகை மட்டுமே வழக்கில் உள்ளது. இதனைச் சார்ந்தவர்கள் மிகக் குறைவு. இதனைச் சார்ந்த கோபதபிராம்ஹணம், பிரச்ன உபநிஷத்து, முண்டகோபநிஷத்து, மாண்டூக்ய உபநிஷத்து, ந்ருஸிம்ஹதாபினீ உபநிஷத்து முதலியவை பிரசித்த மானவை. இதற்கு கௌசிகரின் க்ருஹ்ய ஸூத்ரமும் வைதான சுரௌத ஸூத்ரமும் உள்ளன. கௌசிகர் ஸூத்ரகாரர்.

**ஸம்ஸ்காரங்கள்**

பொதுவாக வேதம் கூறுகின்ற சடங்குகளை ஸ்மிருதிகள் விளக்குகின்றன. ஸ்மிருதி – நினைவுக் குறிப்பு – மனு முதலானவர் தம் தவ மகிமையால் வேதங்களின் அனைத்து சாகைகளையும் நினைவிற் கொண்டு அவற்றை விஷயவாரியாகத் தொகுத்துத் தந்தனர். அவர்களின் நினைவுக்குறிப்புகள் தவத்தால் கண்ட உண்மை உணர்வால் அமைந்தவை. அதனால் வேதத்தோடு ஸ்மிருதிகளும் ஸமமான நிலை பெற்றுள்ளன. வேதம் வேள்விகளை முக்கியமாக விளக்குகின்றது. வேள்விகள் புரியும் தகுதிபெற இன்றியமையாத பொது ஆசாரங்களை ஸ்மிருதிகள் அதிமாக விளக்குகின்றன. வேதங்கள் கூறுகின்ற வேள்விமுதலானவற்றை சுரௌதகர்மங்கள் என்பர். ஸ்மிருதிகள் விளக்குகின்ற பொதுச்சடங்குகளை ஸ்மார்த்தகர்மங்கள் என்பர். இவ்விரு கர்மங்களையும் செய்யும் தகுதிபெறவே உபநயனமும் பூணூல் தரித்தலும், பூணூலைப் போட்டுக்கொள்ள ஸங்கல்பம்

– "ச்ரௌத ஸ்மார்த விஹிதநித்யகர்ம அனுஷ்ட்டான யோக்யதாஸித்த்யர்த்தம்" என்று.

இந்த கர்மங்களைச்செய்யும் தகுதி பிராமணர் க்ஷத்திரியர் வைசியர் என்ற மூன்றுவர்ணத்தாருக்கு உண்டு. பிரும்மசாரி கிருஹஸ்தர் வானப்ரஸ்தன் ஸன்யாஸி என்ற ஆசிரமங்கள் நான்கில் வானப் பிரஸ்த்தம் கலியில் வழக்கில் இல்லை. ஸன்யாஸி சுரௌத ஸ்மார்த்த கர்மங்களை முறைப்படி விட்டு விடுகிறார். பிரும்ஹசாரிக்குச் சில கருமங்களில் மட்டுமே தகுதி உண்டு. கிருஹஸ்தனுக்கு இவை அனைத்தையும் செய்யும் தகுதியும் கடமையும் உண்டு.

இந்த நூலில் பிராமணன் கடைபிடிக்கவேண்டிய தர்மங்கள் மட்டுமே தொகுக்கப்பட்டுள்ளன. பிராமண னுக்கு வேதத்தை ஓதவும், பிறருக்கு ஓதிவைக்கவும், வேள்விகளைச் செய்யவும், பிறருக்குச் செய்விக்கவும், கர்மங்கள் பூர்ண பலனைத்தரும்படி தன்னிடம் உள்ள பொருளைத் தானமாக வழங்கவும், பிறரிடமிருந்து அவர்கள் கர்ம பலனைப் பெறுவதற்காக அவர்கள் விரும்பித் தானமாக அளிக்கும் பொருளைப் பெற்றுக் கொள்ளவும் தகுதி உண்டு. மற்ற இருவருணத்தின ருக்கும் வேதம் ஓதுவிக்கவும், வேள்விசெய்விக்கவும், தானம் பெறவும் தகுதியில்லை. ஓதுவித்தலும் வேள்வியைச் செய்வித்தலும் தானம் பெறுதலும் பிராமணனின் ஜீவனத்திற்கு சாதனமானவை. மற்ற வருணத்தினருக்கு வேறு ஜீவன ஸாதனங்கள் உள்ளன.

பிராமணனுக்கு முறைப்படி மணந்த பிராமணப் பெண்ணிடம் பிறந்தவன் பிராம்மணன். இந்தப்பிறவித் தகுதி வாழ்க்கையை மேலும் சிறப்படையச்செய்ய உதவுவதாக அமைவதற்குப் பிராமணனாகப்பிறந்து பிராமணனாக வாழ்ந்து பிராமணத்தன்மை நிரம்பப்பெறுவது அவசியமாகிறது. அதன்பொருட்டே இந்த சுரௌதஸ்மார்த்த தர்மங்கள். இவை அவனைப் பண்படுத்தித் தூய்மை மிக்கவனாக்கித் தவ வாழ்க்கையாகத் தன் வாழ்நாளைக் கழிக்க உதவுவதுடன் மேன்மை பெற்றச்செய்வதால் ஸம்ஸ்காரங்கள் ஆகின்றன (ஸம்ஸ்காரம் – நன்கு பண்படுத்துதல். நன்கு பண்படுத்துகின்ற சடங்கு).

**ஸம்ஸ்காரங்கள்**

பிராமணனைப் பிராமணனாக்கத் தகுந்த ஸம்ஸ்காரங்கள் நாற்பது. இவற்றில் முதல் பதினான்கு ஸம்ஸ்காரங்கள் எல்லோருக்கும் பொதுவானவை. மற்றவை தன் தகுதியை மேன்மேலும் வளர்த்துக் கொள்ள உதவுபவை. அவையாவன.

**(1) எல்லோருக்கும் பொதுவானவை – நியதஸம்ஸ்காரங்கள் (14)**

1. கர்ப்பாதானம்
2. பும்ஸவனம்
3. ஸீமந்தோன்னயனம்
4. ஜாதகர்ம
5. நாமகரணம்
6. அன்னப்ராசனம்
7. சௌளம்
8. உபநயனம்
9-12. வேதவிரதங்கள் (4)
13. ஸமாவர்த்தனம்
14. விவாஹம் என.

'விவாஹம் நியதஸம்ஸ்காரமல்ல; ஒருவன் பிரும்மசாரியாகவே வாழலாம். மணம்புரிந்து கொள்ளத் தான் வேண்டுமென்ற நியமமில்லை. அதனால் ஸமாவர்த்தனம் வரை நியதஸம்ஸ்காரங்கள்' என்று கருதுவதும் உண்டு.

மற்ற ஸம்ஸ்காரங்கள் 26.

15–19. மஹாயஜ்ஞங்கள் ஐந்து. 20–26. பாகயஜ்ஞங்கள் ஏழு. 27–33. ஹவிர்யஜ்ஞங்கள் ஏழு. 34–40. ஸோமயஜ்ஞங்கள் ஏழு. இந்த இருபத்தாறும் யஜ்ஞங்கள் (வேள்விகள்) என்ற பிரிவில் அடங்குபவை.

முதல் பதினாலுக்கு ஸம்ஸ்காரங்களை வரிசையாகப் பார்ப்போம்.

மனிதனாகப் பிறப்பது அரிது. அதிலும் பிராமணனாகப் பிறப்பது மிகவும் அரிது என்பர். அந்த பிராம்மணன் பூர்ணமான பிராம்மணத்தன்மையைப்பெற அவன் கருவில் உருவாகுமுன்னரிருந்தே அந்தக்கரு நல்ல பிராமணனாக உருவெடுக்கவேண்டுமென்று ஆழ்ந்து கோருவது அவசியமாகிறது.

**கர்ப்பாதானம்**

பெண் ருதுவான தினம் முதல் நான்கு நாட்கள் உடலுறவு கொள்ளக்கூடாது. ஐந்தாவதுநாள் முதல் பதினாறாம் நாள் வரை பெறும் உறவால் கருத்தரித்தால் நல்ல சிசு பிறக்கும். இந்தப் பன்னிரண்டுநாட்களில் சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, ஏகாதசி, திரயோதசி, சதுர்தசி, அமாவாஸ்யை,

பௌர்ணமி. இந்தத் திதிகளும் மாதப் பிறப்பு நாளும் நீங்கலாக திங்கள், புதன், வியாழன், வெள்ளிக் கிழமைகளில் ரோகிணி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதி, ஹஸ்தம், ஸ்வாதி, அனுஷம், மூலம், திருவோணம், சதயம், ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் விருஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலா, தனுசு, கும்பம், மீனம் ஆகிய லக்கினங்களில் கூடுவது நல்ல சிசு உதிக்க ஏற்றது. ருருவான தினத்திலிருந்து கணக்கிட்டு ஒற்றைப்படை நாளானால் பெண்ணும் இரட்டைப்படை நாளானால். புத்திரனும் பிறக்கும் என்பர். தம்பதிகள் இருவரும் மனம் ஒருமித்து தார்மீக நன்மகப்பேறு பெற இறைவனைவேண்டிச் சேர்வது நல்லது. ஆக ஆண்பெண் உறவு முதலிருந்தே இந்த தர்மவழிப்பணி தொடங்குகிறது. இதனால் உருவாக விருக்கும் கருவிற்குத் தர்மத்தில் நாட்டம் ஊட்டப் பெறுகிறது.

**பும்ஸவனம்**

மனைவி கருத்தரித்ததாகத் தெரிந்தவுடன், மூன்றாவது அல்லது நான்காவது மாதத்தில் பும்ஸவனம் செய்யவேண்டும். கருவில் உள்ள சிசு புரளத் தொடங்குமுன் இதைச் செய்யவேண்டும் என்பர். மிருகசீர்ஷம், புனர்பூசம், பூசம், ஹஸ்தம் மூலம், திருவோணம் இவை புருஷநட்சத்திரங்கள். முக்கியமாக பூசத்தில் செய்வது வழக்கம். மற்ற புருஷ நட்சத்திரங்களிலும் செய்யலாம். முதல் கர்ப்பத்திற்கு மட்டும் இதனைச் செய்வர். கர்ப்பாசயம் நல்ல தார்மீகனான புருஷ ஸந்ததியை ஏற்கவேண்டுமென்று

எதிர்பார்ப்பவன் இதனைச் செய்ய வேண்டும். ஒவ்வொரு கர்ப்பத்திற்கும் இதைச்செய்யலாம். 3—வது நான்காவது மாதங்களில் செய்யமுடியாவிடில் ஸீமந்தோன்னயனத்துடன் சேர்த்தும் செய்யலாம். முன்னதாகச் செய்வதே நல்ல பலன் தரும். பின்செய்வது மந்திரபலத்தால் சிசுவிடம் தர்ம நாட்டத்தை வளர்க்கும்.

வாழையடி வாழையாக வந்த தார்மீகப் பண்பாட்டைப் பெரிதும் மதிக்கின்ற தாய் தந்தையர் தனக்குப் பிறக்கவிருக்கும் குழந்தையும் அது ஆணோ, பெண்ணோ, அந்தத் தார்மீகப்பண்பாட்டை மதித்து நடக்கவேண்டும் என்று எண்ணிக் கருவில் உள்ளபோதே மந்திரங்களின் பலத்தால் அந்த எண்ணத்தைக்கருவில் உள்ள சிசுவிடம் பதிக்கிறார்கள். இதுவே இந்த ஸம்ஸ்கார வரிசையின் முக்கிய நோக்கமாகும். அதனால் கருவளர்கின்ற ஒவ்வொரு நிலையிலும் ஒவ்வொரு கர்மாவின் மூலமாக இந்தப்பதிப்பைத் தரவேண்டும் என்பர். இந்த தார்மீகப் பண்பாட்டின் தொடர்பு நீடிக்க உதவுவதாலேயே மகப்பேற்றை — ஸந்ததி (நல்ல நீண்ட தொடர்பு) என்று குறிப்பிடுவர்.

**ஸீமந்தோன்னயனம்**

முதல் கர்ப்பம் தரித்த 4—வது மாதத்திலோ ஆறாவது மாதத்திலோ இதனைச்செய்வர். 8வது மாதத்திலும், பிரஸவம் வரையிலும், முடியாவிடில் பிரசவித்த உடனும் இதனைச் செய்வதுண்டு. சிசுவிற்கும் தாய்க்கும் சுத்தியையும்

தைவீகபலத்தையும் இது தருகின்றது. தாய்க்கு இதனைச்செய்வது மிகவும் பயனுள்ளதென்பதால் கருத்தரித்துள்ளபோது அவளது கணவன் தேசாந்தரம் சென்றிருந்தாலோ மரித்துவிட்டாலோ மைத்துனனோ குருவோ நெருங்கிய கணவனின் உறவினரோ இதைச் செய்யலாம் என்பர்.

கர்ப்பாதானம் சிசு தங்கவிருக்கின்ற கருவறையைச் சுத்தமாக்கி அங்கு தெய்வஅருள் சூழச்செய்து கருவை உருப்பெறச்செய்ய ஏற்றது. பும்ஸவனம் புருஷஸந்ததி வீர்யமுடன் பிறக்கச் செய்யவும் ஸீமந்தோன்னயனம் தாயும் கருவும் சுத்திபெறவும் தெய்வஅருள் சூழ்ந்துநின்று இருவரையும் காக்கவும் செய்யப்படுகின்றது. இனி வருகின்ற ஸம்ஸ்காரங்கள் கருவறையிலிருந்து வெளியான சிசுவிற்குச்செய்யப்படுகின்றன.

**ஜாதகர்மம்**

சிசு பிறந்ததும் சிசுவின் தந்தை கட்டியுள்ள ஆடையுடன் (ஸசேல) ஸ்நானம் செய்யவேண்டும். அன்று முழுவதும் தந்தைக்கு ஜனனாசௌசம் (பிறப்புத்தீட்டு) இல்லை. அவன் தானம் செய்து நாந்தீசிராத்தம் ஹிரண்யமாகவாவது (தக்ஷிணை மட்டும் தந்தாவது) ஆமமாகவாவது (அரிசியும், கறிகாயும் தந்தாவது) செய்யவேண்டும். பிதிருக்கள் தன் வம்சத்தினருக்கு ஸந்ததி ஏற்பட்டதில் மகிழ்ந்து தானே மங்களப்பொருள்களுடன் வந்திருக்கும்போது அவர்களைக் குறித்து நாந்தீசிராத்தம் செய்வதை

மிகுந்த திருப்தியுடன் ஏற்று, சிசுவையும் பெற்றோரையும் வாழ்த்துவர்.

வீட்டில் மற்றொரு சிசு முன்னதாகப்பிறந்து ஜனனாசௌசம் ஏற்பட்டிருந்தாலும் தனக்குப் புத்திரன் பிறந்ததும் ஜாதகர்மம் செய்யலாம். இதனைச் செய்யும் வரை ஆசௌசம் விலகி நிற்கும். மரணாசௌசம் (மரணத்தீட்டு) ஏற்பட்டிருந்தால் அந்தத் தீட்டுக்கழிந்த பின்னர் ஜாதகர்மம் செய்யலாம்.

**நாமகரணம்**

குழந்தை பிறந்த பதினோராம் நாளிலோ முதல் வருஷம் முடிகிற போதோ அதற்குப்பெயர் வைக்கவேண்டும். புருஷசிசுவானால் இரட்டைப்படை எழுத்துக்கள் உள்ளதாகவும், பெண்ணானால் ஒற்றைப்படை எழுத்துக்கள் உள்ளதாகவும் வைக்கவேண்டும். சர்மா என்று (ராமசர்மா என்றவாறு) அது முடியவேண்டும. குலதெய்வம் இஷ்டதெய்வம் தம் முன்னோர்கள் இவர்களின் பெயரை வைப்பது நல்லது.

தற்போது புத்திரர்களுக்கு உபனயனத்தன்று அதற்கு முன்னதாகவும் பெண்களுக்கு விவாஹத்திற்கு முன்னதாகவும் ஜாதகர்மம் தொடங்கி சௌளம் வரை செய்கின்றனர். அந்தந்த நேரத்தில் அதனைச் செய்வது சிறந்தது.

**கர்ணவேதனம்**

சித்திரை, கார்த்திகை, தை, பங்குனி இந்த மாதங்களில் சுக்லபக்ஷத்தில் சிசுவிற்குப்பல்

முளைத்ததும் அல்லது தாயின்மடியில் ஏறித்தானே உட்காரவும் இறங்கவும் தெரிந்ததும், ஊசியில் பட்டு நூலைக் கோர்த்துக் காதில் சூரிய வெளிச்சத்தில் நன்கு தெரிகின்ற பள்ளத்தில் குத்துவது வழக்கம். தற்போது முதல் அப்தபூர்த்தியில் நல்ல வேளையில் தங்கத்தாலான அணியால் காது குத்துகின்றனர். மற்ற இனத்தவரிடமிருந்து ஹிந்துவைப் பிரித்துக் காட்டுகின்ற ஒரே சின்னம் துளையிட்ட காதுகளே. குலதெய்வத்தைத் தர்சனம் செய்வித்து அதன் ஸந்நிதியில் இதைச்செய்வதும் உண்டு.

## சூர்யசந்த்ர தர்சனம்

சிசுபிறந்த பன்னிரண்டாவது நாளில் பிரசவ அறையிலிருந்து வெளியே அதனை எடுத்துச்செல்வர். இதனை நிஷ்க்ரமணம் என்பர். 3–வது மாதத்தில் அறை கூடம் முதலிய இடங்களை விட்டு வெளியில் எடுத்துச் சென்று சூரியனுக்குச் சிசுவைக்காட்டுவதும் நான்காவது மாதத்தில் சந்திரனுக்குக் காட்டுவதும் வழக்கம். சூரிய–சந்திரர்களின் ஒளி சிசுவின்மேல் படச்செய்வதே இதன் பொருள்

## அன்னப்பிராசனம்

ஆறாவது மாதத்தில் அல்லது எட்டாவது மாதத்தில் நல்ல நாளில் தயிர், தேன், நெய் சேர்த்த அன்னத்தை முதன்முறையாகச் சாப்பிடச்செய்வது வழக்கம். இதனையும் குல தெய்வத்தின் சந்நிதியில் செய்வர். தற்போது அப்தபூர்த்தியின்போது இதனை மந்திரபூர்வமாகச் செய்கின்றனர். ஆனால் சிசு அதற்கு முன்னரே அன்னம் உட்கொள்ளத்

தொடங்கியிருக்கும். அதனால் அன்னம் உட்கொள்ளும் தகுதி பெற்றவுடன் இதனை மந்திரபூர்வமாகச் செய்விப்பது நலம்.

**அப்தபூர்த்தி**

குழந்தை பிறந்து ஒரு ஆண்டு நிறைந்தபின் பிறந்த மாதத்தின் பிறந்த நக்ஷத்திரத்தில் ஆண்டு நிறைவைக் கொண்டாடுவர். அன்று நவக் கிரகங்களின் வழிபாட்டுடன் ஆயுர் தேவதைகளையும் வழிபடுவர். ஆயுஷ்யஸூக்தத்தால் ஹோமம் செய்வர். இதுவரை பிறந்த சிசுவிற்கு ஜாதகர்மம், நாமகரணம், அன்னப்ராசனம்,கர்ணவேதனம் செய்யாமலிருந்தால் இன்றே அவற்றையும் செய்யலாம்.

ஒவ்வொரு ஆண்டின் நிறைவிலும் பிறந்த நட்சத்திரத்தில் ஆயுஷ்ய ஹோமம் செய்வது நல்லது. 60, 70, 80, 100 ஆண்டு நிறைவுகளை விசேஷமாகக் கொண்டாடுவர்.

**சௌளம் – சூடாகர்ம**

மூன்றாவது அல்லது ஐந்தாவது வயது நடக்கும்போது இதுசெய்யப்பட வேண்டும். மந்திர பூர்வமாக பாலன் சிகை வைத்துக் கொள்ளுகிறான். இந்த சிகை உயிருள்ளவரை தொடர்ந்திருக்க வேண்டும். தாயார் கர்ப்பவதியானால் பிரசவித்த பின்னரே இதனைச்செய்தல் வேண்டும். செவ்வாய், சனி, பிரதமை, சதுர்த்தி, நவமி, சதுர்தசி, ஜன்ம நட்சத்திரம், பரணி, கார்த்திகை, பூரட்டாதி, உத்தரட்டாதி நீங்கலாக பாலனுக்குச் சிறந்த நாளில்

சூடாகர்ம செய்வர். அசுவதி, மிருகசீர்ஷம், புனர்வசு, பூசம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, திருவோணம், அவிட்டம், ரேவதி இவை ஏற்றவை. பெண் சிசுக்களுக்கும் ஜாதகர்மம் முதல் சௌளம் வரை எல்லாம் முறைப்படி உண்டு. மந்திரமின்றிச்செய்வர். அவர்களுக்கு உபநயனத்தின் ஸ்தானத்தில் விவாஹம் நடக்கிறது. விவாஹம் மந்திரபூர்வமாகவே உண்டு.

ஜாதகர்மம் முதல் சௌளம் வரை உரிய காலத்தில் செய்யாவிடில் பிராயச்சித்தம் உண்டு.

**அக்ஷராப்பியாஸம்**

சௌளம் ஆனதும் கல்வி கற்கும் தகுதி வருகிறது. ஐந்தாவது வயது வந்தபிறகு, உத்தராயணத்தில் மாசி தவிர மற்ற மாதங்களில் செவ்வாய், சனி, பிரதமை சதுர்த்தி, ஷஷ்டி, அஷ்டமி, நவமி, சதுர்தசி தவிர மற்ற நாட்களில் செய்யலாம். புனர்வசு, பூசம், ஹஸ்தம், சித்திரை, ஸ்வாதி, கேட்டை, அனுஷம், திருவோணம், அவிட்டம், சதயம் இவை ஏற்றவை. விஷ்ணு லக்ஷ்மி ஸரஸ்வதி பார்வதி அவரவரது ஸூத்திரகாரர்கள் முதலியவர்களைப் பூஜித்துக் குலதெய்வத்தை வணங்கி, கிழக்குமுகமாக உட்கார்ந்த குரு, மேற்கு நோக்கி உட்கார்ந்த குழந்தைக்கு அக்ஷராரம்பம் செய்வித்துத் தொடர்ந்து கல்வி கற்பிக்கவேண்டும். பிரதமை, அஷ்டமி, சதுர்தசி அமாவாஸ்யை, பௌர்ணமி என்ற நாட்கள் கல்விகற்க ஏற்றதல்ல. அவை அநத்யயன தினங்கள்

உபநயனம் ஆகும்வரை ஆகாரத்திலும் உணவு விஷயத்திலும் எந்தக் கட்டுப்பாடும் இல்லை.

ஆனாலும் மனமும் அறிவும் வளரும் வயதானதால் குலாசாரத்தையும், உணவுக் கட்டுப்பாட்டையும் பற்றி அவனுக்கு அறிமுகப்படுத்துதல் அவசியமாகின்றது.

**உபநயனம்**

பிறந்ததால் பிராமணனானவனை பண்பாட்டால் பிராமணத்தன்மை பெறச்செய்கின்ற ஸம்ஸ்காரம் இது. இது மறுபிறப்பாகும். உபனயனமானவனை துவிஜன் (இரு பிறப்பாளன்) என்பர். தாயிடமிருந்து வெளியானது பௌதிகப்பிறப்பு. உபனயனமானது தெய்வீகப்பிறப்பு.

பிறந்தபின் ஏழாவது வயதில் கருவில் உதித்ததிலிருந்து எட்டாவது வயதில் (கர்ப்பாஷ்டமத்தில்) உபநயனம் செய்விக்க உரிய நேரம். வசந்தருது நல்லது. தை மாசி பங்குனி ஆனி மாதங்களும் ஏற்றவையே. மூத்தவனாயின் ஆனி நல்லதல்ல. சந்திரபலம் நன்கு கூடியுள்ள தினத்தில் அவரவரது வேத சாகாதீசன் பலம் பெற்றுள்ளபோது அவர்களது வாரதினத்தில் உபநயனம் செய்விக்கலாம். ருக்வேதத்திற்குக் குருவும் யஜுர்வேதத்திற்குச் சுக்கிரனும் ஸாமவேதத்திற்குச் செவ்வாயும் அதர்வ வேதத்திற்குப் புதனும் சாகாதீசர்கள். இவர்கள் லக்னத்திற்கு 4-7-10 ஸ்தானங்களில் வலுப்பெற்றிருக்கின்ற லக்கினம் சிறந்தது. இவர்கள் மறைந்து மூடர்களான நிலையில் உபனயனம் செய்யக்கூடாது. மற்றும் பிரதமை அஷ்டமி சதுர்தசி பௌர்ணமி அமாவாஸ்யை என்ற அனத்தியயன (அத்தியயனம் செய்யத்தகாத) நாட்களிலும் சதுர்த்தி, ஸப்தமி, நவமி, ஏகாதசி,

திரயோதசி என்ற திதிகளிலும் உபநயனம் செய்விக்கக் கூடாது.

16 வயது வரை காயத்திரியை ஏற்கத்தக்க இளம் மனம் இருக்குமாதலால் அதற்குள் உபநயனம் செய்விக்கலாம். அதன்பிறகு செய்விப்பது பலனற்றது. நேரிடையாகப் பிராயச்சித்தம் அதிகமாகச் செய்துதான் பின்னர் உபநயனம் செய்யநேரும். மனத்தின் முதிர்ச்சி புதிதாக நியமங்களை ஏற்பதற்குச் சம்மதியாது. முரண்படும் மனம் தெய்வீக சிந்தனைக்கு ஏற்றதல்ல. அதனால் இளமையிலேயே தெய்வசிந்தனைக்கு வழிவகுக்கின்ற உபநயனம் செய்விப்பது நல்லது.

உபநயனம் என்பது மிக முக்கியமான ஸம்ஸ்காரம். உபநயனம் – சமீபத்தில் அழைத்துச் செல்வது எனப்பொருள்படும். குருவிடம் அழைத்துச் செல்லப்பட்டு, குருவிடம் தன்னை ஒப்படைத்துக் கொள்வது, குருவின் மூலம் தகுதி பெற்று குருவால் வேதத்தின் அருகே அழைத்துச் செல்லப்படுவது, அதன்மூலம் பிரும்மமாகிய பரம்பொருளை அடைவது என்று கிரமமாக மேனிலை பெற உதவும் ஸம்ஸ்காரமிது. அதனால் உபநயனமான பின் மாணவன் பெறும் நிலையை பிரும்மசரியம் என்பர். பிரும்ம – வேதம், பரம்பொருள், சரியம் – நடைமுறை. வேதம் ஓதுவதையே தனது நடைமுறையாகக் கொண்டு அதன் பொருளுணர்ந்து அதன் வழியே, பரம் பொருளை உணர்வதைத்தன் நடைமுறையாகக் கொள்வதே பிரும்மசர்யம். இதனை முதல் ஆசிரமம் என்பர். நடைமுறையைக் கட்டுப்படுத்தி எளிதில்

லட்சியத்தைச் சிரமமின்றி அடைய உதவுகின்ற நடை முறை ஆசிரமமாகும். இந்த ஆசிரமத்தில் இருப்பவனை பிரும்ம சாரி– வேதமோதுவதையே தனது நடை முறையாகக் கொண்டவன் என்று கூறுவர்.

உபநயனத்தின் முதல் அங்கம் முப்புரி நூல் (பூணூல்) தரிப்பதாகும். முப்புரிநூலை யஜ்ஞோபவீதம் என்பர். வேதமோதுபவர், சுமங்கலி, கன்னிகை, நியமத்திலுள்ள விதவை இவர்கள் நூற்ற நூலை வேத மோதுகின்ற பிராம்மணன் சுத்தமான இடத்தில் அமர்ந்து வலது கைவிரல்களில் (ஒவ்வொரு சுற்றிலும் நான்கு அங்குல நீளமுள்ள நூல் வரும்படி) 96 தடவை சுற்றி அதை மூன்றாக மடித்து முறுக்கேற்றிப் பின் நீவிச் சமமாக்கி மூன்று வளையமாக்கி முடிபோடப் பட்டதே அந்த முப்புரிநூல். அதனை இடது தோளிலிருந்து வலது இடைவரை தொங்கும்படி தரிப்பது முறை. அது தொப்புள்வரை படும்படி இருக்க வேண்டும். அதற்குக் குறைந்ததும் அதிகநீளமுள்ளதும் ஏற்றதல்ல. அதிக நீளமுள்ளதை மறுபடி பயத்தங்காய்போல் மடித்துத் தேவையான அளவில் முடிப்பர்.

பிரும்மசாரி ஒரு பூணூல் தரிப்பான். கிருஹஸ்தன் இரண்டு பூணூல்களைத் தரிப்பான். கிருஹஸ்தன் எப்போதும் உத்தரீயம் தரித்திருக்க வேண்டும். அனுஷ்டானத்தில் கருத்துள்ளவன் உத்தரீயமில்லாத நிலையைத்தவிர்க்க மூன்றாவது பூணூலைத்தரிப்பான். (உத்தரீயம் – மேலாடை)

பூணூலில் ரோமம் சிக்கினால் ரோமத்தை நீக்கி எடுத்தெறிந்துவிட்டு 10 தடவை காயத்திரியை ஜபித்து அலம்பவேண்டும். பூணூல் அறுந்துவிட்டாலோ, அழுக்காகிவிட்டாலோ மறுபடி வேறு பூணூலை முறைப்படி போட்டுக் கொண்டு முன்பூணூலை முறைப்படி அகற்ற வேண்டும். பூணூலில் மற்ற பொருள் எதனையும் மாட்டக்கூடாது. உபநயனமான பின் பூணூலும் சிகையுமின்றிச் செய்யும் எந்தக் காரியமும் பயனற்றதாகும். பிறர் தரித்த பூணூல், வஸ்திரம், பூமாலை, செருப்பு முதலானவற்றைத்தான் தரிக்கக்கூடாது.

உபவீதம் தரித்ததும் தண்டம் (புரசு, அரசு முதலியவற்றின் குச்சி) அஜினம் (மான்தோலாலான உபவீதம்) மௌஞ்சீ (முஞ்சம் என்ற மெது தர்ப்பத்தாலான இடுப்பில் மூன்றுசுற்றாகச் சுற்றிக் கொள்ளக் கயிறு) இவற்றை மந்திரம் சொல்லி ஏற்பான். இடுப்பில் அரைநான் கயிறும் அதில் கௌபீனம் தரிப்பதும் அவசியம். தன் தந்தை, பிதாமஹர் அல்லது குரு மூலமாகக் காயத்ரி உபதேசம் பெறுகிறான். காயத்திரி – வேதமாதா, மூன்று வேதத்தின்ஸாரம். அதனைப் பிரம்ஹம் என்பர். அதனால் காயத்திரி மந்திர உபதேசத்தை பிரும்ஹோபதேசம் என்பர். உபநயனத்தன்று தன்தாயிடமிருந்து முதலில் அரிசியைப் பிக்ஷையாக பவதி பிக்ஷாம் தேஹி என்று கேட்டுப் பெறுகிறான். தாயின் சகோதரிகள், தன் சகோதரிகள், தகப்பனின் சகோதரிகள் என்று

அன்புள்ள ஸுமங்கலிகளிடமிருந்து பிக்ஷை பெறுகின்றான். (விதவை கர்ப்பிணிகள் நீங்கலாக).

உபநயனம் முதல் 3 நாட்கள் இப்படி அரிசி (ஆமபிக்ஷை)யை பிக்ஷையாகப் பெற்றவன் நான்காம் நாள் முதல் குருகுலவாஸம் முடியும் வரையில் அன்ன பிக்ஷை பெற்றே வாழவேண்டும். அன்ன பிக்ஷைக்கு வருகின்ற வடு (பிரம்மசாரி)வை அதட்டிக் கடிந்து பேசக்கூடாது. வடு தன் உணவுத் தேவைக்கு அதிகமாகக் கேட்கக்கூடாது. அப்படி எடுத்து மீந்தால் அதைப் பூமியில் புதைத்துவிடவேண்டும். பிக்ஷை வாங்கியது அனைத்தையும் குருவிடம் காட்டி அனுமதி பெற்றே உண்ணவேண்டும். குரு அவரது உறவினர், தன் உற்றார் உறவினர் வீட்டில் பிக்ஷை வாங்கக் கூடாது. பிக்ஷை எடுப்பது பணிவைத்தரும். செல்வம் முதலியவற்றால் ஏற்படுகின்ற • அகந்தையைப் போக்கும்.

உபநயனத்தன்று நடுப்பகல் தொடங்கி ஸந்தியா வந்தனம் (ஸந்தியோபாஸனம்) தொடங்க வேண்டும். மறுநாள் முதல் பிரும்மயஜ்ஞமும் உண்டு. தினம் மூன்று வேளைகளில் ஸந்தியாவந்தனம் செய்ய வேண்டும்.

உபநயனத்தின்போது அந்த பாலனுக்குத் தான் பிறந்த க்ஷேத்திரம் அதற்கான பிரவரர்கள், அவன் செய்யத்தக்க சடங்குகளைப் பற்றித் தெரிவிக்கின்ற ஸூத்திரம், அவனுக்கு நாமகரணத்தின்போது வைக்கப்பட்ட சர்மா என்று முடிகின்ற பெயர் இவற்றைத் தொகுத்து அபிவாதயே... என்று

ஒவ்வொருதடவை நமஸ்காரம் செய்யும் போதும் நமஸ்காரம் செய்யப்படுகின்றவர்களிடம் தன்னை அறிமுகப்படுத்தும் முறை அறிமுகப்படுத்தப் படுகின்றது. இந்த கோத்திரம் பிரவரம் இரண்டும் தெரிந்துகொள்வது அவசியம். விவாஹத்தின்போது பெண் வேறு பிரவர கோத்திரத்திலிருந்து தேர்ந்தெடுக் கப்படவேண்டும். எல்லாக் கருமங்களிலும் ஸங்கல்பம் செய்யும்போது கோத்திரம் சர்மா பிறந்த நட்சத்திரம் என்ற மூன்றையும் குறிப்பிடுவது வழக்கம்.

கோத்திரம் ஒவ்வொரு மகரிஷியின் பெயருடன் இருக்கும். அவரது கோத்திரத்தில் பிறந்து சிறப்பு பெற்ற ரிஷியின் பெயர் பிரவரர் என்று குறிப்பிடப் பெறும். ஒருவரோ, இருவரோ, மூவரோ, ஐவரோ, ஏழுபெயரோ கூட பிரவரருஷியாக இருப்பார்கள். ஏகார்ஷேய பிரவர – த்வ்யார்ஷேய ப்ரவர – த்ர்யார்ஷேயப்ரவர என்றவாறு அந்த அபிவாதன (அபிவாதயே என்று தொடங்குகின்ற) அறிமுகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

முதல் உபாகர்மம் நடைபெறும்வரை பிரும்மயஜ்ஞம் செய்யும்போது காயத்திரியால் செய்ய வேண்டும். அன்று மாலை தொடங்கி ஸமிதாதானம் செய்து வரவேண்டும்.

**உபநயனத்திற்கான நியமங்கள்**

தாய் கர்ப்பிணியாயிருந்தால் 5வது மாதத்திற்கு மேல் உபநயனமோ விவாஹமோ செய்யக்கூடாது. தாய் வீட்டிற்கு விலக்காயிருந்தாலும் கூடாது. தந்தை, தந்தையின் தந்தை, சகோதரன், ஞாதி இவர்களுள்

முந்தியவனில்லாவிடில் பிந்தியவன் உபநயனம் செய்விக்கலாம். பத்னி இல்லாதவன் உபநயனம் செய்விப்பது சிறந்ததல்ல. பிரும்மசாரியாயிருப்பவன் மிக அவசியமாயின் செய்விக்கலாம். ஒரே கர்ப்பத்தில் இரட்டை ஆண்குழந்தைகள் பிறந்தால் அவர்களுக்கு ஒரே வேதியில் ஒரே லக்னத்தில் தந்தையே ஜாதகர்மம் முதல் உபநயனம் வரை செய்விக்கலாம். இரண்டும் பெண்ணானாலும் ஒரு பெண் ஒரு பிள்ளையானாலும் ஜாதகர்மம் முதல் சௌளம் வரை செய்யலாம். இரண்டு மனைவிகளிடத்தில் ஒரே லக்னத்தில் குழந்தைகள் பிறந்தால் வேதி, நாந்தி, செய்விப்பவன் தனித்தனியாக இருக்கவேண்டும். நபும்ஸகன், குருடன், செவிடன், மந்தன் போன்று அங்கஹீனமோ மந்திரத்தை உச்சரிக்கமுடியாமையோ இருந்தாலும், முறைப்படி இவர்களுக்கு இந்த ஸம்ஸ்காரங்களைச் செய்விக்கவேண்டும். மந்திரங்களைத் தந்தையே அவனுக்குப்பதிலாக உச்சரிக்கவேண்டும்.

பிள்ளைப் பேறில்லாமல் தத்தனாக ஒருவனை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்வதாயின் உபநயனத்திற்கு முன்னரே எடுத்துக்கொண்டு முறைப்படி உபநயனம் செய்விக்கவேண்டும்.

வேதம் ஓதும் தகுதி உபநயனமானபின் வரக்கூடிய அந்தந்த வேதத்திற்கான உபாகர்மா (ஆவணி அவிட்டம் முதலியன) வின்போது கிடைக்கின்றது. அன்று வேதங்களை வகுத்த வியாஸரையும் வேதத்தைக் கண்ட காண்டருஷி முதலானவரையும் பூஜைசெய்து அவர்களுக்கான தர்ப்பணம் ஹோமம்

முதலானதைச்செய்து தன் சாகைக்கான வேதத்தையும், மற்ற வேதங்களின் வேதாதி மந்திரங்களையும் குருமுகமாக உபதேசம் பெற வேண்டும். வேத அத்தியயனத் தொடக்கமே உபாகர்மாவாகும். அன்று தொடங்கித் தை மாதம் பூர்ணிமை வரை அனத்தியன தினங்கள் தவிர மற்ற நாட்களில் அத்தியயனம் செய்து வந்து தை மாதப் பௌர்ணமியில் அத்தியயனத்தை, மறுஉபாகர்மதினம் வரை நிறுத்துவதற்கான அத்யாய உத்ஸர்ஜனம் என்ற கர்மாவைச் செய்யவேண்டும். இந்நாட்களில் இந்த உத்ஸர்ஜனத்தைச் செய்யாமல் அதற்குப் பிராயச்சித்தமாக உபாகர்மாவன்று காமோ கார்ஷீத் மந்திரஜபம் செய்கிறார்கள். உபாகர்மாவும் உத்ஸர்ஜனமும் முறைப்படி செய்வதால் மந்திரங்கள் வீரியம் குறையாமல் உரியபலனைத் தரும்.

ருக்வேதிகள் சிராவணமாதத்தின் சிரவண நட்சத்திரத்திலும் ஸாமவேதிகள் ஹஸ்த நட்சத்திரத்திலும், கிருஷ்ணயஜுர்வேதிகள் உதயத்தில் வியாப்தியுள்ள சிராவணமாதத்தின் பௌர்ணமியிலும் உபாகர்மாவைச் செய்வர். தோஷமில்லாத திதி நட்சத்திரங்கள் அமைவதனைஒட்டி ஆடி முதல் புரட்டாசிவரை இந்த காலம் வேறுபடும். சுக்லயஜுர் வேதிகள் சிராவண பௌர்ணமியில் செய்வர். உபாகர்மாவன்று உபநயனமானவன் பூணூல், மேகலை, தண்டம், அஜினம் முதலியவற்றைப் புதிதாகத் தரிக்க வேண்டும்.

தை மாத பௌர்ணமியில் வேதஅத்யயனம் நிறுத்தப்பட்டதும், அதிலிருந்து மறுபடி உபாகர்மா

வரை, வேதங்களின் அங்கங்களான சிக்ஷா, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்ற ஆறு அங்கங்களைக் கற்கவேண்டும். உபாகர்மா அன்று மறுபடி தொடங்கி வேதாத்யயனம் செய்யவேண்டும்.

**ஸமாவர்தனம் – வேதவிரதம்**

உபநயனத்தன்று விரதமாக ஏற்றுக்கொண்ட பிரும்மசரியத்தின் முழுப்பயன் தன் சாகையான வேதப் பகுதியைப் பூர்ணமாக அங்கங்களுடன் ஒதுவதே யாகும். ஒதிமுடிந்ததும் அந்த பிரும்ஹசர்யவிரதத்தை நிறைவுசெய்வதே ஸமாவர்தனம். இதனைச் செய்த பின் திருமணம் செய்து கிருஹஸ்தனாக ஆகலாம். அல்லது தனது இறுதிவரை பிரும்மசாரியாகவே (நைஷ்ட்டிக பிரும்ஹசாரியாக) இருக்கலாம். ஆனால் அதற்கு நியமங்கள் அதிகம். பிரும்ம சரியத்திலிருந்து ஸன்யாஸியாகவும் ஆகலாம். பெரும்பாலானவருக்கு மனச்சஞ்சலத்தைக் கட்டுப்படுத்த முடியாது. நியமத்தை மீறினால் பெரும் பாபச்சுமை சேரும். அதனால் பிரும்மசரியத்தை முடித்துக் கொண்டதன் அடையாளமாக தன் வேதத்தின் ருஷிகளை வணங்கி விரதத்தை முடித்து மந்திரபூர்வமாக ஸ்னானம் செய்து மங்களமான ஆடை, அணி, கண்ணிற்குமை, செருப்பு, குடை முதலியவைகளை ஏற்பர்.

இதையே இன்றளவில் திருமண நாளன்று மணப்பந்தலிலேயே திருமணத்திற்குமுன் வரனின் பெற்றோர் வரனுக்குச் செய்து வைக்கின்றனர். பிரும்மசர்ய நிலையில் சூரியனையும் அக்னியையும்

நன்கு ஆராதித்துவந்தபடியால் அந்த இரு தேவதைகளும் இனி பிறருக்கு வாரிவழங்குகின்ற அளவில் செல்வம், ஆரோக்கியம் புத்திசக்தி இவற்றைத் தனக்கு அருளும்படி வேண்டிப் பெறுகிறான். இதுவரை இவன் பிறரது போஷணையில் வளர்ந்தான். இன்று பிறரைப்போஷிக்கும் தகுதி பெற வேண்டும். அதனால் சூர்யனையும் அக்னியையும் வழிபட்டுக் குடும்பத்தைத் தாங்குகின்ற சக்தியை அருளாகப் பெற்றுத் திருமணம் என்ற சடங்கைச் செய்துகொள்ள முற்படுகிறான். இதுவரை இவனுக்கான சடங்குகளில் பெற்றோருக்கும் பெரும் பங்கு உண்டு. இந்த விரதம் முடிந்தபிறகு வரன் தனித்துத் தனக்கான சடங்குகளைச் செய்து கொள்ளத் தகுதி பெறுகிறான்.

பதினாறாவது வயதில் உத்தராயணத்தில் பௌர்ணமியில் சௌளத்திற்குரிய திதி வார நட்சத்திரங்களில் விரதம் செய்யலாம். அதற்கு முன்னரே வேதாத்யயனம் முடித்திருந்தால் உடனும் செய்யலாம். விரதம் முடிந்ததும் விவாஹத்திற்குத் தகுதி கிடைக்கிறது.

**விவாஹம்**

தன் பிதாவின் வர்க்கத்தில் ஏழுதலைமுறைக்கும் தாயின் வர்க்கத்தில் ஐந்து தலைமுறைக்கும் உட்பட்டவள், ஒரே கோத்திரத்தைச்சார்ந்தவள், வேறு கோத்திரமாயினும் ஒரே பிரவரமுள்ளவள், வயதில் மூத்தவள், உருவில் பெரியவள், பெருநோயுற்றவள் இவ்வாறு பெண் இருந்தால் அவளுடன் விவாஹம் கூடாது. ஆனால் அத்தையின் பெண்ணும் மாமாவின்

பெண்ணும் மணப்பெண்ணாவது நம் தேசத்தில் சிஷ்டாசாரத்தில் உள்ளது. ஸ்வீகாரமாக வந்தவன் தன்னைப் பெற்றவர்களின் கோத்திரத்தில் பிறந்தவளை மணக்கக்கூடாது. ஒரு தலைமுறையாகி விட்டால் பாதகமில்லை. அதாவது அவனது சந்ததி மணக்கலாம்.

தந்தை இல்லாவிடில் பிதாமகர், சகோதரர் (வயதில் மூத்தவர்) அந்த குலத்தைச் சேர்ந்தவர் இவர்களில் முந்தியவர் இல்லாவிடில் பிந்தியவர் கன்யகாதானம் செய்து கொடுக்கலாம். ஒரு வயிற்றில் பிறந்த இருபுத்திரர்களுக்கு ஒரே வருஷத்தில் விவாஹம் செய்யக்கூடாது. தாய் வேறாயிருந்தால் செய்யலாம். பெண்களுக்கும் இந்த நியமமுண்டு. அவசியமாயின் ஆறுமாதங்களுக்குப் பிறகும் வருஷம் (பிரபவ – விபவ என) மாறினால் மூன்று மாதங்களுக்குப் பின்னரும் செய்யலாம். இரட்டைப் பிள்ளையாயின் ஒரே சமயத்தில் செய்யலாம்.

சகோதர சகோதரிகளுக்கு ஒரேதினத்தில் வெவ்வேறு லக்னத்தில் அல்லது லக்னாம்சத்தில் செய்யலாம். மூத்தவன் மணமாகாதிருந்தால் தம்பிக்கு மணம் செய்யக்கூடாது. மூத்தவன் அங்கஹீனமாகவோ விவாஹத்தை வெறுப்பவனாகவோ, விவாஹத்தகுதி இல்லாதிருந்தாலோ செய்யலாம். ஆனால் ஸ்வீகாரமாக ஒருவனை எடுத்துக்கொண்ட பிறகு பிள்ளை பிறந்தால் ஸ்வீகாரபுத்திரன் மூத்தவாயினும் பின்பிறந்த ஔரஸ புத்திரனுக்கு முன்னதாக மணம் செய்விக்கலாம். ஸபத்னீபுத்திரர்களாயின் பிதா

உயிருடன் இருக்கும்வரை ஜ்யேஷ்ட-கனிஷ்ட நியமமுண்டு. மூத்தபெண் விவாஹமாகாதிருந்தால் இளையவனுக்கு விவாஹம் செய்யக்கூடாது. மூத்தவள் விவாஹத்திற்குத் தகுதியில்லாதிருந்தால் செய்யலாம்.

விவாஹம் அக்னியை ஸாக்ஷியாக கொண்டு நடக்கிறது. தம்பதி அக்னிமுகமாகச் செய்யவேண்டிய கர்மங்களனைத்திற்கும் முக்கியமான அக்னியின் உபாஸனத்தை விவாஹத்தின் போது தொடங்கு கிறார்கள். அன்றிலிருந்து மணமான பெண்ணே தன் பதியுடன் கூடஇரந்து அக்னி உபாஸனத்திலும் அதன்மூலம் நடைபெறுகின்ற சடங்குகளிலும் முக்கியப்பங்கை வகிக்கிறாள். அவளின்றி அக்கினி உபாஸனமோ சடங்குகளோ பதிக்கு இல்லை. வீட்டில் விளக்கேற்றவந்தவள் என்ற பெருமை அவளுக்கு ஏற்படுகிறது. புண்ணியமும் பாபமும் இருவரும் சேர்ந்தே அனுபவிக்கிறார்கள்.

விரதம் முடித்து மங்களமான ஆடை, அணி, கண் மை, குடை, செருப்பு, விசிறியுடன் கிளம்பிய வரன் பெண்ணின் தந்தை பெண் கொடுப்பதாக வாக்களித்ததை ஏற்று விவாஹ மண்டபத்திற்கு வந்ததும் அந்தப் பெண்ணிற்குப் புத்தாடையை பிறரிடம் அபவாதம் பெறாமல் குறையில்லாமல் தன்னுடன் முதுமை அடையும்வரை வாழும்படி மந்திர பூர்வமாக வாழ்த்தித் தருகிறான். மக்கட்செல்வமும் மற்ற செல்வமும் வேண்டி தேவர்களை வணங்குகிறான். புத்தாடை புனைந்துவந்த மனைவியைத் தன் எதிரில் நிறுத்தி இருவரும் ஒருமனத்துடன் வாழ

ஸமஞ்சனமந்திரம் கூறுகிறான். பெண்ணும் வரனும் ஒருவரையொருவர் நன்குபார்த்துக் குளிர்ந்த பார்வையுடன் வாழ்க்கை நடத்துவோம் என்று மந்திர பூர்வமாகச் சொல்கின்றனர். சந்திரனும் கந்தர்வர்களும் அக்கினியும் இதுவரை அவளைக்காப்பாற்றித் தன்னிடம் ஒப்படைப்பதாக அவளை ஏற்கிறான். பெண்ணின் தந்தை அந்த வரனை மஹாவிஷ்ணு வாகப் பாவித்துப்பூஜை செய்து பெண்ணிடம் உள்ள தன்னுரிமை விலக்கி அவளை அந்த வரனுக்கு உரிமையாக்குகின்ற கன்யகாதானம் செய்கிறார். அதனையடுத்து வரன் தான் கொணர்ந்துள்ள மாங்கல்ய ஸூத்ரத்தை அவளது கழுத்தில் மூன்று முடிச்சுடன் கட்டி அந்த தானத்தால் வந்த பொறுப்பை ஏற்கிறான். பெண்ணின் வலது கையைப்பிடித்து அழைத்து அக்னியை வலமாக வந்து உட்கார்ந்து அக்னியில் ஹோமம் செய்து தன் மைத்துனன் எடுத்து மனைவியின் கையில் நிரப்பிய பொறியை ஹோமம் செய்து வடக்கில் வைத்துள்ள சிலையின் மேல் பெண்ணின் வலது காலை ஏற்றிவைத்து அவளைக் கல்லைப்போன்று திடமாகவும், எதிர்ப்பவரை முன் நின்று எதிர்ப்பவளாகவும் இருக்கச்சொல்கிறான். பிறகு அக்கினியை வலம்வந்து ஏழடி தன்னுடன் கூடநடத்தி (ஸப்தபதீ) அவளுடன் நட்புரிமை கொண்டாடுகிறான்.

இத்துடன் விவாஹம் முடிவடைகிறது.

பதி – பத்னி என்ற நிலை ஸ்திரமாகிவிட்டது. ஆயுள்பர்யந்தம் நித்தியமாகச் செய்யவேண்டிய

அக்கினி உபாஸனையை அன்று முன்னிரவில் பிரவேசஹோமத்துடன் தொடங்குகிறான்: இது அவனது ஔபாஸநாக்னி. ஸ்தாலீபாகம் இதில் நடைபெறுகிறது. நான்காம் நாள் பின்னிரவில் மங்களஸ்னானம் செய்துள்ள தம்பதிகள் அமர்ந்து பத்னியிடம் பதி புத்திரன் வீடு முதலியவற்றைக் கெடுக்கக்கூடிய தோஷங்கள் விலகவேண்டி அந்த அக்கினியில் சேஷஹோமம் நடைபெறுகிறது. இத்துடன் விவாஹம் பூர்த்தியாகிறது. அந்தந்த ஸூத்திரகாரர்கள் காட்டுகின்ற வழியில் சிற்சில நடைமுறைகள் மாறுபடும்.

**விவாஹம் எப்போது செய்யலாம்.**

ஸீமந்தமாகிப் பிறந்த மூத்த பிள்ளைக்கு (ஸீமந்தபுத்திரனுக்கு) ஆனி(ஜ்யேஷ்ட) மாதத்திலும் அவன் பிறந்த மாதத்திலும் சௌளம் உபநயனம், விரதம், விவாஹம் செய்விப்பதில்லை. மூத்தபெண் ஸீமந்தமாகி முதலில் பிறந்தவளாயின் அவளுக்கும் விவாகம் செய்விப்பதில்லை. இவ்விருவருக்கும் அவர்கள் பிறந்த திதி, பிறந்த நக்ஷத்திரம், பிறந்த மாதம், ஆனிமாதம் இவற்றில் எந்த சுபகாரியத்தையும் செய்வதில்லை.

ஸீமந்த புத்திரனுக்கு ஸீமந்த புத்திரியை மணம் செய்விப்பது நல்லதல்ல.

**ஔபாஸனம்**

விவாஹம் நடந்த அன்று இரவில் ஒன்பது நாழிகைக்குள் (அஸ்தமனமாகி 3 மணி – 36

நிமிஷத்திற்குள்) ஆக்நேய ஸ்தாலீ பாகம் முடித்து ஔபாஸனத்தை ஆரம்பிக்க வேண்டும். ஒன்பது நாழிகையைக் கடந்துவிட்டால் மறுநாள் மாலையே ஸந்தியாகாலத்திற்குப்பிறகு ஔபாஸனம் தொடங்க வேண்டும். அதுமுதல் சூரியஉதயத்திலிருந்து ஆறு நாழிகைகள் (2–24மணி) காலை ஔபாஸனத்திற்கும், சூரிய அஸ்தமனத்திலிருந்து ஆறு நாழிகைகள் மாலை ஔபாஸனத்திற்கும் உரியவேளை.

**ஸ்தாலீபாகம்**

பூர்ணிமா ஸ்தாலீ பாகம், தர்சஸ்தாலீபாகம் என்று இரண்டு. பௌர்ணமியில் செய்வது பூர்ணிமா ஸ்தாலீபாகம். அமாவாசையில் செய்வது தர்சஸ்தாலீ பாகம். விவாஹமானதும் பூர்ணிமா ஸ்தாலீபாகத்தைச் செய்யவேண்டும். அதன் பின்னரே தர்சஸ்தாலீபாகம் செய்யவேண்டும். விவாஹத்திற்குப் பின்வரும் பௌர்ணமியில் தோஷம் இருந்தால் அமாவாசைக்கு முன்வருகின்ற பஞ்சமி முதலிய நன்னாளில் பூர்ணிமாஸ்தாலீ பாகத்தைச்செய்து அமாவாசையன்று தர்சஸ்தாலீபாகம் செய்யலாம். ஆறுமாதம் வரை ஸ்தாலீ பாகமில்லாதிருந்தால் ஔபாஸனம் லௌகீகமாகும். முதல் ஸ்தாலீ பாகத்தை மலமாதம், கிரஹணம், மாதஸங்கிரமணம், குருசுக்கிரமௌட்யம் இவைகளுடன் கூடிய நாளில் ஆரம்பிக்கக்கூடாது.

**மறுவிவாஹம்**

மூத்தமவளிருக்கும்போது மறுவிவாஹம் கூடாது. கெட்ட நடத்தை, அனுகூலமின்மை, கடும் நோய்வாய்ப் பட்டிருத்தல், ஹிம்ஸிப்பது, துர்க்குணம் இவைகள்

உள்ளவளாயின் மூத்தவளைத் தள்ளி வைத்து மறுவிவாஹம் செய்து கொள்ளலாம். மலடியாயின் எட்டாண்டுகளுக்குப் பிறகும், குழந்தைகள் பிறந்தும் அவை ஜீவித்திராவிடில் பத்தாண்டுகளுக்குப்பிறகும், பெண்களையே பெறுபவளாயின் பதினோரு ஆண்டு களுக்குப் பிறகும் வேறு விவாஹம் செய்து கொள்ளலாம். மனைவி இறந்தால் அக்கினி காரியங்கள் செய்கின்ற தகுதியை இழக்கிறான். அந்தத் தகுதியைப்பெற மறுவிவாஹம் செய்து கொள்ளலாம். இரண்டாம் மனைவியும் இறந்து விட்டால், எருக்கஞ்செடியை மூன்றாவது மனைவியாக முறைப்படி மணந்து பின் நான்காவதாக ஒருவளை மணப்பர்.

## மூத்தவனிருக்கும்போது விவாஹம்

தன்தாயின் வயிற்றில் பிறந்த மூத்தவன் விவாகமாகாதிருக்கும்போது இளையவன் மணக்கக் கூடாது. மூத்தவள் விவாகமாகாதிருக்கும் போது இளையவள் மணக்கக்கூடாது. மூத்தவனோ மூத்தவளோ நபும்ஸகம், கடும்நோய்வாய்ப்படுதல், ஜடம், ஊமை, குருடு, செவிடு, கூனல், குள்ளம் முதலிய குறையுள்ளவராயினும் தடையில்லை. ஆயுள் முடியும்வரை பிரும்மசாரியாகவே இருக்க நியமம் ஏற்றவராயினும், விவாஹத்தை வெறுப்பவராயினும் தடையில்லை. மூத்தவன் தேசாந்தரம் சென்று பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்தபின்னர் தகவல் தெரியாதிருந்தால் இளையவன் மணக்கலாம்.

## கிருஹஸ்த தர்மம்

விவாஹமானதிலிருந்து கணவனும் மனைவியும் ஒழுக்கம் கெடாமல் ஒருவருக்கொருவர் அன்புடன் பழகிப் பிள்ளைப்பேறு பெற்று, அக்னி, தேவர், முன்னோர், விருந்தினர், தன்மக்கள் முதலியவர் களுக்கான கடமைகளைச் சீருடன் செய்து வரவேண்டும் மனைவியின் பூர்ணஉதவியுடன் கணவன் விரதம் பூஜை முதலியவற்றைச் செய்ய வேண்டும். கணவனின் அனுமதியுடன் பூஜைவிரதம் முதலியவற்றை மனைவி தனித்துச் செய்யலாம். கணவன் அருகிலில்லாவிடில் மூத்த குடும்பத்தார் அனுமதி பெற்றுச் செய்யலாம். கணவனின் தர்மங்களில் பூர்ண ஒத்துழைப்பு தருவதே மனைவிக்கு எல்லா நன்மைகளையும் தரும். கணவன் ஜீவித்திருக் கையில் தான் மட்டும் கடுமையான உபவாஸம் விரதம் முதலியவற்றைத் தனித்துச் செய்வது மனைவிக்கு உகந்ததல்ல.

## வானப்ரஸ்தமும் ஸன்யாஸமும்

நல்ல ஸந்ததியினரிடம் தன் மனைவியைப் பாதுகாக்கும்படி ஒப்படைத்துவிட்டுத் தான்மட்டுமோ, மனைவி விரும்பினால் அவளுடன் கூடவோ வனம் சென்று தினமும் மூன்று தடவை ஸ்னானம் செய்து சடை, மான்தோல்தரித்துக் காட்டில் விளைபவற்றையே உண்டு வாழ்ந்து எப்போதும் இறைவனைச் சிந்திப்பது வானப்பிரஸ்தமாகும். கலியுகத்தில் இந்த தர்மம் ஏற்றதல்ல என்பர். அவ்வாறே ஆயுள் முடியும்வரை பிரும்மசரி யாசிரமத்திலிருப்பதும் ஏற்றதல்ல என்பர்.

பிரும்மசரியாசிரமத்திலிருந்தோ, கிருஹஸ்தனாகித் தன் கடமைகளை ஆற்றிய பின்னரோ ஸன்யாசி ஆகலாம். மரணம் நெருங்கும்போது சுருக்கமாக முறைப்படி செய்யவேண்டியவைகளைச் செய்து துறவறம் ஏற்பது ஆபத்ஸன்யாஸம். அப்படித் துறவறம் ஏற்றபின் வாழ்வு நீடித்தால் தக்க குருவை நாடி ஆத்மசிந்தனத்தில் ஈடுபடவேண்டும். வைராக்கியம் ஏற்பட்டு இல்வாழ்க்கையைத் துறப்பதாயின் மனைவி புத்திரன் முதலானோருக்குத் தக்க பாதுகாப்பளித்து விட்டு நல்ல குருவை நாடித் துறவறம் பூணலாம்.

# இரண்டாம் பாகம்

## ஆந்ஹிக நியமங்கள்

### முன்னுரை

பிராம்மணன் தன் வாழ்க்கையை நல்ல கட்டுப் பாட்டுடன் அமைத்துக்கொள்ள வேண்டும். கட்டுப் பாடின்றி செயல்படும்போது மிருகத்திற்கும், மனிதனுக்கும் இடையே வேற்றுமை இல்லை. கட்டுப்பாடே ஒவ்வொரு நொடியிலும் மனிதனை உயர்த்துகிறது. அதுவே அவனைச் சமுதாயத்தோடு மோதாமல் எல்லோருடைய உதவியுடன் அமைதியாக வாழச்செய்கிறது.

சிறுகுழந்தையாக இருந்தவன் சௌளத்தின் மூலம் சமுதாயத்தினிடையே தன் நிலை தனித்து உள்ளதை உணர்ந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுகிறான். நல்லாசிரியரிடம் எண்ணும் எழுத்தும் கற்கிறான். ஆசிரியர் கற்பிப்பதை ஏற்கின்ற தகுதி பெற்றதும் உபநயனம் என்ற சடங்கின் மூலம் வேதமும் மற்றும் வாழ்க்கைக்குரியனவையும் கற்கத் தனித்த சூழ்நிலை அமைத்துத் தருகின்ற பிரும்மசரியா சிரமத்தில் நுழைகிறான். ஆசிரியருக்குப்பணிவிடை செய்து கற்பதன் மூலம் அடக்கமும் கல்வியும் அவனது அறிவில் பதிகின்றன.

பிராமணனுக்கு அக்கினியே தெய்வம். அக்கினி மூலமே மற்ற தெய்வங்களுடன் அவன் தொடர்பு கொள்கிறான். பிரும்மசாரியாக இருக்கும்போதே காலையும் மாலையும் ஸமிதாதானம் செய்வதன்மூலம்

அக்கினிதேவனை வழிபடுகிறான். அவன் அருளால் மேதையும், புகழும், ஒளியும், ஆயுளும், செல்வமும் மற்றும் வாழ்க்கையை இனிக்கச் செய்கின்றது அனைத்தையும் வேண்டிப் பெறுவதாக ஸமிதாதான மந்திரங்கள் அமைந்துள்ளன.. அக்கினிமூலமாக தேவர்கள், பணிவிடை மூலம் தன் குரு, முதியவர்கள் இவர்களை மதித்து இவர்களுக்கு அடங்கிச் சீரான வாழ்க்கையைக் கட்டுப்பாட்டுடன் நடத்தும் தகுதியை பிரும்மசரிய ஆசிரமதர்மங்கள் அவனுக்கு அளிக்கின்றன.

வேதத்தையும் வாழ்க்கைக்குரிய கல்விகளையும் விரத நியமங்களுடன் கற்றபின் கிருஹஸ்தன் ஆகிறான். மனைவியின் உதவியுடன் தன்குலத்து மூத்தவர்களுக்கு சிராத்தம் தர்ப்பணம் முதலிய வற்றாலும், தேவர்களுக்கு வேள்வியாலும், சமுதாயத் தினருக்கு விருந்தோம்பலினாலும், நன்மக்கள் பெற்று அவர்களை நல்வழிப்படுத்துவதன் மூலம் பித்ருக் களுக்கும், பூர்த்த தர்மங்களால் (குளம் வெட்டுதல், மரம் வளர்த்தல், கல்விக்கூடம் அமைத்தல் முதலான வற்றால்) சமுதாயத்திற்கும், வைச்வதேவத்தால் உயிரினம் முழுவதற்கும், அன்புடன் பழகுவதால் சூழ்நிலைக்கும் திருப்தி ஏற்படும்படி தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறான். கிருஹஸ்தனை அண்டித் தான் பிரும்மசாரியும் ஸன்யாஸியும் வாழ்கிறார்கள். அதனால் கிருஹஸ்தன் சமுதாயத்தின் ஆதாரத்தூணாக ஆகிறான்

## ஆந்ஹிக நியமம்

தினசரி அந்தணன் தன் வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நியமங்களை ஆந்ஹிக நியமம் என்பர். பகலும் இரவும் கொண்டது அஹஸ் என்ற தினம். அதில் செய்யவேண்டியவை ஆந்ஹிகம். நமது அன்றாட நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துகின்ற நியமங்களை ஆந்ஹிக நியமங்கள் என்பர்.

மூன்று நிலைகள் மனிதனைக் கட்டுப் படுத்துகின்றன. 1. அகநிலை – ஆத்யாத்மிகம் 2. புறநிலை – ஆதிபௌதிகம் 3. அகத்திற்கும் புறத்திற்கும் அப்பாற்பட்ட நிலை – ஆதிதைவிகம் என. நமது உடல் உள்ளம் அறிவு, ஆளுமை ஆகியவை நம்மை அகநிலையில் கட்டுப்படுத்துபவை. காற்று, வெப்பம் குளிர், வெட்டவெளி, மனிதன், மிருகம், மரம் செடி. நாம் வாழ்கின்ற பூமி இவை புறநிலையில் கட்டுப்படுத்துபவை. மனிதனின் ஆற்றலுக்கு உட்படாத வெயில், இடி, மின்னல் போன்றவை மற்றும் அவற்றிற்கும் அப்பாற்பட்டு நின்று அவற்றை அதனதன் இயல்புப்படி இயக்கி வைக்கின்ற அறிய வொணாத தெய்வசக்தியும் மூன்றாவது நிலையில் வருபவை. ஆத்யாத்மிகத்தையும் ஆதிபௌதிகத்தையும் ஓரளவு கட்டுப்படுத்தி அனுகூலமாக்கிக் கொள்ள முடியும். ஆதிதைவிகம் நம்மைப் பாதிக்காதபடி நமக்குப் பாதுகாப்பு தேடிக்கொள்வதும், அதனை அனுகூல மாக்கிக் கொள்வதும் நமது முக்கியகுறிக்கோள். இந்த மூன்று நிலைகளையும் அனுகூலமாக்கிக் கொள்வ

தற்காகவே அன்றாட நடவடிக்கையை ஒழுங்கு படுத்திக் கொள்வது அவசியமாகிறது.

பகலும் இரவும், குளிரும் வெப்பமும், கோபமும் சாந்தியும், விருப்பும் வெறுப்பும், இன்பமும் துன்பமும், பசியும் தாகமும், அறியாமையும் அறிவும் நம் உடல் உள்ளம் மற்றும் சூழ்நிலையைப்பாதிப்பவை. மாற்றி அமைக்க முடியாதவை. இவற்றை நமக்கு அனுகூல மாக்கிக் கொள்வதும், இவற்றால் பாதிப்புறாமல் பாதுகாத்துக் கொள்வதும் நம் முயற்சியால் பெறத் தக்கவை. இந்தநோக்கில் அமைந்தவை இந்த ஆந்ஹிக நியமங்கள்.

நன்முயற்சி நல்ல பலனைத்தரும் – விதி குறுக்கிடாதவரை. நாம் முன்செய்த புண்ய பாபங்களின் பின் விளைவே இந்த விதி. நம்முன் செயல் நல்லதாயின் அது நன்மையையும் கெட்ட தாயின் தீமையையும் விளையச்செய்கிறது. இந்த விதியை இன்று நாம் செய்கிற நல்வினையும் தீவினையும் தூண்டிவிடுகின்றன. விதியை ஒட்டி யமைந்த நம் மனப்பாங்கை இன்றைய நற்செயல் கட்டுப்படுத்துகிறது. நற்செயலில் நாம் எப்போதும் ஈடுபடும்படி இந்த ஆந்ஹிக நியமங்கள் நெறிப் படுத்தும். அதனால் முன்செய்த தீவினைப் பயனாகக் கெட்டதை நாடுகின்ற மனத்தை இந்த நியமங்கள் கட்டுப்படுத்தி நல்லதைப்பின்பற்றும்படி அடக்கி ஆளும்போது இந்த நியமங்கள் விதியை மாற்ற வல்லதாகின்றன. எந்த நற்பணியை மேற்கொள்ளும் போதும் "மம உபாத்த ஸமஸ்த துரிதக்ஷயத்வாரா" –

"பலன் தர முனைந்துள்ள எனது எல்லா கெட்ட முன்வினைகளும் தேய்வுறச்செய்வதன் மூலம்"– என்று ஸங்கல்பம் செய்து கொள்கிறோம். அப்படி விதியை மாற்ற வல்லவை இந்த ஆந்ஹிக நியமங்கள்.

"நான்" "எனது" என்று ஒவ்வொரு செயலிலும் அகந்தை மமதை கொள்வது இயல்பு. ஆனால் நம்நிலை அகந்தை மமதை கொள்ளச்சிறிதும் தகுதி இல்லாதது. பேராற்றல் மிக்க ஒரு பெரும் காலசக்கிரச் சுழலில் அதன் வட்டாவிலும் ஆரத்திலும் ஒட்டிக் கொண்டுள்ள கோடிக்கணக்கான எறும்பு போன்ற சிறு ஜீவர்களாக நாம் இருக்கிறோம். நாம் சுதந்திரமாகச் சுழலவில்லை. அது சுற்றுவதால் நாம் சுற்றுகிறோம். நம் வசத்திற்கு உட்படாதவாறு பகல் இரவு என்ற மாற்றம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இந்த மாற்றம் நில்லாத – நிறுத்த முடியாததொன்று. நம்மை மீறியதொரு பேராற்றல் நம்மை ஆட்கொண்டிருப்பதை நமக்கு இது உணர்த்துகிறது. அந்த பேராற்றலை உணர்ந்து அதனை ஒவ்வொரு நொடியிலும் ஒவ்வொரு துடிப்பிலும் எங்கும் காண்பதற்கு உதவுபவையே இந்த ஆந்ஹிக நியமங்கள். அந்த பேராற்றலையே கடவுளாக அந்தர்யாமியாக எல்லாவற்றிற்கும் ஆத்மாவாக கருணைக்கடலாக விதியாகப் பல வடிவில் கண்டு அதனிடம் ஆட்பட வைக்கின்றன இந்த ஆந்ஹிக நியமங்கள்.

இந்த நியமங்கள் நம் முன்னோர்களான பெரியோர் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளில்

நல்லதெனக்கண்டு அனுபவித்தவை. அவை பொய்யா யிருந்தால் காலத்தால் அழிந்திருக்கும். மெய்யெனவே காலத்தால் அழியாமல் உபதேசத்தின் மூலம் வாழ்ந்து காட்டியதன் மூலம் நம்வரை வந்துள்ளன. இதனைக் கடைபிடிக்கும்படி நம் அந்தர்யாமி தூண்டும். நமது வினையால் அமைந்த விருப்பும் வெறுப்பும் இதற்குத் தடையாக நிற்கும். இந்தச்சுய விருப்பையும் வெறுப்பை யும் பொருட்படுத்தாமல் நியமங்களைக் கடைபிடிப்பது தீரனின் செயல். அந்த நியமங்களைத்தொகுப்போம்.

**விழித்தெழுதல்**

விடியற்காலையில் எழவேண்டும். முன் இரவின் தூக்கம் உடலின் அயர்வை நீக்கும். பின் இரவின் தூக்கம் மனம் தெளிய உதவும். விடியற்காலையில் பிராம்மமுகூர்த்தத்தில் தூக்கம் நீங்கி எழுவது அன்றுமுழுவதும் மனத்தெளிவைத் தொடர்ந்திருக்கச் செய்யும்.

ஒரு நாளுக்கு 30 முகூர்த்தங்கள். சூரிய உதயத்தி லிருந்து இவை கணக்கிடப்படுகின்றன. ஒரு முகூர்த்தம் 48 நிமிஷங்கள்.

28வது முகூர்த்தமான பிராம்மமுகூர்த்தம் விழித்தெழ நல்லவேளை.

சூர்யோதயம் 6 மணிக்கு எனக்கொண்டால் 3.36 முதல் 4–24 வரை உள்ள காலவரை இது. இரவை ஆறுபகுதிகளாக்கி ஆறாம் பகுதியின் முன்பகுதி பிராம்மம், பின் பகுதி ரௌத்திரம் எனச்சிலர். அதன்படி சுமார் 4–5 மணி.

**நல்லதைக்காணல்**

கண்களைத்துடைத்துத் தன் உள்ளங்கைகளைப் பார்க்க வேண்டும். கைகளின் நுனியில் லட்சுமியும் நடுவில் ஸரஸ்வதியும் அடியில் கௌரியும் இருப்பதாகத் தியானித்து தன்னிடம் லயித்திருந்த எல்லா உணர்வுகளையும் இப்போது திரும்பத்தந்து உறுதியும் உற்சாகமும் ததும்ப நற்செயல் புரிய வாய்ப்புத்தந்த இறைவனைச் சிலநொடிகள் தியானித்தல் அவசியம். புனிதர்களான ரிஷிகள், கங்கை முதலிய நதிகள், நற்செயல்களால் புகழ்பெற்ற நளர், யதிஷ்டிரர், ஸீதை முதலானோரை நினைவு கூர்ந்து பசு, அக்னி, பழம், பூ முதலிய நற்பொருளைக் காணலாம்.

உதயத்திற்கு முன்னும் பின்னுமுள்ள மூன்று நாழிகைகள் ஸந்தியாகாலம். இந்த நேரத்தில் ஆகாரம், தூக்கம், உடல்உறவு, நூல்கள் படிப்பது இவை கூடாது. படுக்கை விட்டெழுந்ததும் பூமிதேவியின்மேல் தனது காலடி பதிவதாக நினைத்து, அது தவிர்க்க முடியாதிருப்பதால் பொருத்தருளும்படி பூமிதேவியிடம் பிரார்த்திப்பர்.

**மலஜல நீக்கம்**

ஸந்தியா காலத்திற்கு முன்னரே வீட்டிற்குக் கிழக்கிலோ வடக்கிலோ வடகிழக்கிலோ அமைந்த மலக்கழிப்பிடம் சென்று பூணூலைத் தாவடமாக (மாலையாக – நிவீதமாக) ஆக்கி வலது காதில் சுற்றி வஸ்திரத்தால் தலையைச்சுற்றிப் பகலில் வடக்கு முகமாகவும் இரவில் தெற்குமுகமாகவும் அமர்ந்து

மலமூத்திரங்களைக் கழிக்கவேண்டும். இது நடை பெறாதவரை மனத்தில் அசுசி என்ற எண்ணம்இருந்து கொண்டே இருக்கும். வழி, மாட்டுக்கொட்டில், வயல், நீர்தேக்கத்தின் அருகே, பாழுங்கோயில், புற்று, தெரு, நாற்சந்தி, பூந்தோட்டம், நற்பணிகளுக்குப்பயன்படும் இடம் இவை மலஜலக்கழிப்பிற்கு பயன்படுத்தக் கூடாத இடங்கள். கழிப்பிடமிருந்து அகலும்வரை மௌனத்துடன் வாய்மூடி இருக்கவேண்டும்.

சூரியன், ஜலம், நல்லோர், பசு முதலியவற்றைப் பார்த்துக்கொண்டே மலம் கழிக்கக் கூடாது. கழிப்பதற்கு முன்னரே சுத்திக்கு மண், நீர், இவற்றைச் சேகரித்து வைக்க வேண்டும். முதலில் மலசுத்தி, பின் மூத்திரசுத்தி, பிறகு பாதசுத்தியும் கைசுத்தியும். தாரையாக விழும் நீரிலோ ஆறுகுளங்களிலோ சுத்தி செய்யக்கூடாது. தனக்கெனத்தனித்த பாத்திரத்தில் ஜலம் மொண்டெடுத்துத் தனித்தமர்ந்து சுத்திசெய்து கொள்ளல் நல்லது.

மலஸ்தானங்களையும் கைகால்களையும் மண் கொண்டு சுத்தி செய்வர். மலஸ்தானத்தில் 5, மூத்திர ஸ்தானத்தில் 2. இடது கையில் 10, பிறகு இரு கைகளிலும் தனித்தனியாக 7, பாதங்களில் தனித்தனியாக 7 என அத்தனைதடவை மண் சேர்த்து அலம்பும்போதும் ஒவ்வொருதடவையிலும் ஜலமும் உபயோகிக்கவேண்டும். இத்தனை தடவை சுத்திசெய்தும் அசுசி நீங்காவிடில் மேலும் தேவையான அளவு மண்ணும் ஜலமும் உபயோகித்து சுத்திசெய்தல் அவசியம். பிரும்மசாரியும் ஸன்யாஸியும்

முறையே 2–4 மடங்கு அதிகதடவைகள் சுத்திசெய்து கொள்ள வேண்டும். பெண்கள் பாதி அளவில் சுத்திபெறுவர். பாலர் மிகக்குறைந்த அளவிலேயே சுத்திபெறுவர். தேசம் காலம் தனிநபரின் உடல் நிலைக்கேற்ப இவற்றை அமைத்துக்கொள்ளலாம். வாடையும், பிசிப்பும் நீங்கித் தூய்மைபெறுவது தான் இதன் நோக்கம்.

**கண்டூஷம் – வாய்க்கொப்பளித்தல்**

மலநீக்கமானதும் வாய்க்கொப்பளித்தல் அவசியம். சிறுநீர் கழித்திருந்தால் நான்குதடவையும் மலமும் கழித்திருந்தால் எட்டுதடவையும் வாயில் நீர் நிரப்பிக் கொப்புளித்துத் தனது இடப்புறத்தில் துப்பவேண்டும். தனக்கு வலப்புறத்தில் தேவர்கள் இருப்பதை எப்போதும் நினைவிற்கொள்ள வேண்டும். கண்டூஷம் செய்ததும் ஆசமனம் செய்யவேண்டும்.

**ஆசமனம்**

வலது உள்ளங்கையில் உளுந்து முழுகுமளவு நீர்வார்த்துக் கையின் அடிப்பகுதியைக் குவித்து, உறிஞ்சுகின்றபோது ஒலிஎழாமல் பருகுவதே ஆசமனம். கால்களை முழங்கால்வரை அலம்பிக் கைகளை மணிக்கட்டு வரை அலம்பிக் கிழக்கோ வடக்கோ நோக்கி உட்கார்ந்து கைகளை முழங்கால்களுக்கு இடையே வைத்து உபவீதியாக இருந்து ஆசமனம் செய்யவேண்டும். 3 தடவை ஆசமனம் செய்தலும் உதடுகளை வலதுகைப் பெருவிரலின் அடியால் இர்ண்டு தடவை துடைத்துப் பின் கட்டை விரல் தவிர மற்ற நான்கு விரல்களாலும்

துடைக்கவேண்டும். பின்னர் வலது கட்டைவிரலால் வலது இடது கன்னங்களையும் மோதிரவிரலால் வலது இடது கண்களையும் ஆள்காட்டிவிரலால் மூக்கின் வலதுஇடது புறத்தையும், சுண்டுவிரலால் வலதுஇடது காதுகளையும், நடுவிரலால் வலதுஇடது தோள் களையும் நான்கு விரல்களால் மார்பையும் ஐந்து விரல்களால் தலையையும் தொடவேண்டும். அந்தந்த விரல்களால் இடங்களைத் தொடும்போது அந்த விரல்களில் நடுப்பகுதியை கட்டைவிரல் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும். 3 தடவை நீர்பருக முறையே அச்யுதாய நம; அநந்தாய நம; கோவிந்தாய நம; என்றும் கன்னம் முதலிய இடங்களைத் தொடும்போது கேசவ – நாராயண (கன்னங்களில்) மாதவ – கோவிந்த (கண்களில்) விஷ்ணோ – மதுஸூதந (மூக்கில்) த்ர்விக்ரம வாமந (காதுகளில்) ஸ்ரீதர – ஹ்ருஷீகேச (தோள்களில்) பத்மநாப (மார்பில்) தாமோதர (தலையில்) என்று பகவன் நாமாவை உச்சரித்து நினைக்கவேண்டும்.

நின்றோ, ஆஸனத்தில் அமர்ந்து கொண்டோ, உத்தரீயமில்லாமலோ உபவீதியாக இல்லாமலோ, ஆசமனம் செய்யக்கூடாது. தூயநீரைக்கொண்டு தான் ஆசமனம் செய்ய வேண்டும். நோயுற்றிருந்தால் வென்னீரால் ஆசமனம் செய்யலாம்.

நதி குளங்களில் முழங்காலளவு நீரில் நின்று வலதுகையால் நீரேந்தி ஆசமனம் செய்யலாம். தங்கம் வெள்ளி மற்றும் தாமிரத்தாலான பாத்திரம் கொட்டாங்கச்சி, மரத்தாலான குடுவை இவற்றில்

நீர்ஏந்தி இடதுகையில் வைத்துக்கொண்டு வலது கையில் நீர்வார்த்து ஆசமனம் செய்யலாம். ஈரவஸ்திரம் தரித்தவன் நீரில் நின்று கொண்டு ஆசமனம் செய்யலாம். உலர்ந்த ஆடைதரித்தவன் தரையில் அமர்ந்தே ஆசமனம் செய்யவேண்டும்.

ஆசமனம் என்பது உள்ளத்தையும் வாக்கையும் தூய்மைப்படுத்தும் செயல். (ஆசமனம் - தூய்மை செய்தல்) பல்வேறு நற்செயல்களுக்கு முன்னும் பின்னும் இதனைச்செய்வர். கால்களையும் கைகளை யும் கழுவுதல் - ஸ்னானம் செய்தல் இவை உடலின் தூய்மைக்காக. ஆசமனம் வாக்கும் உள்ளமும் தூய்மைபெற, ஸ்னானத்தையும் ஆசமனத்தையும் மந்திரத்துடன் செய்யும்போது பௌதிகத் தூய்மையுடன் தெய்வீகத்தூய்மையும் கிட்டுகிறது.

**ஆசமனம் செய்யவேறு நிமித்தங்கள்**

வேதம் ஓதுமுன், தேவவழிபாட்டிற்கு முன், குரு நமஸ்காரத்திற்குமுன், போஜனத்திற்கு முன்னும் பின்னும், தூங்கச் செல்லுமுன், உடல்உறவு கொள்ளு முன், பித்ருகார்யம் செய்யுமுன், தூய்மைக்குறைவை உணர்ந்து அதனை நீக்க ஸ்நானம் செய்ய முடியாத போது, ஆசமனம் செய்வர். ஸ்நானம், தும்மல், தூக்கம், போஜனம் இவற்றின் பின் பிரயாணத்தின்பின் மற்றும் வஸ்திரம் தரித்ததும், அத்தியயனம் முடிந்ததும் ஸந்தியாவந்தனத்திற்கு முன்னும் இரண்டுதடவை ஆசமனம் செய்வர். புதிய உபவீதம் தரிப்பதற்கும் ஜபம், ஹோமம், பிண்டதானம் முதலியவற்றிற்கும் முன் ஆசமனம் செய்வர்.

ஆசமனம் செய்ய இயலாதபோது வலது காதைத் தொடவேண்டும். வலதுகாது நதிதேவதைகளும் ஸூர்யன் அக்னி முதலிய தேவர்களும் வசிக்கின்ற புனித இடம்.

பேசும்போது முகத்திலும் புத்தகத்திலும் தெறிக்கின்ற நீர்த்துளிகளும், ஆசமன காலத்தில் தெறிக்கும் நீர்த்துளிகளும் அசுத்தமானவை அல்ல.

**தந்த தாவனம் – பல்துலக்குதல்**

பாலுள்ளதும் முள்ளுள்ளதுமான மரம் மற்றும் செடிகளின் குச்சிகளால் பல்துலக்குவர். கிழக்கு அல்லது வடக்குநோக்கிக்குந்தி உட்கார்ந்து முழங் கால்களுக்கிடையே கைகளை வைத்து இடமிருந்து வலமாக ஒவ்வொரு பல்லாக மேலும் கீழும் மிகவும் அழுத்தாமல் தேய்க்கவேண்டும். (உடலுக்கும் மனத்திற்கும் ஆரோக்கியத்திற்காகச் செய்யப்படுகின்ற உபசரணைகள் அனைத்தும் கிழக்கும் வடக்கும் நோக்கிச் செய்வர். தெற்கும் மேற்கும் நோக்கிச் செய்பவை இதமளிக்காது. ஸங்கல்பம், பிரார்த்தனை, ஸ்னானம் முதலிய சுத்திகர்மங்கள், தேவதர்பணம், ஜபம், முதலியவற்றை ஸூரியனை நோக்கிச்செய்வர்.) குச்சிகள் கிடைக்காவிடில் நாவலிலை அல்லது மாவிலையால் பல் துலக்கலாம். அமாவாசை, பௌர்ணமி, ஸங்கிரமணம் (மாதப்பிறப்பு) சிராத்தநாள், பிறந்ததினம், விரத – உபவாஸ தினம், ஞாயிற்றுக் கிழமை இவற்றில் குச்சியால் ரத்தம் காணும்படி அழுத்தித் தேய்க்கக்கூடாது. பிரும்மசாரி, கன்னிப்பெண், விதவை இவர்களும் குச்சியால்

தேய்க்கக்கூடாது. இலையைக்கொண்டோ தந்ததாவன சூர்ணத்தைக் கொண்டோ தேய்க்கலாம். துவர்ப்பு, கசப்பு மற்றும் காரச்சுவையுள்ள குச்சிகள், முக்கியமாக வேம்பு, கருவேல், நாவல், புங்கு, அத்தி, மாதுளை, மா இவற்றின் மென்மையான பசுமையுள்ள குச்சிகள் ஏற்றவை. அரசும் புரசும் கூடாது. சூர்ணம் முதலியவற்றால் தேய்க்கும்போது பவித்ரவிரல், நடுவிரல், கட்டைவிரல் இவற்றால் பற்களைத் தேய்க்கலாம். நாக்கை முன்கூறியவற்றால் வழித்துக் கொள்ளலாம்.

நீர்தேக்கம் மற்றும் ஆற்றின் கரையில், தேவாலயத்தின் அருகில், மாட்டுக்கொட்டகையில், நீரின் நடுவில் நின்று துலக்கக்கூடாது. குச்சியால் துலக்குமுன் குச்சியில் மரங்களிலுள்ள தேவதா சக்தியான வனஸ்பதியை வணங்கி அனுமதிபெறுவதும் ஆயுள், வலிவு, புகழ், பெருமை, அறிவு முதலியவற்றை வேண்டுவதும் வழக்கம். 'ஆயுர் பலம் யசோ வர்ச்ச: ப்ரஜா: பசு வஸூநி ச. பிரும்ஹ ப்ரஜ்ஞாம் ச மேதாம் ச த்வந்நோ தேஹி வநஸ்பதே" என்ற சுலோகத்தைச் சொல்வது வழக்கம். பல்துலக்கியதும் பொதுத் தூய்மைக்காக 16 தடவை வாய் கொப்புளிக்க வேண்டும்.

### ஸ்நானம் – நீராடுதல்

நீராடுவதற்குக் காரணங்கள் பல. உடல் தூய்மை பெறச் செய்வது நித்யஸ்நானம். குறிப்பிட்ட நிமித்தத்திற்காகச் செய்வது நைமித்திக ஸ்நானமாகும். ஸூர்யன் உதிக்குமுன் உள்ள நான்கு நாழிகை (96

நிமிஷங்கள்) அருணோதயவேளை எனப்படும். இந்த நேரத்திற்குள் நீராட வேண்டும். ஸ்நானத்திற்கு திதி வாரம் முதலிய காலத்தையும் தேசத்தையும் குறிப்பிட்டு ஸங்கல்பம் செய்து கொள்ளுதல், வருணஸூக்தம் , அகமர்ஷண ஸூக்தம் சொல்லுதல், ஆபோஹிஷ்டா முதலிய மந்திரங்களால் புரோக்ஷித்துக் கொள்வது (நீர்த்துளிகளைத் தலையில் தெளித்துக் கொள்வது) தேவதைகளுக்குத்தர்ப்பணம் செய்வது என்ற அங்கங்கள் ஸ்னானத்துடன் செய்யத்தக்கவை.

நதியில் எப்போதும் பிரவாகத்திற்கு எதிராகவும், குளங்களில் பகலில் சூரியனை நோக்கியும் இரவில் கிழக்கு அல்லது வடக்குநோக்கியும் நீராடவேண்டும். நீராடுகையில் ஆசமனம், ஸங்கல்பம்; ஜலத்தில் எப்போதும் உள்ள தேவதாசக்தியை வழிபட்டு உள்ளத்தையும் உடலையும் புனிதமாக்கவும், நீராட அனுமதி பெறவும், உலகமெங்கும் பரவிநிற்கும் ஜலதேவதைகளும் நதிதேவதைகளும் நாம் நீராடும் நீரில் பிரஸன்னமாகவும் வேண்டிக்கொள்ளும் வேத மந்திரங்களான வருணஸூக்தம் சொல்வது, நீராடுதல், உடல் தேய்த்துக்குளித்தல், இரண்டுதடவை ஆசமனம், புரோக்ஷணம், செய்த பாபம் நீங்க வேண்டுகின்ற வேதமந்திரங்களான அகமர்ஷண ஜபம், நீராடுதல், இரண்டுதடவை ஆசமனம், இடுப்பளவு ஜலத்தில் நின்று உபவீதியாய் தேவதீர்த்தத்தால் தேவர்களுக்கும், நிவீதியாய் ருஷிதீர்த்தத்தால் ருஷிகளுக்கும், பிராசீனாவீதியாய் பித்ருதீர்த்தத்தால் பித்ருக்களுக்கும் தர்ப்பணம், நீராடுதல், கரையேறி இடதுகாலைக்

கரையிலும் வலதுகாலை ஜலத்திலும் வைத்துக் கொண்டு ஆசமனம், இவை நீராடும்போது வரிசையாகச் செய்ய வேண்டியவை. நிராடிக்கரை ஏறும் போது இருகைகளில் நிறைய நிரை நிரப்பிக் கொண்டு "யந்மயா தூஷிதம் தோயம் சரீரமலஸஞ்சயை: தத்தோஷ பரிஹாராய யக்ஷ்மாணம் தர்பயாம்யஹம்" என் உடல் அழுக்கால் நிரைக் கெடுத்துள்ளேன். அந்தத்தோஷம் நீங்க யக்ஷ்மாவிற்கு நீரால் திருப்தி செய்கிறேன் எனவேண்டி கரையில் அந்த நிரை விடவேண்டும். நின்று ஈரமுள்ள சிகையை முன்பக்கம் கொணர்ந்து அதன்நுனியில் வடிகின்ற ஜலத்தைப் பூமியில் விடவேண்டும். உடலிலிருந்து வடிகின்ற நிரைத்தேவர்களும் பித்ருக்களும் எல்லா உயிரினங்களும் ஏற்கின்றனர். அதனால் கணநேரம் அப்படியே நின்று நிவீதியாகி மேலாடையை நான்காக மடித்துப்பிழிய வேண்டும். பிழியும்போது சொல்கின்ற மந்திரம் – யே கே சாஸ்மத் குலே ஜாதா: அபுத்ரா; கோத்ரஜா ம்ருதா:. தே கிருண்ஹந்து மயா தத்தம் வஸ்த்ரநிஷ்பீடநோதகம்" என் குலத்தில் கோத்திரத்தில் பிறந்து ஸந்ததியின்றி மறைந்தவர்களுக்கு இந்தத் துணி பிழிந்த நீர் திருப்தி அளிக்கட்டும். பிழிந்த மேலாடையை இடது மணிக்கட்டின்மேல் வைத்துக்கொண்டு இரண்டு தடவை ஆசமனம் செய்யவேண்டும். ஈரமுள்ள ஆடையை தோளிலோ காலிலோ வைக்கக்கூடாது. வைத்தால் மறுபடி நிராட வேண்டும். நிரிலேயே துணியைப் பிழியக்கூடாது.

உலர்ந்த வஸ்திரத்தால் தலைதுவட்டி உடலின் ஈரத்தைத் துடைக்கவேண்டும். தலைக்கும் உடலுக்கும் தனித்தனியே துடைக்கும் வஸ்திரம் தேவை. நீராடும் போது உடுத்திய ஆடையால் உடலைத் துடைத்துக் கொள்ளக்கூடாது.

நீராடுதல் ஆறு வகைப்படும். நித்தியம், நைமித்திகம், காம்யம், க்ரியாங்கம், மலாபகர்ஷணம், க்ரியாஸ்நானம் என.

அருணோதயத்திலும் மதியான்னத்திலும் ஸந்தியா வந்தனம் முதலிய நித்யகர்மாக்களுக்கு முன்னதாகச் செய்வது நித்தியமாகும்.

தொடக்கூடாதவர் தொட்டதால் ஏற்பட்ட அசுசியைப் போக்கச்செய்வது நைமித்திமாகும்.

தைப்பூசம் நவராத்திரி முதலியவற்றிற்காகச் செய்வது காமியமாகும்.

சிராத்தம், தர்ப்பணம் முதலியவற்றிற்காகச் செய்வது கிரியாங்கமாகும்.

அழுக்கு முதலியவற்றை அகற்றச்செய்வது மலாபகர்ஷணமாகும்.

புனிதமான காசி முதலானவற்றில் செய்வது க்ரியாஸ்நானமாகும்.

**ஸ்நானம் செய்ய ஏற்ற நீர்நிலைகள்**

1. மலையில் தோன்றிக் கடலில் கலக்கின்ற நதி 2. கிழக்கிலுள்ள மலையில் உண்டாகி மேற்கில் உள்ள கடலில் கலக்கின்ற நதம் 3. மலையில் அல்லது

பூமியில் ஊற்றாக வெளிவந்து நதியில் கலந்தோ அல்லது பூமியில் மறைகின்ற ஸ்ரோதஸ் 4. மலையின் முடியிலோ தாழ்வரையிலோ வற்றாது ஊறிக் கொண்டிருக்கின்ற ஓடை என்ற நீர்த்தேக்கம் – வடிகாலில்லாதது – ஸரஸ். 5. மனிதர் வெட்டாமல் தானே அமைந்த குளம் – தேவகர்தம் 6) மனிதர்களால் வெட்டப்பட்ட அரை மண்டல வடிவில் அமைந்த குளம் – தடாகம் 7) கற்களால் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுப் படியுள்ள குளம் – குண்டம் 8) மலையின் பிளப்பிலிருந்து கிளம்பித் தாரையாக விழுவது தாரை. 9) ஐந்துமுழ அகலத்திற்கு வட்டமாகக் கட்டப்பட்ட கிணறு – கூபம். இவற்றில் முன்னது பின்னதைவிடச் சிறந்தது.

முன்னது அருகிலிருந்தால் பின்னதில் நீராடுவது முறையல்ல

அமாவாசை பௌர்ணமி தவிர மற்ற நாட்களில் கடலில் நீராடக்கூடாது. மனைவி கர்ப்பிணியா யிருந்தாலும் ஞாயிறும் செவ்வாயும் கூடிய அமாவாசை பௌர்ணமியானாலும் கடலில் நீராடக்கூடாது. செவ்வாயன்று கிருஷ்ணபக்ஷசதுர்தசியானால் கடல் நீராட்டம் மிக உயர்ந்தது. காவேரி கூடுமிடத்திலும் கங்கை கூடுமிடத்திலும் வாரதோஷம் கிடையாது. ராமஸேதுவில் தினமும் நீராடலாம். கடல்நீரால் ஸ்நானம் செய்ததும் சுத்தஜலத்தால் ஆசமனம் செய்ய வேண்டும். தனிப்பட்ட ஒருவரின் தனி உபயோகத்திற்காக அமைந்த நீர்நிலையில் அவர் அனுமதியின்றி நீராடக்கூடாது. வேறு நீர்நிலை

கிடைக்காவிடில் நீரின் அடியிலிருந்து 4–5 கையளவு மண்ணை எடுத்து வெளியே போட்டோ, 3–4 குடம் நீரை எடுத்து வெளியே கொட்டியோ பின்னர் நீராடலாம்.

வண்ணான் துணி தோய்க்கும் துறை, சுடுகாட்டிற்கு அருகில் உள்ள துறை, அசுத்தி மிக்கவர்கள் குடியிருப்பின் அருகிலுள்ள துறை இவற்றில் நீராடக்கூடாது.

ஸ்நானம் செய்வதால் உடலின்மேல் சேர்ந்த அழுக்கு நீங்குகிறது. இதனை முக்கிய நோக்கமாகக் கொண்டு செய்வது, மலாபகர்ஷண ஸ்நானம். இதற்கு கால–தேச நியமமோ செய்முறைநியமமோ இல்லை. அழுக்கு நீங்க நீராடினாலும் அதன் விளைவாக மனமும் தெளிவதும் கண்கூடே. ஆனால் புண்ணிய காலத்தை முன்னிட்டோ, புண்யக்ஷேத்திரத்தில் கங்கை காவிரி முதலிய புண்யநதியிலோ, பாபம் நீங்கவோ புண்யம் சேரவோ, புனிதமான ஜபம், இறைவழிபாடு முதலியவற்றைச் செய்வதற்கு முன்னரோ நீராடும் போது உடல் தூய்மை மட்டும் நோக்கமல்ல. உள்ளத் தூய்மை, தெளிவு, உள்ளத்தாலும் உடலாலும் செய்த தீவினைகளின் தாக்கத்திலிருந்து விடுதலை, ஆழ் மனத்தின் வக்கிரிப்பு நீங்கித்தெளிவு, உள்வெளிச் சூழ்நிலையில் தூய்மை, நாம் வழிபடவிருக்கின்ற தெய்வத்தின் அருள் நம்மிடம் பரவத்தகுதி என்றவாறு பல நிலைகளைப் பெறுவதை முன்னிட்டே நீராடும் போது இந்த நியமங்கள், செய்முறைக் கட்டுப்பாடு,

வேதமந்திரங்கள் ஓதுதல் முதலியதைச் செய்வது அவசியமாகிறது.

இந்நியமங்களை முறைப்படி பின்பற்ற இயலாதவர்களும், முறைப்படி செய்தாலும் அவற்றில் நிறைவு பெறவும், நியமக்குறை நீங்கவும் சிலவற்றைச்செய்வர். அவற்றில் மிக முக்கியமானது "ஹரேய! நாராயண" "ஹர மஹாதேவ" முதலிய இறைவனின் திருநாமங்களை உணர்ந்து உரக்கச்சொல்லியும் இறைவனை நினைத்தும் முழுக்குப் போடுவர். ஹரி: ஹர: எனும்போது அந்நாமம் நம்மிடமுள்ள பாபத்தை நீக்குகிறது. உலகப்படைப்பில் முதலில் தோன்றியது நீர் (நாரா:). அதனையே தன் இருப்பிடமாக (அயனமாகக்) கொண்டவர் நாராயணர். நரர்களாகிய ஜீவர்களுக்கு அடையவேண்டிய இலக்கும் அதற்கான பாதையும் (அயனம்) அவரே. அவரது நாமங்களின் ஜபமும் மனனமும் பாபத்தை நீக்குபவை. புனிதத்தைத் தருபவை. தெய்வஅருள் பரவத் தகுதி ஏற்படுத்துபவை.

மந்திரங்களை ஓதாதவரும் ஓத இயலாதவரும் தகுதி இல்லாதவரும்கூட, ஜலத்தில் உள்ள ஜல தேவதையான வருணனும் நதிதேவதைகளும் ஜலத்தின் அமிருத சக்தியும் நீராடும் நீரில் இருப்பதை உணர்ந்து அவர்கள் தன்னை அருளால் பாலித்துப் பாபமகற்றிப் புனிதனாக்கும்படி மனத்தளவில் வேண்டிக்கொள்வர். கங்கே! கங்கே! காவேரி! காவேரி என நதிதேவதைகளை உரக்கக் கூப்பிட்டும் நீராடலாம். அப்போது மந்திரம் ஜபிப்பதன் பலன் கிட்டிவிடுகிறது.

நோயுற்றிருப்பவன், பாலர், கர்ப்பிணி, முதியவர் மற்றும் குளிர்ந்தநீர் ஒத்துக் கொள்ளாதவர் குளங்களுக்குச் செல்லமுடியாதவன், தன் வீட்டிலுள்ள கிணற்றின் நீரால் நீராடலாம். அந்நிலையிலும் அந்நீரில் தெய்வ அருளை வேண்டிடுவது அவசியம். ஜனனம் மரணம் முதலியவற்றால் நேர்ந்த தீட்டு வெந்நீரில் நீராடுதலால் நீங்காது. நோயுற்றவனாயின் தீட்டு நீங்க வெந்நீரில் நீராடிப் பின் நோய் நீங்கியதும் நீர்நிலைகள் சென்று நீராடிய பின்னரே முழுத்தீட்டு நீங்கும். ஸங்கிரமணம் (மாதப்பிறப்பு–சூரியன் ஒரு ராசியைவிட்டு அடுத்த ராசியில் நுழையும் நாள்) சிராத்தம், கிரஹணம் அமாவாசை முதலிய நாட்களில் வெந்நீரில் நீராடுவதால் போதிய தூய்மை கிட்டாது. அப்படி வெந்நீரில் நீராட நேர்ந்தால் நோயுற்றுள்ளதால் பூர்ணத்தூய்மை பெற இயலாதிருக்கிறோமே என்று வருந்தித் தெய்வஅருள் கோரலாம்.

உடுத்திய ஆடை, மேலாடையுடன் நீராடுவது ஸசேலஸ்நானம் எனப்படும். அவ்விதம் ஆடையுடன் ஸ்நானம் செய்வதே நியம ஸ்நானம். உடுத்திய ஆடையை நீக்கி சிற்றாடைஅணிந்து குளிப்பது பலன் தராது. ஆடையின்றியும், ஆடைக்குறைவுடனும் நீராடுவது நீரில் உள்ள தேவதாசக்தியை அவமதிப்பதாகும். பாபம் விளையும். நதிகளிலும் தெய்விகக் குளங்களிலும் ஸ்நானம் செய்யும் போது உலர்ந்த ஆடையை மேல்போர்த்தி உள்ளாடையைக்

கீழாக நழுவவிட வேண்டும். மற்ற இடங்களில் மேலாகஉறுவி எடுக்க வேண்டும்.

### நைமித்திகஸ்நானம்

தீண்டத்தகாதவர்களையும், தீட்டுள்ளவர்களையும் தொட்டாலும், சவமுள்ள இடத்தில் சென்றாலும் மயானம் சென்றாலும் மரணம் நேர்ந்த 10 நாட்களுக்குள் அவர்களது வீட்டிலோ வெளியில் வழியிலோ துக்கப்பிரச்னம் செய்தாலும் ஸசேல ஸ்நானம் தேவை. தீட்டுள்ளவனைத் தொட்டவனைத் தொட்டாலும் தீட்டுண்டு. நீராடினால் அது நீங்கும். அப்படித் தொட்டவன் தீட்டென அறியாமல் தொட்டிருந்தால் ஆசமனம் போதும். வழி, யாத்திரை, யுத்தம், கலகம், விவாஹம், வேள்வி, உற்சவம், நகரம், தீப்பிடித்தலால் நெருக்கடி முதலிய நேரங்களில் இந்த ஸ்பர்சத்தீட்டு இல்லை.

### கிரஹணஸ்நானம்

சூரியகிரஹணமோ சந்திரகிரஹணமோ ஏற்பட்டால் கிரஹணம் பிடிக்கத் தொடங்கியதும் விட்டபின்னரும் நீராடவேண்டும். ஜனன – மரணத்தீட்டுள்ளவனும் நீராடவேண்டும். கிரஹணம் தெரியுமிடங்களில் கிரஹணம் தெரியும்வரை தான் இந்த புண்யகாலம். கிரஹணம் பிடித்துள்ளபோது விடுவதற்கு முன்னரே அஸ்தமனமாகி விட்டால் உபவாஸமிருந்து உதயத்திற்குப்பின் ஸ்நானம் செய்யவேண்டும்.

## ஸங்க்ரம ஸ்நானம்

சூரியன் தான் ஸஞ்சரித்த ராசியைவிட்டு அடுத்த ராசியில் நுழையும் வேளையே ஸங்கிரமண புண்யகாலம் எனப்படும். ஸௌரமானப்படி தமிழ் நாட்டில் மாதப்பிறப்பென இதைக் கொண்டாடுவர்.

சித்திரை ஐப்பசி மாதப்பிறப்பு விஷு என்றும், வைகாசி, ஆவணி, கார்த்திகை மாசி மாதப்பிறப்புகள் விஷ்ணுபதம் (விஷ்ணுபதீ) என்றும், ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி மாதப்பிறப்புகள் ஷடசீதி என்றும் ஆடி மாதப்பிறப்பு தக்ஷிணாயனம் என்றும். தை மாதப்பிறப்பு உத்தராயணம் என்றும் தனிச்சிறப்பு பெற்றவை. சூரியன் மகரராசியில் பிரவேசித்தபின் உள்ள 20 நாழிகை உத்தராயண புண்யகாலம். கடகத்தில் பிரவேசிப்பதற்குமுன் உள்ள 20 நாழிகை தக்ஷிணாயந புண்யகாலம். விஷுவத்தில் துலா ராசியிலும் மேஷராசியிலும் சூரியன் பிரவேசிக்குமுன் உள்ள 10 நாழிகையும் பிரவேசித்தபின்னருள்ள 10 நாழிகையும் புண்யகாலம். இந்த நேரத்தில் ஸ்னானம் செய்யவேண்டும்.

## ரஜஸ்வலை ஸ்நானம்

மாதவிடாயுற்ற பெண் நான்காம் நாளில் சூரிய உதயத்திற்குப்பின் ஆறு நாழிகை (2–24 மணி) கழித்து நீராடவேண்டும். 5–வது நாள் நீராடிய பிறகே தேவகாரியங்களுக்கும் பித்ருகாரியங்களுக்கும் ஈடுபடலாம். தீட்டுகண்ட நாளிலிருந்து 17 நாட்களுக்குள் மறுபடி தீட்டு கண்டால் ஸ்நானத்தால் சுத்தி. 18வது நாள் முதல் மூன்று நாள் தீட்டு. அது கழிந்ததும்

ஸ்நானத்தால் சுத்தி. மாதவிடாய் நேரத்தில் ஜனன-மரணத்தீட்டு ஏற்பட்டாலும் ஜனன மரணத்தீட்டு ஏற்பட்டபின் மாதவிடாய் தீட்டு ஏற்பட்டாலும் உடன் ஸ்நானம் செய்து பின் போஜனம் செய்யலாம். மாதவிடாய் தீட்டுள்ள பெண்ணை மற்றொரு மாதவிடாய் தீட்டுள்ளவர் தீண்டக்கூடாது.

## நோயுற்றவனுக்கு ஸ்நானம்

நோயுற்று நீராடக்கூடாத நிலையில் இருந்து நீராடவேண்டிய அவசியமிருந்தால் தீட்டில்லாத மற்றொருவன் அவனைத் தொட்டுப் பத்துதடவை நீராடவேண்டும். ஒவ்வொரு ஸ்நானம் முடிந்தபிறகும் நோயாளி உலர்ந்த ஆடை அணியவேண்டும். மாதவிடாயுள்ள பெண் நோயுற்று நீராடக்கூடாத நிலையில் இருந்தால தீட்டு கழிய மற்றொரு பெண் இவளை தொட்டுத்தொட்டுப் பத்துதடவை முழுகுவதாலும், இவள் மாற்றி மாற்றி உலர்ந்த ஆடை உடுத்திக் கொள்வதாலும் தீட்டு நீங்கப்பெறலாம். பிறரது தீட்டு நீங்க ஸ்நானம் செய்பவர் கடைசியில் மந்திரமில்லாமல் முழுகி ஆசமனம் செய்து மறுபடி முறைப்படி ஸ்நானம் செய்து சுத்திபெறுவான்.

## புண்ய காலத்தில் புண்ய தேசத்தில் ஸ்நானம்

சிவலிங்கத்திற்கு எதிரில் உள்ள குளம் சிவகங்கை எனப்படும். விஷ்ணுவின் ஆலயத்தின் அருகில் உள்ள குளம் விஷ்ணுகங்கை எனப்படும். இவற்றில் ஸ்நானம் செய்யப் பாவமனைத்தும் நீங்கும். சித்திரை மாதத்து கிருஷ்ண சதுர்தசியில் சிவகங்கையில் நீராடுவது மிகச்சிறந்தது. கார்த்திகை

பௌர்ணமியில் புஷ்கரத்திலும் மாசிபௌர்ணமியில் பிரயாகையிலும் செவ்வாய்க்கிழமை கூடிய அமாவாசையில் கங்கையிலும் ஸ்நானம் செய்வது மிகச்சிறந்தது. ஜன்ம நக்ஷத்திரம், பூசம், வியதீபாதம், வைத்ருதி, ஞாயிறு–செவ்வாய்–சனிக்கிழமைகள் இவைகளில் புண்ணிய நதியில் ஸ்நானம் செய்வது சிறந்தது. மாசியில் சுக்லஸப்தமியில் புண்யநதியில் அருணோதயத்தில் ஸ்நானம் செய்வது சூரியகிரகண ஸ்நானத்தை ஒத்தது. புதன்கிழமை புனர்வஸு கூடியிருந்தால் நதியில் நீராடுவது வாஜபேயயாகம் செய்த பலனைத்தரும். ஏகாதசியில் நெல்லிக்காய் தேய்த்துப்பின் ஸ்நானம் செய்வது விஷ்ணுவின் அருளைப்பெறச் செய்யும். பெரும் செல்வத்தை விரும்புபவன் த்விதீயை ஷஷ்டி, ஸப்தமி, நவமி, தசமி, திரயோதசி, அமாவாசை, பௌர்ணமி, ஸங்கிரமணம் ஞாயிற்றுக் கிழமை தவிர மற்ற நாட்களில் நெல்லிக்காய் தேய்த்து நீராடுவது நல்லது. அரசமரத்தின் நிழல்படுகின்ற நீர்நிலையில் வியாழனன்றும் அமாவாசையன்றும் ஸ்நானம் செய்வது பிரயாகையில் ஸ்நானத்திற்கு ஒத்தது. மாசி மாதத்தில் ஒவ்வொரு நாளும் ஆண்கள் சூரிய உதயத்திற்கு முன்னும், பெண்கள் உதயத்தின் போதும் ஹர மஹாதேவ ஹரி: மாதவ கோவிந்த அச்யுத கிருஷ்ண என்று இறைவன் நாமத்தைக் கூறிக்கொண்டு நதியில் ஸ்நானம் செய்தல் மிகச்சிறந்தது. ஆடி கார்த்திகை மாசி வைகாசி மாதத்துப் பௌர்ணமியில் (ஆகாமாவை) காலையில் நதியில் ஸ்நானம் செய்வது சிறந்தது.

## அப்யங்கஸ்நானம் – எண்ணெய் தேய்த்துக் குளித்தல்

திங்கள், புதன், சனி, துவிதீயை, திருதீயை, சதுர்த்தி, பஞ்சமி, ஸப்தமி, நவமி திரயோதசி இவை எண்ணெய்க்குளிக்கு நல்லவை. செவ்வாய் வெள்ளி பெண்களுக்கு ஏற்றவை. ஞாயிறு வியாழன் ஸங்கிரமணம் கிரஹணம் வியதீபாதம் ஜன்ம நக்ஷத்திரம், பிரதமை, ஷஷ்டி, அஷ்டமி, ஏகாதசி, அமாவாசை, பௌர்ணமி, திருவாதிரை, உத்தரம், கேட்டை, திருவோணம் இவையும் ஸந்தியாகாலமும் இரவு வேளையும் ஏற்றவையல்ல. சனிக்கிழமையாயின் மற்ற தோஷங்களிருந்தாலும் பித்ருதினங்களைத்தவிர மற்ற நாட்களில் குளிக்கலாம். கடுகெண்ணெய், மணமூட்டிய எண்ணெய், மருந்துச்சரக்குகள் கூட்டித் தயாரித்த எண்ணெய், துளசிதளத்துடன் கூடிய எண்ணெய் நெய் சேர்த்த எண்ணெய் இவை எப்போதும் சேர்க்கத்தக்கவை. அரிசிமா, கடலைமா, கஞ்சி, சேர்த்துக்குளிப்பதாலும் தோஷமில்லை. ஞாயிறில் புஷ்பமும் வியாழனில் அறுகும் வெள்ளியில் கோமயமும் செவ்வாயில் மண்ணும் சேர்த்த எண்ணெய்க்குளி செய்யலாம். நோயாளி நோய் நிலைக்கு ஏற்றவாறு எப்போதும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கலாம். பாலர் கர்ப்பிணி முதியவர் இவர்களுக்கும் நியமமில்லை. விடியற்காலை அருணோதயம் ஸந்தியாகாலம் இந்த வேளைகளிலும் பிறந்தநாள், திருமணநாள், உபவாஸநாள் இவற்றைக் கொண்டாடும்போதும் க்ஷவரம் செய்த அன்றும்

எண்ணெய்க்குளி கூடாது. தீபாவளியன்று விடியற் காலையில் எண்ணெய் தேய்த்து வெந்நீரில் குளிப்பது கங்கையில் ஸ்நானம் செய்ததற்கு ஒப்பானது.

**புண்யதீர்த்தஸ்நானம்**

நதி நதம் ஸ்ரோதஸ் முதலிய நீர் நிலைகளில் ஸ்நானம் செய்வதை க்ரியாஸ்நானம் என்பர். முதலில் ஸங்கல்பம் செய்து அங்குள்ள மண்ணை ஜலத்தில் குழைத்துப் பூசிக்கொண்டு நீராடி ஆசமனம் செய்து பின் அந்தந்த தீர்த்த தேவதையை (கங்கையாயின் கங்காதேவியை, காவேரியாயின் காவேரிதேவியை) நீரில் ஆவாஹனம்செய்து அதனால் தலையிலும் உடலிலும் தெளித்துக்கொண்டு பின்முறைப்படி மந்திரங்கள் கூறி ஸ்நானம் செய்யவேண்டும்.

தீர்த்த யாத்திரைக்குச் செல்லும்போது சுகமாக வாகனங்களில் செல்வதால் பயனில்லை. குடை, செருப்பு போன்ற பாதுகாப்பும் வண்டி டோலி போன்ற வாகனவசதியும் நல்லதல்ல. புண்ணியச்சேமிப்பும் பாபநீக்கமும் பெற உடல்—மனவருத்தத்தைப் பொருட் படுத்தாத தீவிர ஆர்வம் தேவை. வேறு காரியத்திற்கென க்ஷேத்திரங்களுக்குச் சென்றவன் க்ஷேத்திரதரிசனமும் தீர்த்தஸ்னானமும் செய்து நன்மை பெறலாம். எனினும் க்ஷேத்திர தரிசனத்திற்கென்றே ஆர்வத்துடன் செல்வதால் பெறக்கூடிய பலன் இதில் இருக்காது. தன் மாதா பிதா குரு முதலானோருக்காக ஸங்கல்பித்துத் தீர்த்தஸ்நானம் செய்வதனால் இவனுக்கும் பலன் உண்டு.

## ஆறுகுளங்களில் நீராடத்தகாத நாட்கள்

ஆடிமாதம் பிறந்ததும் புதுப்பெருக்கைப் பெறும் ஆறுகளும், குளங்களும் ரஜஸ்வலைகளாக–மாதவிடாய் பெறும் பெண்களாக ஆகின்றன. அதனால் அவற்றில் ஸ்நானம் செய்யக்கூடாது. கங்கை காவிரி துங்கபத்ரா கிருஷ்ணா கோதாவரி நர்மதா ஸரயூ முதலிய மஹாநதிகளுக்கும் நதங்களுக்கும் இந்த தோஷம் இல்லை. மற்ற நதிகளுக்கு ஆடிமாதம் முதல் மூன்றுநாட்கள் (அல்லது புதுப்பெருக்கேற்பட்ட முதல் மூன்று நாட்கள்) தோஷமுண்டு. வற்றாத ஜலமுள்ள குளம் ஓடை கிணறு முதலியவற்றிற்கு இந்த தோஷம் இல்லை. உபாகர்ம, பிரேததகனத்திற்குப்பின் ஸ்நானம், கிரஹணம் இவை நேரும்போது வேறு தோஷமற்ற நீர்நிலை இல்லாவிடில் ஆறுகளில் தோஷம் பார்க்காமல் ஸ்நானம் செய்யலாம். பொதுவாக புதுப் பெருக்காக வந்த நீர் தோஷம் உள்ளது.

## கௌணஸ்நானமுறை

ஸசேலஸ்நானம் செய்வது முக்கியமான ஸ்நான முறை. அது இயலாதபோது ஈரத்துணியால் .உடலைத் துடைத்துக் கொள்ளலாம். தலையை நனைக்காமல் உடலை மட்டும் நனைத்துக் குளிக்கலாம். இது காபிலஸ்நானம். மந்திரம் உச்சரித்துத் தலையில் நீரைத் தெளித்துக் கொள்ளலாம். இது பிராம்மஸ்நானம். விபூதியை நீர்கலக்காமல் உத்தூலனமாக உடல் எங்கும் பூசிக் கொள்ளலாம். இது ஆக்நேயஸ்நானம். பசுக்களின் குளம்படிமண்ணைப் பூசிக்கொள்ளலாம். இது வாயவ்யஸ்நானம். மூச்சடக்கி, மனமடக்கி யோக

நிலையில் இறைவனைத் தியானிக்கலாம். இது யௌகிகஸ்நானம். காயத்ரியைப் பத்துதடவை சொல்லி மந்த்ரித்த ஜலத்தைத் தெளித்துக்கொள்வது காயத்ர ஸ்நானம். வெயிலோடு மழை தூறும்போது அதில் நனைவது திவ்யஸ்நானம். வேதமோதுபவர் வாக்கால் அனுக்கிரகித்த ஜலத்தைத் தெளித்துக் கொள்வது ஸாரஸ்வதஸ்நானம். இவை கௌணஸ்நான முறைகள். முக்கிய ஸ்நானமுறை இயலாத போது கடைபிடிக்கத்தக்கவை.

**வஸ்திரதாரணம்**

மேலாடை (உத்தரீயம்) இடுப்புவஸ்திரம் என இரண்டு ஆடைகள் எப்போதும் தரிக்கவேண்டும். உத்தரீயமின்றி ஒரு நற்கருமமும் செய்யமுடியாது. உத்தரீயத்தை இடுப்பிலும் இடுப்பாடையை உத்தரீயமாகவும் தரிக்கக்கூடாது. வெளுத்த ஆடையே நல்லது. வேறு சாயமுள்ள ஆடையைத் தரிக்கக் கூடாது. உலர்ந்த ஆடை உடுத்தியே நற்கருமங்கள் செய்ய வேண்டும். ஆடை உலர்ந்திராவிடில் ஈரவஸ்திரத்தை ஏழுதடவை காற்றில் உதறித் தரிக்கலாம். சணல், கம்பளி, பருத்தி, பட்டு இவற்றாலான ஆடையை தரிக்கலாம். உத்தரீய மில்லாத நிலையைத்தவிர்க்க கிருஹஸ்தன் மூன்று பூணூல்களைத் தரிப்பது உண்டு. இடது தோளின் மேல் பூணூல் போல் போட்டு வலது விலாப்புறமாகச் சுற்றி உத்தரீயத்தைத் தரிக்க வேண்டும். வஸ்திரம் தரித்தபின் இருதடவை ஆசமனம் செய்யவேண்டும். ஸ்னானத்தின் போது தரித்திருந்த இடுப்பாடையை

நான்காய் மடித்து நிவீதியாய் நின்று மரத்தடியில் பிழியவேண்டும். "உச்சிஷ்ட பாகிநோ தாஸா: யே ம்ருதாஸ் தே த்வமந்த்ரகா: த்ருப்யந்து தருதாம் யாதா: மம ஸம்பந்த்திநோ நரா:" என்னோடு தொடர்பு கொண்டு என் வீட்டில் மீதமுள்ள உணவை உண்டு எனக்குப் பணியாளாயிருந்தவர், இறந்து மந்திர மில்லாமல் உத்தரக்ரியை நடந்து நற்கதி பெறாமல் மரம் செடியாகப் பிறந்தவர்கள், இந்த துணிபிழிந்த நீரால் திருப்தியடையட்டும்" என்று கோரிவிட்ட அந்த நீரைத் தர்பணமாக நினைக்க வேண்டும். பிழிந்தவஸ்திரத்தை இடதுகையின் மணிக்கட்டின் மேல் வைத்துக்கொண்டு இருமுறை ஆசமனம் செய்யவேண்டும். புதிய ஆடையாயின் மந்திரபூர்வமாகத் தரிக்கவேண்டும்.

ஆடை தரிப்பதில் முறையுண்டு. உத்தரீயத்தைத் தலையில் சுற்றிக்கொண்டு பூணூலை மாலையாக (நிவீதியாக) வலதுகாதில் சுற்றிக் கொண்டு கீழாடையைத் தரிக்கவேண்டும். சிகப்பு கருப்பு மற்றும் நீலச்சாயம் ஏற்றிய ஆடை, தலைப்பில்லாத ஆடை உடுத்தக்கூடாது. கச்சமுறையில் கிருஹஸ்தன் ஆடை உடுத்த வேண்டும். கச்சமுறையில் ஆடை உடுத்தாதவன் நல்ல கர்மா செய்வதால் பலனில்லை. ஆடையின் நுனி தனித்துத் தொங்காமல் உடுத்துவதே இந்த கச்சமுறையின் சிறப்பு. உடல் உள்ளங்களின் சக்தி சிதறாதிருப்பதற்கே இந்த கச்சமுறை. நுனியின் ஒருபக்கத்தை மட்டும் செறுகிக்கட்டுவது புச்சகச்சம். தலைப்பைவிட்டு நடுவில் செறுகிக் கொள்வது

திர்யக்கச்சம். தொங்கும் நடுப்பகுதியை நடுவில் தூக்கிக்கட்டுவது ஊர்த்த்வகச்சம். அறை நாண் கயிற்றின் வலிவில் கச்சம் கட்டுவது கடிஸூத்ரகச்சம். இவை ஆடையில்லா நிலைக்கு ஒப்பானவை. அறைநாண் கயிறும் கௌபீனமும் இல்லாதவனும், தட்டுச்சுற்றாக ஆடையைக் கட்டிக்கொண்டவனும், உத்தரீயமில்லாதவனும் ஆடையில்லாதவனே. உத்தரீயம் பூணூலைப்போன்று சுத்தமாகவும் இடுப்பிற்குக்கீழ் கொணராமலும் உடுத்தவேண்டும். அசுத்தநிலையில் தலையில் கட்டிக்கொள்ளலாம்.

## புண்ட்ரதாரணம். நெற்றிக்கு இட்டுக்கொள்வது

நெற்றிக்கு அவரவர் குலாசாரப்படி ஏதேனும் இட்டுக்கொள்ள வேண்டும். அபரக்கிரியை செய்யும் போது மட்டும் நெற்றிக்கு இட்டுக் கொள்வதில்லை. விபூதியை ஜலம் விட்டுக்குழைத்து நெற்றிக்குக் குறுக்கே மூன்று பட்டையாக இட்டுக்கொள்வதை த்ரிபுண்ட்ரம் என்பர். கோபிசந்தனம், நாமக்கட்டி ஸ்ரீசூர்ணம் முதலியவற்றால் நெற்றியில் கீழிருந்து மேல் இட்டுக்கொள்வது ஊர்த்வ புண்ட்ரம். புண்டிரத்தை அவரவர் குலாசாரத்தையொட்டித் தரிக்கவேண்டும். விபூதியால் ஊர்த்வபுண்ட்ரமோ கோபிசந்தனத்தால் த்ரிபுண்ட்ரமோ த்ரிபுண்டரத்தின் மேல் ஊர்த்வ புண்ட்ரமோ இட்டுக்கொள்வதில்லை. கோபிசந்தன ஊர்த்வ புண்ட்ரத்தின் மேல் விபூதியால் திரிபுண்ட்ரம் இட்டுக்கொள்வதும், உத்தூலானமாக (புழுதிவிபூதியாக ஜலத்தில் குழைக்காமல்) இட்டுக் கொள்வதும் வழக்கில் உள்ளது.

அக்னிஹோத்திரத்தில் கிடைத்த பஸ்மம், விரஜாஹோமம் செய்தெடுத்த பஸ்மம், ஔபாஸனம், கணபதி முதலிய தேவதைகளைக் குறித்து ஹோமம் செய்தெடுத்த பஸ்மம் தரிக்கத் தக்கது. விபூதி இட்டுக் கொள்ளும்போதும் கோபிசந்தனமிட்டுக்கொள்ளும் போதும் இறைவனின் நாமத்தையும் மந்திரங்களையும் ஜபிப்பது நல்லது.

**ஸந்தியாவந்தனம்**

சூரியனின் உதயத்திற்கு முன் 2 நாழிகை (48 நிமிஷங்கள்) காலை நேரத்து ஸந்தியாவந்தனத்திற்கு முக்கியகாலம். உதயத்திற்குப் பின் 3¾ நாழிகை (1½ மணி நேரம்) கௌணகாலம். உதயம் முதல் 11 நாழிகைக்குமேல் 15 நாழிகைவரை (10.30 மணி முதல் 12 மணிக்குள்) மாத்யான்னிகத்திற்கு முக்யகாலம். அஸ்தமனம் வரை கௌணகாலம். அஸ்தமனத்திலிருந்து 2 நாழிகை வரை மாலை ஸந்தியா வந்தனத்திற்கு உரியகாலம்.

ஸந்தியாவந்தனத்தில் அர்க்க்யப்ரதானம் முக்யம் என்பர். பிரும்மைவாஹமஸ்மி என்ற பிரும்ம–ஆத்ம–ஐக்ய அனுஸந்தானம் முக்கியமெனச்சிலர். காயத்ரி ஜபமும் காயத்ரியின் உபஸ்தானமும் முக்யமெனச்சிலர். இவற்றை அந்த முக்கிய ஸந்தியா காலத்தில் செய்ய வேண்டும் என்பதுதான் நோக்கம். உரிய முக்கிய காலம் தவறினால் காலாதீத பிராயச்சித்தம் என்று ஒரு அர்க்க்யம் கூடவிட வேண்டுமென்றிருப்பதால் அர்க்க்ய ப்ரதானத்தையாவது உரியகாலத்தில் செய்ய வேண்டும்.

பகலும், இரவும் அவ்வாறே இரவும் பகலும் சந்திக்கும்வேளை ஸந்தியாகாலம். அக்காலத்தில் செய்யப்படுகின்ற வந்தனம் ஸந்தியாவந்தனமாகும். அக்காலத்தில் தியானிக்க வேண்டிய தேவதையின் பெயர் ஸந்தியாதேவி. அவளுக்கான வந்தனமிது. அதனாலும் ஸந்தியாவந்தனம். இந்த கர்மாவில் தியானம் கூடுவது முக்கியம். காயத்திரி தேவியை நன்கு தியானித்து வழிபடுவதால் ஸந்தியாவந்தனம். இதில் ஸங்கல்பம், ஜலதேவதையை பிரார்த்தித்துத் தூய்மை பெறுதல், சோம்பலை நீக்கித் தெய்வீகமான தூண்டுதல்பெற அர்க்க்யபிரதானம், ஆத்மானுஸந்தானம், நவக்ரஹங்கள், ரக்ஷர தெய்வமான விஷ்ணு இவர்களுக்கு தர்ப்பணம். பிரணவம் வ்யாஹ்ருதி, காயத்ரீ காயத்ரீசிரஸ் என்ற மந்திரங்களால் பிராணயாமமும் ஜபமும், காயத்ரிதேவியின் உபஸ்தானம், நேரத்தைஒட்டி மித்ரன் ஆதித்யன் வருணன் என்ற வடிவில் உதவுகின்ற பரம் பொருளையும் திக்தேவதைகளையும் யமனையும் விச்வரூபரையும் நாராயணனையும் வணங்கி நாரா்யணனிடம் செய்ததை ஸமர்ப்பித்தல் என்பது முக்கால ஸந்தியாவந்தனத்தின் நிகழ்ச்சி நிரல். பொதுவாக பவித்ரம்–தர்ப்பம் தரித்தே எல்லா நற்பணிகளையும் செய்யவேண்டும் எனும் நியமம் இதற்கும் பொருந்தும். எனினும் பெரும்பாலும் இதற்குப் பவித்ரம் தரிப்பதில்லை. ஏழுநாட்கள் தொடர்ந்து ஸந்தியாவந்தனம் செய்யாதவன்–பதிதன். மறுபடி உபனயனம் செய்து கொள்ளவேண்டும் என்பர்.

## ஸந்தியாவந்தனத்தின் பொதுவழிகள்

ஆசௌசகாலத்தில் கூட ஸந்தியாவந்தனம் முக்கியம். அபரக்ரியை தொடங்கும் நேரம் ஸந்தியா வந்தனத்திற்குரிய நேரமாயிருந்தால் ஸந்தியாவந்தனம் செய்த பின்னரே அபரக்ரியையைத் தொடங்க வேண்டும். ஸந்தியாவந்தன வேளையில் வேறு எந்தப்பணி குறுக்கிட்டாலும் அதைத் தள்ளி வைத்து விட்டு ஸந்தியாவந்தனத்தைச் செய்ய வேண்டும். காலையில் ஸ்நானம் செய்ய இயலாதபோது கௌண ஸ்நான முறையில் உடலைச்சுத்தி செய்து புண்ட்ரதாரணம் செய்துகொண்டு உடன் முறைப்படி ஸந்தியாவந்தனம் செய்யவேண்டும்.

காலையிலும் மத்யான்னத்திலும் நின்று கொண்டும் மாலையில் உட்கார்ந்து கொண்டும் அர்க்க்யம் விடவேண்டும். இரண்டுகைகளிலும் ஜலத்தை நிரப்பி வணங்கிநின்று சூர்யனுக்கு எதிராய் உயர்த்தி அர்க்க்யம் விடவேண்டும். இரண்டு கைகளை யும் பிரித்து கைகளின் இடையே ஜலம் விழும்படி விடவேண்டும். இருகட்டை விரல்களையும் மற்ற விரல்களுடன் சேராமல் பிரித்துவிட வேண்டும்.

## ஜபம்

கிழக்கு அல்லது வடக்கு முகமாய் அமர்ந்து செய்யவேண்டும். அமைதியுடன் அமர்ந்து தியானம் கூடும் வகையில் ஆஸனமிட்டு உட்கார்ந்து ஜபம் செய்யவேண்டும். மான்தோல், புலித்தோல், தர்ப்பம், வஸ்திரம், கம்பளி, மரப்பலகை இவற்றால் உறுத்தாதவாறு ஆஸனம் அமைத்து அதில்

பத்மாஸனம் ஸ்வஸ்திகாஸனம் முதலியதில் ஏதேனும் ஒரு பழக்கப்பட்ட ஆஸனமுறைப்படி அமரவேண்டும். காலையிலும் மத்யான்னத்திலும் நின்றுகொண்டும் மாலையில் உட்கார்ந்தும் ஜபம் செய்வது உத்தமம். காலையில் மூக்குக்கு நேராகக் கைகளை நிமிர்த்தி வைத்துக்கொண்டு கைகளை உத்தரீயத்தால் மறைத்து ஜபம் செய்யவேண்டும். மத்யான்னத்தில் மார்பிற்கு நேராகவும் மாலையில் நாபிக்குச்சமமாக மலர்த்திக் கீழ்தாழ்த்தியும் வைத்து ஜபம் செய்ய வேண்டும். பிரணவம், வ்யாஹ்ருதிகள், காயத்திரியின் மூன்று பாதங்கள் என்ற ஐந்தையும் சேர்க்காமல் தனித்தனியே உச்சரிக்க வேண்டும். மனத்திற்குள் ஜபிப்பது சிறந்தது. பிறர் காதுபடச் சொல்லாமல் வாய்க்குள் சொல்லிக்கொள்வது மத்யமம். பிறர் காதுபட ஜெபிப்பது அவ்வளவு சிரேஷ்டமல்ல. பொருள் உணர்ந்து தேவதை மந்திரம் இரண்டையும் உணர்ந்து ஜபிப்பது நல்லது. ஜபிக்கும்போது தொப்புளுக்குக் கீழுள்ள பகுதியைக் கைகளால் தொடக்கூடாது. தொட்டால் கைகளை ஜலம் இட்டு அலம்பவேண்டும். அல்லது வலதுகாதைத் தொடவேண்டும். ஜலத்தில் நின்று ஜபிப்பதானால் ஈரவஸ்திரத்துடனும் ஜபிக்கலாம். ருத்ராக்ஷம், பவழம், முத்து, ஸ்படிகம், தாமரைக் கொட்டை இவற்றைக் கொண்டு 27–54–108 மணிகள் கொண்ட மாலைகட்டி நடுவில் மேருவாக ஒரு மணியைத் தொங்கவிட்டு அதனைக் கொண்டு ஜபத்தைக் கணக்கிடலாம். விரல்களைவிட்டு எண்ணுவதும், விரல்களின் ரேகையில் கட்டைவிரலைப் பதித்து எண்ணுவதும் உண்டு. தியானம் சிதறாமல்

எண்ணிக்கையும் தவறாமல் ஜபிப்பது நல்லபலன் அளிக்கும். ஜபமாலையை நடுவிரலில் அல்லது மோதிரவிரலில் தொங்கவிட்டுக் கட்டைவிரலால் தள்ளிக் கணக்கிடலாம். கட்டைவிரலில் வைத்து நடுவிரலால் உருட்டலாம். மேருவைத் தாண்டாமல் மறுபடி திருப்பி உருட்டுவதும் அவசியம். அம் ஆம் இம் ஈம் என்று மாத்ருகாக்ஷரங்களைக் கொண்டு புறச்சாதனமின்றி ஜபிப்பது மிகச்சிறந்தது. குருமுகமாக இம்முறையைப் பெறுவது அவசியம்.

ஜபம் முடிந்து காயத்ரி உபஸ்தானம் தொடங்கி ஜபஸமர்ப்பணம் வரை செய்து முடித்ததும் அவரவர் இஷ்டதெய்வங்களின் மந்திரங்களைத் குருவின் உபதேசம் பெற்றுச் செய்யலாம்.

ஸ்ரீருத்ரம், சமகம், புருஷ ஸூக்தம் முதலிய ஸூக்தங்களையும் விஷ்ணுஸஹஸ்ரநாமம் முதலிய ஸ்தோத்திரங்களையும் பாராயணம் செய்வது பாபத்தைப் போக்கி மன அமைதியைத் தரும்.

**தர்ப்பத்தால் பவித்ரம் தரித்தல்**

பொதுவாக பிராமணன் செய்கின்ற நித்திய நைமித்திககர்மங்களில். தர்ப்பத்தால் ஆசனம் அமைத்து அதன்மேல் உட்கார்ந்து மோதிரவிரலில் தர்பத்தால் ஆன பவித்ரத்தை தரித்து மேல் சில 2–4 தர்ப்பங்களை இடுக்கிக்கொண்டு ஸங்கல்பம் செய்வர். தர்ப்பஆசனம் இல்லாவிடில் தர்ப்பங்களைப்பரப்பி அதன்மேல் உட்காரலாம். தர்ப்பம் மிகவும் புனிதமானது. தர்ப்பம் பட்ட கைகள், தர்ப்பத்தால் துடைக்கப்பட்ட பாத்திரங்கள், தர்ப்பம் பட்ட நீர்நெய்

தனர் முதலியவை தூய்மை பெறுகின்றன. ஸ்னானத்திற்கு ஸங்கல்பம் செய்வதிலிருந்து மந்திரபூர்வமாகச் செய்கின்ற பணிகள் அனைத்திலும் தர்ப்பமும் தர்ப்பத்தாலான பவித்ரமும் பயன்படுகின்றன. தர்ப்பத்திற்குப் பதிலாக தங்கத்தாலான பவித்ரம் என்ற மோதிரத்தை மோதிரவிரலிலும் வெள்ளியாலானதை ஆட்காட்டி விரலிலும் தரிப்பர். தந்தையும் மூத்த சகோதரரும் உயிருடன் உள்ளவரை வெள்ளியா லானதைத் தரிப்பதில்லை. தாமிரம் 8 பங்கு, வெள்ளி 12 பங்கு, தங்கம் 11 பங்கு சேர்த்துச்செய்த திரிலோஹ மோதிரம் மிகவும் சிறந்தது. புண்ணியகருமங்கள் செய்யும் போது 2–4 தர்ப்பங்களாலும் பித்ருகர்மத் (சிராத்தம் அமாவாசை தர்ப்பணம் முதலியவை)தில் 3 தர்ப்பங்களாலும் அபரக்கிரியை செய்யும்போது ஒருதர்ப்பத்தாலும் ஆன பவித்ரத்தைத் தரிப்பர்.

தர்ப்பத்தைப்போல் விச்வாமித்ரம் நாணல்புல் அருகம்புல் நெற்புல் யவைப்புல் புல் இவற்றைக் கொண்டும் பவித்ரம் செய்து தரிக்கலாம். தர்ப்பமோ விச்வாமித்ரமோ கிடைக்காத இடத்தில் மற்றவை பயன்படும்.

தினமும் புதிதாய் கொணர்ந்த தர்ப்பமே சிறந்தது. ஒரு தடவை பயன்படுத்திய தர்ப்பம் மறுபடி உபயோகிக்கத்தக்கதல்ல. அமாவாசையன்று தர்ப்பம் கொணர்ந்தால் ஒருமாதம் பயன்படுத்தலாம். மாசி ஆவணி அமாவாசையில் எடுத்த தர்ப்பம் பலதடவை களில் பயன்படுத்தலாம். ஸந்தியாகாலத்திலும் இரவிலும் தர்ப்பம் பறிக்கக்கூடாது. அக்னி

குண்டத்தைச் சுற்றியும் ஆஸனத்திலும் பிண்டத்தின் அடியிலும் பிரும்மயஜ்ஞும் பித்ரு தர்ப்பணம் இவைகளிலும் உபயோகப்படுத்திய தர்ப்பம் மறுபடி உபயோகிக்கத்தக்கதல்ல. கர்மாவின் நடுவில் ஆசமனம் பாதங்களை அலம்புதல் போன்றவை செய்ய நேரும் போது பவித்ரத்தைக் கழற்றி வலது காதில் வைத்துக் கொண்டு ஆசமனம் முதலியவை செய்தபின் மறுபடி விரலில் தரித்துக் கொள்வர். ஸங்கல்பித்த காரியம் முடிந்ததும் அந்த பவித்திரத்தைக் கழற்றி முடிப்பு அவிழ்த்து வடக்கில் போடவேண்டும். உடன் வேறு கர்மாவிற்கு ஸங்கல்பம் செய்வதாயிருந்தால் புது பவித்ரம் தரிக்கவேண்டும்.

**அக்கினி உபாசனை**

பிராமணனின் முதலாவதும் முடிவானதுமான தேவதை அக்கினி. அதிலேயே மற்ற தேவதைகளையும் அவன் ஆராதிக்கிறான். அதேபோன்று அவன் வழிபடுமிடம் ஜலம். இரண்டும் இயல்பாகவே மிகவும் தூய்மைமிக்கவை. தூய்மை மிக்க இடங்களில்தான் தேவதைகளின் அருட்சக்தி பரவும். அதனால் அக்கினி உபாசனை மிகமுக்கியமானது. அக்கினியை முன்னிட்டு உபநயனம் விவாஹம் பும்ஸவனம் ஸீமந்தம் ஜாதகர்மம் என்ற அனைத்துகர்மங்களும் நடை பெறுகின்றன. அவனது இறுதியும் அக்கினியில்தான். உபனய்னமாகி மந்திரங்கள் மூலம் தேவதை அருள் பெறத்தகுதிபெறுபவர் அனைவரும் அக்கினியை வழிபடுகிறார்கள். உபனயனத்தன்றே பிரும்மசாரி அக்கினியை உபாசிக்கத் தொடங்குகிறான். அதனை

ஸமிதாதானம் என்பர். திருமணம் மூலம் கிருஹஸ்த னானதும் அக்கினியை மனைவியின் உதவியுடன் வழிபடத் தொடங்குகிறான். அதனை ஔபாஸனம் என்பர். மேலும் தகுதிகளை வளர்த்துக்கொண்டு வேள்விகள் செய்யத் தகுதிவந்ததும் அக்னியை மூன்று இடங்களில் வளர்த்து வழிபடுகிறான். அதனை அக்னி ஹோத்ரம் என்பர். இப்படி வழிபடுகின்ற அக்கினியின் மூலமே அவனது இக–பர நன்மை நாடிச் செய்கின்ற நற்கருமங்கள் முழுமை பெறுகின்றன.

பிரம்மசாரி தான் வழிபட்ட அக்கினியிடம் தன் உடல்–உள்ளங்களின் பாதுகாப்பு, வலிவு, தான் நல்வழிபடல், வாழ்வின் மேன்மை, புகழ், செல்வம், கல்வியறிவு, மேதை, தத்துவ அறிவு, ஒளிமிக்கதான எதிர்காலம், தனக்குரிய பங்கைப் பிறர் அபகரிக்க முடியாமற் செய்தல் முதலியவற்றை வேண்டிப் பெறுகிறான். அந்த ஹோமவிபூதி கொண்டு தன்னிடம் எல்லா நன்மைகளும் நிலைத்திருக்கும்படி ரக்ஷை செய்துகொள்கிறான். அக்கினியே இவனுக்கு உபாஸநா தெய்வம்.

இதன் விரிவே ஔபாஸனமும் அக்கினி ஹோத்ரமும். தனக்கும் தன் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கு உலகிற்கும் நன்மையை வேண்டி இவை செய்யப்படுகின்றன.

பிரும்மசாரி தனக்காகத் தான்மட்டும் ஸமிதாதானம் செய்யமுடியும். கிருஹஸ்தன் தான் இல்லாதபோது மனைவி, புத்திரன், சிஷ்யன், குரு, சகோதரன், மருமகன், மாப்பிள்ளை அல்லது தன்னால்

வரிக்கப்பெற்ற ருத்விக் இவர்களைக்கொண்டு செய்து கொள்ளலாம். ஆனால் தம்பதிகளில் ஒருவராவது இல்லாதபோது ருத்விக் அல்லது மற்றவர் மூலம் செய்ய முடியாது. தொடர்ந்து செய்யமுடியாவிடில் ஹோமத்திரவ்யத்தைக் கணக்கிட்டு அதனைத் தானம் செய்யலாம். அக்கினியில் ஸமித்து அன்னம் நெய் என்ற மூன்று பொருள்களைக் கொண்டு ஹோமம் செய்யப்படுகின்றது. உபாசிக்கின்ற தேவதையையும் நாடுகின்ற பலனையும் ஒட்டி ஸமித்தும் அன்னமும் மாறுபடும். நெய் எல்லாவற்றிலும் பொதுவானது. பசுவின் நெய்யே ஹோமம் செய்யத்தகுந்தது.

அரசு, புரசு, அத்தி, கருங்காலி, நாயுருவி, எருக்கு, வன்னி இவற்றின் குச்சிகளும் அருகம் புல்லும் தர்ப்பமும் ஹோமத்திற்கான ஸமித்துகளாகப் ப்யன்படுபவை. அரசு புரசு தர்ப்பை என்ற மூன்றே பொதுவாக எல்லா கர்மாக்களிலும் பயன்படுகிறது. அரசுமரத்திலிருந்து தானே ஒடிந்து விழுந்த குச்சியையே பயன்படுத்துவர். மற்றவற்றில் புழு துவாரமிட்டது. கோணலானது, இருகிளையுள்ளது, தோலில்லாதது, தானே உதிர்ந்தது, பசை இல்லாதது இத்தகைய சமித்துக்கள் பயனற்றவை. எதையும் தானே சேகரிப்பது மிகச்சிறந்தது.

ஹோமம் செய்யும் போது அதன் மந்திர உச்சாரணத்தைத் தவிர மற்றபேச்சு கூடாது.

அக்கினிக்கு ஏழுநாக்குகள். அக்னிகுண்டத்தில் அக்னிபரவியுள்ள நிலையில் கிழக்கு தென்கிழக்கு தெற்கு மேற்கு வடக்கு வடகிழக்கு நடுப்பகுதி என்றி

ஏழிடங்களில் வெளியாகின்ற ஜ்வாலையே அதன் நாக்குகள். அவற்றிற்கு முறையே வரிசையாக ஸுப்ரபா, அதிரக்தா, கிருஷ்ணா, ஸுவர்ணா, ரக்தா, பஹுரூபா, கனகா என்று தனிப்பெயர் உண்டு. காம்யகர்மங்களில் (குறிப்பிட்ட பலனைக் கோரிச் செய்வதில்) கிழக்கில்; சாந்தி (கிரஹபீடை சத்துருபீடை முதலியவை அடங்க) கர்மங்களில் தென்கிழக்கில்; பித்ருகார்யங்களில் தெற்கில்; விவாஹத்தில் மேற்கில்; உபனயனத்தில் வடக்கில்; உக்கிர கர்மாக்களில் (சத்துரு நாசம் முதலியவற்றில்) வடகிழக்கில், வேள்விகளில் நடுவில் உள்ள ஜ்வாலைகளில் ஹோமம் செய்வர்.

காலை அக்னியை வழிபட்டதும் மங்களப் பொருள்களைப் பார்க்கவேண்டும். அருகம்புல், நெய், தயிர், நீர் நிரம்பிய கலசம், கன்றுடன்கூடிய பசு, எருது, தங்கம், மண், கோமயம், அக்ஷதை, தேன், கன்னிப்பெண், ஆசாரசீலரான பிராம்மணன், அக்னி, சந்தனம், வெள்ளைப்பூ, ரத்தினம், அரசன், துறவி, குரு, கடல் இவை மங்களப்பொருள்கள்.

பூனை, மாடப்புறா, கிளி இவற்றை வளர்ப்பது நல்லது. பசுவைச்சொரிந்து விட்டு, புல் ஆத்திக்கீரை முதலியவ்வகளைத் தருவதும், அரசமரத்தைச் சுற்றிவருவதும் தன்னைவிட மூன்று வயது பெரியவர் களையும் குருவையும் வணங்குவதும் நல்லது.

**அக்கினி உபாசனையில் கவனிக்கத்தக்கவை**

பிரும்மசாரி ஸமிதாதானத்தை ஒவ்வொரு வேளையிலும் புதிதாகக் கொணர்ந்த அக்கினியில்

செய்யலாம். ஔபாஸனத்திற்கான அக்கினியை எப்போதும் அணையாமல் குண்டானில் வைத்துக் காப்பாற்றுவர். அப்படி அணைந்தால் அரணிக் கட்டையைக் கடைந்து அக்கினியைப் பெறலாம். அல்லது வேதமோதி அக்கினியைப் பரிபாலிக்கின்ற வருடைய வீட்டிலிருந்து அக்கினியைக் கேட்டுப் பெறலாம். தம்பதிகளில் ஒருவர் கட்டாயம் வீட்டில் இருக்க வேண்டும். நான்கு நாட்கள் தொடர்ந்து ஔபாஸனம் செய்யாவிடில் அது லௌகிகாக்கினி (அடுப்பில் உள்ள நெருப்பாக) ஆகிவிடும். மறுபடி அக்கினி ஸந்தானம் பிராயச்சித்தத்துடன் செய்ய வேண்டும். வெளியூர் செல்ல நேர்ந்தால் தன்னிடமோ, ஸமித்திலோ அரணிக் கட்டையிலோ ஆரோபணம் செய்து புது இடத்தில் அரணி கடைந்தோ எடுத்துப்போன ஸமித்தைக் கொண்டோ அக்கினியை உண்டாக்கி ஔபாஸனம் செய்யலாம்.

அக்கினியை வலுப்படுத்த வாயால் ஊதக்கூடாது. தமனிக்குழாயின் மூலம் ஊதியோ, விசிறியால் விசிறியோ பெரிதுபடுத்தலாம்.

அக்கினியில் இட்டபொருள் அருள்வடிவம் பெற்று இடுபவனைக் காப்பதுடன் சூரியனிடம் செல்கிறது. சூரியன் அதனை மேகமாக்கிப் பொழிகிறான். தானியங்களையும், ஜீவராசிகளையும் போஷிக்கிறான். ஒவ்வொரு அந்தணர் செய்கின்ற நற்செயலும் இவ்வாறு உலக நன்மைக்குப் பயன்படுகின்றது.

## வபனம் செய்ய நல்லநாள்

திங்கள், வியாழன், புதன், வெள்ளி நல்லது. ஞாயிறு, செவ்வாய், சனி, ஷஷ்டி, அஷ்டமி, பிரதமை, சிராத்ததிதி, அமாவாசை, குருசுக்ரமௌட்யமுள்ள நாள், விஷுபுண்யகாலம். உதயத்திலிருந்து 2 நாழிகைகள், ஸாயங்காலம் இவை நல்லதல்ல. மாதா பிதாக்களின் சிராத்தமாதம் அல்லது சிராத்த பக்ஷம், விவாஹம், உபனயனம், சௌளம் இவற்றிற்குப்பின் ஒருவருஷம் அல்லது 6 மாதம், வபனம் கூடாது. உபனயனத்திற்குப்பின் உபாகர்மா ஆறு மாதத்திற்குள் இருந்தால் வபனம் உண்டு. ஒரே வயிற்றில் பிறந்த சகோதரர்கள், தந்தையும் மகனும் ஒரேதினத்தில் வபனம் செய்து கொள்ளக்கூடாது. இரண்டு வபனங்கள் வெவ்வெறு நிமித்தத்தால் ஒரேநாளில் நேருமானால் ஒன்றை மந்திரத்தால் செய்து பின் மற்றதை நேரிடையாகச் செய்யலாம்.

## கிருஹக்ருத்யம் – வீட்டுப்பணிகள்

ப்ராத: காலம் என்பது சூரியன் உதித்து 3¾ நாழிகைகள் (1½ மணி). அதற்குள் ஸந்தியா வந்தனமும் அக்னிஉபாஸனையும் முடிவடைகின்றன. பகல் போஜனத்திற்கு முன் பிரும்மயஜ்ஞும், தேவபூஜை, வைச்வதேவம், அதிதி, விருந்தாளி, பிரும்மசாரி, ஸன்யாஸி இவர்களுக்கு உணவளித்தல் என்ற நான்கும் செய்யத்தக்கவை. ஸந்தியாவந்தனமும் ஔபாஸனமும் முடிந்ததும் பிரும்மயஜ்ஞும் தேவபூஜை செய்து பின் தன் குடும்ப நிர்வாகத்திற்கான பணிகளைச் செய்து மதியான்ன காலத்தில் வைசுவ

தேவம் முதலியவற்றைச் செய்யலாம். குடும்பப் பொறுப்பு அதிகமில்லாவிடில், ஓதிய வேதத்தைத் தொடர்ந்து பிரச்னம் பிரச்னமாகச் சொல்லுதல், தக்க மாணவர்களுக்கு ஓதுவித்தல் இவற்றைச் செய்யலாம். அக்கினி காரியத்தை அடுத்துக் குடும்பகாரியமும் அதன்பின் பிரும்ம யஜ்ஞம் தேவபூஜை முதலான வற்றைத் தொடர்ந்தும் செய்யலாம். குடும்பகாரியம் காலையிலேயே நிறைவுறச் செய்கின்ற அவசிய மில்லாவிடில் மத்யான்னம் போஜனத்திற்குப் பிறகுள்ள நேரத்தை அதற்கு ஒதுக்கி முற்பகலை ஸத்கர்மாக் களில் போக்குவதென்பதும் முன்னோர்களின் திட்டம்.

**பிரும்மயஜ்ஞம்**

முன்னுரை: பொதுவாக அனுஷ்டானத்தில் மாத்யாந்ஹிக (வந்தன)த்திற்குப்பிறகு பிரும்மயஜ்ஞம் செய்கின்றனர். மாத்யாந்ஹிகத்திற்கும் இதற்கும் தொடர்பில்லை. முன்னரும் செய்யலாம். காலையில் செய்வதானால் ஔபாஸனத்திற்குப் பிறகு பிரும்மயஜ்ஞம் தேவபூஜை. மத்யான்னம் செய்வதானால் மாத்யாந்ஹிகம் பிரும்மயஜ்ஞம் தேவபூஜை; மாத்யாந்ஹிகம் தேவபூஜை வைச்வதேவம் பிரும்மயஜ்ஞம் என்றும் செய்யலாம். பித்ருதர்பணம் சிராத்தம் நேருகின்றபோது மாத்யாந்ஹிகம், சிராத்தம் அல்லது தர்பணம் பின் பிரும்மயஜ்ஞம் வைச்வதேவம் என்று வரிசை.

பிரும்மயஜ்ஞம் என்ற பெயரால் இரண்டு தனிப்பட்ட கர்மாக்கள் இணைத்துக்கூறப்படுகின்றன. இரண்டும் தனித்தனியே. முதலாவது வேதம் ஓதுதலும் அதற்குத்தகுதிபெற விதிகளும். அது பிரும்மயஜ்ஞம்.

இரண்டாவது தேவர்ஷிபித்ருதர்பணம். இவை இரண்டிற்கும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லை. சிராத்தம் தர்பணம் செய்கின்ற தினங்களில் கூட காலையில் பிரும்மயஜ்ஞும் செய்து சிராத்தத்திற்குப் பின் தேவர்ஷிபித்ரு தர்பணத்தை வைத்துக் கொள்பவரும் உண்டு.

அவரவர் குலாசாரப்படி தன் வேதசாகையைத் தினமும் ஒதிக்கொண்டிருக்கவேண்டும். தினமும் ஒரு காண்டம் அல்லது ஒரு பிரச்னம் அல்லது ஒரு அனுவாகம் அல்லது ஒரு ருக்காவது சொல்ல வேண்டும். அல்லது நான்கு வேதங்களின் ஆதி மந்திரங்களையாவது (வேதாதியையாவது) சொல்ல வேண்டும். இதுபிரும்மயஜ்ஞும். இது முடியும்வரை காலையுணவு ஏற்கக்கூடாது. இதனை ஆறு—குளக்கரையில் மேற்கூரை இல்லாத இடத்தில் செய்ய வேண்டும். அங்கு வேதத்தை உரக்கச் சொல்லலாம். வீட்டில் செய்வதானால் வேதபாராயணம் பிறர் காதுகளில் படாதபடி சொல்லவேண்டும். வேதம் ஓதக்கூடாத நாட்களில் கூட (அஷ்டமி சதுர்தசி பௌர்ணமி, அமாவாஸ்யை, பிரதமை, மேகம் மூடியநாள் போன்ற அனத்யயன நாட்களில்) இதனைச் செய்ய வேண்டும். தேகசுத்தி செய்ய இயலாதபோதும், தேச்த்தில் கொந்தளிப்பு உள்ளபோதும் செய்ய வேண்டியதில்லை. உபனயனமான பிரும்மசாரி, முதல் உபாகர்மா நடைபெறும்வரை வேதம் ஓதத் தகுதி பெறுவதில்லை. அந்நிலையில் காயத்திரியையே கூறி நிறைவு செய்கின்றனர்.

(ஒவ்வொரு வேத சாகையும் முதலில் பல கிாண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு காண்டத்தின் உட்பிரிவு ப்ரச்னம் அல்லது பிரபாடகம் எனப்பெறும். பிரச்னத்தின் உட்பிரிவு அனுவாகம். அதன் உட்பிரிவு பஞ்சாசத் (பஞ்சாதி). இன்று வேதாதி மட்டும் சொல்வது பழக்கத்தில் உள்ளது. அக்னிமீடே, இஷேத்வா, அக்நஆயாஹி, சந்நோதேவீ என்ற நான்கு வேதங்களின் ஆதியை (வேதாதியை) மட்டும் கூறி நிறைவு செய்கின்றனர்.)

சூரியோதயத்திற்கு முன்னும் இரவிலும் பிரும்மயஜ்ஞும் செய்யக்கூடாது. வேதம் முழுதும் ஒதியவனாயினும் முறைப்படி அதனைச் சொல்ல இயலாதவன் புருஷஸூக்தம் ஸ்ரீருத்ரம் போன்றவற்றை யாவது சொல்லிவரலாம். ஸூரியநமஸ்காரத்தை முறைப்படி வேதமந்திரங்களால் செய்பவர் இதனை யடுத்து பிரும்மயஜ்ஞும் செய்யலாம்.

**பிரும்மயஜ்ஞும்**

தர்ப்பாஸனத்தில் கிழக்குநோக்கி இடதுகாலின் மேல் வலதுகாலும் இடதுகையின் மேல் வலதுகையும் மடியில் வைத்துக்கொண்டு அமர்ந்து ஸங்கல்பம் செய்து மந்திரத்தால் தன் உடலும் உள்ளமும் தூய்மை பெற்றதாய் உணர்ந்து வானிற்கும் தரைக்கும் நடுவே பார்வை பதித்தவனாய் காயத்திரியைப் பிரணவம், வ்யாஹ்ருதியுடன் பிரித்திணைத்தும் வரிசையாக உச்சரித்தும் பிறகு ஹரிநாமஸ்மரணமும் ஓங்காரமும் முன்னும் பின்னும் அமைய வேதாதிகளைக் கூற வேண்டும். தனது வேதத்தின் வேதாதியைக் கூறியதும்

அத்தியயனம் செய்த வேதத்தின் பகுதியை முடிந்த வரை சொல்லி மற்ற வேதாதி கூறி முடிக்க வேண்டும். முடிவில் பிரும்மா அக்கினி பூமி முதலானோருக்கு மூன்று தடவை மந்திரத்தால் நமஸ்காரம் செய்யவேண்டும். இது பிரும்மயஜ்ஞம்.

பொதுவாக பிரும்மயஜ்ஞப்ரச்னம் சொல்வதாக ஸங்கல்பித்துத் தினம் ஒரு பிரச்னமாக யஜுர்வேதிகள் 82 நாட்களில் தன்சாகை முழுவதையும் சொல்லி விடுவர். அதேபோல் மற்ற வேதத்தினரும் செய்வ துண்டு. இதனால் அத்தியயனம் செய்த வேதம் மறக்காதிருக்கும். வேதத்தை மறப்பது பெரும்பாவச் செயல். வேதத்தைத் தொடர்ந்து ஓதாதிருந்தால் பழையதாகிப் பலன் தராமல் போகும். பிரும்மயஜ்ஞ ப்ரச்னம் சொல்வதால் அக்குறை நீங்குகிறது. வேதத்தில் பல வேள்விமுறைகள் கூறப்பட்டுள்ளன. அந்த வேள்விகளைச் செய்வதால் உண்டாகின்ற பலன் அந்த வேதப்பகுதியைச் சிரத்தையுடன் ஓதுவதால் கிட்டுகின்றது. அதனால் தேவதைகளின் அருள் தொடர்ந்து அபரிமிதமாகக் கிட்டுகின்றது. தொடர்ந்து வேதமோதாதவன் பிராமணன் அல்ல. அவனை துர்பிராம்மணன் என்பர். துர்பிராமணத் தன்மை வராதிருக்க முக்கால–ஸந்தியாவந்தனமும் பிரும்மயஜ்ஞமும் உதவுகின்றன. வேதத்தின் ஒரு பகுதியை–வேதஸாரமான காயத்திரியைத் தினமும் சொல்லமுடிவதே இவற்றின் முக்கியப் பிரயோஜனம். ராமாயணம் பாகவதம் முதலியவற்றை இவற்றுடன் பாராயணம் செய்வதுண்டு.

## தேவர்ஷி பித்ருதர்ப்பணம்

நாம் பிறந்ததும் மூவருக்குப் பெரிதும் கடன் பட்டிருக்கிறோம். தேவர்கள் – பிரும்மா முதலானோர் 2. ருஷிகள் – வேதத்தைத் தன் தவவலிமையால் கண்டவர்களும் வேததேவதைகளும் 3. பித்ருக்கள் – நமது மூதாதையரான பித்ருக்கள் அதிவ்யபித்ருக்கள். வஸு ருத்ரர் ஆதித்தியர் என்ற திவ்யபித்ருக்கள். ஸோமன் யமன் அக்னி போன்ற பித்ருக்களுக்கு உதவுபவர்கள். இந்த மூவரில் தேவர்கள் இயற்கையின் உதவியை அளித்து வாழச்செய்பவர்கள். ருஷிகள் வேதம் முதலிய அறிவு நூல்களைக் கருணையால் வெளியிட்டு வாழ வழிகாட்டியவர்கள். பித்ருக்கள், ஜீவன் தனக்கென உடலைத் தேடித்திரியும்போது உடல்தந்து வாழ்வில் நுழைத்தவர்கள். இவர்களைத் திருப்திசெய்வதற்கே தினமும் தர்ப்பணம் செய்ய வேண்டும். (தர்ப்பணம் – திருப்தி அளிக்கின்ற செயல்) இந்த தர்ப்பணம் ஆச்வலாயனம் ஆபஸ்தம்பம் போதாயனம் முதலிய ஸுத்திரங்களில் ஒவ்வொரு வேதசாகையைச் சேர்ந்தவர்க்கும் தனித்தனியே கூறப் பட்டுள்ளது. அவர்கள் தந்தம் முறைப்படியே தர்ப்பணம் செய்யவேண்டும். முழுவதும் செய்ய இயலாவிடில் "ஆப்ரம்ஹஸ்தம்ப பர்யந்தம் ஜகத் த்ருப்யது" "பிரும்மாவிலிருந்து புழுவரை உள்ள எல்லா உயிரினங்களும் திருப்தி அடையட்டும்" என்று அஞ்சலி நிறைய ஜலம் எடுத்து மூன்று தடவை தர்ப்பணம் செய்யவேண்டும்.

தேவர்களுக்கு உபவீதியாயும் (இடது தோளி லிருந்து வலதுவிலா சுற்றிவரும்படி பூணூலைத் தரித்தும்) ருஷிகளுக்கு நிவீதியாகவும் (பூணூலை மாலையாகத் தரித்தும்) பித்ருக்களுக்கு பிராசீநா வீதியாயும் (பூணூலை வலது தோளிலிருந்து இடது விலா சுற்றிவரும்படி தரித்தும்) தர்ப்பணம் செய்ய வேண்டும். தேவர்களுக்கு இருகை விரல்களின் நுனியைக் கீழேச்சாய்த்து அஞ்சலி நிறைந்த நீரை விட வேண்டும். ருஷிகளுக்கு வலது கையின் உட்புறம் (சுண்டுவிரல் உள்ள பகுதியைத் தாழ்த்தி) அதன் வழியே நீர்விழும்படி விடவேண்டும். பித்ருக்களுக்கு கட்டைவிரலுக்கும் ஆட்காட்டி விரலுக்கும் இடையே உள்ள பகுதியைத்தாழ்த்தி அதன்வழியே நீர் விடவேண்டும். நீரைத் தர்ப்பம் பரத்திய தரையில் விடவேண்டும். மேல் அல்லது தாமிரம் வெள்ளி தங்கம் வெண்கலம் இவற்றாலான பாத்திரத்தில் தர்ப்பையைப் பரப்பி அதன் நீர்விடவேண்டும். முடிவில் உபவீதியாகி ஆசமனம் செய்யவேண்டும்.

**தேவபூஜை**

விநாயகராக சோணபத்திரத்தையும், சிவனாக பாணத்தையும், கௌரியம்பாளாக ஸ்வர்ணமுகி (மாக்ஷிக) சிலையையும், விஷ்ணுவாக ஸாலக்ராமத் தையும், ஸூர்யனாக ஸ்படிகத்தையும் வைத்து வழிபடுவது பஞ்சாயதன பூஜை. ஸ்கந்தன் லக்ஷ்மி லலிதா பரமேச்வரி முதலானவரை இஷ்டதேவதையாக விக்கிரகமாகவோ யந்திரமாகவோ படமாகவோ இவற்றுடன் சேர்த்துப் பூஜை செய்வதுண்டு. சோண

பத்திரம் சோணா நதியில் கிடைக்கின்ற கூழான் கல். அவ்விதமே பாணம் நர்மதையிலும், ஸ்வர்ணமுகி குமுத்வதி நதியிலும் ஸ்வர்ணமுகரி நதியிலும், ஸாலக்கிராமம் நேபாளத்திலுள்ள கண்டகியிலும், ஸ்படிகம் வல்லம் முதலான இடங்களில் உள்ள தடாகங்களிலும் பானுமதி நதியிலும் பூமியினடியிலும் கிடைக்கின்றன. இவை உருவமுமல்ல. அருவமுமல்ல. அந்தந்த தேவதைகளின் ஆயதனம்–இருப்பிடம். இவற்றில் கணபதி முதலானோர் நித்தியமாக ஆவாஹனம் முதலியதை எதிர்பாராமல் ஸான்னித்யம் கொண்டுள்ளார்கள். இவற்றில் பூஜை செய்யும்போது நம் உள்ளத்தில் குடிகொண்டவர்களே தியானத்தால் இரங்கி நம் பூஜையை ஏற்க இந்த ஆயதனங்களில் அருள் பரவி நிற்கிறார்கள் என்பதே கருத்து. இந்த வழிபாட்டிற்குத் தேவையானது – சுத்தமான ஜலம் சந்தனம் பூ தூப தீபங்கள், நிவேதனத்திற்காகப்பழம் அன்னம் முதலியவை. நமது பிரார்த்தனை, நமஸ்காரம், ஸ்தோத்திரம் இவை உடல் மனத்தால் ஆகுபவை. தானே தோட்டம்போட்டு வளர்த்த மரம் செடி கொடிகளின் பூ மிக உயர்ந்தது. கோவில் தோட்டத்தில் கோவில் உபயோகத்திற்கென உண்டான பூ, பிறரது தோட்டத்தில் அவர் அனுமதிபெறாமலும் தோட்ட வளர்ச்சிக்கு உதவாமலும் பெற்ற பூ, வாடி வதங்கியது, துணியில் மூட்டை கட்டிக் கொணர்ந்தது, இடுப்புக்குக் கீழ்பகுதியில் பட்டது, மலராத மொட்டுக்கள், பழம்பூ இவை ஏற்றவை அல்ல. தாமரை சம்பகம் மொட்டுக்களாயினும் நல்லதே. நீரில் விளைகின்ற

தாமரை முதலானவற்றிற்கும், தொடுக்கப்பட்ட பூகும பழம்பூ என்ற தோஷமில்லை.

ஜாதி, மல்லிகை, முல்லை, பாதிரி, அரளி, மகிழம், தும்பை, தாமரை, ஆம்பல், அல்லி, குவளை, செங்கழனீர், புரசு, கடம்பம். செம்பருத்தி, நந்தியா வட்டை, புன்னை, தாழை, சம்பகம் இவற்றின் பூக்களும் வில்வம் வன்னி துளசி மருவு இவற்றின் இலைகளும் பூஜைக்கு ஏற்றவை. பிள்ளையாருக்குத் துளசியும் சிவனுக்குத் தாழை முல்லை செம்பருத்தியும், விஷ்ணுவிற்கு அக்ஷதையும் அம்பாளுக்கு அருகம் புல்லும் சூர்யனுக்கு வில்வமும் தனித்த பூஜையில் ஏற்றவையல்ல. பஞ்சாயதனமாகப் பூஜை செய்யும் போது தோஷமில்லை. சந்தனம், குங்குமப்பூ, கஸ்தூரி, புனுகு, பச்சைக்கற்பூரம் இவை மணமூட்டவும், குக்கில் தேவதாரம் சாம்பிராணி பசுநெய் இவை தூபத்திற்கும் பசுநெய், நல்லெண்ணெய் தீபத்திற்கும், நெல், கோதுமை, யவை, துவரை, உளுந்து, பயறு, வெண்மொச்சை, எள்ளு, ஜீரகம் மிளகு கடுகு, மா, வாழை, பலா, எலுமிச்சை, நார்த்தை, பாகல், கருணைக் கிழங்கு, சேனைக்கிழங்கு, சர்க்கரைவள்ளி, இஞ்சி, பூசணி, வெள்ளரி, கக்கரி, பசுவின் பால், தயிர், வெண்ணெய், நெய் இவை நிவேதனப்பொருளாகவும் ஏற்றவை. புத்தரிசி, அறுவடையாகி ஒரு மாதத்திற் குள்ளானது மிகவும் ஏற்றது.

துளஸி பில்வம் இவற்றைப் பறிக்குமுன் அந்த செடிக்கும் மரத்திற்குமான தேவதையை வணங்கி பூஜைக்காக இலைகளைப் பறிப்பதற்கு அனுமதி

வாங்க வேண்டும். செவ்வாய் வெள்ளி, மாலைநேரம், இரவு நேரம், ஸந்தியாகாலம், ஸங்கிரமணம், அமாவாஸ்யை, பௌர்ணமி, கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமி, சதுர்தசி, துவாதசி இக்காலங்களில் துளசியைப் பறிக்கக்கூடாது.

விக்ரகம், யந்திரம் முதலானவற்றுக்குத் தினமும் அபிஷேகம் செய்வதில்லை. கிருஷ்ண அஷ்டமி, கிருஷ்ணசதுர்தசி, அமாவாஸ்யை, பௌர்ணமி, மாதப்பிறப்பு என்ற பஞ்சபர்வதினங்களில் அழுக்கு நீங்கும்படி அபிஷேகம் செய்வித்தால் போதும். ஆனால் தேவபூஜையில் அதிக ஈடுபாடுள்ளவர் தினமும் மூன்று காலங்களும் அல்லது ஒருவேளையாவது அபிஷேகம் முதலியவற்றைச்செய்வர்.

தேவபூஜைக்குப் பயன்படுத்திக் களைந்ததை நிர்மாலியம் என்பர். நிர்மாலியமான பூவைத் தலையில் தரிக்கலாம். தோளில் தரிக்கக்கூடாது. ஸாளக்கிராம தீர்த்தத்தை முதலில் பருகிப் பின் தலையில் தெளித்துக் கொள்ள வேண்டும். தீர்த்தத்தைப் பருகியபின் கை அலம்பக்கூடாது. தனுர்மாதத்தில் விடிவதற்கு முன்னரே பூஜைசெய்ய வேண்டும். மற்ற மாதங்களில் ஸந்தியா வந்தனமும் அக்னி உபாஸனமும் முடிந்த பிறகே பூஜை. பித்ருதினங்களில் தர்ப்பணம் சிராத்தம் முடிந்த பிறகே பூஜை.

புதிதான விக்கிரகம் படம் யந்திரம் முதலியவற்றில் மந்திரபூர்வமாகப் பிராணப் பிரதிஷ்டை செய்து ஆவாஹனம் செய்ய வேண்டும். பஞ்சாயதனமாக உள்ளவைகளுக்கு பிராணப் பிரதிஷ்டையும் ஆவாஹனமும்

கிடையாது. இதயத்திலுள்ள தேவதையைத் தியானித்துப் பஞ்சாயதனத்தினுள் அவர்களிருப்பதாகப் பாவித்துப் பூஜை தொடங்குவர்.

ஆஸனம் (இருக்கை தருவது) பாத்யம் (காலலம்ப நீர் வார்த்தல்) அர்க்கியம் (கைகளுக்கு மணமுள்ள நீர் அளித்தல்) ஆசமனம், மதுபர்கம் (களைப்பு நீங்க தேன் பால் கலந்த பானம் தருதல்) ஸ்நபனம் (நீராட்டுதல்) வஸ்திர தாரணம் (ஆடை உடுத்துதல்) ஆபரணம் (அணிகள் பூட்டுதல்) யஜ்ஞோபவீதம், கந்தம் (வாசனையுள்ள சந்தனம், குங்குமம் முதலியவற்றால் நெற்றிக்கு இடுதல்) அக்ஷதை (முனை முறியாத முழுஅரிசி, குங்குமப்பூ, மஞ்சளரைத்த நீரில் பிசறித்தருதல்) புஷ்பம் (பூக்களை மாலையாக்கி அணிவித்தல், புஷ்பத்தை பாதங்களில் நமஸ்காரம் என்ற பாவனையுடன் இடுதல்) தூபம் (மணமுள்ள புகை காட்டுதல்) தீபம் (நெய் அல்லது நல்லெண்ணெய் தீபம் காட்டுதல்) நிவேதனம் (உணவளித்தல்) நீராஜனம் (சூடம் கொளுத்தி அபராதம் பொறுக்கக்கோரிச் சுற்றிக்காட்டுதல்) மந்திரபுஷ்பம் (வேதமந்திரங்களைக் கொண்டு துதித்தல்) ஸ்வர்ணபுஷ்பம் (தங்கப்பூ சாத்துதல்) ஸ்தோத்திரம், பிரதக்ஷிணம், நமஸ்காரம், பிரார்த்தனை, பூஜைஸமர்ப்பணம் என்ற இவை உபசாரங்கள் எனப்படும். இதை மானஸிக பாவனையாகச்செய்வது பரா பூஜை, மானஸபூஜை எனப்படும். இதில் உலகில் மிக உயர்ந்த பொருளைக் கொண்டு பூஜை செய்வதாகப் பாவனை செய்து மனக்கண்ணால்

தெய்வத்தின் அருள் கூர்ந்த வடிவத்தைக் காண முடியும். இயன்ற அளவு சேகரித்த பொருள்களைக் கொண்டு பூஜை செய்வது ஸபர்யை. மனத்தால் கந்தம் புஷ்பம், தூபம், தீபம், நைவேத்யம் என்ற ஐந்தை மட்டும் ஸமர்பிப்பது மானஸோபசாரபூஜை. பூஜையின் துவக்கத்திலும் முடிவிலும் இஷ்டதேவதையின் மந்திர ஜபம் செய்து தெய்வத்தின் இடதுகையில் ஸமர்ப்பித்து மந்திர ஜபசித்தியை அருளும்படி கோருவர்.

**பஞ்ச மஹாயஜ்ஞங்கள் – வைச்வதேவம்.**

இதுவும் வேதம் – ஸூத்ரங்களுக்கேற்ப மாறுபடும். பகலை எட்டாக வைத்து 5வது பாகத்தில் (15 – 18¾ நாழிகை 12 – 1½ மணி) இது செய்யப்பட வேண்டும். இது மாத்யாந்ஹிகம், பிரும்மயஜ்ஞம் தேவ பூஜைக்குப்பின் நடைபெற வேண்டியது. சமையல் அடுப்பிலிருந்து எடுத்த அக்கினியும், தேவபூஜையில் நிவேதனம் செய்யுமுன் வைச்வதேவத்திற்கெனத் தனியே எடுத்துவைத்து நெய்யால் சுத்திசெய்யப்பட்ட அன்னமும் இதற்குத்தேவை. வைச்வதேவத்திற்கெனத் தனித்து அன்னமும் வியஞ்சனமும் தயாரிக்கலாம். சிஷ்டர்களான பெரியோர்கள் காட்டிய வழியில் இதனைச்செய்யலாம்.

இது மூன்று பிரிவில் அடங்கும். சகலஹோமம், வைச்வதேவம், பலி இடுதல் என. செய்த பாபமனைத்தும் நீங்க சகலஹோமம். அது முடிந்ததும் உணவைத் தயாரிப்பதில் பல உயிரினங்கள் அழிவதால் ஏற்பட்ட பாபம் விலக வைச்வதேவ ஹோமம் செய்கின்றனர். (1) அடுப்பு (2) அமி (3) உரல்

உலக்கை (4) நீர்த்தவலை (5) முறம் சல்லடை முதலியவை என்ற ஐந்தும் உயிருள்ள தான்யம் காய்கறி முதலியவற்றை உணவுக்காக உருவழிக்கின்றன. இந்தப்பாபம் சாப்பிடுபவனை ஒவ்வொரு வேளை உண்ணும் போதும் சார்கின்றன. ஐந்து பெருவேள்விகள் (பஞ்சமஹாயஜ்ஞங்கள்) அந்த பாபத்தை நீக்கச்செய்யப்படுகின்றன. பிரும்மயஜ்ஞும், பித்ருயஜ்ஞும், தேவயஜ்ஞும், பூதயஜ்ஞும், மனுஷ்யஜ்ஞும் என அவை ஐந்து. வேதம் ஓதுதலும், ஓதுவித்தலும் பிரும்மயஜ்ஞுமாகும். அன்னத்தாலோ ஜலத்தாலோ (சிராத்தத்தாலோ தர்பணத்தாலோ) பித்ருக்களைத் திருப்தி செய்வது பித்ருயஜ்ஞும். அக்கினியில் ஹோமம் செய்வது தேவயஜ்ஞும். அதிதிக்கு உணவிடுவது மனுஷ்யயஜ்ஞும். பலியிடுவது பூதயஜ்ஞும். (பலி என்பது ஆட்டையோ, மாட்டையோ வேறொரு உயிரினத்தையோ வெட்டிப் பலிக்கொடுப்பது அல்ல. தனக்கெனச் சமைத்த அன்னத்தின் ஒரு பகுதியை உயிரினத்திற்கென அளிப்பதே பலியாகும்) மிகவும் விஸ்தாரமுள்ள இந்த ஐந்தையும் சுருக்கி இந்த வைசுவதேவமாகவும் பலிஹரணமாகவும், அதிதிபூஜையாகவும் செய்வர். எல்லா தேவர்களையும் குறித்துச்செய்வதால் இது வைச்வதேவம். தேவர்களுக்கு ஹோமம் செய்து மீதமானதைக் கொண்டு பூதபலி செய்யவேண்டும். அதன்பிறகு நாய், காக்கை முதலானவற்றிற்கு பலிதர வேண்டும். மீதியை ஹோமத்திலும் பலிதானத்திலும் குறிப்பிடப்பெறாத தேவர் மனிதர் மிருகங்கள் பட்சிகள் அசுரர் பிசாசர் முதலானோர். மரம் செடி முதலியவை, புழுபூச்சிகள் போன்றவை பசிநீங்க இதனை ஏற்றுத்

திருப்தி அடையட்டும் என்று கூறி இடவேண்டும். பிறகு யம பரிவாரங்களுக்கு அளித்துப் பின் உலகில் பசியால் வாடுபவர் அனைவரும் பசிநீங்கப் பெறட்டும் எனக்கோருவர். இரவிலும் மனைவி மந்திரமின்றி காக்கை நாய் முதலானவற்றிற்கு உணவு அளிக்க வேண்டும். சிராத்தத்தன்று சிராத்தம் முடிந்ததும் தனியாகத் தயாரித்த அன்னத்தால் வைச்வதேவம் செய்வர்.

## அதிதி – அப்யாகத பூஜை

ஒரு கவள அளவுள்ள அன்னம் பிச்சையாகும். நான்கு கவளம் கொண்டது புஷ்கலம். 4 புஷ்கல அளவுள்ளது ஹந்தா எனப்படும். இதையாவது அதிதிக்கு இடவேண்டும். பூர்ண உணவு தருவதும் இல்லாவிடில் ஒருகவளமாவது பிச்சைபோடுவதும் மனுஷ்ய யஜ்ஞத்தின் உட்படும். வைச்வதேவமானதும் வாசலில் நின்று யாரேனும் உணவை எதிர்பார்க்கி றார்களா என்று கவனிக்கவேண்டும். அப்போது எதிர்பாராமல் வருபவர் அதிதி. இவர் வைசுவதேவம் செய்வதற்கு முன்வந்தால்கூட வைசுவதேவத்திற்கு எடுத்துவைத்துவிட்டு இவருக்கு உணவிட்டுப்பிறகு வைச்வதேவம் செய்யலாம். அதிதி, பிரும்மசாரி, ஸன்யாஸி, பிழைப்பதற்கு வழிஇல்லாதவர் என்ற இந்த நால்வரும் சமைத்த அன்னத்தின் முதல்பங்குக் குரியவர். இவர்களுக்கு இடாமல் தனித்து உண்பவன் பாபத்தை உண்கிறான். அதிதி முதலானவர் வராவிடில் அவர்களுக்கெனத் தனித்துச் சிறிது உணவு

ஒதுக்கிவைக்க வேண்டும். அப்படி எடுத்து வைத்ததை அவர்கள் வராவிடில் பசுவிற்கு அளிக்கவேண்டும்.

அதிதி, அப்யாகதர் (விருந்தாளி) சிறுவர், முதியவர், நோயாளி, கர்ப்பிணி இவர்கள் உண்ட பிறகே, தான் சாப்பிட வேண்டும். வைச்வதேவம் செய்வதற்கு முன்னரே வந்தவரும், அந்த கிராமத்தைச் சார்ந்தவரும் முன்னர் அறிமுகமானவரும் அதிதி அல்ல. அதிதி படித்தவரோ சிஷ்டரோ விரும்பத் தக்கவரோ விரும்பத்தகாதவரோ எவராயினும் மதிப்பிற் குரியவரே. அந்த அந்த வேளையின் தேவைக்கு அதிகமாக துறவியும் பிரும்மசாரியும் பிக்ஷை பெறக்கூடாது. நியமமும் வேதாத்யயனமுமில்லாதவனுக்கு பிக்ஷை தராமலிருந்தால் தோஷமில்லை. இந்த அதிதிபூஜையே மனுஷ்யயஜ்ஞமாகும்.

**போஜனம் – உணவு**

உண்ட உணவு உடற்பகுதி அனைத்திற்கும் ஊட்டமும் வலிவும் தெளிவும் தருவதாக அமைய வேண்டும். உணவாலேயே உள்ளமும் எண்ணமும் உணர்வுகளும் அறிவும் அமைகின்றன. அதனால் அவைகளுக்கு உறுதியும் தெளிவும் தருவதாக உணவு அமைய வேண்டும். செயலும் எண்ணமும் காரணமாக ஆத்மாவிற்கு வினையால் கட்டும் வினைநீக்கமும் ஏற்படும். அதனால் போஜனத்தைப் பசிநீங்கவும் நாக்குக்குத் திருப்தி அளிக்கவும் உள்ளதாகக் கருதாமல் ஆத்மதிருப்தி தருவதாக அமைப்பதில் நாட்டம் தேவை. போஜனத்திற்குமுன் வைச்வதேவமும் அதிதிபூஜையும் நடத்தியதன்மூலம், தன்னலத்தை

மட்டுமே கருதாமல் சமைத்த உணவில் தன்னுடன் உடலால் சம்பந்தப்படாத பலருக்கும் அதில் பங்கு உண்டு என்பதை உணரலாம்.

மந்திரம் சொல்லிப் போஜனத்தைத் தொடங்குகிறோம், நிறைவு செய்கிறோம். கைகால்கள் அலம்பி உபவீதியாக உத்தரீயம் தரித்து இரண்டு தடவை ஆசமனம் செய்து. கிழக்கு அல்லது மேற்குமுகமாக (சிராத்தத்தன்று வடக்குமுகமாக) ஆஸனத்தில் அமர்ந்து கால்களை ஆஸனத்திற்கு வெளியே தரையில் வைத்து சந்தனம் தரித்து, தங்கம் வெள்ளி வெண்கலம் தாமிரம் இவற்றாலான பாத்திரத்திலோ வாழை இலையிலோ சாப்பிட வேண்டும். உண்கலன் போடுமிடத்தை முன்னதாகச் சுத்தம் செய்திருக்க வேண்டும். நடுப்பகல் முன்னிரவு என இரு வேளைகளில் மட்டும் சாப்பிடலாம். நோயாளி, சிறுவர், முதியவர், சக்திக்குறைவுள்ளவர், உடல்உழைப்பு மிக்கவர் இவர்களுக்கு இருவேளை நியமமில்லை.

இனிப்புள்ளவை சுத்தான்னம் இவற்றைத் தன்னை ஒட்டியுள்ள இலை அல்லது பாத்திரப்பகுதியிலும் மற்ற சுவையுள்ளவற்றை எதிர்புறத்திலும் பரிமாறவேண்டும்.

அன்னமிட்டு நெய் போடும்வரை திரிஸுபர்ணம் முதலிய மந்திரங்களைக்கூற வேண்டும். இலை – சுத்த அன்னத்தை வைக்குமுன் நமஸ்தே அன்ன! என்று தன்முன் உள்ள அன்னத்தை வணங்கி "அஸ்மாகம் நித்யமஸ்து ஏதத்" "என்றும் எமக்கு இந்த அன்னம் கிடைக்கட்டும்" என்று கோரி இடதுகையால்

இலை – பாத்திரத்தைத் தொட்டுக்கொண்டு அன்னம் வைத்து நெய்விட்டதும் பிரணவம் வியாஹ்ருதியால் அன்னத்தை வரவேற்று காயத்திரியால் தூயதாக்கி ஸத்யம் த்வா ருதேன (ருதம் த்வா ஸத்யேந என்று இரவில்) பரிஷிஞ்சாமி என இலை – பாத்திரத்தைச் சுற்றிப் பரிஷேசனம் செய்யவேண்டும். வலது கையில் ஜலம் விட்டு அம்ருதோபஸ்தரணமஸி என மந்திரத்தால் உண்ணும் உணவிற்கு கீழ் ஆதாரமாகும் படி கையிலுள்ள ஜலத்தை வேண்டிப் பருகவேண்டும். இது ஆபோசனம். பிறகு நெய் கலந்த சுத்தான்னத்தில் கட்டைவிரல் நடுவிரல் பவித்ரவிரல்களால் சிறிது அன்னமெடுத்துப் பிரணவத்துடன்கூடிய" ப்ராணாய ஸ்வாஹா" முதலிய மந்திரங்களால் ஆறு ஆஹூதி களாக வாயிலிட்டு மெல்லாமல் அதை விழுங்க வேண்டும். இது பிராணாஹூதி. பிறகு இலையில் வைத்திருந்த இடதுகையை சுத்த ஜலத்தால் அலம்பி மார்பில் வைத்து பிரும்மணி ம ஆத்மா அம்ருதத்வாய என்று வேண்டி இறைவனை தியானிக்க வேண்டும். சாப்பாடு முடிந்ததும் "உள்ளே சென்ற அமுத உணவிற்கு மூடியாக ஆவாய்" "அம்ருதாபிதான மஸி" என வலது உள்ளங்கையிலிட்ட நீரைப்பருகி மீதிநீரை தரையில் விடவேண்டும். இது உத்தராபோசனம். உத்தராபோசனம் செய்தபின் இலையைத் தொடக்கூடாது. எழுந்திருந்து வாய், கைகளைக் கழுவி 16 தடவை நீரால் வாய் கொப்புளித்து இடதுபுறத்தில் துப்பி கைகால்களை அலம்பி இரண்டு தடவை ஆசமனம் செய்து கைகளைத் துடைத்துக் கொள்ள வேண்டும். கைகளைத் தேய்த்துச் சர்யாதி ஸுகன்யா சியவனர்.

இந்திரன் அச்விநீதேவர்கள் இவர்களை நினைத்து கட்டைவிரல்களால் கண்களை அழுத்தித்துடைத்து அக்கினியையும் இஷ்ட தேவதையையும் வணங்க வேண்டும்.

உணவேற்க உட்காருமிடம், உணவைத் தாங்குகின்ற பாத்திரம் அல்லது இலை, அதனைப் போடும் இடம், உணவேற்கின்றவனின் கைகால்கள், உணவு பரிமாறுபவர், உணவுதயாரிப்பு, கூட உண்பவர். உணவு என எல்லாவற்றிலும் தூய்மை தேவை. அன்பும் அழகும் உபசரிப்பும் நிறைந்த சூழ்நிலை தேவை. நெய் சுத்தமல்லாததையும் சுத்தமாக்கும் என்று நம்பிக்கை. நெய்யிடுவதை அன்னசுத்தி செய்வது என்றே சொல்வர். பரிஷேசனத்திற்கு முன் நெய் இடாவிட்டால் பின் நெய் இட்டுக் கொள்வதில்லை.

தனித்து உட்கார்ந்து சாப்பிடுவதும், பரிமாறுவதிலும் உணவிலும் குற்றம் குறை இருந்தாலும் வெளிப் படுத்தாமல் இட்டதை நிந்திக்காமலே உண்பதும், பிராணாஹுதி வரை மௌனமும், பின்னர் மிதமாகப் பேசுவதும் மனக்கிளர்ச்சிக்கு இடம் கொடாமல் அமைதிகாத்தலும் பெரியோர் மரபு. மற்றவர் நியமம் காக்காதிருந்தால் குற்றம் கூறாமல், மறுபடி அப்படி வாய்ப்பு நேராமல் அவர்களைத் தவிர்ப்பதும் அமைதி காக்கும். உணவை உண்கலத்தில் இட்டதும் அதனிடம் தெய்விகத்தன்மை இருப்பதை உணர்ந்து அதனை காயத்திரியால் மேலும் தூயதாக்குவர். ஸத்யமான உன்னை நேர்மையால் சுற்றி நனைக்கிறேன்

எனக்கூறி ஸத்யத்திற்கு நேர்மையைப் பாதுகாப்பாகக் கருதுவதே பக்லில் பரிஷேசனமாகிறது. இரவில் நேர்மையால் ஸத்யத்திற்குப் பாதுகாப்பு அளிக்கப் பெறுகிறது. உண்ணும் உணவு அமுதம். அதற்கு வயிற்றில் ஆதாரமாக நீரைப்பருகுவது ஆபோசனம். பரிஷேசனமானதும் ஆபோசனத்திற்கு முன் சிலர் உண்கலனின் வலது புறத்தில் பரிஷேசன நீர்பட்ட இடத்திற்கு வெளியே யமாய நம: சித்ரகுப்தாய நம: ஸர்வபூதேப்யோ நம: என்றோ அன்னபதயே நம: புவநபதயே நம: பூதாநாம் பதயே நம: என்றோ கூறி மூன்று சிறு அன்னப்பிடியை வைத்து அதன்மேல் "யத்ரக்வசந ஸம்ஸ் – த்தாநாம் க்ஷுத்த்ருஷ்ணோ பஹதாத்மநாம். பூதாநாம் த்ருப்தயே தோயம் இதமஸ்து யதாஸுகம்" என்று கூறிச்சிறிது ஜலம் விடுவர். "எங்கோ இருந்துகொண்டு பசியாலும் தாகத்தாலும் வாடி வதங்கிய உயிரினமனைத்தின் திருப்திக்கு இந்த நீர் உதவட்டும்" என்பது பொருள். இந்த நல்ல நினைப்பும் பரிவும் உலகெங்கும் பரவி நல்லெண்ணத்தை விளைவிக்கும்.

உடலில் ஐந்து வாயுக்கள் பிராணன் அபானன் வியானன் உதானன் ஸமானன் என. இறைவனே உடலில் ஜாடராக்னியாக இருந்து உண்டதைச் செரிக்கச் செய்கிறான். பிராணன் முதலிய ஐந்து வாயுக்களாக இருந்து செரித்த உணவின் சத்தை உடலில் சேர்த்தும், ஊட்டத்திற்கு உதவிப் பயனற்றுப் போன கழிவுப்பொருளை அகற்றியும் இரத்தஓட்டம் முதலியவற்றின் மூலம் உடலில் வளர்ச்சிக்கும்

பாதுகாப்புக்கும் சமநிலைக்கும் உதவுகிறான் என்பர். அந்த ஐந்து பிராணசக்திகளைத் தருகின்ற ஐந்து வாயுக்களுக்கும் தூண்டுதல் தர இந்த பிராணாஹுதி தரப்படுகிறது. அப்படி வலிவடைந்த ஜீவனைப் பரம்பொருளிடம் அழியாநிலை பெறுவதற்காக இணைப்பதே ப்ரும்மணிம ஆத்மா என்ற மந்திரத்தின் பொருள். உண்ணும்போது கோவிந்த கோவிந்த என்றும் மற்ற இறைவனின் நாமங்களையும் கூறிக் கொண்டே உண்பதும் நல்லோர் வழக்கம்.

பிராணாஹுதி முடியும் வரை இலையைத் தொட்டுக்கொண்டிருந்த இடதுகையைத் தனியே ஜலம் விடச்செய்து அலம்பிக் கொள்ளவேண்டும். பரிஷேசனத்தின் போது சொட்டிய ஜலத்தால் அல்ல. பரிஷேசனம் செய்து மீந்த ஜலத்தால் ஆபோசனம் செய்யக்கூடாது. ஆபோசனத்திற்குப் பிறரை நீர்வார்க்கச் செய்யவேண்டும். இடதுகை இலையைத் தொட்டுள்ளதால் இந்த நியமம். பிராணாஹுதிக்கான அன்னத்தைப் பற்களால் மென்று சாப்பிடக்கூடாது.

பிராணாஹுதிக்கான அன்னத்தை எல்லா விரல்களாலும் எடுக்கலாம். அல்லது பிராணாய ஸ்வாஹா என (1. சிறுவிரல் 2. மோதிரவிரல் 3. நடுவிரல் 4. ஆட்காட்டிவிரல் 5. கட்டைவிரல்) 3–4–5 விரல்களாலும், அபானாய ஸ்வாஹா என 2–3–5 விரல்களாலும், வியாநாய ஸ்வாஹா என 1–2–5 விரல்களாலும், உதாநாய ஸ்வாஹா என 1–2–3–5 விரல்களாலும், ஸமாநாய ஸ்வாஹா என்பதையும் பிரும்மணே ஸ்வாஹா என்பதையும் எல்லா

விரல்களாலும் அன்னத்தை எடுப்பது மரபு. இடது கையைத் தொடையில் அல்லது தரையில் ஊன்றிக் கொள்ளக் கூடாது. உணவுப்பாதை கோணிக்காற்றுப் பாதை தடைபடும்.

கட்டில் முதலியவற்றில் உட்கார்ந்து காலைத் தொங்கவிட்டோ, தரையில் ஆஸனமின்றி உட்கார்ந்தோ, காலை நீட்டிக்கொண்டோ, வாகனங்களில் ஏறி அமர்ந்தோ உண்ணக்கூடாது. உணவுக்குழாய் இரைப்பை சீராக இருக்க ஆஸனத்தில் அமர்ந்து கால்களை மடக்கி உட்கார்வதே நல்லது. உபவீதமாகப் பூணூலைத் தரிக்காமலும் உத்தரீயமில்லாமலும் சாப்பிடுவது நல்லதல்ல.

**போஜன நியமங்கள்**

வாய்கொள்ளுமளவிற்குக் கையில் உணவு எடுக்கவேண்டும். அதிமாக எடுத்து வாயில் போட்டு மீந்ததையும் கடித்து மீந்ததையும் கலத்திலுள்ளதுடன் கலக்கக்கூடாது. சத்தமிட்டு உறிஞ்சி அல்லது கடித்துச் சாப்பிடக்கூடாது. பருகும் நீரையும் குடிக்கக் கூடிய அளவில் எடுத்து உதட்டில் படாமல் எச்சிற்படாமல் தூக்கிப்பருக வேண்டும். பருகி மீந்த ஜலம், எச்சில்பட்ட ஜலம் நல்லதல்ல.

சம்பந்தப்படாத பலர் நோக்க உண்ணக்கூடாது. பந்தியாகப்பலர் உட்கார்ந்து சாப்பிடும்போது நடுவில் ஒருவர் எழக்கூடாது. எழுந்தால் மற்றவரும் அத்துடன் எழவேண்டும். அப்படி எழநேர்ந்தால் சாம்பல் ஜலம் இவற்றைக்கொண்டு பிரிவினை செய்யவேண்டும். தூண்களின் இடையே, வாசலுக்கு அருகே, வழியில்,

தாழ்ந்தோ, மேடிட்டோ மற்றவர் உட்கார்ந்த இடத்திற்குச் சமமாக இல்லாத இடத்திலோ அமர்ந்தவர் நடுவில் எழுந்தால் பந்திதோஷமில்லை. உண்ணும்போது ஒருவரை ஒருவர் தொடக்கூடாது. இடதுகையால் நீர் பருகும்போது வலதுகையால் உண்கலனைத் தொட்டுக் கொண்டிருக்க வேண்டும்.

உப்பு, வியஞ்சனம் (ஊறுகாய், காய்கறி) நெய், எண்ணெய், பாயஸம், அன்னம் இவற்றைக் கரண்டியாலன்றிக் கையால் பரிமாறக்கூடாது. எண்ணெய்யில் பொரித்துப் பிசிப்பு இல்லாதவற்றையும் பழங்களையும் கையால் பரிமாறலாம்.

பழம் – பட்சணம் முதலியவற்றை சிறுவர் விருந்தினர் இவர்களுக்கு வழங்கியபின் தனக்கு இட்டுக்கொள்ள வேண்டும்.

பாயஸம் நெய் தயிர் தேன் பழம் இவைகளை மீதம் வைக்காமல் சாப்பிடலாம். மற்றவற்றைச் சிறிது மீதிவைத்தே சாப்பிடவேண்டும்.

வாழை இலையின் உட்புறத்தில்தான் உணவை வைக்கவேண்டும். தாமரை இலையில் உள்ளும் வெளியிலும் வைக்கலாம்.

உண்ணும்போது தீபம் அணைந்தால் சாப்பிடுவதை நிறுத்தி மறுபடி வெளிச்சம் வந்தபிறகு கலத்தில் இட்டதை மட்டும் சாப்பிடலாம். மறுபடி அதில் உணவுவகை சேர்க்கக்கூடாது.

தயிரோ பாலோ கலந்த அன்னத்தை உண்டபின் நீர் பருகக்கூடாது.

கையில் எடுத்த அன்னத்தில் புழு கேசமிருந்தால் அந்த அன்னகவளத்தைத் தள்ளி வைத்து விட வேண்டும். வாயில் அது சேர்ந்துவிட்டால் உமிழ்ந்து வாய் கொப்புளித்துப் பிறகு மற்றதை உண்ணலாம்.

கோழை உமிழ்வது, சத்தத்துடன் கோழை விழுங்குவது, காரித்துப்புவது, மூக்கைச்சிந்துவது இவை பலருடன் உண்ணும்போது தவிர்க்கத் தக்கவை. உண்ண உட்காருமுன்னே தொண்டை மூக்கு வாய் இவற்றைச் சுத்தி செய்து கொள்ளவேண்டும்.

– தாமரை இலையில் கிருஹஸ்தனும் வெண்கலப் பாத்திரத்தில் துறவியும் பிரும்மசாரியும் விதவையும் உண்ணக்கூடாது. கிருஹஸ்தனுக்கு வெண்கல பாத்திரம் சிறந்தது.

– துணியைத் தலையில் சுற்றிக்கொள்ளக் கூடாது.

– காலணியுடன் உண்ணக்கூடாது.

– ஈர ஆடை, ஈரத்தலையுடன் சாப்பிடக்கூடாது.

– மனக்கிளர்ச்சி தரும் வகையில் பெண்களுடன் சேர்ந்தமர்ந்து உண்ணக்கூடாது. யாத்திரை நேரத்தில் தோஷமில்லை.

– மனத்திற்குப் பிடிக்காத சத்தம் கேட்குமிடத்தில், அருவருப்பு தரும் மணம் உள்ள இடத்தில் உண்ணக்கூடாது.

– நாய் கோழி காக்கை பூனை முதலியவை முகர்ந்த உணவு கூடாது.

– பிறரது எச்சில், ருசிமாறியது. நிறம் மாறியது. உண்ணத்தகாதவை.

– மேற்கூரை இல்லாத இடத்தில் ஆகாசம் பார்க்கச் சாப்பிடக்கூடாது.

உணவின் அளவு அவரவரது இயல்பிற்கும் ஜீர்ணிக்கும் சக்திக்கும் ஏற்றவாறு அளவுக்கு அடங்கினதாக இருத்தல் நல்லது. கொள்ளளவும் ஜீர்ண அளவும் பருவநிலையும் கருத்தில் கொள்ளத்தக்கது.

அரட்டை அடித்துக்கொண்டும் மனம் வருத்தியும், பிறர்மனத்தைப்புண்படுத்தியும், படித்துக்கொண்டும், படுத்தும் உணவில் மனம் செலுத்தாமலிருப்பது தவறு. உண்ணும்போது அதுஒன்றையே பொருட்படுத்த வேண்டும்.

முதலில் இனிப்பும் தொடர்ந்து புளிப்பும் உப்பும் நடுவில் காரமும் கசப்பும் முடிவில் துவர்ப்பும் அமையும்படி சாப்பிடவேண்டும்.

வீணாகப்பட்டினி இருப்பதும் உடலை வருத்துவதும் கூடாது.

வேகமாகவும் மிகவும் மந்தமாகவும் சாப்பிடக் கூடாது.

முன்உண்ட உணவு சீர்ணமாகாதபோதும், பசி வந்தும் அதனை மீறி வேறு பணியில் ஈடுபட்டும், பசி முற்றிய நிலையிலும் உண்ட உணவு சரியாகச் செரிக்காது.

துறவிக்கு எட்டு கவளம்(கைப்பிடி), வானப்ரஸ்தனுக்கு 16 கவளம், கிருஹஸ்தனுக்கு 32 கவளம், பிரும்மசாரிக்குக் கொள்ளுமளவு உண்பது நல்லது.

போஜனத்தின் ஆரம்பத்தில் திரவ உணவும் நடுவில் கடின உணவும் முடிவில் திரவஉணவும் அமைவது நல்லது.

ஆயுளை நீடிப்பதை விரும்புபவன் கிழக்கையும், புகழைவிரும்புபவன் தெற்கையும், செல்வத்தை விரும்புபவன் மேற்கையும் நேர்மையை விரும்புபவன் வடக்கையும் நோக்கி எப்போதும் உட்கார்ந்து உண்ணவேண்டும்.

மண்பாத்திரமும் இரும்பு பாத்திரமும் உண்கலனாக இருக்கக்கூடாது. தாமரையிலை, புரசிலை கிருஹஸ்தனுக்குக் கூடாது.

உண்ணும்போது இடதுகை முழங்காலுக்குள்ளே இருக்கவேண்டும். வெளியே கை ஊன்றக்கூடாது.

உண்கலத்தைத் தானே அலம்பிக்கொள்ள வேண்டும்.

தாயாரோ மனைவியோ உணவிடல் நல்லது.

பலர் உபயோகிக்கும்படி தங்கம் வெள்ளி வெண்கலம் முதலிய உண்கலனை இடும்போது உண்டதும் அலம்பிச் சாணமிட்டு மறுபடி அலம்பி அனலில் காட்டிப்பின் மற்றொருவர் உண்பதற்குக் தரவேண்டும். ஒருவரே தொடர்ந்து சாப்பிட்டால் அலம்பினால்போதும்.

உணவைக் கையில் வைத்துக்கொண்டும் உண்கலனைக் கையில் ஏந்திக்கொண்டும் சாப்பிடக் கூடாது.

பலருக்கு உணவளித்துத் தானும் கூட உண்ணும்போது மௌனம் நல்லதல்ல. பரிவும் ஆதரவும் அன்பும் காட்டிப்பேசி கூச்சமின்றி அவர்கள் திருப்தியுடன் சாப்பிடச்செய்ய வேண்டும்.

பலருக்கு உணவளிக்கும் போது ஒருவருக்கு இட்டும் மற்றவர்க்கு இடாமலும் குறைத்தோ அதிகமாகவோ இட்டும் பந்திவஞ்சனை செய்யாமல் ஒரே சீராக, விரும்புமளவையும் ஒட்டி வழங்க வேண்டும்.

கைகளால் நீர் ஏந்திப் பருகக்கூடாது.

நேரிடையாக உப்பை உண்கலனில் இடக்கூடாது ஏதாவது ஒருபொருளில் மறைத்து வழங்கவேண்டும். நெய், எண்ணெய், பாயஸம் முதலியவற்றை உண்கலனில்தான் இடவேண்டும். கையில் இடக்கூடாது.

**உணவில் தள்ளத்தக்கதும் சேர்க்கத்தக்கதும்**

சேர்க்கத்தக்கதைச் சேர்த்து தவிர்க்கத்தக்கதைத் தவிர்க்குபோது உடலும் உள்ளமும் தூய்மை பெறுகின்றன. வேதம் ஓதாமலிருப்பதாலும் ஆசாரத்தை விடுவதாலும் அன்னதோஷத்தாலும் பிராம்மணன் அழிகிறான். சில பொருட்களையே நல்லதல்ல எனத்தள்ள நேருகிறது. (ஜாதி கர்ஹிதம்) சிலவற்றைச்சிலர் சமைத்தால் அல்லது அளித்தால்

தள்ள நேர்கிறது. அந்தப் பொருளை உடையவரின் தோஷம் பொருளையும் பாதிக்கிறது. (ஆச்ரய கர்ஹிதம்). உள்ளிப்பூண்டும் வெங்காயமும் இத்தகையதும் ஜாதிகர்ஹிதம். கெட்டவனின் உணவு ஆசிரயகர்ஹித மாகும். நாய் பூனை முகர்ந்தால் தள்ளத்தக்கது. அது கிரியாதுஷ்டம். நாட்பட்டது காலதுஷ்டம். பூண்டுடன் கூடிய தயிர் ஸம்ஸர்கதுஷ்டம். (சேர்க்கையால் கெட்டது.) கண்டதுமே உமட்டலும் அருவருப்பும் தருவது ரஸதுஷ்டம். அப்படித் தள்ளத்தக்கவை களையும் சேர்க்கத்தக்கவைகளையும் பார்ப்போம்.

**நியமத்தில் உள்ளவன் சாப்பிடக்கூடியவை –**

வாழையின் எல்லாப்பகுதிகளும், பலா, அவரை, பாகல், தேங்காய், நார்த்தை, பேரீச்சை, மாதுளை, நாவல், நெல்லி, இஞ்சி, கொத்துமல்லி, சுண்டைக்காய், புளி, இலந்தை, கண்டங்கத்திரி, விளா உளுந்து, துவரை, பயறு, நரிப்பயறு, தட்டைப்பயறு, மொச்சை, கருமொச்சை, கடுகு, எள், மிளகு, சீரகம், திப்பிலி, கருஞ்சீரகம், பரங்கி, பூசணி, வெள்ளரி, கண்டங்கத்திரி, கக்கரி, சேம்பு, சாமை, பொன்னாங்க ண்ணி, திராக்ஷை, வல்லாரை, தூதுளை, பசுவின் பால் தயிர் மோர் நெய், எருமைப் பால் தயிர் மோர் நெய், வெள்ளாட்டின் பால், கரணைக்கிழங்கு, சேனைக் கிழங்கு, அகத்தி, நெய்யில் பக்குவமானவை, ஆண்டவனுக்கு நிவேதனமானவை சேர்க்கத்தக்கது. சிஷ்டர்களான முன்னோர்கள் வழக்கில் இருந்தவைகளும் நல்லவையே.

## நியமத்தில் உள்ளவன் சாப்பிடக்கூடாத பொருள்கள்

வெள்ளுள்ளி, வெங்காயம், செம்முருங்கை, முள்ளங்கி, கும்மட்டிக்காய், நாய்க் கொடை, சுரை, ஈன்று பத்து நாளாகாத பசுவின் பால், பெருங்காயம் தவிர மற்ற பிசின் கலந்தது, வெள்ளைக்கத்திரி, பசளை, கோவை, அத்தி, குசும்பாஎள்ளு, கொள்ளு, நெய்க்கசண்டு, நீர் கலவாத மோர், காரணமின்றி எள்ளன்னம், பழையஅன்னம், கன்றில்லாமல் அல்லது வேறு கன்று ஊட்டிப்பால் தரும் பசுவின் பால், உப்புடன் சேர்ந்த பால், தாமிரபாத்திரத்தில் உள்ள தேன், தயிர், மோர், நெய் முதலியவை, வெண்கலப் பாத்திரத்திலுள்ள கரும்புச்சாறும் இளநீரும், இரவில் தயிர் நெல்லிக்காய் மாம்பழம் எள் கலந்த உணவு, ஸத்துமா, முட்டைப்பொரி முதலியவை. நீர்சேம்பு, அப்போது ஆடிய எண்ணெய், பிறர் குடித்து மீந்த நீர், நாய் காக்கை பறவை பசு பூனை முகர்ந்து பார்த்தும் எச்சிலாக்கியதும் (அதிகஅளவில் சமைத்திருந்தால் சுத்திமுறை அறிந்து செய்து சேர்க்கத்தக்கதாயின் சேர்க்கலாம்.) ஒருவர் சாப்பிட்ட பின் மீதமுள்ள எச்சில் (குருவினுடையதைச் சீடனும், பதியுடையதைப் பத்தினியும் தவிர) கேசம், நகம் போன்றவை கலந்தது. (அதனைச்சுற்றியுள்ள உணவை நீக்கி அவசியமாயின் உண்ணலாம்.) எறும்பு ஈ கொசுமொய்த்தது, சாப்பிடலாமா கூடாதா என்று ஐயம் உண்டாக்கும் உணவு, அருவருப்பும் உமட்டலும் தருவது, சுவை மாறியது, உருவம் மாறியது, மணம் மாறியது, உவர் மண்ணாலான உப்பு, செம்மறியாட்டுப் பால்,

காந்திப்போன அன்னம் முதலியவை, சாறு பிழிந்தெடுக்கப்பட்ட பழத்தோல்கள், எண்ணெய் எடுக்கப்பட்ட பிண்ணாக்கு, காடி, நுரையுள்ள நெய், நெய்யின் ஏடு, புளித்ததயிர், ருசிகெட்ட மோர், கடைகளில் விற்கப்படுகின்ற பக்குவமான உணவு, பிரதமையில் பூசனி, ஷஷ்டியில் புடல், ஸப்தமியில் நெல்லிக்காய். திரயோதசியில் எள்ளு, சதுர்தசியில் புளி, பர்வகாலத்தில் நெல்லிக்காய். இறைவனுக்கு நிவேதனமாகாதது இவை நீக்கத்தக்கவை. அறியாமல் சேர்க்கப்பட்டிருந்தால் உபவாஸமிருக்கவேண்டும்.

இவையே சிகிச்சைக்குப் பயன்படுமானால் வேறு மாற்றுப் பொருள் கிடைக்காவிடில் சேர்க்கலாம்.

**சாப்பிடக்கூடாத வேளை**

ஏகாதசியின் பகலும், இரவும், ஞாயிறு, பர்வதினம், மாதப்பிறப்பு, தர்பணதினம், சிராத்ததினம், யுகாதி, மன்வாதி, உபவாஸதினத்தின் முன் பின் இரவுகள். ஸௌர்யக்கிரகணத்தில் கிரகணம் பிடிக்கு முன் 12 மணிநேரம், சந்திர கிரகணத்திற்குமுன் 9 மணி நேரம், சூரிய கிரகணம் பிடித்து உதிக்கும் நாளில் முன்இரவு, சந்திரகிரகணம் பிடித்து உதிக்கின்ற நாளில் முன் பகல், சூரியகிரஹணம் பிடித்திருக்கும் போதே அஸ்தமிக்கும் நாளில் இரவு, சந்திரகிரஹணம் பிடித்திருக்கும் போதே அஸ்தமிக்கும் நாளில் தொடர்ந்துவரும் பகல், இவற்றில் சாப்பிடக்கூடாது.

### சாப்பிடக்கூடாத நிலைகள்

நோயுற்றிருந்தாலன்றி ஸ்நானம் செய்யாதவரை, தினந்தோறும் செய்யவேண்டிய நித்யகர்மா செய்யாதவரை, கால்மேல் கால் போட்டுக்கொண்டு, நின்றுகொண்டு, நடந்துகொண்டு, குதித்துக்கொண்டு, வணங்கிக்கொண்டு, படுத்துக்கொண்டு, உண்கலன் மேல் கால்படும்படி, வாசல்படியில், திண்ணையில், மடிமேல் உண்கலன் வைத்துக் கொண்டு, கூட இருப்பவருக்கு அளிக்காமல், ஒருவரது உண்கலனுடன் ஒட்டிக்கொண்டு, உண்பவர் ஒருவருக்கொருவர் தொட்டுக்கொண்டு, இடது கையால், வாய்வழிந்து சிந்தும்படி நீர்பருகிக் கொண்டு, மனம் சிதறிய நிலையில், மனத்திற்கு உண்ண விருப்பமில்லாதபோது, விரும்பத்தகாத சூழ்நிலையில் சாப்பிடக்கூடாது.

உண்டதும் சிறிதுநேரம் உணவைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். 'உண்ட உணவை ஆகாசம் வாயு அக்கினி ஜலம் பிருதிவி என்ற ஐந்து பூதங்களும் தம் தம் செயலால் என் உடலுடன் சேர்க்கின்றன. ஆகாசம் உணவு' நகர்வதற்கு இடமளிக்கிறது. வாயு அதை இடத்திலிருந்து இடத்திற்கு இட்டுச்செல்கிறது. அக்கினி பக்குவப்படுத்தி அதற்குப் பரிணாமம் தந்து ரஸம் ரக்தம் முதலிய தாதுக்களாக மாற்றுகிறது. ஜலம் அதனை நெகிழ்த்திச்சாரத்தைத் தன்னுள் கரைத்து ஆங்காங்கு செல்ல உதவுகிறது. அப்படி நகர்வது பிருதிவியாலான உணவு. அதனை ஏற்பது பிருதிவியாலான உடல். இவை இப்படி இணைந்து செயல் புரிவதால் அன்னம் பிராணனுக்கு வலிவூட்டுகின்றது.

எனக்கு புஷ்டியும் இன்பமும் கிட்டுகின்றன. தொடர்ந்து இந்த இணைவும் ஜீர்ணமும் புஷ்டியும் எனக்குக் கிட்டட்டும். என்னுள் அந்தர்யாமியான விஷ்ணுவே இந்த இணைப்பைத் தருவதால் அவரே புசிப்பவர். அந்த உண்மை நிலை காரணமாக இப்போது சாப்பிட்டதும் நல்ல பரிணாமம் பெறட்டும்" என்று வயிற்றைத் தடவிக்கொண்டே பிரார்த்தனை செய்யவேண்டும். இந்தக் கருத்தைக் கூறுகின்ற சுலோகங்கள் இவை –

**அக்நிராப்யாயயன் தாதும் பார்த்திவம் பவநேரித:**
**தத்தாவகாசோ நபஸா ஜரயேத் அஸ்துமே ஸுகம்.**
**அன்னம் பலாய மே பூமே: அபாம் அக்ந்ய நிலஸ்யச**
**பவத்வேதத் பரிணதம் மமாஸ்த்வவ்யாஹதம் ஸுகம்**
**ப்ராணாபாந ஸமாநாநாம் உதாநவ்யாநயோஸ்ததா**
**அன்னம் புஷ்டிகரம் சாஸ்து மமாஸ்து அவ்யாஹதம் ஸுகம்**
**அகஸ்திரக்னிர் படபானலச்ச புக்தம் மயான்னம் ஜரயந்த்வசேஷம்.**
**ஸுகம்சமே தத்பரிணாமஸம்பவம்**
**யச்சந்த்வரோகம் ம ம சாஸ்து தேஹே**
**விஷ்ணுஸ்ஸமஸ்தேந்த்ரிய தேஹ தேஹீ**
**ப்ரதானபூதோ பகவான் யதைக:**
**ஸத்யேந தேநாத்தமசேஷ மந்நம்**
**ஆரோக்யதம் மே பரிணாம மேது.**
**விஷ்ணுரத்தா யதைவாந்நம் பரிணாமச்சவை யத:**
**ஸத்யேந நேந மே புக்தம் ஜீர்யத்வந்நமிதம் ததா.**

**சாப்பிட்டபின்**

சாப்பிட்டதும் உட்கார்ந்திருப்பவனுக்கு வயிறு பெருக்கும். நிற்பவனுக்கு உறுதி உண்டாகும். நடப்பவனுக்கு ஆயுள் வளரும். ஓடுபவனுக்கு அழிவு

உண்டாகும். தூங்குகிறவனுக்கு உடல் பருக்கும். உண்டதும் மெதுவாக நூறடி நடந்து அரசன்போல் நிமிர்ந்து உட்காரவேண்டும்.

இதிஹாஸ - புராணங்களைக் கேட்பதும் படிப்பதும் நல்லது. அதன்பிறகு தன் குடும்பத்துப் பணிகளைச்செய்ய வேண்டும்.

**தாம்பூலம்**

உண்டதும் தாம்பூலம் போடுவதும் உண்டவர்களுக்குத் தாம்பூலம் தருவதும் நல்லது. பாக்கு அதிகமானால் நோய்வரும். வெற்றிலையின் நுனி காம்பு நடுவில் உள்ள நரம்பு இவற்றை நீக்கிப் பின்புறம் சுண்ணாம்பு தடவி பாக்கு சேர்த்து சுண்ணாம்பு தடவிய பகுதியை உள்வைத்து மடித்து வாயிலிட்டு மெல்லவும். பகலில் சுண்ணாம்பு அதிகமாயும் காலையில் பாக்கு அதிகமாகவும் மாலையில் வெற்றிலை அதிகமாகவும் கூட்ட வேண்டும். தாம்பூலம் ஜீர்ணத்தைத் துரிதப்படுத்தும். வாய்மணக்கச் செய்யும். சுவையைக் கூட்டும். கலக்கத்தை நீக்கும். சுறுசுறுப்பைத் தரும் பிரும்மசாரியும், விரதத்திலிருக்கின்ற கிருஹஸ்தனும் துறவியும் தாம்பூலம் போடக்கூடாது. அதிகமாகத் தாம்பூலம் பற்களிலும் கண்களிலும் நோய் உண்டாக்கும்.

**மாலைப்பொழுதைக் கழித்தல்**

மாலையில் சூரியன் மறையத் தொடங்கியதும் ஸந்தியாவந்தனம், தொடர்ந்து ஸமிதாதானம் அல்லது

ஔபாஸனம், தேவபூஜை வைச்வதேவம் அதிதிபூஜை செய்யவேண்டும்.

**இரவில்**

இதமும் மிதமுமான நல்ல உணவைச் சாப்பிட்டுப்பின் சிறிது நேரம் கழித்துத் தூங்கலாம். கிழக்கு அல்லது தெற்கில் தலைவைத்துப் படுக்கலாம். வடக்கில் தலை வைக்கக்கூடாது. யாத்திரையில் மேற்கிலும் தலைவைத்துப் படுக்கலாம். தன் வீட்டில் கிழக்கிலும் மாமனார் வீட்டில் தெற்கிலும் தலை வைத்துப் படுக்கலாம். முன்னிரவில் 7½ நாழிகை (3 மணி) சென்ற பின்னரே தூங்கச் செல்ல வேண்டும். சிறுவர்களும் வயதானவர்களும் நோயாளிகளும் முன்னரே தூங்கலாம். தூங்குமுன் அகஸ்தியர், மாதவன், முசுகுந்தர், கபிலமுனிவர், ஆஸ்தீக முனிவர் இவர்களை நினைத்துப் படுக்கவேண்டும். ஆஸ்தீகரின் நினைவு பாம்பு பயத்தைப் போக்கும். நர்மதையை நினைப்பதும் நல்லது. கோயிலிலும், வீட்டிலிலும், சுடுகாட்டின் அருகிலும், மரத்தினடியிலும், நாற்சந்தியிலும், தானிய மூட்டையின்மேலும், குரு, இஷ்டதெய்வம் பெரியோர் இவர்களின் எதிரிலும் அசுத்தனாகவும், கால்களை அலம்பாமலும், பாதுகாப்பில்லாமலும், கருங்கல்லின் மேலும் தூங்கக் கூடாது.

சுகமான விரிப்பின் மேல் இடதுபுறத்தைக் கீழே வைத்துப் படுப்பது ஆரோக்கியம் தரும். மல்லார்ந்து படுப்பது பலம் தரும். நோயாளிக்கு அருகே படுக்கக்கூடாது. ஈரமான ஆடையுடனும் ஆடை

இல்லாமலும் அழுக்கான ஆடை போர்த்தியும் படுக்கக் கூடாது. சிறுவர்களுக்கு இடையே பெண்களுக் கிடையே தூங்கக்கூடாது. பகலில் தூங்கக்கூடாது. சிறுவர்கள், வயதானவர்கள், கர்ப்பிணிப்பெண்கள், நோயாளிகள், உடல் உழைப்பால் களைத்தவர்கள் பகலில் தூங்கலாம். இரவில் கண் விழித்தவர்கள் விழித்தநேரத்தின் பாதியளவு பகலில் தூங்கலாம்.

கிருஹஸ்தனாயின் ஸந்ததியை விரும்பி ருதுகாலம் முடிந்ததும் பர்வகாலம் முதலியவை நீக்கி நல்ல நாட்களில் இரவின் 2–3வது யாமத்தில் மனைவி யிடம் உடல்உறவு கொள்ளலாம். மாதவிடாய் முடிந்ததும் 10 நாட்கள் இதற்கேற்றவை. காமஸுகம் விரும்பி அதன் பின்னரும் சேரலாம். ஸந்ததியை விரும்பினால் உபவீதியாகவும், காம இச்சையானால் நிவீதியாயும் சேரவேண்டும். ஆண் ஆடை குறைத்தவனாகவும் பெண் ஆடை நீக்காதவளாகவும் இருக்க வேண்டும். இருவரும் மனமொத்து விரும்பிச்சேர்தல் நல்லது.

**பொதுவான நியமங்கள்**

– ஸூர்யசந்திரர்களை உதயத்திலும் அஸ்தமன ஸமயத்திலும் க்ரஹணகாலத்திலும் வானத்தில் நடுவில் இருக்கும் போதும் நீரில் பிரதிபிம்பித்திருக்கும் போதும் பார்க்கக் கூடாது.

– மண்முட்டு, பசு, தேவதை, பிராமணன், நாற்சந்தி, காவல்மரம், ஸ்தலவிருக்ஷம் இவற்றை வலமாகச் செல்லவேண்டும். தாண்டக்கூடாது.

– அக்கினியை வாயால் ஊதக்கூடாது. அசுத்தப் பொருளை அதில் போடக்கூடாது. அதில் கால்களைக் காய்ச்சக்கூடாது.

– கிருஹஸ்தன் மூங்கில்தடி, தாமிரத்தாலான கமண்டலு, தங்கக் குண்டலம் இவற்றைத்தரிப்பது நல்லது.

ஆடையில்லாதவர்களைப் பார்க்கக்கூடாது.

காலை மாலை ஸந்தி வேளையில் உணவருந்துவதும் தூங்குவதும் பிரயாணமும் உடல்உறவும் கூடாது.

மலமூத்திரங்கள், கோழை, ரத்தம், விஷம் இவற்றை நீரில் கலக்கக்கூடாது.

தூங்குபவரை எழுப்பக்கூடாது. அவர்கள் தர்மம் தவற நேர்ந்தால் எழுப்பலாம். தனித்துப்பாழ் வீட்டில் தூங்கக்கூடாது.

தனக்கெனப்பூமாலை தொடுக்கக்கூடாது.

கன்று ஊட்டுவதையும் வானவில்லையும் பிறருக்குச் சுட்டிக் காட்டக்கூடாது.

தனித்துப் பெருவழி நடப்பதும், மலையில் வெகுகாலம் வசிப்பதும் கூடாது.

மாதவிடாயில் உள்ள பெண்ணுடன் நேரிடையாகப் பேசக்கூடாது.

வெண்கலத்தில் காலை அலம்புவதும், அஞ்சலியால் நீர் குடிப்பதும், பிறர் உபயோகித்த காலணி, ஆடை, உபவீதம், ஆபரணம், பூ, கமண்டலு இவற்றை உபயோகிப்பதும் கூடாது. காலை வெயிலில்

காய்வதும் சவப்புகையை முகர்வதும், பிளந்த ஆசனத்தில் உட்கார்வதும், மயிர், நகம், ரோமம் இவற்றை அடிக்கடி தானே துண்டிப்பதும், வீண் அரட்டை அடிப்பதும் குறுக்குவழியில் வீட்டிற்குள்ளோ ஊருக்குள்ளோ நுழைவதும் கைகளால் நீந்தி ஆற்றைக் கடப்பதும், இரண்டுகைகளாலும் தலையைச் சொரிவதும் தவிர்க்கத் தக்கவை.

பெரியோரின் நிழலை மிதிப்பதும், நள்ளிரவிலும் சந்திவேளைகளிலும் நாற்சந்தியில் நிற்பதும், திருடனுடனும் பாபியுடனும் துரோகியுடனும் பிறரது மனைவியருடனும் நட்பு கொள்வதும் நல்லதல்ல.

பிறரது படுக்கை, ஆசனம், வீடு, வாகனம் அவர்களது உபயோகத்தில் உள்ள பொருள் இவற்றை அவரனுமதியின்றி உபயோகிக்கக்கூடாது.

பற்களால் நகம் கடிப்பது, கேசங்களைக் கடிப்பது, துணியைக்கடிப்பது, காலால் காலைத்தேய்த்தலம்புவது, துரும்பைக் கிள்ளிப்போடுதல், பிச்சைக்காரனுக்கு அஞ்சி வாசற்கதவை மூடுதல், பந்துக்களுடன் விவாதிப்பது, பிறரை வீணே துன்புறுத்துவது, பொல்லாங்கு பேசுவது, ஆசாரியன் பெற்றோர் பசு இவர்களைத் துன்புறுத்துவது, அங்கக்குறையுள்ளவன், அதிகமாக அங்கவளர்ச்சியுள்ளவன், படிப்பில்லாதவன், அழகில்லாதவன், ஏழை, கீழ்த்தரத்தொழில்புரிபவன், தாழ்ந்த குலத்தோன் இவர்களை இகழ்ந்து பேசுதல் கூடாது.

வாயைக்கையால் மூடாமல் இருமுவதும் தும்முவதும் கொட்டாவி விடுவதும் கூடாது. தம்பதிகளுக்கிடையே,

பெற்றோர் – மகன்களுக்கிடையே, ஆசிரியர் – சீடர்க் கிடையே, நண்பர்க்கிடையே, பேசிக்கொண்டிருப்பவர்க் கிடையே, பசு – கன்றுக்கிடையே, சிவலிங்கம் – நந்திக்கிடையே செல்லக்கூடாது.

மெழுகிக் கோலமிட்ட வீட்டில் லக்ஷ்மிவசிப்பாள்.

ஒழுங்காக ஆடைதரித்துள்ளவர்களிடம் லக்ஷ்மி வசிப்பாள்.

ஆடு, கழுதை, ஒட்டகம், துடைப்பம் இவற்றின் புழுதி, பிறரின் மூச்சுக்காற்று, ஆடைக்காற்று, முறத்தால் அசையும் காற்று இவை உடலில் பட்டால் லக்ஷ்மி மறைவாள்.

ஆடையற்றவனையும் கச்சமில்லாதவனையும் கௌபீனம் மட்டும் தரித்து வெளியில் வருபவனையும் லக்ஷ்மி விரும்பமாட்டாள்.

காலணி, குடை, தண்ணீர்பாத்திரம், துணைவர் இவையின்றி பெருவழிநடக்கக்கூடாது. பகலில் தலையைத் துணியால் மூடியும், இரவில்மூடாமலும் வழிநடக்கக் கூடாது.

தன் வயது, செல்வம், குடும்ப ரகசியம், வருவாய், கொடுக்கல் – வாங்கல், அவமானம் இவற்றைப் பிறரிடம் வெளியிடக்கூடாது. தம்பதிகள் பெற்ற உடல் உறவு, குருவிடம் பெற்ற மந்திரம், தான்சாப்பிடும் மருந்து இவற்றையும் வெளியிடக்கூடாது.

ஆண் விளக்கேற்றுவதும் அணைப்பதும், பெண் பூசணிக்காயைப் பிளப்பதும் கூடாது.

பிறர் தும்பினால் க்ஷேமமாயிரு என்று உடன் சொல்லவேண்டும். தடுக்கி விழுந்தால் விழுந்த இடத்திலுள்ள மண்ணை நெற்றியில் இடவேண்டும். கொட்டாவிவிட்டால் கையால் வாயை மூடிப் பின் வலதுகாதைத் தொடவேண்டும்.

உறவினர்களுக்குள் கசப்பான பொருளை வாங்குவதும் கொடுப்பதும் கூடாது. இரும்பு, விதை, ஜலம், அன்னம், நெருப்பு, மோர், பால், தயிர், அக்கினி, தான்யம், மருந்து இவற்றை இரவுநேரத்தில் பிறருக்குத் தரக்கூடாது. தருபவனின் வீட்டிலிருந்து செல்வம் அகலும். எதையாவது பண்டமாற்றாக ஏற்றுக் கொடுப்பதானால் தோஷமில்லை.

மனைவி கருத்தரித்திருந்தால், 3வது மாதம்முதல் கணவன் க்ஷவரம், சவத்தைச்சுமத்தல், சவத்தைப்பின் தொடர்ந்து சுடுகாடு செல்லுதல், தூரதேசயாத்திரை, ஸமுத்ரஸ்நானம், புதுவீடு கட்டுதல், புதுவீடு பிரவேசம், பழைய வீட்டை இடித்துக் கட்டுதல். இவை களைச் செய்யக்கூடாது.

இரவில் வயலில் உழுவதோ விதை விதைப்பதோ கூடாது.

சகோதரர்களும் பிதா–புத்திரர்களும் ஒரே நாளில் க்ஷவரம், சிராத்தபோஜனம் செய்யக்கூடாது.

ஏகாதசியில் உபவாஸம், துவாதசியில் திருவோணம் சேர்ந்தால் அன்றும் உபவாஸம் இருக்க வேண்டும். சிரவணதுவாதசியில் இரண்டு நாட்கள் உபவாஸமிருக்க இயலாதவர் துவாதசியன்று உபவாஸம் இருக்க

வேண்டும். துவாதசியின் முதல்பாதம் ஹரிவாஸரமாகும். அதிலும் போஜனம் கூடாது. துவாதசி அல்பமா யிருந்தால் உதயத்திற்கு முன்பே தேவபூஜை வரை செய்து உதயத்திற்குப்பின் பாரணை செய்ய வேண்டும்.

– காதில்பூ, கழுத்தில் சந்தனம், சிகையில் துளசி தரிப்பதுகூடாது.

– ராத்திரியில் கடுகு, அஷ்டமியில் தேங்காய், துவாதசியில் புடல், துவிதீயையில் கண்டங்கத்தரி, பிரதமையில் பூஷணி, பஞ்சமியில் வெள்ளரி கூடாது.

தீபத்தின் நிழலிலும் மனிதனின் நிழலிலும் தங்கக்கூடாது.

பெண் மைதீட்டிக் கொள்ளும்போதும் எண்ணெய் குளியலில் உள்ளபோதும் ஆடையில்லாதபோதும் தூங்கும்போதும் பார்க்கத்தக்கவளல்ல.

நீரிலும் எண்ணெய்யிலும் நிழலைப் பார்க்கக் கூடாது.

கன்றின் தும்பைத் தாண்டக்கூடாது.

ஆடையின்றி நீராடக்கூடாது.

எதெது பிறரது உதவிகொண்டு நடை பெறக் கூடியதோ அவற்றைக் குறைத்துக் கொள்ள வேண்டும். தானே செய்யக்கூடியதில் முயன்று செயல்பட வேண்டும். பிறர் வசமுள்ளது எதுவும் துக்கமே. தன்வசமுள்ளது எதுவும் சுகமே.

வேதத்தை நிந்தை செய்வது, தேவநிந்தை, துவேஷம், ஜம்பம், தன்மான மிகுதி, கோபம், வெறி

முதலியற்றை விடவேண்டும். பிறரை அடிப்பதற்கெனக் கழியை ஓங்குவதோ கழியாலடிப்பதோ கூடாது. கட்டுப்படுத்த வேண்டிய சிஷ்யன் புத்திரன் விஷயத்தில் லேசாக இதைப் பயன்படுத்தலாம்.

கைகள், கால்கள், கண்கள், வாக்கு இவை சபலத்தால் செயல்படுவது கூடாது. உபயோகமில்லாத வஸ்துவை எடுப்பது கையின் சபலம். வீணாய் திரிவது காலின் சபலம். பிற பெண்களை உற்றுப்பார்ப்பது கண்களின் சபலம். வீணாகப்பேசுவது வாயின் சபலம், பிறரைத் துன்புறுத்தவோ மனம்நோகச் செய்வதோ தவிர்க்கத்தக்கது. குடும்பத்ினருடன் வீண்விவாதத்தில் இறங்கக்கூடாது.

தனக்கு எது கெடுதல் விளைவிக்க கூடுமோ அதனைப்பிறருக்குத் தான் செய்யக்கூடாது. பலருடன் விரோதம் கூடாது. தன்னைப்புகழ்ந்தும் பிறரை அவமதித்தும் பேசுகின்ற பழக்கம் கூடாது. குரு, வேதம், தெய்வம் பெரியோர்கள் இவர்களை நிந்திக்கக் கூடாது. அவர்களை நிந்திக்குமிடத்தில் நிற்கக் கூடாது. பிறரது ரகசியத்தை அறியமுற்படக்கூடாது.

பாபியைப் பாபி என்று சொல்லக்கூடாது. பாபம் செய்தது மெய்யானால் அதனை நினைத்த இவனும் பாபி. பாபம் செய்தது பொய்யானால் இருமடங்கு குற்றம். தன்னை பரிதாபத்திற்கு உரியவனாக காட்டிக் கொள்ளக் கூடாது. தன்னைத் தானே அவமதிப்பிற் குள்ளாக்குவதும் கூடாது. பற்களை நரநரவெனக் கடிப்பது. மூக்கினால் பிறரறிய உருமுவது, வாயை மூடாமல் கொட்டாவிவிடுவது, அதிக ஓசையுடன்

சிரிப்பது, அதிதூக்கம், அதிவிழிப்பு, அதிகமாய் நிற்பது, அதிகமாய்ப் படுக்கையிலிருப்பது, அதிதேகப் பயிற்சி இவற்றைத்தவிர்த்தல் நல்லது. கெட்டதைக்கூட கெட்டதென நேரிடையாகச் சொல்லக்கூடாது. இவன் எனக்கு எதிரி எனக்குறிப்பிடக்கூடாது. அப்படிச் சொல்வதால் எதிர்க்கவராதவனையும் எதிரியாக்கிக் கொள்ளக்கூடும். தர்மவிஷயமான கருத்துகளைப் பெரியோர்கள் இப்படிச் சொல்வார்கள் என்று கூறவேண்டும். இது தனது கருத்து எனக் கூறக்கூடாது. தன்கருத்து பிசகானதாகவும் இருக்கக்கூடும்.

வீட்டிலுள்ள பெண் பிள்ளை வேலைக்காரர் இவர்கள் கடும்சொல் கூறினால் பொறுத்துக்கொள்ள வேண்டும். மனவேதனை படக்கூடாது.

பிறரை நிந்திப்பது அழிவின் அடையாளம். கபடச்செயல் பாபத்தின் அடையாளம். நேர்மை பரம்பொருளின் அடையாளம். கல்வியால் ஒளிமிக்க வாழ்வு. பொருளை வழங்குவதால் சுகம். உழைப்பால் செல்வநிறைவு. அவமதிப்படைவதால் பாபம் தொலையும். பாராட்டப் பெறுவதால் புண்ணியம் தொலையும். பாராட்டும் மதிப்பும் பெறுகின்ற பிராமணன் கறவைப்பசுபோல் கறக்கப்பட்டே களைத்து விடுவான்.

**சுத்தமானதும் சுத்தமாக்குவதும். எப்போதும் சுத்தமானவை .**

நெருப்பு, நீர்நிரம்பிய கமண்டலு, பசுவின் பின்புறம், யானையின் முன்புறம், ஆடு-குதிரைவாய்,

குழந்தை, பிரம்மசாரி எடுத்த பிக்ஷை அன்னம், ஸூர்யகிரணம், காற்று, தேனீ, ஜலத்திலுள்ள உயிரினங்கள், உபனயத்திற்குமுன் உள்ள பாலன், விவாகமாகாத 9 வயதுக்குட்பட்ட கன்னி, வாஹனம், ஒடம், வழி, புல்தரை இவை எப்போதும் சுத்தமானவை.

**எப்போதும் அசுத்தமானவை**

மலம், மூத்திரம், ரக்தம் கொழுப்பு முதலியவை.

**சுத்தி பெற உதவுபவை**

காலம், நெருப்பு, ஸம்ஸ்காரம், மண், காற்று, மண், ஞானம், தவம், பச்சாதாபம், உபவாஸம், இவை சுத்திபெற விரும்புபவனுக்கு உதவுபவை.

சிலவற்றில் சூழ்நிலையிலுள்ளவை ஒட்டிக் கொண்டு அழுக்காகப்பற்றும். இவை அப்பழுக்கு-லேபம். உயிரினங்களின் கழிவுப்பொருள் உடலின் உள்ளிருந்து வெளிப்படும்போது அழுக்காகும். இவை மலம். இவ்விரு அழுக்குகளையும் செயற்கையாகப் போக்கமுடியும். எண்ணத்தில் அல்லது அறிவில் அழுக்கிருந்தால் உபவாஸம், பச்சாத்தாபம், தவம், ஞானம் இவை மட்டுமே சுத்தப்படுத்தும்.

தங்கம், சங்கு, முத்து, ரத்தினம், வெள்ளி இவைகளில் உள்அழுக்கு இல்லை. அதனால் மேல் அழுக்கை ஜலம் சாம்பல் மண் இவற்றால் சுத்தி செய்யலாம்.

தாமிரம், இரும்பு, வெண்கலம், பித்தளை, ஈயம் முதலியவற்றை உப்பு புளி ஜலம் இவற்றால் சுத்தப்

படுத்தலாம். அதிக அழுக்கைப்போக்க நெருப்பும் உதவும்.

பட்டு கம்பளம் நார்மடி முதலியவை குறைவான அசுத்தியானால் ஜலம் தெளிப்பதால் சுத்தி. அசுத்தி அதிகமானால் உவர்மண், ஜலம் இவற்றில் சுத்தி.

பஞ்சுடன் கூடிய மெத்தை, தலைகாணி, தடிப்பான விரிப்பு முதலியவை வெயிலில் உலர்த்துவதால் சுத்தி. மூங்கிலால் செய்யப்பட்ட பாய், கூடை, விசிறி, முறம், சல்லடை முதலியவை அழுக்குக் குறைவில் ஜலம் தெளித்தலாலும் அதிக அழுக்கில் அலம்புவதாலும் சுத்தி. மண்பாத்திரத்தை நெருப்பிலிடுவதால் சுத்தி. தானியக்குவியலில் அசுத்தி கண்டால் அசுத்தியுள்ள பகுதியை அகற்றி மற்றதை ஜலம் தெளித்து எடுத்துக்கொள்ளலாம். அதிக அசுத்தியானால் நீரால் அலம்பலாம். நெல் முதலியதானால் குத்தி உமிநீக்குவதால் சுத்தி.

பிரஸவம் நேர்ந்தால் அந்த இடத்தை அலம்பிப் பசுஞ்சாணத்தால் மெழுகிப் பசுவின் குளம்படி படச் செய்துப் புண்யாஹ வாசனம் செய்தால் சுத்தி. வைக்கோல் பத்தையைக்கொளுத்தி அறைமுழுவதும் அதனை இழுப்பதால் சுத்தி. மரணம் ஏற்பட்டால், மண்பாண்டம், பக்குவமான உணவுபொருள். இவற்றை எறிந்துவிட்டு அலம்பிச் சாணத்தால் மெழுகிப் புண்யாஹவாசனம் செய்தால் சுத்தி.

வாவி, கிணறு, குளம் முதலியவற்றில் நாய் பூனை மனிதன் இறந்தால் சவத்தை அகற்றிச் சிறிதாயின் 100 குடமாவது இறைத்துவிட வேண்டும். செத்துஅழுகி

அதிக நாளாகியிருந்தால் முழுவதும் தண்ணீரை இறைக்கவேண்டும். தடாகத்தில் நீரை வெளியேற்று வதுடன் சூரியவெப்பம் படும்படி செய்தபின் உபயோகிக்கலாம்.

கடையில் வாங்குகின்ற பொருளனைத்தும் சுத்தம் எறும்பு, எலி, வண்டு, ஈ தொட்டது பக்குவப்படாத பொருளாயின் அசுத்தம். பக்குவப்பட்டதாயின் நீக்கத்தக்கவை.

கல்லால் செய்த விக்ரகமாயின் புற்று மண்ணால் அலம்பி பஞ்சகவ்யம் தேய்த்தால் சுத்தம்.

ரோகி, பாலன், பெண், சமையற்கட்டு இவற்றில் சுத்திபற்றி அதிகம் விசாரிக்கக்கூடாது.

# மூன்றாம் பாகம்

## ஆசௌசம்

அசுசியாயிருக்கின்ற நிலை ஆசௌசம் – தீட்டு. இங்கு குறிப்பிடப் பெறுவது தனிப்பட்ட அசுத்தி. ஒருமனிதஜீவன் பிறந்தாலோ இறந்தாலோ அதனுடன் தொடர்பு கொண்டவர்களுக்கு அந்த பிறப்பாலும் இறப்பாலும் ஏற்படுகின்ற அசுத்தி இது. இந்த அசுத்தி பலவகைப்படும். ஆனால் எல்லா ஆசௌசமும் ஒருகாலவரையால் அகலும். ஸ்நானம் செய்வதால் அகலும். பிறப்பால் ஏற்படுவது ஜனனாசௌசம் (ஸூதகம்), மரணத்தால் ஏற்படுவது மரணாசௌசம்.

இந்த ஆசௌசம், பிரும்மசாரிக்கு இல்லை. முக்காலஸந்தியாவந்தனம் செய்யும் போது இல்லை. மனத்தளவில் மந்திரங்களைச் சொல்லலாம். மந்திரமின்றி பிராணாயாமம். ஆசௌசத்தின்போது 10 தடவை காயத்ரி ஜபித்தால் போதும். அர்க்கியம் கொடுக்கும்போது மட்டும் காயத்திரியை வாயால் உதட்டளவில் சொல்லலாம்.

ஆசௌசமுள்ளவர் ஒருவருக்கொருவர் தொட்டுக் கொள்வதில்லை. ஆசௌசமுள்ளவர் தானம் கொடுத்தலும் வாங்குதலும் கூடாது. ஹோமம், புதிதாக வேதப்பகுதியின் அத்தியயனம் தேவபூஜை இவை கூடாது. சிராத்தம் தர்ப்பணம் செய்யக்கூடாது. இறந்தவர்தொடர்பான பிண்டதானம் முதலியவை மட்டும் இடம் பெறலாம். பிள்ளை பிறந்த தினத்தில் பொன் தான்யம் பசு வஸ்திரம் முதலியவை தானம்

செய்யலாம். யாகத்தில் ருக்விக்குகளை வரணம் செய்தபின் ஆசௌசம் நேர்ந்தால் யாகம் செய்பவருக்கும் ருத்விக்குகளுக்கும் யாகம் முடியும்வரை தீட்டில்லை. விவாஹத்தில் நாந்தி முடிந்திருந்தால், விவாஹம் செய்து கொள்கின்ற தம்பதிக்கும், சிராத்தத்தில் பிராமணரை வரித்துச்சமையல் தொடங்கியிருந்தால் சிராத்தம் செய்பவருக்கும் வரிக்கப்பட்ட பிராமணருக்கும் தீட்டில்லை. நியமனத்துடன் வேத பாராயணம் செய்வதற்கு ஸங்கல்பம் செய்து தொடங்கிப் பிரணவமும் வியாஹ்ருதிகளும் சொல்லி வேதம் சொல்லத் தொடங்கியபின் வேதபாராயணம் செய்பவருக்கும் செய்விப்பவருக்கும் (நடுவில் நிறுத்தாமல் பேசாமலிருந்தால்) தீட்டில்லை.

விவாஹம் நடக்கும்போது தம்பதியரின் பெற்றோருக்கு மரணம் நேர்ந்தால் உடன் சேஷஹோமம் வரை தொடர்ந்து செய்யும் வரை தீட்டில்லை. பிறகு அவர்களின் பெற்றோர்களின் உத்தரகிரியையில் ஈடுபடலாம். தம்பதியில் ஒருவருக்கே விவாஹம் நடந்தபின் நடுவில் மரணம் நேர்ந்தால் சேஷஹோமம் வரை உடன்செய்து பின் தகனக்கிரியை. யாகத்தில் தீக்ஷிதனுக்குப் பெற்றோரின் மரணம் நேர்ந்தால் அவர்களது ஸம்ஸ்காரம் செய்த பிறகு யாகம் தொடரும்.

ஆசௌசமுள்ளவன் வீட்டிற்கும் அவனது பொருளுக்கும் தீட்டு உண்டு. ஆனால் விவாஹம், உற்சவம், யாகம் முதலியவைகளில் அன்னதானம் செய்பவருக்கு ஆசௌசம் நேர்ந்தால் அங்கு

சாப்பிடுபவருக்குத் தீட்டில்லை. ஆசௌசமில்லாதவர் உணவு வழங்கலாம். ஆசௌசமில்லாதவர் வீட்டிலிருந்து நீர் கொணர்ந்து ஜலபானம் உத்தராபோசனம் ஆசமனம் செய்யவேண்டும். ஆசௌசத்திற்கு முன்பே பிராமண போஜனத்திற்கெனத் தனித்துப் பொருள்கள் பிரித்து வைக்கப்பட்டிருந்தால் அதற்கும் தோஷமில்லை.

ஆசௌசமுள்ளவர் எதனைத் தொட்டாலும் அதற்கும் தீட்டுண்டு. ஆசௌசம் உள்ள நேரத்தில் அந்த வீட்டில் பக்குவமான உணவிற்குத் தீட்டுண்டு. விரிப்பு முதலியவைகளைத் தவிர்த்துத் தரையில் படுத்து, உணவைக் கட்டுப்படுத்தி, எதனையும் தீண்டாமல், தீட்டுநாட்களைக் கழித்து, தீட்டுக் கழிகின்ற நாட்களில் ஸங்கவகாலத்தில் (உதித்து 6 நாழிகை கழித்து) ஸ்நானம் செய்து வீட்டையும், புண்யாஹவாசனத்தால் சுத்தி செய்து புதிய பூணூலணிந்து சுத்தமாகலாம்.

## ஸ்திரீக்கு ஆசௌசம்

தம்பதியில் கணவனுக்கு உண்டான ஆசௌசம் மனைவிக்கும் உண்டு. இது தவிர தன் தந்தை தாய்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சம்பந்தப்பட்ட மூன்று நாள் – ஒன்றரை நாள், ஒரு நாள் ஆசௌசங்கள் சில உண்டு. இந்த ஆசௌசம் அவர்களது கணவருக்கு இல்லை.

ஆசௌசகாலத்தில் சரீரசுத்தி ஸ்னானம் ஆசமனம், உணவு முதலியதில் பின்பற்றிய நியமங்கள், ஆசாரங்கள் பின்பற்றத்தக்கவையே.

தயிர், பால், நெய், காய்கறி, உப்பு, பூ, எள்ளு, மருந்து, விறகு, பழம், தேன், கிணற்றுநீர் முதலியவற்றை ஆசௌமுள்ளவனிடம் தெரிவித்துவிட்டு எடுத்துக் கொள்ளலாம். இவற்றிற்குத் தீட்டில்லை.

தேசத்திற்கோ கிராமத்திற்கோ குடும்பத்துக்கோ ஆபத்து ஏற்பட்ட சமயத்தில் கொடுக்கல் வாங்கலில் ஆசௌசதோஷம் கிடையாது. உடன் ஸ்னானம் செய்து சுத்தனாகிப் பொதுப்பணியில் ஈடுபடலாம்.

பிரும்மசாரி துறவி, வானப்ரஸ்தன் இவர்களுக்கு ஜனன—மரண—ஆசௌசம் கிடையாது. ஆனால் ஆசௌசமுள்ள வீட்டில் வசிப்பதும் உணவேற்பதும் கூடாது.

கிரஹணம் தொடங்கியதும் இந்த ஆசௌசம் இல்லை. கிரஹணம் விட்டபிறகு தீட்டுதொடரும்.

மலைச்சரிவில் விழுந்திறந்தவன், நெருப்பில் எரிந்து இறந்தவன், கண்காணாத தேசத்தில் இறந்தவன், சிறுகுழந்தை, ஸன்யாஸி இவர்கள் மரணத்தில் ஞாதிகளுக்கு ஸ்நானத்தால் சுத்தி. மாப்பிள்ளையின் மரணத்தில் மாமனார் மாமியார் இவர்களுக்கும், சகோதரி புருஷன் மரணத்தில் மைத்துனனுக்கும், ருத்விக்கின் மரணத்தில் வேள்வி புரிபவருக்கும், வேள்விபுரிபவர் மரணத்தில் ருத்விக்கிற்கும், சிஷ்யன் மரணத்தில் ஆசிரியருக்கும், கூடப்படிக்கின்ற மாணவன் மரணத்தில் ஆசிரியரின் பிள்ளைக்கும், ஸ்னானத்தால் சுத்தி.

சில்பி, தச்சர், கருமான் முதலானோர், மருத்துவர், வேலைக்காரர்கள், நாவிதன், அரசன், வேதபாராயணம் செய்பவன், இவர்களுக்கு ஞாதியின் மரணத்தில் ஸ்நானத்தால் சுத்தி. போரில் ஆயுதத்தால் அடிபட்டு உடன்மரித்தவனது மரணத்தில் ஞாதிக்கு உடன் ஸ்நானத்தால் சுத்தி.

அரசர், இடியினால் அல்லது பசு பிராமணர் இவர்களைக் காப்பாற்றும் முயற்சியில் இறந்தவன், ராஜபுரோகிதன். இவர் மரணத்திலும் ஸ்நானத்தால் சுத்தி. தானே விரும்பி நெருப்பில் விழுந்தோ தூக்கு மாட்டிக்கொண்டோ நீரில்மூழ்கியோ இறந்த ஞாதிக்கு ஸ்நானத்தால் சுத்தி. இவர்களுக்கு யார் உத்தரகிரியை செய்கிறார்களோ அவர்களுக்கு மட்டும் தீட்டு உண்டு. விரும்பி உயிர்விடாமல் கவனமின்மையால் மரணம் நேர்ந்திருந்தால் மந்திரமில்லாமல் எரித்து மறுநாள் தொடங்கி மந்திரபூர்வமாகக் கிரியை செய்யலாம்.

நபும்ஸகன், பாஷண்டன், பதிதன், ஸன்யாஸம் செய்துகொண்டு பின் ஸன்யாஸ தர்மத்தை விட்டவன், விபசாரிப்பெண், உபனயனமாகாமலே வாழ்ந்தவன், திருடன், கருவைக் கலைத்தவன், கணவனைக் கொன்றவள், தற்கொலை செய்து கொண்டவர், இவர்கள் மந்திரமில்லாமல் எரிக்கப்பட வேண்டிய வர்கள். மந்திரபூர்வமாக மற்ற கிரியைகள் இவர்கள் இறந்து ஆறு மாதங்கள் சென்றபின் நாராயண பலி முதலியன தொடங்கிச் செய்யவேண்டும். இவர்கள் விஷயத்திலும் ஞாதிகளுக்கு ஸ்நானத்துடன் சுத்தி.

## ஜனனாசௌசம் – பிரசவத்தீட்டு

கர்ப்பம் கலைந்தாலும் கலைக்கப்பட்டாலும் கருத்தரித்த மாதங்கள் எவ்வளவோ அத்தனைநாட்கள் கருத்தரித்தவளுக்குத் தீட்டுண்டு. ஏழாவது மாதத்திற்குப் பிறகு அது பிரஸவமே. அதன்பின் தாய்க்குப் பத்து நாட்கள் தீட்டு. தானே ஏற்பட்ட கருக்கலைப்பு, விரும்பிச்செய்துகொண்ட கருக்கலைப்பு, இவற்றில் தந்தைக்கும் ஞாதிகளுக்கும் ஸ்னானம் மட்டுமே. சிசு பிறந்திருந்தால் பெற்றோருக்கு 10 நாள் தீட்டு. எட்டாவது மாதத்திலிருந்து சகோதரனுக்கு 10 நாள் தீட்டு. ஒன்பதாவது மாதத்திலிருந்து ஞாதிக்கு 10 நாள் தீட்டு.

ஆண்குழந்தை பிறந்தால் ஞாதிகள் எல்லோருக்கும் 10 நாள். 11ம் நாள் ஸ்நானம் செய்து தீட்டு போகும். பிதாமட்டும் 10ம் நாள் சுக்ரவாரமாயிருந்தாலும் வபனம் செய்துகொண்டு 11வது நாள் ஸ்நானமும் புண்யா ஹவாசனமும் செய்து சுத்தனாகலாம். பெண் குழந்தை பிறந்தால் தாய், தந்தை, தந்தையின் பெற்றோர், பிதாவிற்கும் பிதாமகர்க்கும் கூடப்பிறந்தவர், அவர்களுடைய புத்திரர்கள் இவர்களுக்கு மட்டும் தீட்டு உண்டு. மற்ற ஞாதிகளுக்கில்லை. ஆண் களுக்குத் தீட்டுண்டானால் அவர்களது மனைவிக்கும் தீட்டுண்டு.

## கர்ப்ப தீக்ஷையிலுள்ளவர்

மனைவி கருத்தரித்தது உறுதியாகிவிட்டால் அதிலிருந்து பிரஸவம் வரை க்ஷவரம் செய்து கொள்ளாமலிருப்பது கர்ப்ப தீக்ஷை. இருவரை மணந்து

இருவரும் கருத்தரித்திருந்தால் முதலில் ஒருவர் பிரஸவித்தால் 10ம் நாள் வபனம் செய்து கொண்டு மற்றொருவள் பிரசவிக்கும் வரை தீக்ஷை இருக்க வேண்டும். மாதா பிதா மரணத்தையொட்டி தீக்ஷையில் இருக்கும்போது மனைவி பிரசவித்தால் 10ம் நாள் வபனம் செய்து மறுபடி கேசம் வளர்க்க வேண்டும். ஸபிண்டீகரணத்திற்கு முன் பிரசவித்தால் 10ம் நாள் வபனமில்லை.

## ஜனன ஆசௌசம் இருவகை

(1) தீண்டக்கூடாத நிலை, (2) தீண்டலாம். ஆனால், நற்கர்மா செய்யும் அதிகாரமில்லாத நிலை என்று பிறப்புத்தீட்டு இரண்டுவகை. மாதாவிற்கு இரண்டு விதமான ஆசௌசம். அவள் பிரசவித்து பத்து நாட்கள் வரை ஜனனாசௌசம். அதன்பின்னும் ஸூதிகாசௌசம் தொடரும். ஆண் குழந்தையானால் 30 நாட்களும், ஸ்திரீயானால் 40 நாட்களும் பிரஸவித்ததிலிருந்து தொடரும். இதன்பின்னரே பாண்டசுத்திசெய்து கொண்டு தர்மகாரியங்களில் ஈடுபடத் தகுதி பெறுகிறாள். தகப்பனுக்கும் தீண்டத்தகாத நிலை உண்டு.

தன் வீட்டில் பெண் பிரசவித்தால் மாதா, பிதாக்களுக்கும் (மாதாமஹர் மாதாமஹி) சகோதர ருக்கும் (மாதுலர்) 3நாள் தீட்டு. பெண் தன் தந்தையின் சகோதரர் அல்லது மாமா வீட்டில் பிரசவித்தால் அவர்களுக்கு ஒருநாள் தீட்டு. பிறர் வீட்டில் பிரசவித்தால் அவருக்கோ வீட்டிற்கோ தீட்டில்லை. வீட்டுக்காரருக்குத் தீட்டானால் வீட்டிற்கும்

தீட்டுண்டு. (பிறர் வீட்டில் மரணம் நேர்ந்தால் அந்த வீட்டிற்குத் தீட்டுண்டு).

**ஞாதி ஸ்பிண்டர்**

தன்னிலிருந்து முன் இருந்த ஏழு தலைமுறையில் இருந்தவர் கூடஸ்தர். அதாவது (1) தான், (2) தனக்குப் பிதா, (3) அவருக்குப் பிதா (பிதாமஹர்) (4) அவருக்குப்பிதா (பிரபிதாமகர்) (5) அவருக்குப் பிதா (பிரபிதாமகரின் பிதா) (6) அவருக்குப் பிதா (பிரபிதாமகரின் பிதாமகர்) (7) அவருக்குப் பிதா (பிரபிதாமகரின் பிரபிதாமகர்). இந்த பிரபிதாமஹப் ரபிதாமஹரே கூடஸ்தர். மூல புருஷர். இவரது ஆண் சந்ததியினரும் அவர்களுக்குப் பிறந்த ஆண் ஸந்ததியினரும் தன்வரை 7வது தலைமுறை யிலுள்ளவர். அனைவரும் ஸ்பிண்டர்கள். இவர் களையே தசராத்திர ஞாதிகள் என்பர். தற்போது உள்ளவர் தனது 5–6–7 தலைமுறையினருடன் தொடர்பு கொள்ள இயலும். தனக்கு அடுத்தத் தலை முறையினர் தனது கூடஸ்தரை விட்டு அடுத்தவரைத் அவரது கூடஸ்தராகக் கொள்வர். இவர்களில் உயிரோடு இருப்பவர்களில் ஒருவர் இறந்தால் மற்றவர் பத்துநாட்கள் தீட்டுகாப்பர். பிறந்தாலும் அப்படியே. தனக்குக் கீழ் ஏழு ஸந்ததியினர் ஸமானோதர்கள். தனது கூடஸ்தருக்கு முன்னிருந்தவர்களின் ஸந்ததி யினரும் ஸமானோதகர். இவர்கள் மூன்று நாட்கள் தீட்டு காப்பர். (திரிராத்ர ஞாதிகள்) இதற்குப்பின் – முன்னுள்ளவர்கள் ஒரே கோத்திரத்தைச் சார்ந்தவர்

(ஸகோத்திரர்) என்ற முறையில் உறவினரே தவிர தீட்டுக்காப்பவர் அல்ல.

பெண் விஷயத்தில் 3 தலைமுறைவரை தந்தை பிதாமகர் பிரபிதாமகர் என்றவரை ஸபிண்டர்கள். இதனை ஒட்டித்தான் பெண் பிறந்தால் பிதா பிதாமகர் பிரபிதாமகர் வரை தான் தீட்டு என்பர்.

ஸமாநோதகர்கள் – ஜனன மரணத்தில் 3 நாட்கள் தீட்டுள்ளவர். இறந்தவர் உபனயனமாகாதவராக (பெண்ணாயின் விவாகமாகாதவராக) இருந்தால் ஸ்னானம் மாத்திரமே.

யார் ஸபிண்டர்? யார் ஸமாநோதகர்? என்று தீர்மானிக்க ஒவ்வொரு கிருஹஸ்தனும் தனக்கு முன்னுள்ள ஏழு தலைமுறையினரின் பெயர் – அவர்களின் ஸந்ததிகள் இவர்களைப்பற்றி அறிவது அவசியம்.

**சிசு மரணத்தில்**

10 நாட்களுக்குட்பட்ட சிசு மரித்தால் தசராத்ர ஞாதிக்கு ஸ்நானம் செய்தால் மரணா சௌசம் நீங்கும். ஜனனா சௌசம் தொடரும். மாதாபிதாக்களுக்கு இரு ஆசௌசங்களும் உண்டு. சிசு மரித்துப் பிறந்தாலும் பிறந்தவுடன் மரித்தாலும் ஞாதிகளுக்கும் ஜனனாசௌசம் உண்டு. 10வது நாள் சிசு மரித்தால் பெற்றோருக்கு மேலும் இரண்டு நாட்கள் ஆசௌசமுண்டு. அதுவே விடியற்காலத்திலோ அருணோதயத்திலோ இருந்தால் மூன்று நாட்கள் உண்டு. 10 நாட்களுக்கு மேற்பட்டு 6 மாதம் முடியும்வரை சிசு

மரணத்தில் ஞாதிக்கு ஸ்நானம் மட்டும். 7வது மாதம் முதல் 24வது மாதமாவதற்குமுன் ஏற்பட்டால் ஒரு நாள் ஆசௌசம். 25வது மாதம் முதல் 6 வயது முடியும் வரை ஏற்பட்டால் 3 நாட்கள் பிறகு 10 நாட்கள்.

பெற்றோருக்கு எல்லா நிலைகளிலும் 10 நாட்கள். குழிவெட்டிப்புதைத்தலோ(கனனம்) தகனமோ மறுநாள் நேர்ந்தால் அன்று முதல் 10 நாள் எனச்சிலர். இரண்டு வயதுக்குட்பட்டது புதைக்கப்படவேண்டும். அதற்குப்பின் தகனமே.

தகனம் செய்தால், 8–9–10வது நாட்களில் உதகதானமும் பிண்டதானமும் உண்டு. 5வயது முதல் அஸ்திஸஞ்சயனம் மந்திரமில்லாமல் 6வயது முதல் உதகதானம் பிண்டதானம், நவசிராத்தம், ஷோடச சிராத்தம் மந்திரமில்லாமல். 9வயது முதல் பாஷாண ஸ்தாபனமும் சாந்திஹோமமும் உண்டு. 4வயது முதல் நாராயண பலியும், 12 வயதிற்குமேற்பட்ட பிரும்மசாரிக்கு ஸபிண்டீகரணமும், 3வயது முதல் நக்னாச்சாதன சிராத்தமும் உண்டு. நாராயண பலி 12வது நாளில் செய்யப்படவேண்டும்.

7 வயதுக்குட்பட்ட பாலன் மரணமடைந்து பெற்றோரில்லாமல் ஞாதியே தகனம் செய்திருந்தால் மூன்றாம் நாளே பிண்டமும் உதகதானமும் செய்து பூர்த்தி செய்கிறான். மேற்கொண்டு ஆசௌசமில்லை.

ஸபிண்டனல்லர்தவன் எரித்திருந்தால் ஸ்நானம் செய்ததும் சுத்தி.

பெண்சிசு மரித்தால் 2 வயது வரை ஞாதிகளுக்கு ஸ்னானத்தால் சுத்தி. 3–6வயதில் மரித்தால் ஒருநாள், 7 வயது முதல் விவாகமாகும் வரை 3நாள் ஆசௌசம், விவாஹமாகாத பெண் ருதுமதியாகி இருந்தால் 10 நாட்கள் ஆசௌசம். பெற்றோர் உடன் பிறந்தவருக்கு 10 நாட்கள் பெண்குழந்தை விஷயத்தில் புதைப்பது எரிப்பது, ஸம்ஸ்காரங்கள் ஆண் குழந்தைக்குச் சொல்லியது போலவே.

**ஜனனாசௌசம் – 10 நாட்கள்**

பிறந்தது ஆணானால் தசராத்ரஞாதிகள் அனைவருக்கும் உண்டு.

**ஜனனாசௌசம் – 3 நாட்கள்**

மாதாமகர், மாதுலன் இவர்கள் வீட்டில் பிரசவித்தால் மட்டும் (பிரசவச்செலவுகளை ஏற்றுக் கொள்வதாயின் உண்டு எனச்சிலர்.)

**ஜனனாசௌசம் – 1 நாள்**

பிரசவித்த பெண்ணுடைய தந்தை – தாயுடன் கூடப்பிறந்தவர்கள் (இவர்கள் வீட்டில் பிரஸவமானால் மட்டும்)

**மரணாசௌசம் – 10 நாட்கள்**

ஆண் ஆனால், உபனயனமானவனாயிருந்தால் எல்லா தசராத்ர ஞாதிகளுக்கும். பெண் ஆனால் விவாகமாகாதவளாயிருந்து ருதுமதியாயிருந்தால் மட்டும் விவாகமாகும் வரை. ஆணாயின் 17 வயதுக்கு மேல் உபனயனமாகாவிட்டாலும் உண்டு. சகோதரனுக்கு

ம்ட்டும் பிறந்த 10 நாட்களுக்கு மேல் ஆணானாலும் பெண்ணானாலும் உண்டு.

**மரணாசௌசம் 3 நாட்கள்**

தந்தையின் சகோதரி, தாயின் சகோதரி, தாயின் தாய், தாயின் தந்தை, தாயின் சகோதரன் - அவரது மனைவி, பெற்ற தந்தை (ஸ்வீகாரமானால்), பெற்ற தாய் (ஸ்வீகாரமானால்), தத்துக்கொடுத்த பிள்ளை, மாமனார், மாமியார், உபனயனமான மருமகன், உபனயனமான பெண் வயிற்றுப் பேரன், உபனயனமான ஸமாநோதகன், விவாஹமான பெண், விவாஹமான சகோதரி

25வது மாதத்திற்குள் சௌளம் செய்து கொண்ட ஞாதி (சிறுவன்)

3 - 7 வயதிலுள்ள ஞாதிபாலன்

7 வயது முதல் விவாஹம் வரை 3 தலைமுறை ஞாதிப்பெண்

உபனயனமான ஸமாநோதக பாலன்

7வயதுக்கு மேற்பட்ட ஸமாநோதக பாலன்.

**மரணாசௌசம் 1½ நாட்கள். பட்சிணி ஆசௌசம்**

அத்தையின் பிள்ளை - பெண்

அம்மானின் பிள்ளை - பெண்

தாயின் சகோதரியின் பிள்ளை - பெண்

சகோதரியின் பெண்

சகோதரனின் பெண்

தந்தையின் சகோதரரின் பெண்

புத்திரனின் பெண்

பெண்ணின் பெண்

3–7 வயதுள்ள மருமான் உபனயனமாகாதவன்

**மரணாசௌசம் – 1 நாள்**

மாற்றாந்தாயின் சகோதரன்

மாற்றாந்தாயின் சகோதரி

மாற்றாந்தாயின் பெண்

இம்மூவரின் பெண், பிள்ளை

தந்தையின் மாற்றாந்தாயின் பெண், அவளது பெண், பிள்ளை

தந்தையின் மாற்றாந்தாயின் பிள்ளையின் பெண்

மாற்றாந்தாயின் பிள்ளையின் பெண். அவளின் பெண்

மாற்றாந்தாயின் தாய், தந்தை

ஸ்வீகாரம் சென்ற தன்னைப் பெற்ற தந்தைக்குப்பிறந்த தனது சகோதரன். அவரது ஸபிண்டர்கள், 3–6 வயதுள்ள விவாஹமாகாத மூன்று தலைமுறைக்கு உட்பட்ட ஞாதியின் பெண். பத்னி இறந்து அவளுக்கு ஸந்ததியும் இல்லாவிடில் மாமனார் மாமியார்.

7 – 25 மாதத்திற்குட்பட்ட சௌளமாகாத ஞாதிபாலன்

**ஸ்தீரிகளுக்கு மட்டும் உள்ள ஆசௌசங்கள்**
**3 நாட்கள்**

உபனயனமான சகோதரன், மருமான், தங்கை பிள்ளை, தனது ஸபத்னீமாதா.

**1½ நாட்கள்**

தந்தையின் சகோதரர், தாயின் சகோதரி, தாயின் சகோதரன், தந்தையின் சகோதரி, இந்நால்வரின் பெண் பிள்ளை, பிதாமகன், பிதாமகி, மாதாமகன், மாதாமகி, சகோதரி, சகோதரியின் பெண், சகோதரனின் பெண்.

**ஒருநாள் ஆசௌசம்**

மாற்றாந்தாயின் பெண், பிள்ளை, ஸகோதரன், ஸகோதரி, இந்நால்வரின் பெண் – பிள்ளை, தந்தையின் மாற்றாந்தாயின் பிள்ளை, மாற்றாந்தாயின் அத்தை, இவ்விருவரின் பிள்ளை பெண், மாற்றாந்தாயின் தந்தை–தாய்.

**சில குறிப்புகள்**

பிரும்மசாரிக்கு ஞாதிமரணத்தில் அல்லது ஜனனத்தில் ஆசௌசமில்லை. மாதா பிதா இறந்தால் உத்தரக்ரியை செய்யும்போது செய்யும் நேரத்தில் மட்டும் ஆசௌசம். ஸ்நானத்தால் சுத்தி. ஆனால் ஆசௌசிகளின் வீட்டில் சாப்பிடக்கூடாது.

ஸ்வீகாரம் சென்றவனுக்கு ஜனன பிதாவின் ஞாதிகளுடன் தொடர்பில்லை. ஸ்வீகாரமெடுத்துக் கொண்டவரின் ஞாதிகளே இவனுக்கு ஞாதிகள். தன்னைப்பெற்ற தந்தைக்கு ஸந்ததி இல்லாவிடில் 10

நாட்கள் ஆசௌசத்துடன் கிரியைகள் செய்து முடித்து வருஷந்தோறும் சிராத்தம் செய்யக்கடமைப் பட்டிருக்கிறான். ஜனகபிதாவின் பிள்ளையான தன் சகோதரன் விஷயத்திலும் அப்படியே. தத்த (தத்து எடுத்துக்கொள்ளப்பட்டவன்)னுடைய புத்திரஜனனத்தில் ஜனகபிதாவின் ஞாதிக்குத் தீட்டில்லை. தத்தன் மரணமடைந்தால் அவர்களுக்கு ஸ்னானத்தால் சுத்தி. ஞாதிகளுக்குள் ஸ்வீகாரமானால் தீட்டு முதலியவை உண்டு.

ஆசௌசமில்லாதவன் ஆசௌசமுள்ளவரின் வீட்டில் உணவேற்றால் தீட்டு உண்டு. கணவனுக்குத் தீட்டிருந்தால் மனைவிக்கும் தீட்டு உண்டு. மனைவிக்கு மட்டுமுள்ள தீட்டானால் கணவனுக்கு இல்லை.

3 நாட்கள் ஆசௌசமுள்ள தௌஹித்ரன் (பெண்ணின் பிள்ளை) சகோதரியின் பிள்ளை அல்லது ஸமானோதகன் கர்மா பண்ண நேர்ந்தால் 10 நாட்கள் தீட்டுண்டு.

பட்சிணீ ஆசௌசம் என்பது இரண்டு ராத்திரியுடன் கூடிய பகல் அல்லது இரண்டு பகலுடன் கூடிய இரவு ஆகும்.

10 நாள் ஆசௌசத்தின் மத்தியில் மற்றொரு பத்துநாள் தீட்டு சேர்ந்தால் முந்திய தீட்டுடன் பிந்தியதும் போய்விடும். பிந்திய தீட்டு முந்திய தீட்டின் பத்தாவது நாளில் ஆனால் அதிகமாய் 2 நாட்களும், பத்தாவது நாளின் பின்னிரவின் கடைசியாமத்தில் ஆனால் 3 நாட்களும் ஆசௌசம் உண்டு.

இறப்புத்தீட்டுடன் பிறப்புத்தீட்டு சேர்ந்தால் இறப்புத்தீட்டுடன் பிறப்புதீட்டு தீரும். பிறப்பு தீட்டு முன்னதாக ஏற்பட்டுப்பின் இறப்புதீட்டு சேர்ந்தால் இறப்பு தீட்டு முடியும்வரை தீட்டு உண்டு. குறைந்த நாள் தீட்டு முன்நேர்ந்து பின் அதிகநாள் தீட்டு வந்தால் அதிக நாள் தீட்டுடன் தான் தீட்டுபோகும். 3 நாட்களுக்குள்ள இறப்பு தீட்டில் வந்த 10 நாள் பிறப்பு தீட்டு இறப்பு தீட்டுடன் தீரும். 10 நாட்கள் ஜனனா செளசத்தின் பின் 3 நாட்கள் மரணாசெளசம் நேர்ந்தால் மரணாசெளசத்துடன் தீட்டு தீரும். இங்கு தேசாசாரத்தையும் கவனிக்க வேண்டும்.

பிதாவின் மரணாசெளசத்தின் நடுவில் மாதா இறந்தால் 1½ நாள் அதிகம் தீட்டு. மாதாவின் மரணா செளசத்தின் நடுவில் பிதா இறந்தால் பிதாவின் ஆசெளசம் முழுவதும் உண்டு. மாதா பிதாக்களின் மரணா செளசம் ஞாதியின் ஆசெளசத்துடன் தீராது. புத்திரஜனனாசெளசம் ஞாதியின் மரணா செளசத்துடன் தீராது.

ஞாதி மற்றொரு ஞாதிக்கு கர்மா செய்தால் (தஹனம் முதலியவற்றைச் செய்தால்) தகனதினம் முதல் 10 நாள் தீட்டு. இதன் நடுவில் மற்றொரு ஞாதிக்கு தகனம் செய்தால் முதல் ஞாதித்தீட்டுடன் இதுபோகும். மாதாபிதாக்களை தகனம் செய்தால் மரணதினத்திலிருந்து தான் தீட்டு. 1½ நாள் தீட்டுடையவன் ஞாதிக்குத்தகனம் செய்தால் 3 நாள் தீட்டு. தீட்டுள்ள தசராத்ர ஞாதியின் அன்னத்தைச் சாப்பிடுபவனுக்கு 10 நாள் ஆசெளசம்.

மாதாபிதாக்களின் ஆசௌசத்தின் நடுவில் மனைவி பிரசவித்தால், கணவனுக்கு மாதாபிதா ஆசௌத்துடன் தீட்டுபோகும். பிரசவித்தவளுக்கு 10 நாள் தீட்டு உண்டு.

வெளியூரில் நடந்த தசராத்திர ஞாதி ஜனன மரணாசௌசங்களை 10 நாட்களுக்குள் கேட்டால் மீதியுள்ள நாட்கள் மட்டும் ஆசௌசம். மாதா பிதாக்களின் மரணா சௌசத்தை ஸஞ்சயனத்திற்கு முன் கேட்டால் மீதியுள்ள நாட்கள் ஆசௌசம். ஸஞ்சயனத்திற்குப் பின் கேட்டால் கேட்டதிலிருந்து 10 நாட்கள் ஆசௌசம் தசராத்திர ஞாதி மரணத்தை 3 மாதத்திற்குள் கேட்டால் 3 நாட்கள். 6 மாத முடிவிற்குள் கேட்டால் 1½ நாட்கள். வருஷத்திற்குள் கேட்டால் 1 நாள். பிறகு ஸ்நானம் மட்டுமே. வேறு தேசத்தில் அந்த மரணம் நேர்ந்திருந்தால் பத்து நாட்களுக்குப் பிறகு கேட்டால் ஸ்னானம் மட்டுமே.

ஜனனாசௌசத்தில் 10 நாட்களுக்குப் பிறகு கேட்டால் தீட்டில்லை. பிதா கேட்டால் ஸ்நானம் செய்வதால் சுத்தி. பிதாவின் மரணத்தை எப்போது கேட்டாலும் மூத்தபுத்திரனுக்கு 10 நாட்கள். பதியின் மரணத்தில் எப்போது கேட்டாலும் பத்னிக்கு 10 நாட்கள்.

3 நாளாசௌசத்தை 3 நாட்களுக்குப்பிறகு 10 நாட்களுக்குள் கேட்டால் ஒரு நாள். பிறகு ஸ்னானம் மட்டுமே. 1½ நாள் தீட்டில் 10 நாட்களுக்குப்பிறகு எப்போது கேட்டாலும் கேட்ட வேளைக்கு மட்டும். பிறகு ஸ்நானம் மட்டும்.

7வயதுக்கு உட்பட்ட சிசுவின் மரணத்தில் ஞாதிகளுக்கு 10 நாட்களுக்கு மேல் கேட்டால் தீட்டில்லை. மாதாபிதாக்களுக்கும் சகோதரர்களுக்கும் 10 நாள் தீட்டுண்டு. மாதாபிதாக்கள் மறைந்து கிரியை பூர்த்தியாகியிருந்தால், ஒருவருஷத்திற்குமேல் கேட்ட கனிஷ்ட சகோதரமரணத்திற்கு 3 நாள். கிரியை பூர்த்தி ஆகாத ஸபத்னீ மாதா மரணத்தில் வருஷத் திற்குள் 10 நாள் ஆசௌசம். பிறகு 3 நாட்கள். கிரியை பூர்த்தி ஆகியிருந்தால் வருஷத்திற்குள் 3 நாட்கள். பிறகு ஒருநாள்.

கிரியை செய்யப்படாத சகோதரனின் மரணத்தில் 6 மாதத்திற்குள் 10 நாள். வருஷம் வரையில் 3 நாள். கிரியை செய்யப்பட்டிருந்தால் ஆறுமாதம் வரை 3 நாள். பிறகு வருஷம் முடியும்வரை $1\frac{1}{2}$ நாள்.

அக்னி ஹோத்திரம் செய்து யாகங்கள் செய்தவன் (ஆஹிதாக்னி) தூரதேசத்தில் இறந்து அவனுக்கு விதிப்படி ஸம்ஸ்காரமாகாவிடில், புத்ரன் முதலிய முக்கிய கர்த்தாக்களுக்கும் ஞாதிகளுக்கும் ஆசௌச மில்லை.

ஸந்தியாவந்தனம் முதலிய முக்கியகர்மாவிற்கு லோபமில்லை. முக்யகர்த்தா சுபகாரியம் செய்ய முடியாது. ஸம்ஸ்காரம் தொடங்கியது முதல் 10 நாட்கள் ஆசௌசம்.

ஆஹிதாக்னி அல்லாதவருக்கும் கூட ஸம்ஸ்காரம் முறைப்படி செய்யப்படாவிடில், 10 நாட்களுக்கு மேல் கேட்டால் மறுபடி ஸம்ஸ்காரம் தொடங்கியது முதல் 10 நாள் ஆசௌசம். ஞாதி ஆசௌசம் முன்னதாகவே

அனுஷ்டித்திருந்தால் ஸம்ஸ்காரம் தொடங்கியதற்காக இப்போது தீட்டில்லை. அவன் சுபகாரியம் செய்யலாம். முன்னதாக தீட்டுப்படாதவன் இப்போது 3 நாட்கள் தீட்டுக்காத்து உதகதானம் செய்ய வேண்டும். தீட்டுமட்டும் காத்து உதகதானம் செய்யாதவன் ஒரு நாள் தீட்டுகாத்து உதகதானம் செய்ய வேண்டும்.

10 நாட்களுக்குள் தெரிந்து மறுபடி ஸம்ஸ்காரம் செய்வதானால் மீதியுள்ள தின்ங்கள் ஆசௌசம். 10 நாளுக்கு மேலானால் முன் ஆசௌசம் அனுஷ்டிக்காத புத்திரனுக்கும் பத்தினிக்கும் 10 நாட்கள் ஆசௌசம் உண்டு. முன் ஆசௌசம் அனுஷ்டித்திருந்தால் 3 நாட்கள் மட்டுமே. பத்தினியின் ஸம்ஸ்காரத்தில் பதிக்கும் இவ்விதமே. ஸபத்னிக்களுக்கும் இவ்விதமே. ஆசௌசமும் உதகதானமும் அனுஷ்டித்த ஞாதிக்கு மறுபடி ஆசௌசமில்லை.

ஆஹிதாக்னிக்கு தகனதினம் முதல் தீட்டுக் கணக்கு. மற்றவருக்கு மரணதினம் முதல் தீட்டுக்கணக்கு. இருவருக்கும் ஸஞ்சயனத்திற்கு தகனதினம் முதல் கணக்கு. மரணதிதியே சிராத்ததினம்.

**தினக்கணக்கு**

இரவில் ஜனனமோ மரணமோ ஸம்பவித்தால் அது 18¾ நாழிக்கு முன்னிருந்தால் முதல் நாளில் தீட்டு தொடங்கும். மரணத்தின்பின் வரும் ஸூரியோதயத்திலிருந்து 2வது நாள் 18¾ நாழிகைக்குப்பின் நேர்ந்தால் பின்வரும் ஸூர்யோதயத்திலிருந்தே முதல் நாள் (18¾ நாழிகை என்பது இரவு 1.30 மணி). சிலர்

ஸூரியோதயத்திலிருந்து நாளைக் கணக்கிட்டு, ஸூரியோதயத்திற்கு முன்னிருந்தால் அதையே முதல் நாளாகக் கொள்வர். தேசகுலாசாரப்படி இங்கு நிர்ணயம் செய்யலாம்.

ஆசௌசமில்லாதவன் ஆசௌசமுள்ளவனுக்கு உதவ நேரிட்டு, பிரேத கர்மாவில் கூட இருந்தால் அன்று அவனுக்கு ஆசௌசம். ஆனால் அவன் மனைவி முதலானோருக்கோ பொருளுக்கோ தீட்டில்லை. 10 நாட்களுக்குப் பிறகு மரணச் செய்தி கேட்டு தீட்டு காக்கின்ற ஞாதியின் பொருளுக்குத் தீட்டில்லை. மனைவிக்குத் தீட்டுண்டு.

**சவமுள்ள இடத்திற்கு ஆசௌசம்**

சவம் கிராமத்திலிருந்தால் அது வெளியேறும்வரை கிராமத்தில் ஹோமம், போஜனம், பூஜை கிடையாது. வேறு வீதியாக இருந்து நடுவில் பாதையாயிருந்தால் தோஷமில்லை. 800 பிராமண குடும்பம் உள்ள பெருங்கிராமமாயினும் நகரமாயினும் தோஷமில்லை. சிசு, ஸ்திரீ, அனாதன் இவர் மரணத்திலும் தோஷமில்லை என்பர்.

**சவத்தைப் பின்தொடர்ந்தால்**

தசராத்ரஞாதியல்லாதவரின் சவத்தின் பின் சென்றால் ஸசேலஸ்நானத்துடன் அக்னியைத் தொட்டு நெய் சாப்பிட சுத்தி. மறுபடி ஸ்நானமும் (புனஸ் ஸ்நானம்) 3 பிராணாயாமமும் செய்வது உண்டு. ஸ்நானம் செய்து ஈரவஸ்திரத்தைக் களைந்து உலர்ந்த வஸ்திரம் தரித்து மறுபடி ஸ்நானம் செய்வதே

புனஸ் ஸ்நானமாகும். ஆடையை காற்றில் ஏழு தடவை ஆட்டித்தரித்தால் உலர்ந்த ஆடை தரித்ததற் கொப்பாகும். அக்னியும் நெய்யும் கிடைக்காவிடில் உள்ளங்கையில் நீர் எடுத்து 10 தடவை காயத்திரியால் மந்திரித்துப் பருகலாம். பாலன், கன்னி, வயதானவர், அநாதன் இவர்களது சவத்தின் பின் சென்றிருந்தால் ஸ்னானம் மட்டும் போதும்.

ச்மசானம் சென்றவன் ஸ்நானம் செய்யாமல் கிராமத்தினுள் வரக்கூடாது. வந்தால் 3 நாள் தீட்டு உண்டு. தீட்டில்லாத பந்துக்களுக்கு ஸம்ஸ்காரம் ஆரம்பிப்பதற்கு முன், ஸ்நானம் செய்தால் சுத்தி. ஸம்ஸ்காரம் ஆரம்பித்துவிட்டால் தகனத்திற்குப்பின் ஸ்நானம் செய்தபின் சுத்தி. ஞாதியாயின் தகனத்திற்குப் பிறகே ஸ்நானம் செய்ய வேண்டும்.

தீட்டில்லாதவன் ஒருவரின் மரணத்தைக் கேட்டு அழுகை வந்துவிட்டால் ஸஞ்சயனத்திற்குமுன் ஆனால் ஸ்நானம். பின் ஆனால் ஆசமனம்.

சவத்தைச் சுமந்து தகனம் வரை கூட இருந்த ஞாதியல்லாதவன் ஆசௌசமுள்ளவனின் உணவை ஏற்று அந்த வீட்டில் வசித்தால் 10 நாட்கள் ஆசௌசம். ஆசௌசமுள்ளவனின் தொடர்பில்லா விடில் ஒரு நாள் ஆசௌசம்.

முதல் நாள் இறந்தவரை மறுநாள் சுமந்தாலும் ராஜஸ்வலை பிரசவித்தவள் கர்ப்பிணி இவர்களைச் சுமந்தாலும் பஞ்சகவ்யம் சாப்பிட்டு பசுவிற்குப் புல் கொடுத்தல், காயத்ரீ ஜபம், நெய்சாப்பிடுதல், அக்னி

ஸ்பர்சம், புண்யாஹவாசனம், புதுப்பூணூல் தரித்தல் இவற்றால் சுத்தி.

மனைவி கருவுற்றிருந்தால் சவத்தைச் சுமத்தலோ தகனம் செய்வதோ கூடாது. மாதா பிதா பிள்ளையற்ற மூத்த சகோதரன் தாயுடன் கூடப்பிறந்தவன் இவர்களுடையதானால் செய்யலாம். பிரும்மசாரி தன் தாய், தந்தை, குரு, மாதாமகன், மாதாமகி, தாயின் கூடப்பிறந்தவர், அவரது மனைவி இவரைத் தவிர்த்து மற்றவர்க்கு ஸம்ஸ்காரம் செய்யக்கூடாது. மாதா முதலியவரின் கிரியை செய்வதாலும் ஆசௌசியின் அன்னத்தைச் சாப்பிடுவதும் அவர்கள் கூட வசிப்பதும் கூடாது. தகனதினத்தில் முழுநாள் ஆசௌசம். மற்ற நாட்களில் கிரியை நடக்கும்போது மட்டும் ஆசௌசம்.

அநாதன், ஸன்யாஸி இவர்களது சவத்தைச் சுமந்தாலும், ஸம்ஸ்காரம் செய்தாலும் ஸ்நானத்தால் உடன் சுத்தி. புண்யம் உண்டு.

மனிதன் ஈரமுள்ள எலும்பைத் தொட்டால் மூன்று நாள் ஆசௌசம். ஈரமில்லாததானால் ஒரு நாள். அறியாமல் தொட்டால், ஈரமாயிருந்தால் ஸ்நானமும் ஆசமனமும். உலர்ந்திருந்தால் ஆசமனம் மட்டும்.

ஜனனத்திலும் மரணத்திலும் 10வது நாள் க்ஷவரம் செய்து கொண்டால்தான் தீட்டுபோகும்.

ஆசௌசமுள்ளவன் கோவிலினுள் நுழையக் கூடாது. யாரையும் நமஸ்கரிக்கக் கூடாது. ஏகாதசி நடுவில் வந்தால் உபவாஸம் உண்டு. விரிப்புகளின்றி தரையில் படுக்க வேண்டும். பதினோறாவது நாள்

காலை 8 மணிக்குமேல் ஸ்நானம் செய்துவிட்டு சுத்தி செய்யப்பட்ட வீட்டில் நுழைந்து ஜலத்தைத் தொட்டு புண்யாஹவாசனம் செய்து சுத்தமாவர்.

# நான்காம் பாகம்

## பித்ருகாரியங்களும் – நாற்பது ஸம்ஸ்காரங்களும்

**நாற்பது ஸம்ஸ்காரங்கள்**
**முன்னுரை:**

ஜீவன் பூர்வஜன்மத் தொடர்பால் பல மலங்களுடன் பிறக்கிறான். இப்பிறவி பெற்றதும் மறுபடி செய்கின்ற வினைகளின் பயனாகப் பல மலங்கள் சேர்கின்றன. இவற்றை அகற்ற நாற்பது ஸம்ஸ்காரங்கள் கூறப்பட்டுள்ளன. அவற்றில் கர்ப்பா தானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப்ராசனம், சௌளம்,உபநயனம், நான்கு வேத விரதங்கள், விரத ஸ்நானம், விவாஹம், ஐந்து ஹாயஜ்ஞங்கள் (பிரும்மயஜ்ஞம், தேவர்ஷிபித்ரு தர்ப்பணம் வைச்வதேவம்) என்ற பத்தொன்பதில் பதிமூன்று நமக்காகப் பிதா செய்வது. விவாஹம் பஞ்சமஹாயஜ்ஞங்கள் நாமே செய்யத்தக்கவை. நாற்பதில் மீதமுள்ளவை 7 பாகயஜ்ஞங்கள், 7 ஹவிர்யஜ்ஞங்கள், 7 ஸோம யஜ்ஞங்கள் இவையும் நாமே செய்யத்தக்கவை.

விவாஹத்தன்று மாலை, கந்தர்வபூஜை ஆனதும், ஆக்நேய ஸ்தாலீபாகத்துடன் ஔபாஸனம் தொடங்கிடுவர். அன்று முதல் அக்னிமூலம் கருமங்கள் செய்கின்ற தகுதியைத் தம்பதிகள் பெறுவர். கிருஹஸ்தராக உள்ளவர் செய்யத்தக்கவை ஏழு பாகயஜ்ஞங்களாகும். ஔபாஸனம் வைச்வதேவம், பார்வண ஸ்தாலீபாகம், மாஸி சிராத்தம், அஷ்டகா,

ஸர்பபலி, ஈசான பலி என அவை ஏழு. ஔபாஸனமும் வைச்வதேவமும் ஆந்ஹிகத்தில் வந்துவிட்டன. இதில் இரண்டு சிராத்தங்கள். மற்ற ஐந்தும் தந்தை தாய் உயிருடன் உள்ளபோதும் செய்யத்தக்கவை. இன்றுள்ள நிலையில் இவற்றைச்செய்பவரும் செய்விப்பவரும் மிகமிக அரிதானவர்.

அஷ்டகா – பூர்வேத்யு:ச்ரொத்தம் – அன்வஷ்டகா என்ற மூன்று. மார்கழி, தை, மாசி, பங்குனி மாதங்களின் கிருஷ்ண பக்ஷத்து ஸப்தமி, அஷ்டமி, நவமி திதிகளில் இவை மாத்ருவர்க்கத்தையும் பித்ருவர்க்கத்தையும் மாதாமஹவர்க்கத்தையும் குறித்து செய்யப்படுகின்றன. ஸப்தமியில் செய்வது பூர்வேத்யு: ச்ராத்தம், அஷ்டமியில் அஷ்டகா, நவமியில் அன்வஷ்டகா. (பஞ்சாங்கத்தில் இதனைச் செய்கின்ற நாளைக் குறித்திருப்பதைக் காணலாம்.)

**ஸ்தாலீபாகம்**

இரு பிரதமை திதிகளிலும் மாதாமாதம் செய்ய வேண்டியது.

**மாஸிசிராத்தம்**

எல்லா சிராத்தங்களுக்கும் இதுதான் மூலம். இது சிராத்தத்தின் பூர்ணமான முறை. இதனைப்பிரகிருதி என்பர். இதன் விக்ருதிகளே ஆம – ஹிரண்ய சிராத்தங்கள் முதலானவை. பார்வண முறையில் சிராத்தம் செய்யவும் என்ற குறிப்பைப் பல இடங்களில் காணலாம். அது இந்த பார்வணத்தின் முறைப்படி செய்யப்படுகிறது.

**சிராவணீ – ஆக்ரஹாயணீ**

ஆவணி மாதம் பௌர்ணமியில் தொடங்கி மார்கழி மாதம் பௌர்ணமியன்று பூர்த்தி செய்யப் படுகின்ற ஸர்ப்பபலி என்ற முறைகள் இவை. ஆவணியில் தொடங்குகின்ற முறை ச்ராவணீ. மார்கழியில் நிறைவடைகின்ற முறை – ஆக்ரஹாயணீ. ஸர்ப்ப தேவதைகளின் திருப்திக்காக ஸர்ப்ப பீடை நீங்க இதைச்செய்வர்.

**சைத்ரீ**

சித்திரை மாதத்தில் நாற்சந்தியில் செய்யப் படுகின்ற ஈசானபலி.

**ஆச்வயுஜீ**

கார்த்திகை மாதத்திய பௌர்ணமியில் செய்யப் படுகின்ற ஸ்தாலீபாகம் இது. ஆக்ரயண ஸ்தாலீபாகம் என்பர்.

இவற்றில் ஸ்தாலீபாகங்கள் அக்கினி ஸித்திக்காகச் செய்யப்படுபவை. அஷ்டகையும் பார்வணமும் பித்ரு திருப்திக்கும், ஈசானபலியும் ஸர்ப பலியும் ஆத்ம ரக்ஷைக்காகவும் செய்யப்படுபவை.

ஏழு ஹவிர்யஜ்ஞங்களும் ஏழு ஸோமயஜ்ஞங்களும் யாகத்திற்குத் தகுதி தந்து யாகத்தின் மூலம் தேவர்களின் திருப்திக்காகச் செய்யப்படுபவை. இந்தப் பதினான்கும் சுரௌத கர்மப்பிரிவில் அடங்கும். முன்சொன்ன 19 ஸம்ஸ்காரங்களும் பாகயஜ்ஞங்களும் ஸ்மார்த்த கர்மப்பிரிவில் அடங்கும்.

இவற்றைச் செய்வதால் ஜீவனிடம் பலபிறவிகளில் ஒட்டிக்கொண்டதும் இப்பிறவியில் ஒட்டியதுமான மலங்கள் நீங்கி ஜீவன் தூய்மையும் ஆனந்தமும் பெறுகிறான். இதற்கு உதவுவதால் இவற்றை ஸம்ஸ்காரங்கள். (சீர்படுத்துபவை) என்பர். பதினான்கு சுரௌத ஸம்ஸ்காரங்கள் செய்வதற்கு வெகு சிலரே தகுதி பெறுவர். மற்ற இருபத்தாறையும் செய்ய எல்லோருமே எளிதில் தகுதி பெறமுடியும். ஆனாலும் இன்றளவில் கர்ப்பாதானம் முதலான பதினான்கும் பஞ்சமஹாயஜ்ஞங்களின் ஸங்கரஹரூபமான பிரும்ம யஜ்ஞம் முதலானதும் முறைப்படி செய்யமுடியும். ஏழுபாகயஜ்ஞங்களில் பார்வணம் மட்டும் ஆப்திக – பிரத்யாப்திக சிராத்தவடிவில் செய்யப்படுகின்றன. பிரயாகை, காசி, கயை, பதரிகாசிரமம் முதலிய க்ஷேத்திர யாத்திரை செய்பவர் இந்தப் பார்வண முறையில் ஆங்காங்கு சிராத்தம் செய்து குறைவின்றி பித்ரு த்ருப்தியைப் பெறுகின்றனர்.

பித்ருதிருப்தி பெறுவதால் பூர்ண ஆயுள், நல்ல ஆரோக்கியமும் தர்மசிந்தனையுமுள்ள ஸந்ததி, செல்வம், நிம்மதி இவற்றைப் பெறுகின்றனர். ஆப்திக – பிரத்யாப்த்க சிராத்தங்களை ஒட்டி ஓர் ஆண்டில் செய்யத்தக்க 96 சிராத்தங்கள் பற்றி அறிவோம். எல்லா பித்ருகாரியங்களிலும் ஔபாஸனாக்னி தேவை. விவாஹம் ஒழுங்காக நடந்தால் தான் அக்னி ஸித்திக்கும். ஔபாஸனம் விவாஹத்தன்று மாலை தொடங்கப்பெறுகின்றது. அதன் சக்தி நிலைக்க ஸ்தாலீபாகம் போன்றவை இன்றியமையாதவை.

## 96 சிராத்தங்கள் – ஷண்ணவதி சிராத்தங்கள்

தர்ச சிராத்தங்கள் 12

மாஸ ஸங்கிரமண சிராத்தங்கள் 12

அஷ்டகாசிராத்தங்கள் 12

வைத்ருதி சிராத்தங்கள் 13

வியதீபாத சிராத்தங்கள் 13

மன்வாதி சிராத்தங்கள் 14

யுகாதி சிராத்தங்கள் 4

மஹாளய சிரஈத்தங்கள் 16 ஆக 96.

**1. தர்ச சிராத்தம்:**

ஒவ்வொரு அமாவாஸை தினத்திலும் செய்யப்படுவது.

**2. மாஸஸங்கிரமண சிராத்தம்:**

ஒவ்வொரு தமிழ் மாதப்பிறப்பன்றும் செய்யப்படுவது.

(1) ஆடி மாதப் பிறப்பன்று செய்வதை தக்ஷிணாயன சிராத்தம் அல்லது கடக ரவிஸங்கிரமண சிராத்தம் என்பர்.

(2) தை மாதப்பிறப்பு – உத்தராயண அல்லது – மகர ரவிஸங்கரமண சிராத்தம்

(3) சித்திரை மாதப்பிறப்பு – மேஷ விஷு அல்லது மேஷ ரவிஸங்கிரமண சிராத்தம்

(4) ஐப்பசி மாதப்பிறப்பு – துலாவிஷு – அலலது துலா ரவிஸங்கிரமண சிராத்தம்

(5) வைகாசி மாதப்பிறப்பு – விஷ்ணுபதீ – அல்லது விருஷப ரவிஸங்கிரமண சிராத்தம்

(6) ஆவணி மாதப்பிறப்பு – விஷ்ணுபதீ அல்லது ஸிம்ம ரவிஸங்கிரமண சிராத்தம்

(7) கார்த்திகை மாதப்பிறப்பு – விஷ்ணுபதீ அல்லது விருச்சிக ரவிஸங்கிரமண சிராத்தம்

(8) மாசி மாதப்பிறப்பு – விஷ்ணுபதீ அல்லது கும்ப ரவிஸங்கரமண சிராத்தம்

(9) ஆனி மாதப்பிறப்பு – ஷடசீதி அல்லது மிதுன ரவிஸங்கிரமண சிராத்தம்

(10) புரட்டாசி மாதப்பிறப்பு – ஷடசீதி அல்லது கன்யா ரவிஸங்கிரமண சிராத்தம்

(11) மார்கழி மாதப்பிறப்பு – ஷடசீதி அல்லது தனுர் ரவிஸங்கிரமண சிராத்தம்

(12) பங்குனி மாதப்பிறப்பு – ஷடசீதி அல்லது மீன ரவிஸங்கிரமண சிராத்தம்

ஆக 2 அயன சிராத்தங்கள், 2 விஷு சிராத்தங்கள், 4 விஷ்ணுபதீ சிராத்தங்கள், 4 ஷடசீதி சிராத்தங்கள் என 12 ஸங்கிரமண சிராத்தங்கள். ஸூரியன் புதுராசியில் பிரவேசிக்கின்ற நாளில் செய்யப்படுபவை.

### 3. அஷ்டகா சிராத்தங்கள்:

மார்கழி தை மாசி பங்குனி மாதத்து கிருஷ்ண பக்ஷத்து ஸப்தமி அஷ்டமி நவமிதிதிகளில் முறையே

திஸ்ரோஷ்டகா, அஷ்டகா, அன்வஷ்டகா என்ற பெயரில் செய்யப்படுபவை. இவை பன்னிரண்டு.

**(4–5) வைத்ருதி – வியதீபாத சிராத்தங்கள்:**

திதி வாரம் நட்சத்திரம்போல் விஷ்கம்பம் முதலிய 27 யோகங்கள் உள்ளன. அவற்றில் 17வது யோகம் வியதீபாதம், 27வது யோகம் வைத்ருதி. விஷ்கம்பம் முதலிய யோகங்கள் ஒரு சுற்றுவர 27 நாட்களாகும். வருஷத்தில் 13 தடவை திரும்பிவருகின்றன. இந்த 13 வைத்ருதி நாட்களிலும் செய்யப்படுபவை வைத்ருதி சிராத்தங்கள். 13 வியதீபாத நாட்களில் செய்யப் படுபவை வியதீபாத சிராத்தங்கள் (பஞ்சாங்கங்களில் வியதீ. சிரா. வை. சிரா என்று இந்நாளில் குறிப்பு காணலாம்.)

**(6) மன்வாதி சிராத்தம்:**

பிரும்மாவின் ஆயுளில் ஒவ்வொரு பகலிலும் 14 மன்வந்தரங்கள். ஸ்வாயம்புவமனு தொடங்கி ஸ்வாரோசிஷர், உத்தமர், தாமஸர் ரைவதர் சாக்ஷுஷர் என்று 6 மனுக்களின் வாழ்நாள் (மன்வந்தரம்) முடிந்து ஏழாவது மனு வைவஸ்வதரின் ஆட்சிகாலம் நடைபெறுகிறது. இவர்களின் ஆட்சி தொடங்கிய நாள் சாந்திரமானப்படி குறிப்பிட்ட மாஸ–பக்ஷ–திதிகளில் வருகிறது. அதை மன்வாதி என்பர். இதில் சிறிது வேற்றுமை காணலாம். பொதுவாகக் குறிப்பிடப் பெறுபவை பின்வருமாறு (பஞ்சாங்கங்களில் இவற்றின் குறிப்புகளைக் காணலாம்.)

1. ஆச்வின சுக்ல நவமீ – ஸ்வாயம்புவ மன்வாதி
2. கார்த்திக சுக்ல துவாதசீ – ஸ்வாரோசிஷ மன்வாதி
3. சைத்ரசுக்ல திருதீயா – உத்தம மன்வாதி
4. பாத்ரபத சுக்ல திருதீயா – தாமஸ மன்வாதி
5. புஷ்ய சுக்ல ஏகாதசீ – ரைவத மன்வாதி
6. ஆஷாட சுக்ல தசமீ – சாக்ஷுஷ மன்வாதி
7. மாக சுக்ல ஸப்தமீ – வைவஸ்வத மன்வாதி
8. ச்ராவணகிருஷ்ணாஷ்டமீ – ஸுர்யஸாவர்ணி மன்வாதி
9. கார்த்திக பௌர்ணமி – தக்ஷ (இந்த்ர) ஸாவர்ணி மன்வாதி
10. பால்குன பௌர்ணமி – ப்ரும்ஹஸாவர்ணி மன்வாதி
11. ஆஷாட பௌர்ணமி – அக்னிஸாவர்ணி மன்வாதி
12. பால்குன அமாவாஸ்யை – ருத்ரஸாவர்ணி மன்வாதி
13. ஜ்யேஷ்ட பௌர்ணமி – பௌத்(ஷ்)ய மன்வாதி
14. சைத்ர பௌர்ணமி – ரௌச்ய மன்வாதி

இந்நாளில் சிராத்தம் செய்வது மன்வாதி சிராத்தமாகும்.

**7 யுகாதி சிராத்தம்:**

கிருதம் திரேதா துவாபரம் கலி என்ற நான்கு யுகங்கள் தொடங்கிய நாளை யுகாதி என்பர். அன்று செய்கின்ற சிராத்தம் யுகாதிசிராத்தம். யுகம் தொடங்கியநாள் பின்வருமாறு:-

1. வைசாக சுக்ல திருதீயை கிருதயுகாதி

2. கார்த்திக சுக்லநவமி திரேதாயுகாதி

3. பாத்ரபதகிருஷ்ண திரயோதசி துவாபரயுகாதி

4. மாக அமாவாஸ்யை (பால்குனஅமாவாஸ்யை) கலியுகாதி.

**(8) மஹாளயசிராத்தம்**

கன்யா ராசியில் சூரியன் நுழையும் போது நடைபெறுகின்ற கிருஷ்ண பக்ஷம் மஹாளய பக்ஷம் எனப்பெறும். அதில் கிருஷ்ண பிரதமை முதல் சுக்ல பிரதமை முடிய உள்ள 16 நாட்கள் மஹாளய சிராத்தத்திற்கான நாட்கள். இவற்றின் தனிச்சிறப்பு – "பித்ருலோகத்தில் உள்ள பூர்வபுருஷர்கள் யமனின் அனுமதி பெற்று பூமிக்கு வந்து தாமே விரும்பித் தம் சந்ததியினர் கொடுப்பதை முழுதிருப்தியுடன் ஏற்பர். ஆஷாடமாதத்து கிருஷ்ண பிரதமை தொடங்கி 5 பக்ஷங்கள் அவர்கள் பித்ருலோகத்தை விட்டு வெளியேறி இப்பூமிக்கு வருவதால் அவர்களது அருகாமை எளிதில் கிடைக்கும் வேளை" என்பதே. கிருஷ்ண பக்ஷத்துப் பிரதமை முதல் சுக்ல பிரதமை வரை. முக்கிய காலம் அதில் செய்ய நேராவிடில் கிருஷ்ண பஞ்சமி தொடங்கி சுக்லபஞ்சமி வரை,

கிருஷ்ண அஷ்டமி முதல் சுக்ல அஷ்டமி வரை உள்ள காலவரை ஏற்றவை.

இந்த 96 சிராத்தங்களில் தர்சம், ஸங்கிரமணம், மஹாளயம் இவை முக்கியம். அஷ்டகாவையும் முக்கியமாகச் சிலர் கருதுவர்.

இவைகளில் தர்சமும் ஸங்கிரமணமும் ஒரே நாளில் நேரலாம். ஸங்கிரமணம் செய்தால் இரண்டும் செய்ததாகிவிடும். ஒன்றில் மற்றொன்று அடங்கச் சில வழிமுறைகள் உண்டு.

சிராத்தத்தில் பிதாவோ மாதாவோ உத்தேச்யர்கள். (யாரைக் குறித்து – உத்தேசித்துச் சிராத்தம் செய்கின்றோமோ அவர் உத்தேச்யர்). அதுபோல் தர்ச சிராத்தத்திலும், ஸங்கிரமண சிராத்தத்திலும், பித்ருவர்க்கத்தினர் மூவர், மாதாமஹவர்க்கத்தினர் மூவர் என அறுவர் உத்தேச்ய தேவதைகள். அதனால் ஒன்றில் மற்றொன்று அடங்கலாம். தர்சம் – நித்யவகையிலுள்ளது. ஸங்கிரமணம் – நைமித்திக வகையிலுள்ளது. நித்யத்தைவிட நைமித்திகம் வலிவு மிக்கது. அதனால் நைமித்திகமான ஸங்கிரமணம் செய்தால்போதும்.

மஹாலய சிராத்தத்தில் மாத்ருவர்க்கம், பித்ருவர்க்கம், ஸபத்னீக மாதாமஹவர்க்கம், காருணிக பித்ருக்கள், விச்வேதேவர், விஷ்ணு என்று உத்தேச்யர்கள் அதிகம். அதனால் இதனை எதிலும் அடக்கமுடியாது. அதனால் அமாவாஸ்யையன்று மஹாளயமும் செய்வதானால் ஒன்றில் மற்றொன்று

அடங்காதாகையால் இரண்டையும் தனித்தனியே செய்து தான் ஆகவேண்டும்.

## ஷண்ணவதி செய்யும் முறை

தனது பித்ருசிராத்ததினத்திற்குப் பிறகு அடுத்த பித்ருசிராத்தம் வருவதற்குள் இந்த 96 ஐயும் வாழ் நாளில் ஒருதடவையாவது செய்வது நல்லது. இவற்றைப் பார்வண விதானத்தில் செய்யலாம். இது மிக சிரமம் தரவல்லது. ஆம சிராத்தமாகச் செய்யலாம். அதற்கு பிராம்மணர்களை முன்னதாக வரிக்க வேண்டும். ஹிரண்ய சிராத்தமாகச்செய்வது மிக எளிது. ஸங்கல்பம் செய்து, சிராத்தத்தின் பூர்ணபலன் கிடைக்குமாறு வேண்டி பூர்ண தக்ஷிணையை நீர்வார்த்துத் தானம் (தத்தம்) செய்வதே ஹிரண்ய சிராத்தம். சிராத்தத்தின் அங்கமாகத் தர்ப்பணம் செய்தால் போதும்.

## 96ல் முக்கியமானவை

தர்சம், (12) ஸங்க்ரமணம் (12) மஹாளயத்தில் மஹாபரணி, மத்தியாஷ்டமி, கஜச்சாயை எனும் திரயோதசி என்ற மூன்று நாட்கள், (3) மாசிமாதத்தில் திஸ்ரோஷ்டகா, அஷ்டகா, அன்வஷ்டகா என்ற மூன்று நாட்கள் (3) ஆக 30 தினங்களிலாவது ஹிரண்ய சிராத்தமும் தர்ப்பணமும் செய்வது நன்மை தரும். மஹாலய பக்ஷத்தில் தன் பித்ரு – மாத்ரு திதி வந்தால் அவற்றில் செய்வது மிகவும் சிறந்தது.

தந்தை ஜீவித்திருந்து தாயார் இறந்தால் தாயாரின் சிராத்தம் தவிர வேறு ஒன்றும் செய்ய

வேண்டியதில்லை. தாய் ஜீவித்திருந்து தந்தை இறந்தால் 96 ஐயும் அனுஷ்டிக்கலாம். தர்ப்பணம் முதலியவற்றில் மாத்ருவர்க்கத்தில் மாதாவை விட்டு பிதாமஹீ, பிரபிதாமஹீ, பிது: பிரபிதாமஹீ என்ற மூவருக்குச் செய்யவேண்டும். பிதாமஹர் ஜீவித்திருந்து பிதா இறந்திருந்தால் பித்ரு–பிது: பிதாமஹ–பிது: பிரபிதாமஹ என்ற மூவர் உத்தேச்யர்கள் ஆவர். மாதா இறந்து பிதாமஹீ உயிருடனிருந்தால், மாத்ரு, பிரபிதாமஹீ பிது: பிரபிதாமஹீ என்ற மூவருக்குச் செய்யவேண்டும். மாதாமஹர் ஜீவித்திருந்தால் மாதாமஹ வர்க்கத்திற்கே வரணமும் தர்பணமுமில்லை.

**தர்பணத்தில் நியமங்கள்**

பூமியில் அல்லது சுத்தமான பாத்திரத்தில் தர்ப்பம் விரித்து அதன்மேல் கூர்ச்சம் வைத்துத் தர்ப்பணம் செய்வர். சிலர் இரு வர்க்க பித்ருக்களையும் (பித்ரு வர்க்கம் மாதமஹவர்க்கம்) ஒரே கூர்ச்சத்திலும் சிலர் இருகூர்ச்சங்களிலும் ஆவாஹனம் செய்வர். குலாசாரம் ஏற்கத்தக்கது. பொதுவாக எள்ளும் ஜலமும் வலது கையின் கட்டை விரலுக்கும் ஆள்காட்டி விரலுக்கும் இடையே உள்ள இடைவெளி வழியே விடுவதே பித்ருதர்ப்பணமுறை. விவாஹம் உபனயனம் முதலியவற்றில் நாந்தீ சிராத்தம் செய்தவர் மங்களகாரியம் முடிந்து ஆறுமாதம் வரை தர்ப்பமும் எள்ளும் சேர்ப்பதில்லை. அருகம்புல் அக்ஷதை சேர்ப்பர். வெள்ளி ஞாயிறு செவ்வாய் சேர்ந்தால் அன்று அக்ஷதையுடன் எள்சேர்த்துத் தர்ப்பணம் செய்வர்.

ஸப்தமி அஷ்டமி ஞாயிறு வெள்ளி ஜன்மதினம் இந்த தினங்களில் வீட்டினுள் தர்ப்பணம் செய்யாமல் வெளியில் ஆறு – குளக்கரை முதலியவற்றில் செய்வர். செய்ய நேர்ந்தால், எள்ளை ஜலபாத்திரத்தில் போட்டு வேறுபாத்திரத்தால் எடுத்துத் தர்ப்பணம் செய்வர். கட்டைவிரலும் ஆட்காட்டி விரலும் சேர்த்து எள் எடுக்கக் கூடாது. இடது கைபெருவிரல் அடியில் எள்ளைத் தேக்கி அதனைச்சிறிது சிறிதாக வலது கையில் நிறைத்த ஜலத்தில் கலந்து தர்ப்பணம் செய்வர். ஒருபாத்திரத்தில் தர்ப்பணத்திற்கான ஜலத்தை வைத்து அதில் எள்கலந்து, அதனை வேறு சிறு பாத்திரத்தால் மொண்டு தர்ப்பணம் செய்வதும் உண்டு.

ஞாயிறு கூடிய அமாவாசையில் அசுவதீ, திருவாதிரை ஆயில்யம், திருவோணம், அவிட்டம் நேர்ந்தால் வியதீபாதம் என்று சொல்வர். தை மாசி மாதங்களில் அமாவாசையில் ஞாயிறு,வியதீபாதம் திருவோணம் சேர்ந்தால் அர்த்தோதயம் எனும் புண்ய காலம். திங்களில் இவை சேர்ந்தால் மஹோதயம் எனும் புண்ய காலம். திங்கள் செவ்வாய் வியாழன் இவற்றில் அமாவாசை நேர்ந்தால் ஸூரிய கிரஹணத்திற்கு ஒப்பானதாகும். இவற்றில் தர்ச சிராத்தம் செய்து தர்ப்பணம் செய்வது மிகச் சிறந்த பலன்தரும்.

**மஹானயம்**

கிருஷ்ணப்பிரதமை முதல் சுக்லபிரதமை முடிய, கிருஷ்ணபஞ்சமி முதல் சுக்லபஞ்சமி முடிய, கிருஷ்ணஅஷ்டமி முதல் சுக்ல அஷ்டமி முடிய,

கிருஷ்ண பஞ்சமி முதல் – அமாவாஸ்யை முடிய, கிருஷ்ண அஷ்டமி முதல் அமாவாஸ்யை முடிய, கிருஷ்ண தசமி முதல் அமாவாஸ்யை வரை, மாதா பிதா திதி, மஹாபரணி, மத்யாஷ்டமி, கஜச்சாயை, மஹாவியதீபாதம் இவற்றில் ஏதேனும் ஒன்றிலாவது செய்யலாம். வியதீபாதம், மஹாபரணி, மத்த்யாஷ்டமி, துவாதசி, கஜச்சாயை மாதா பிதா சிராத்ததிதி தவிர மற்ற நாட்களில் செய்வதானால், தன் ஜன்ம நட்சத்திரம்,தன் மூத்தபுத்திரனின் ஜன்ம நட்சத்திரம், வெள்ளிக்கிழமை, ரோஹிணி, மகம், ரேவதி இவை களைத்தவிர்க்க வேண்டும். ஆயுதம் முதலியவற்றால் மரித்தவர்களுக்கு சதுர்தசியில் விசுவேதேவருடன் ஏகோத்திஷ்டமான சிராத்தம். ஸன்யாஸிக்கு துவாதசியில் சிராத்தம்.

மஹாளய பக்ஷத்தில் மாதா பித்ருசிராத்தம் சேர்ந்தால் அதனைச் செய்த பிறகே மஹாலயம் செய்ய வேண்டும். தினமும் ஹிரண்யசிராத்தமும் தர்ப்பணமும் செய்பவர், அமாவாசையன்று தர்சதர்பணம் செய்து அதனைச்செய்ய வேண்டும்.

மஹாளயத்தை ஒருநாளாவது பார்வணமாகச் செய்து மற்ற நாட்களில் ஹிரண்யசிராத்தமும் தர்ப்பணமும் செய்யலாம். சிராத்தத்தில் மாத்ருவர்க்கம், பித்ருவர்க்கம், ஸபத்னீக மாதாமஹவர்க்கம், காருணிக பித்ருவர்க்கம், துரி–ருசி என்ற விச்வேதேவர்கள் (த்வனி–லோசனர், தூரி ரோசனர் என்றும் சொல்வதுண்டு) சிராத்தரக்ஷகரான விஷ்ணு இவர்களுக்கு வரணம் உண்டு. மாதா இருந்தால் மாத்ருவர்க்கத்திற்கும்

மாதாமஹர் இருந்தால் மாதாமஹவர்க்கத்திற்கும் வரணமில்லை. தர்ப்பணம் செய்வது ஒரு கூர்ச்சமானால் அதில் பித்ரு மாதாமஹவர்க்கத்தையும் தனிக் கூர்ச்சத்தில் காருணிக பித்ருக்களையும் ஆவாஹனம் செய்யலாம். இரண்டு கூர்ச்சங்கள் போட்டுத் தர்ப்பணம் செய்பவராகில் அவர்களுக்கும் காருணிக பித்ருக்களுக்கும் தனிகூர்ச்சமுண்டு.

**காருணிக பித்ருக்கள்**

தந்தை தாய் கோத்திரத்தில் பிறந்த உறவினரும் அவர்களைச் சார்ந்தவரும் காருணிகபித்ருக்கள். ஸபத்னீமாதா, தந்தையின் சகோதரர், அவரது மனைவி, தந்தையின் சகோதரி, அவளது கணவர், தாயின் சகோதரர், அவரது மனைவி, தாயின் சகோதரி, அவளது கணவர், தன் சகோதரர், அவரது மனைவி, தன் சகோதரி, அவளது கணவன், தனது பத்தினி, அவளது தந்தையும் தாயும் சகோதரரும், தன் பிள்ளை, நாட்டுப்பெண், தன் பெண், மாப்பிள்ளை, குரு, யஜமானன், நண்பன் இவர்களாவர். ஸபத்னீமாதாவை மாத்ருவர்க்கத்துடன் சேர்த்து விடுவதும் உண்டு. இவர்களின் கோத்திரமும் பெயரும் தெரிந்தால் அவற்றைச் சொல்லித் தனித்தனியாகத் தர்ப்பணம் செய்யலாம். தெரியாவிடில் அந்தந்த கோத்திரமும் அந்தந்த பெயரும் உள்ள காருணிக பித்ருக்கள் (தத்தத்கோத்ரான் – தத்தத்சர்மண:) எனக் குறிப்பிட்டுச் செய்யலாம்.

**நாந்தீ சிராத்தம்**

இதனை நாந்தீமுக சிராத்தம், அப்ப்யுதய சிராத்தம், விருத்தி சிராத்தம் என்பர். பித்ருக்கள் அன்பும் கருணையும் மிக்கவர். தன் ஸந்ததியினருக்குக் குழந்தை பிறந்தால் அவர்களுக்குப் பெருமகிழ்ச்சி. அதனைக் கொண்டாட அவர்கள் மங்களப் பொருளேந்தி வந்து ஆசீர்வதித்துச் செல்வர். மங்களப் பொருளுடன் வருவதால் நாந்தீமுகர்கள் எனப்பெயர். நாந்தீ – வாழ்த்தொலி, மங்களப்பொருள், நீர் நிரம்பிய பூர்ணகும்பம் இவற்றிற்குப் பெயர். அப்படி வாழ்த்தவரும்போது அவர்களில் எவர் முதியவரோ அவரை முன்னிட்டுப்பின் வரிசையாக மற்றவர் வருவர். ஜீவித்திருந்தபோது காட்டிய மகிழ்ச்சியைவிட இருமடங்கு அதிகமாக மகிழ்வர்.

கர்ப்பாதானம், பும்ஸவனம், ஸீமந்தம், ஜாதகர்மம், நாமகரணம், அன்னப்ராசனம், சௌளம், உபனயனம், விரதம், விவாஹம், புதுகிருஹப்ரவேசம் இவைகளில் வாழ்த்துக் கூற வருவர். இவர்களுடன் கூட ஸத்யர் வஸு என்ற இருவிச்வேதேவர்களும் வருவர். இவர்களை வரவேற்று உபசரிப்பதே நாந்தீசிராத்தம். இதனை விருத்தி சிராத்தம் (குடும்பம் வளர்வதற்காகச் செய்வது) அப்யுதயசிராத்தம் (மேன்மை பெறுவதற்காகச் செய்வது) என்பர்.

ஜாதகர்மம் முதல் விவாஹம் வரை உள்ள சுபகர்மங்கள் தந்தை புத்திரனுக்காக – புத்திரிக்காகச் செய்பவை. கர்ப்பாதானம், பும்ஸவனம் ஸீமந்தம் கிருஹப்ரவேசம் இவை தானே தனக்காகச் செய்பவை.

தந்தை உயிருடனிருந்தால் அவரது பித்ருமாத்ரு மாதாமஹவர்க்கங்களுக்கு வரணம். தந்தை தாய் மாதாமஹர் உயிருடன் இல்லாவிடில் தனது பித்ரு–மாத்ரு–மாதாமஹ வர்க்கத்திற்கு வரணம். பிதா இல்லாமல் அவரது பிரதிநிதியாக சகோதரனோ வேறு பந்துவோ செய்ய நேர்ந்தால் யாருக்காக நாந்தி செய்யப்படுகிறதோ அவர்களது பிதா முதலியவர்களுக்கே வரணம்.

ஜாதகர்மம் முதல் உபனயனம் வரை ஒரேநாளில் செய்வதுண்டு. தனித்து உரியகாலத்தில் செய்தால் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே நாந்தி உண்டு. சேர்த்துச் செய்தால் ஒரு நாந்திபோதும். முன்னதாக ஒரு நாந்திசெய்து உடன் ஆறுநாட்களுக்குள் மறுபடி நாந்தி செய்யவேண்டியதில்லை.

நாந்தி என்பது சிராத்தமெனினும், மங்கள கர்மாவின் இடையில் செய்யப்படுவதால், அதில் மங்களச் சூழ்நிலைக்கேற்றபடி சிராத்த முறையை மாற்றிச் செய்வர். (1) பார்வண முறையாகவோ, ஹிரண்யரூபமாகவோ ஆமரூபமாகவோ செய்யும்போது, பித்ரு பிதாமஹ பிரபிதாமஹ என்றோ, மாத்ரு பிதாமஹீ பிரபிதாமஹீ என்றோ மாதாமஹ மாது: பிதாமஹ மாது: ப்ரபிதாமஹ என்றோ சொல்வதைப் போல் இங்கு சொல்லாமல் பிரபிதாமஹ – பிதாமஹ பித்ரு என்றும் பிரபிதாமஹீ, பிதாமஹீ, மாத்ரு என்றும், ஸபத்நீக மாது: பிரபிதாமஹ – மாது: பிதாமஹ – மாதாமஹ என்றும் மாற்றிக்கூறுவர். எள்ளிற்குப் பதிலாக அக்ஷதை அல்லது கோதுமை, அன்ன

பிண்டத்திற்குப்பதில் இலந்தைப்பழம் அக்ஷதை தயிர் கலந்த பிண்டம், தெற்குமுகமாகப் பரப்பாமல் கிழக்குமுகமாகத் தர்ப்பம் பரப்பிப் பிண்டம் வைத்தல், ஸ்வதா சொல்லாமல் 'ஸ்வாஹா' சொல்லுதல், அப்பிரதக்ஷிணமாக இல்லாமல் பிரதக்ஷிணமாகப் பரிஷேசனம், தர்ப்பத்திற்குப்பதில் அருகம்புல். இவ்வாறு தேவதா பாவனையுடன் சுபகாரியம் என்று நினைப்பிற்குப் பங்கம் வராமல் இதனைச் செய்வர்.

மாத்ருவர்க்கத்திற்கு இருவர், பித்ருவர்க்கத்திற்கு இருவர், மாதாமஹவர்க்கத்திற்கு இருவர், விசுவே தேவர்க்கு இருவர், விஷ்ணுவிற்கு ஒருவர் அல்லது இருவர் எனப்பிராமணர்களை வரிப்பர். ஆமசிராத்தத் திலும் இப்படி வரணம் உண்டு. வஸ்திரம் முதலியவற்றை அளிப்பது உண்டு. ஹிரண்யரூபமாகச் செய்யும் போது வரணமில்லை.

மங்களகரமான சுபகாரியமிது. நாந்தி செய்தவர் ஆறு மாதங்கள் வரை அன்னரூபமாக ஷண்ணவதி செய்வதில்லை. ஆறுமாதம் வரை அக்ஷதை, அருகம்புல் இவற்றைக்கொண்டே தர்ப்பணம் செய்வர்.

**அஷ்டகை – திஸ்ரோஷ்டகை – அன்வஷ்டகை**

ஸப்தமியன்று இரவு ஔபாஸனம், அஷ்டகா ஹோமம், அஷ்டமியன்று விச்வேதேவர்களுக்கு இருவர், பித்ருவர்க்கத்திற்கு மூவர், மாத்ருவர்க்கம் மூவர் என எட்டு பிராமணர்களை வரித்து சிராத்தம், அன்றிரவு ஔபாஸனம் செய்து மறுநாள் விசுவே தேவர், மாத்ருவர்க்கம், பித்ருவர்க்கம், மாதாமஹ வர்க்கம், விஷ்ணு என்று ஐவரை வரித்து சிராத்தம்

என்பதே இதன்முறை. பார்வணத்தைக் காட்டிலும் இது வேறுபடும். இதனைச்செய்து வைப்பவர் கிடைப்பது அரிதெனினும் பலன் மிக்கது. வைத்ருதி – வியதீபாத யோகத்தை முன்னிட்ட சிராத்தங்களையும் ஹிரண்யரூபமாகச் செய்து தர்ப்பணம் செய்யலாம்.

# ஐந்தாம் பாகம்

## சிராத்தம் – 1 பித்ருகாரியம் – பிரேதநிலை நீங்க

### சிரத்தையுடன் செய்யப்படுவது சிராத்தம்

சிரத்தை என்பது தளராத நம்பிக்கை, பித்ருக்கள் விஷயமாக நம்பிக்கையுடன் செய்கின்ற கடன்களையே சிராத்தம் என்பர்.

"பரலோகம் என ஒன்று உண்டு. பிறந்தவர் அனைவரும் அவ்விடமிருந்து வெளிவந்தவரே. மறுபடி ஆயுளின் முடிவில் சென்றடையுமிடமும் அதுவே. இறப்பு என்பது மனிதவாழ்வின் முடிவல்ல. அதன் பின்னரும் ஜீவன் தொடர்ந்து பயணம் செய்கிறான். அதனை ஜீவகதி என்பர். அந்த ஜீவகதி நன்கு அமைவதில் புத்திரன் முதலானோருக்கும் பெரும் பங்கு உண்டு. அக்கினி, ஜலம், பிராம்மணர் இவர்கள் முகமாகச் செய்த ஹோமமும் தர்ப்பணமும் உணவளித்தலும், உயிர் நீத்தபின் நீண்ட தனது பிரயாணத்தில் எங்கோ உள்ள ஜீவனை அவர் அடைந்துள்ள நிலைக்கேற்ப மாறிச் சென்றடைகின்றன. அவரது நற்கதிக்கு மேலும் உதவுகின்றன. உயிர் நீத்தவருக்காக ஹோமம் முதலியவற்றைச் செய்தவரும் இம்மையில் பெருநன்மை பெறுகின்றார். இவற்றைச் செய்யாதவர் நன்றி கொன்றவராக, கடமை தவறியவராக ஆகிறார். அதனால் வருகின்ற துன்பத்தை அனுபவிக்க வேண்டியவராகிறார்." இவ்வாறு பரலோகம், பரலோகம் சென்றவருடன் தொடர்பு, அதனால் விளைகின்ற நன்மை இவற்றில் நம்பிக்கையுடன் செய்கின்ற

சடங்கே சிராத்தமாகும். இதற்கு இரு பிரிவுகள் 1) மரித்த நொடியிலிருந்து ஓர் ஆண்டு வரை செய்யப் படுவது. இது அபரகர்மம். 2) சிராத்தம். இரண்டும் சிராத்தமே. எனினும் முன்னது பிரேதத்திற்குப் பித்ரு நிலையைத் தருவது. பின்னது பித்ருநிலையில் உள்ளவருக்குத் திருப்தி அளிப்பது.

தாய் தந்தை சகோதரன் புத்திரன் என்று பலரை உற்றாராக உறவினராக நன்மை விரும்பியாகத் தன்னுடன் விதி பிணைத்துள்ளது. தாய் தந்தை யரையோ சகோதர–சகோதரிகளையோ மனைவி மக்களையோ விருப்பப்படி தேர்ந்தெடுக்க முடியாது. எல்லோருமே அவரவரது வினைப்பயனாக ஒரு கால கட்டத்தில் முன்னும் பின்னுமாக யதேச்சையாக ஒன்று கூடியவர்கள். இந்த பந்தம் – பிணைப்பு சுமுகமாக சந்தோஷம் தரவல்லதாக அமைவதற்கு அவரவர் களுக்கிடையே விரும்பி ஏற்றுக்கொள்கின்ற வரம்பும் கடமையுணர்வும் உதவுகின்றன. இது வாழ்கின்றபோது யாத்திரிகர்களுடையது போல் தாற்காலிகமாக இராமல் இறந்த பின்னரும் தொடர்கிறதென்ற ஆழ்ந்த எண்ணமே மனிதவாழ்வின் சிறப்பம்சமாகும். இந்த ஆழ்ந்த எண்ணத்தின் வலிவால் அமைவதே சிராத்தம் பற்றிய சிரத்தை. நம்பிக்கையுடன் பலன் எதிர்பார்க்காத கடமையுணர்வுடன் கடன் புரிவதே அதன் விளைவு.

**வாழ்வின் இறுதியில் செய்யவேண்டியவை.**

மனிதன் பிறந்த நொடி முதல் மரணத்தை நோக்கி நடைபோடுகிறான். யமன் பிறந்த உயிரினத்தின் பிடரியில் அமர்ந்திருக்கிறான். பெரும்பாலானவர்

மரணத்தை எதிர்பார்ப்பவர்களே. வெகுசிலரே எதிர் பாராமல் மரணத்தின் பிடியில் சிக்குவர். யுவனாகி முதிர்ந்து கிழவனான பின் அவன் முன் மரணம் நிற்கும். இது தவிர்க்க முடியாதது. இதனைக் கண்டு அஞ்சிப் பயனில்லை. தான் இதுகாறும் வாழ்ந்து வந்த முறையைக்கண்டு அஞ்சினால் பயனுண்டு.

இந்த வாழ்வின் முடிவை ஒட்டியும் மறுபிறப்பு அமையலாம். கம்பளிப்பூச்சி மற்றொரு இலையை எட்டிப்பிடித்த பின்னரே தான் முன்னர் அமர்ந்திருந்த இலையின் பிடிப்பை விடும். அதனைப் போல், ஜீவன் மற்றொரு பிறவிக்கான பிடிகிடைத்த பின்னரே இந்த உடலை விடுவான். அதன் விளைவே அவனுக்கு அந்த நேரத்தில் குழப்பமும் கலக்கமும் தயக்கமும் என்பர். நல்வினைக்கேற்ப நல்ல பிறவி கிடைக்கும். அந்த நற்பிறவி கிடைக்கும்படி அந்தக் கடைசிநேரத்திலும் சில முயற்சிகளைச் செய்யலாம். தர்மசாஸ்திரம் இதனைக் குறிப்பிடுகின்றது.

புண்ட்ரம் தரித்து ருத்திராக்ஷம் போன்றவை தரித்து ஈசுவரனை நினைத்து வணங்கிக் கங்காஜலம் பருகுவதும் இறைவனின் ஸ்ரீபாதோதகம் அருந்துவதும் பகவன் நாமாவையும் தனக்குத் தெரிந்த ஸ்தோத்திரங் களையும் வேதப்பகுதியையும் காயத்திரியையும் மாற்றி மாற்றி ஜபிப்பதும், இறைவனிடம்தான் செய்த பிழைகளைத் தெரிவித்து மன்னிக்கும்படி வேண்டித்தன் வாழ்வை ஒப்பிப்பதும், சக்தியும் உணர்வுமிருக்கின்ற நிலையில் செய்யக்கூடியது. தான் செய்த பாபங்களைப் பெரியோர்களின்முன் தெரிவித்துப் பரிகாரம் கேட்டு

அந்த பிராயச்சித்தங்களைச் செய்வதும் நல்லது. சக்திக்கேற்றவாறு அன்னம், பசுமாடு, வஸ்திரம், பூமி ஆஸனம், படுக்கை, தீபம், பொன், நெய், தானியம் முதலியவற்றைச் சிரத்தையுடன் தானம் செய்யலாம். கடைசி நேரம் நெருங்குவதாக உணர்ந்தால் மனத்துள் தேங்கியுள்ள காமம் குரோதம் துவேஷம் முதலியவற்றை ஒதுக்கி அன்புடன் பழகி நற்சிந்தனை ஏற்படும்படி செய்துகொள்ளலாம். இந்த நற்சிந்தனையும் தெய்வ சிந்தனையும் மறுபிறவிக்கு ஆதாரமாக அமைபவை, இவை மனிதன் தனக்காக, தன் மேன்மைக்காகச் செய்து கொள்கின்ற கடைசிக் கடமைகள்.

இந்த நிலையில் கூட இருக்கின்ற மனைவி, மக்கள், உற்றார், நண்பர் இவர்களும் ஒருவகையில் பெரிதும் உதவமடியும். மரணத்தருவாயில் இருப்பவரின் எண்ணம் சிதறாமல், இறைவனின் சிந்தனை நிலைக்கும்படி நல்லெண்ணம் பரப்பி அன்பு காட்டிப்பரிவுடன் உதவ வேண்டும். நினைவு தவறித் தானேதனக்குத் தேவையானவற்றைச் செய்த கொள்ள முடியாத நிலை வந்த போது உயிர்பிரியும் வரை அவரது காதுகளில் இறைவனின் நாமங்களும் துதிகளும் வேதங்களும், உபநிடதமும் நன்கு பாயும்படி சொல்லிக்கொண்டு அன்புகலந்த நல்வார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்க வேண்டும். வெளி உணர்வற்ற நிலையிலும் உள்ளுணர்வு இவற்றால் பயன்பெறக் கூடும். கடைசியில் எந்த நினைவு மேலிட்டு நிற்கின்றதோ அதுவே அடுத்த பிறவியின்

அஸ்திவாரமாகக் கூடுமானதால் ஜீவன் பிரிகின்ற போது அமைதியும் பகவானின் நினைவும் பெறும்படி செய்வதே சுற்றத்தாரின் முதற்கடமை, பெருங்கடமை.

**உயிர் பிரிந்ததும்**

மரித்தவனுக்கு இருநிலைகள். ஒன்று சவமாகியுள்ள அவனது உடல். அதற்கு எரியூட்டி நல்லடக்கம் செய்வது புத்திரன் முதலானோரின் கடமை. உடலை விட்டுப் பிரிந்த தேகவியோகம் பெற்ற ஜீவன் தன் பயணத்தைத் தொடங்குகிறான். பயணத்திலுள்ளவன் – இருக்கும் இடத்தை விட்டுக்கிளம்பிச் செல்கின்றவன் பிரேதன்.(உடல் பிரேதமல்ல. அது சவம்) (பிரேதன் – ப்ர இதன் – வெளிக்கிளம்பியவன்.)

தாயின் வயிற்றிலிருந்து வெளிப்பட்டதும், தந்தை ஜாதகர்மா செய்கிறார். அதில் ஜாதவேதஸ் (பிறந்துள்ளதைப் பற்றி எல்லாமறிந்தவன்) என்ற அக்னியைத் துதித்து வயிற்றில் ஜடராக்னியாக, பூமியில் நெருப்பாக, வானில் வாயுவாக, அதற்கும் அப்பால் ஆதித்யனாக உள்ள அந்த அக்னி யாதொரு பீடையும் இன்றி ஆரோக்கியத்துடன் இந்தச் சிசு வாழச்செய்யட்டும் என்று வேண்டிச் சிசுவைக் காப்பாற்றுகின்ற பொறுப்பை அக்னியிடம் ஒப்படைத்தார். அப்படி அக்கினி பகவான் காத்த உடலை உயிர்நீத்த பின் அதே அக்கினி பகவானிடம் ஆஹுதியாக அளித்து, பிரேதனை நற்கதிக்குரிய பாதையில் அழைத்துச் செல்லும்படி புத்திரன் வேண்டுகிறான். விவாஹம் – கர்ப்பாதானம் பும்ஸவனம் ஸீமந்தம் தொடங்கி உபனயனம் வரை தந்தை மூலமும் உயிர்

பிரிந்ததும் அந்திமக்கிரியை சிராத்தம் முதலானதால் புத்திரன்மூலமும் வேண்டப்பட்ட அக்கினியே ஜீவனின் கதியில் உதவுகிறார்.

## புத்திரன் முதலானோர் ஆற்றுகின்ற சடங்குகள்

மரணத்தருவாயில் இருப்பவர் தானாகப்பிராயச்சித்தம் செய்யமுடியாத நிலையில் புத்திரன் முதலானோர் அவருக்குப் பிரதிநிதியாக இருந்து பிராயச்சித்தம் செய்யவேண்டும். முடிந்தால் புண்யநதி முதலியவற்றில் ஸ்நானம் செய்யவேண்டும். மரிக்கும் போது உயிர் உடலிலிருந்து தம் தமது இடங்களிலிருந்து சுகமாகப்பிரிந்து வெளியேறப் புத்திரன் மரிக்கின்ற தன் தந்தை அல்லது தாயின் தலையைத் தன் வலது முழங்காலின் மேல் கிடத்தி வலது காதில் பஞ்சாக்ஷரம், அஷ்டாக்ஷரம் முதலானவற்றை ஓதி, பகவன் நாமம் ஓதி பிராணன் முதலானவற்றை ஒடுங்கிச் சுகமாக வெளியேறும்படி மந்திரம்மூலம் உபவீதியாக வேண்டிக்கொள்ள வேண்டும்.

உயிர் பிரிந்ததும், பூமியில் தர்ப்பை பரப்பி அதன்மேல் கிடத்தித் தலையைத் தெற்குநோக்கித் திருப்பிவைக்க வேண்டும். புத்திரனும் மற்ற ஞாதிகளும் உத்தரீயம் தரித்துப் பூணூலை இடமாக்கிப் பெண்டிருடன் கேசங்களை அவிழ்த்துவிட்டபடி தெற்குமுகமாக நமஸ்காரம் செய்ய வேண்டும்.

## உத்தரக்கிரியை செய்வது யார்?

உத்தரக்கிரியை செய்பவர் கர்த்தா எனப்படுவார். கர்த்தா இரண்டு வகை. முக்கிய கர்த்தா,

கௌணகர்த்தா என. கிரியையில் முக்கிய பொறுப்பும், கடமையும் உள்ளவர் முக்கிய கர்த்தா. அவரில்லாத நிலையில், கிரியையைத் தள்ளிப்போட முடியாததால் உடன் தாற்காலிகப் பொறுப்பேற்று, முக்கியகர்த்தா பொறுப்பேற்கும் வரை கிருத்யம் செய்பவர் கௌணகர்த்தா. கௌண கர்த்தாவாக இருக்கவும் ஒரு தகுதி தேவை. முக்கிய கர்த்தா புத்திரன் மட்டும். புத்திரர்கள் பலர் இருந்தால் மூத்தவர். புத்திரனில்லாத போது பௌத்திரன் (புத்திரனின் புத்திரன்) செய்யலாம். புத்திரர்களே இல்லாதிருந்தால் தத்து எடுத்துக் கொண்டவன். அவனும் இல்லாவிடில் தௌஹித்ரன் (பெண்ணின் புத்திரன்) என்று கர்த்தாக்களின் வரிசை உண்டு. முன்னவர் இல்லாவிடில் பின்னவர் கடமைப்பட்டவர். அந்த வரிசை பின் வருமாறு–

1. தன் வயிற்றில் பிறந்த புத்திரன், 2. பௌத்திரன், 3. பிரபௌத்திரன் (பௌத்திரனின் புத்திரன்), 4. தான் தத்தெடுத்துக்கொண்ட புத்திரன் – (தத்தன்), 5. தத்தனின் புத்திரன், 6. பிறனுக்குத் தத்தாகக் கொடுத்த புத்திரன், 7. தன் சொத்துரிமை பெற்ற தௌஹித்ரன் (பெண்ணின் புத்திரன்), 8. பொதுவாக தௌஹித்ரன், 9. கணவனானால் பத்தினி, பத்தினியானால் கணவன், 10. புத்திரி, 11. தம்பி, 12. சகோதரபுத்திரர்களில் பெரியவன், 13. மாற்றாந்தாயின் பிள்ளை, 14. அவனது புத்திரன், 15. தந்தை, 16. தமையன், 17. தாய், 18. நாட்டுப்பெண், 19. புத்திரனின் பெண், 20. புத்திரியின் பெண், 21. பௌத்திரனின் மனைவி, 22. பௌத்திரனின்

பெண், 23. தத்தனின் மனைவி, 24. சகோதரி, 25. சகோதரியின் புத்திரன், 26. ஸபிண்டன் (10 நாட்கள் தீட்டுள்ளவன்), 27. ஸமாநோதகன் (3 நாட்கள் தீட்டுள்ளவன்); 28. தாயின் வழியில் ஞாதி. 10 நாட்கள் தீட்டுள்ளவன், 29. தாயின் வழிஞாதி 3 நாட்கள் தீட்டுள்ளவன், 30. மாப்பிள்ளை, 31. நண்பன்.

மரித்தது பெண்ணானால் 1–10 வரைமுன் போல். 11 முதல் 17 வரை கணவனின் தம்பி, கணவனின் சகோதரபுத்திரர்கள் என்றவாறு கணவரது உறவினர். 25. கணவனின் சகோதரி புத்திரன். இறந்தவளின் சகோதரிபுத்திரன், இறந்தவளின் சகோதரனின் புத்திரன் என்றவாறு கொள்ளவேண்டும்.

புத்திரனோ தௌஹித்ரனோ இரண்டு வயதுக்குட் பட்டவனாகில் அவர்களிடமிருந்து தர்ப்பை மூலம், அதிகாரம் பெற்று அருகிலுள்ள கர்த்தா வரிசையில் உள்ளவர் செய்ய வேண்டும். மூன்றிலிருந்து ஏழுவயது வரை அக்கினிப்பிரதானம் மட்டும் அவனது கையால் செய்து மற்றவற்றை மற்றவர் செய்ய வேண்டும். மனைவியும் அக்னிப்பிரதானத்தை மட்டும் தான் மந்திரத்துடன் செய்துவிட்டு மற்றவற்றை மற்றவர் மூலம் செய்ய வேண்டும். பிறப்பால் மூத்தவனே அக்னி பிரதானம் செய்யவேண்டும். அவனில்லாதபோது இருப்பவர்களில் மூத்தவர் செய்யவேண்டும்.

தத்தன் ஔரஸன் இவர்களில் தத்தன் வயதில் மூத்தவனாக இருந்தாலும் ஔரஸனே முக்கியகர்த்தா. சொத்துப்பிரிவினை செய்து கொள்ளாத நிலையில் அண்ணன் இறந்து அவனுக்கு ஸந்ததி இல்லாவிடில்

தம்பி கர்த்தா. பிரிவினை செய்திருந்தால் மனைவியே கர்த்தா. இரட்டைப்பிள்ளைகளில் பிந்திப் பிறந்தவனே மூத்தவன். பிதா உயிருடன் இருக்கும்போது தம்பி இறந்தால் பிதாவே கர்த்தா. அண்ணன் அல்ல. பிதா இல்லாவிடில் அண்ணன் செய்யலாம். ஸ்வீகாரமாகச் சென்றவன் தன்னைப்பெற்ற தாய் தந்தையருக்கு வேறு ஸந்ததியோ, ஸந்ததியின் ஸந்ததியினரோ இல்லாவிடில் தானே செய்ய வேண்டும்.

பிரும்மசாரியானவன் மாதா பிதா அண்ணன் மாதாமஹர், மாதாமஹி, மாமா, மாமி, தந்தையுடன் கூடப்பிறந்தவர், இவர்களுக்கு வேறுகர்த்தா இல்லாவிடில் கர்மா செய்யலாம்.

இறந்தவனுக்கு மனைவியே கர்மம் செய்ய நேர்ந்து அவள் மாதவிடாயில் இருந்தால் மற்றொருவரைக் கொண்டு மந்திரமில்லாமல் தகனம் செய்து விட்டு, மாதவிடாயான ஐந்தாம் நாளன்று சுத்திசெய்து கொண்டு மந்திரபூர்வமாக தர்ப்பஸம்ஸ்காரம் செய்து மற்றவற்றைச் செய்ய வேண்டும்.

யாக தீக்ஷையில் இருப்பவன், யாகத்தின் மத்தியில் மாதா பிதா இறந்தால் இவன் ஒரே பிள்ளையா யிருந்தால், தகனம் மட்டும் முறைப்படி செய்து ஸ்னானம் செய்து சுத்திசெய்து கொண்டு மீதமுள்ள யாகத்தைப் பூர்த்தி செய்த பின் மற்றதைச் செய்ய வேண்டும். வேறுபுத்திரன் இருந்தால் அவனே செய்ய வேண்டும். யாகதீக்ஷையில் உள்ளவன் யாகம் முடிந்ததும் கர்மத்தில் கலந்து கொள்ளலாம்.

தகனமும் முதலான சடங்குகளைப் பொதுவாக கிருத்யம், கர்மம், கிரியை, அபரக்கிரியை, அந்திமச் சடங்கு, ஈமச்சடங்கு, பித்ருமேதம் என அழைப்பர். கிருத்யம் – கடமையாகச் செய்யத்தக்கது. கர்ம – கிரியை – சடங்கு. இது மூன்று நிலைகள் உள்ளது. முதலாவது – உடலுக்கான சடங்கு. இரண்டாவது – பிரேதனுக்கானது. மூன்றாவது – பிரேத நிலை நீங்கி பித்ரு நிலை கிடைக்கச் செய்வது. இவை உயிர் நீத்ததிலிருந்து தொடங்கிப் பன்னிரண்டு நாட்களில் செய்யப்பட்டு முடிவடைபவை. ஆபஸ்தம்பர் போதாயனர் போன்ற ஸூத்ரகாரர்கள் இவற்றின் செய்முறையைத் தொகுத்துத் தந்துள்ளனர். ஒவ்வொன்றும் வேறுபடு பவை. அவரவர் ஸூத்திரப்படி அவரவருக்குக் கிருத்தியம் செய்ய வேண்டும். பொதுவான சடங்குகளைத் தொகுப்போம்.

**அந்திமக்கிரியை**

மூச்சு அடங்குகின்றபோது கட்டில், படுக்கை முதலியவற்றிலிருந்து அகற்றித் தர்ப்பை பரப்பிய தரையில் கிடத்தவேண்டும். கட்டில் முதலானவற்றின் மேல் உயிர் நீத்தல் தோஷமாகும். பிராயச்சித்தம் உண்டு.

உத்தராயணம் சுக்லபக்ஷம் பகல் இவற்றில் உயிர் நீத்தல் நல்லது. செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, புனர்வசு, விசாகம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி, கிருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயனம் இவற்றில் மரணம் தோஷமுள்ளது. இதற்கும் பிராயச்சித்தம் உண்டு.

இறக்கும்போதும் பின்னரும் வாயிலிருந்து நீர் கோழை ரத்தம் கசிவது, சிறுநீர் மலம் கழித்தல், அசுசியான ஆடையுடுத்திருத்தல், நினைவற்றிருந்ததால் நித்யகர்மங்கள் செய்யாதிருந்தது, இரவில் மரித்தல், பெண்ணானால் பிரஸவத்தீட்டு, மாதவிடாய்த் தீட்டு, இடி, மழை, வெள்ளம், நெருப்பு, விஷம் முதலியவற்றால் மரணம் நேர்தல், மரித்த பின் 25 நாழிகைக்குள் தகனம் செய்ய முடியாமை, இவையும் தோஷமே. இவற்றிற்கும் பிராயச்சித்தம் உண்டு.

பொதுவாக பிராஜாபத்ய க்ருச்சிரம் என்பதே பிராயச்சித்தம். பத்தாயிரம் தடவை காயத்ரீ ஜபம் செய்வதும் நூறு தடவை மந்திரத்துடன் பிராணாயாமம் செய்வதும் பிராஜாபத்யக்ருச்ரம் ஆகும். ஒவ்வொரு தோஷத்திற்கும் தனித் தனியே இந்தப் பிராயச்சித்தம் செய்ய வேண்டும். அதற்குரிய நேரமும் சக்தியும் இல்லாதபடியால் அதற்குப்பிரதிநிதியாகத் தானமும் தக்ஷிணையும் கொடுப்பர்.

அந்திமக்கிரியை செய்வதற்குத் தகுதி பெறுவதற்கு அனுஜ்ஞை பெற்றுக்கர்மம் தொடங்கவேண்டும்.

இறந்தவர் எந்த ஸூத்திரத்தைச்சார்ந்தவரோ அந்த ஸூத்திர முறைப்படியே கர்மம் செய்ய வேண்டும். அந்த ஸூத்திரமறிந்த புரோஹிதர் கிடைக்காவிடில், அந்த வேதப்பிரிவைச்சார்ந்த வேறு ஸூத்திரமறிந்தவர் கிடைத்தால் அதன்படி செய்யலாம். (கிருஷ்ண யஜுர் வேதத்திற்கு ஆபஸ்தம்பஸூத்திரம் போதாயனஸூத்ரம் என்ற இருமுறைகள் உண்டு. ஆபஸ்தம்பம் கிடைக்காவிடில் போதாயன முறைப்படி செய்யலாம்). மத்தியில்

இறந்தவரின் ஸூத்திரப்படி செய்விப்பவர் கிடைத்தாலும், தகனம் எந்த ஸூத்திரப்படி செய்யப்பெற்றதோ அதன்படி 11 நாட்கள் கிரியைகளைச் செய்து ஸபிண்டீகரணத்தை இறந்தவரின் ஸூத்திரப்படி செய்வர். அவரது வேத சாகைக்கான வேறு ஸூத்திரமுறையிலும் செய்யமுடியாவிடில் வேறு வேதசாகையைச் சார்ந்த ஸூத்திரமுறைப்படி செய்யலாம். ஸபிண்டீகரணம் மட்டும் இறந்தவரின் ஸூத்திரப் படியே செய்ய வேண்டும். முதல் 11 நாட்களுக்கான கருமங்கள் காலம் தள்ளிப்போட முடியாதவை. ஸபிண்டீகரணம் ஆண்டுமுடிவதற்குள் செய்தால் போதுமானது.

**;னனமும் தகனமும் –**

24 மாதங்களுக்குப்பட்டவன் இறந்தால் மண்ணில் புதைக்கவேண்டும். இது கனனமாகும். இதற்குமேல் உடலை எரிப்பர். இது தகனமாகும்.

**அக்கினி ஐந்து விதம்**

**1. துஷாக்கினி**

வாணலியை அடுப்பில் வைத்துச் சூடாக்கி அதில் உமியைப் போட்டு நெருப்பை உண்டாக்குவர். உபனயனமாகாத பாலனுக்கும், விவாகமாகாத ருதுவாகாத பெண்ணிற்கும் இதனால் தகனம்.

**2. கபாலாக்னி –**

மண்ணோட்டை நெருப்பில் காய்ச்சி அதில் உமிஅல்லது கரிபோட்டு நெருப்பு ஏற்படுத்துவர். பிரும்மசாரிக்கு இது.

### 3. உத்தபனாக்கினி

நெருப்பில் தர்ப்பங்களைப் பொசுக்கி அதில் மறுபடி வேறு தர்ப்பங்களை பொசுக்கி அதில் வேறு தர்ப்பங்களைப் பொசுக்கி அதில் அக்கினி உண்டாக்குவர். கணவனை இழந்த மனைவியையும் மனைவியை இழந்த கணவனையும் வேதவிரதம் முடித்துப்பின் விவாஹமாகாதவனையும் எரிக்க இது.

### 4. ஔபாஸனாக்னி

ஔபாஸனம் செய்து வருபவராயின் புத்திரன் இறந்தவரின் சார்பில் ஔபாஸன முறைப்படி அக்கினி ஸந்தானம் செய்து எடுத்த அக்கினி இது. இதில் கணவன் உயிருடனிருக்க இறந்த மனைவிக்கும் மனைவி இருக்க இறந்த கணவனுக்கும் தகனம். ஔபாஸனம் விட்டுப்போயிருந்தாலும் பிராயச்சித்தத் துடன் இதனை உண்டாக்கலாம். இறந்தவரின் மனைவி அருகில் இல்லாவிடில் அவளுக்காக அருகில் கூர்ச்சம் போட்டுச்செய்வர். ஸன்யாஸியின் பூர்வாசிரமத்து மனைவி ஸன்யாசி உயிருடன் உள்ளபோது மரித்தால் இந்த அக்கினி தான்.

கணவன் இறந்து ஸஞ்சயனத்திற்கு முன் மனைவி இறந்தால் கணவனின் சிதையிலுள்ள நெருப்பைக் கொண்டு மனைவியைத் தகனம் செய்யவேண்டும். நெருப்பு அணைந்திருந்தால் உத்தபனாக்னியில் தகனம்.

## 5. நிர்மதனாக்னி

அரணிக்கட்டையைக் கடைந்து எடுத்த நெருப்பு இது. ஆஹிதாக்னிக்கு இது.

**கிருத்தியம் தொடங்குமுன்**

ஸ்நானம் செய்து சுத்திசெய்து கொள்ளவேண்டும். இதிலிருந்து தொடங்கி 12 நாட்களுக்குள்ள கிருத்யங்கள் முடியும் வரை வெளியே கிளம்பும்போது இளையவன் முன்னே செல்ல வயதுக்கிரமப்படி மூத்தவர்கள் பின் செல்லவேண்டும். கிருத்தியம் முடிந்து வீட்டிற்குத் திரும்பும் போது மூத்தவன் முன்னே வர வயதுக்கிரமப்படி இளையவர்கள் பின் தொடர வேண்டும்.

பெண்களும் கூடவந்து நீராடி சவத்தை நீராட்ட நீர் கொண்டுவருவர். இப்போது பெண்களே முன் செல்வர்.

கருமம் தொடங்கும்போது முக்கால ஸந்தியா வந்தனத்திற்குரிய நேரமானால் அதனைச்செய்த பிறகே கருமம் தொடங்க வேண்டும்.

ஸ்நானமும் ஸந்தியாவந்தனமும் உபவீதி (பூணூலை வலமாகப் போட்டுக்கொண்டே) யாகவே செய்ய வேண்டும். மற்றும் ஆசமனம் பிரதக்ஷிணம், நமஸ்காரம், பிராணாயாமம் செய்யும்போதும் உபவீதியாகவே செய்ய வேண்டும். மற்ற இடத்தில் வெகுவாகப் பிராசீனா வீதியாக (பூணூலை இடமாக)ப்போட்டுக் கொண்டு செய்ய வேண்டும். சவத்தைச்சுமப்பவர் மட்டும்

பூணூலை மாலையாக்கிக்கொண்டு (நிவீதியாக) சுமப்பர்.

ஸந்தியாவந்தனம் முடியும் வரை சுத்தி உண்டு. கருமம் தொடங்கிவிட்டால் தகனம் முடிந்த பின்னரே சுத்தி.

ஸந்தியாவந்தனம் ஆனதும் மரணகாலத்திய தோஷங்களுக்கும் அசுத்திக்கும் பரிஹாரம் செய்து, அவரவருக்குரிய அக்கினியை முறைப்படி வளர்த்து அதற்கு மேற்கில் தெற்குநுனியாகத் தர்ப்பைகளைப் பரப்பி அவற்றின்மேல் சவத்தைத் தெற்கில் தலையிருக்கும்படி கிடத்த வேண்டும். தூரத்தில் கிடத்த நேர்ந்தால் தர்ப்பக்கயிறு முதலியவற்றால் இடையில் மற்றவர் போகாதபடி தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு பிரேதஸம்ஸ்காரத்திற்கான ஹோமம் செய்ய வேண்டும்.

சவத்தைக்குளிப்பாட்டிக் குலாசாரப்படி புண்ட்ரம் அணிவித்து அலங்கரித்து வெள்ளை நூலால் கைக் கட்டைவிரல்களையும் கால் கட்டைவிரல்களையும் இறுக முடித்து அத்திக் கட்டையாலான (கிடைக்கா விடத்து பசுமூங்கிலாலான) பாடையில் வைத்துத் தெற்குப்பக்கம் தலைதூக்கியிருக்கும்படி வைத்துப்புது வஸ்திரத்தால் காலிலிருந்து மூடவேண்டும். இதற்கும் மந்த்ரம் உண்டு. ஏற்கனவே கட்டியிருந்த ஆடையைக் கர்த்தா நீக்கி அதை ஜீர்ணமாகும் வரை காப்பாற்றுவது உண்டு. அக்கினியில் பச்சரிசியை வேகவைத்துச் சருவாக ஆக்கித் தனியே வைக்க வேண்டும்.

பௌத்திரன் முதலானோர் நெய் தீவட்டி பிடிக்க, மீதமின்றி நெருப்பைச் சட்டியில் ஏந்திக்கர்த்தா முன் செல்ல ஞாதிகள் சவத்தைச்சுமந்து செல்லவேண்டும். மற்ற ஞாதிகளில் வயதில் மூத்தவர் முன் செல்ல மற்றவர் பின் தொடரவேண்டும். அக்னிக்கும் சவத்திற்கும் இடையே யாரும் செல்லக்கூடாது. சவம் கிளம்பியதும் மரணமடைந்தவரின் மனைவியை முன்னிட்டு ஸ்திரீகள் விரித்த தலையுடன் புழுதியைத் தோளிலோ தலையிலோ பூசிக்கொள்வர்.

மயானம் செல்லும் பாதையில் மூன்று இடங்களில் அக்கினியை வைத்து அக்கினிக்கு வடக்கில் தெற்கு முகமாகச் சவத்தை வைத்து ஏகவஸ்திரத்துடன் கேசத்தை இரண்டாகப்பிரித்து வலது பாகத்தை முடிந்து இடது பாகத்தை விரித்து விட்டு வலது கைகளால் வலது தொடைகளைத்தட்டிக்கொண்டு இடுப்பு வஸ்திரத்தின் நுனியை இடதுகையால் பிடித்துச்சவத்தை விசிறிக்கொண்டு மூன்று தடவை அப்பிரதக்ஷிணமாக இளவயதினரை முன்செல்லச் செய்து சுற்றவேண்டும். மறுபடி இடதுபாகம் கேசத்தை முடிந்து வலது பாகத்தை விரித்து விட்டு இடது கையால் இடது தொடையைத்தட்டி வலதுகையால் முன்போல் ஆடைநுனியால் விசிறி மூன்று தடவை பிரதக்ஷிணமாகச் சுற்றவேண்டும். கொண்டுவந்த சருவிலிருந்து வழியிலுள்ள பூதங்களுக்குப் பலி இட்டுப்பின் சருகொணர்ந்த சட்டியை உடைத்துவிட வேண்டும். இனி மௌனமாக சவத்தைச் சுமந்து தகனஇடம் வந்து அதனைக்கீழே வைத்து எல்லோரும்

வடக்கு நோக்கிச் சில அடிகள் சென்று திரும்ப வேண்டும்.

பச்சைப்புரசம் கொத்தாலோ வன்னிக் கொத்தாலோ தகனஇடத்தைத் துடைத்து நடுவில் நாணயம் வைத்துத் தெற்கு நுனியாகக் கட்டை அடுக்கி அதில் மந்திரத்தால் சுத்தி செய்துத் தெற்கில் தலை இருக்கும்படி மல்லார்ந்து சவம் இருக்கும்படி கிடத்த வேண்டும். சவத்தின் ஏழு பிராண ஸ்தலங்களான வாய், கண்கள், காதுகள், மூக்குத் துவாரங்கள் இவற்றை நெய்யால் சுத்திசெய்து ஞாதிகளும் கர்த்தாவும் வாய்க்கரிசியை கட்டைவிரல் வழியே வாயிலிட வேண்டும்.

கர்த்தா அக்னியை எடுத்து சிதையின் கிழக்குப்புறத்தில் மேற்குமுகமாக நின்று சவத்தின் மார்பில் நெருப்பிடவேண்டும். அக்கினியிடம் அந்த உடலை ஆஹுதியாக ஒப்படைத்து நற்கதி கிடைக்கச் செய்யும்படிகோரி உடலில் இருந்த இந்திரிய தேவதைகள் அதனதனிடத்தைச் சென்றடையவும், பிரேதன் செல்லும் வழியில் உள்ளவர் இவருக்கு உதவும்படியும் கோரி ஹோமம் செய்து உபவீதியாக ஸூரியனைப் பிரார்த்தித்து மறுபடி பிராசீனாவீதியாக சவம் எரிவதைத் திரும்பிப்பாராமலே நீர்நிலை சென்று ஸ்நானம் செய்யவேண்டும். ஸ்திரீகள் ஸ்னானம் செய்த பிறகு இந்த கிருத்தியத்திலுள்ள குறை நீங்கக் கோரி சக்திக்கேற்ப தக்ஷிணை கொடுத்து கர்த்தா ஸ்நானம் செய்ய வேண்டும். வபனம் செய்துகொண்டு ஸ்நானம் செய்து, வீடு திரும்பி வாயிற்படியில் நின்று

காலலம்பி நெய் அருந்தி, அக்னியைத்தொட்டு, கல்லின்மேல் நின்று முறைப்படி சுத்திசெய்து கொண்டு நக்னபிரச்சாதன சிராத்தம் செய்ய வேண்டும்.

**நக்னபிரச்சாதனம்**

பிரேதனுக்கு ஆடைஎரிந்து விடுவதால் வெட்க உணர்ச்சிவருவதைத் தடுக்க பத்து நாட்களுக்குத் தேவையான ஆடைகளை தக்ஷிணையுடன் நெய் , எள்ளு, உளுந்து, கறிகாய்களுடன் உணவுப்பொருளும் சேர்த்துத் தானம் செய்வர். இதுவே நக்னப்பிரச்சாதன சிராத்தம் எனப்படும். பகலில் தகனமானால் உடனும், இரவிலானால் மாதாபித்ருக்களானால் உடனும் மற்றவர்க்கு மறுநாளும் செய்வர்.

இதனைச் செய்தவுடன் ஞாதிகளுடன் தீபத்துடன் வீட்டின் உள் செல்ல வேண்டும்.

கர்த்தாவும் ஞாதிகளும் வீடுதிரும்புமுன் சவமிருந்த இடத்தைச் சுத்திசெய்து கோமய ஜலம் தெளித்துப் புண்யாஹவாசனம் செய்துவிட வேண்டும்.

இறந்து 25 நாழிகைக்குள் தகனம் செய்ய வேண்டும், இல்லாவிடில் பர்யுஷித (நாள் கடந்த) தோஷம் வரும். இரவில் 9 நாழிகைக்குள் (9½ மணிக்குள்) தகனம் செய்ய வேண்டும்.

துர்மரணமடைந்தவரையும் தற்கொலை செய்து கொண்டவரையும் மந்திரமில்லாமல் தகனம் செய்துபின் 45 நாட்கள், 3 மாதம் அல்லது 6 மாதம் கழித்து மற்ற கர்மாக்களைச் செய்யலாம்.

ஸஞ்சயனமும் உதகதானம் முதலியவையும் இல்லை. அல்லது தக்க பிராயச்சித்தம் செய்து நாராயணபலி செய்து உடன் கருமம் தொடங்கலாம்.

**வபனம்**

புத்திரன் முதலானோர், ஸ்நானம் செய்ததும் வபனம் செய்து கொள்ள வேண்டும்.. தகனம் செய்தவன் இறந்தவனைவிட வயதில் மூத்தவனானால் வபனமில்லை. தகனம் இரவில் ஆனால், மாதாபிதாக்கள் விஷயத்தில் புத்திரன் இரவில் 2 யாமத்திற்கு (12 மணி) உள்ளானால் வபனம் உண்டு. மற்றவர்க்கு மறுநாள் தான். சுக்ரவாரமானால் புத்திரனைத்தவிர மற்றவர்க்கு வபனமில்லை. மறுநாள் தான். மாதா பிதா இறந்தாலும் அச்சமயம் நேரில் அங்கில்லாத புத்திரன் வெளியூரில் மரணச்செய்தி கேட்டால், கிருத்யத்தைப் பகலில்தான் செய்ய வேண்டும். வபனமும் பகலில்தான்.

மனைவி கருத்தரித்திருந்தால், மாதாபிதாக்களின் மரணத்தில் மட்டும் வபனம் உண்டு. மற்றவர் மரணத்தில் வபனமில்லை. மாதாமஹர், பிதாமஹர், தந்தையின் சகோதரர், தாயின் சகோதரர், அண்ணன், மாமனார், ஆசிரியன் இவர்களின் மனைவிகள், அத்தை, தாயின் சகோதரி, அக்கா இவர்களின் மரணத்தில் இவர் கர்த்தாவானால் வபனமுண்டு. மனைவி கருத்தரிக்காதிருந்தால், ஸம்ஸ்காரம் செய்யாவிடினும் வபனம் உண்டு.

**திலோதக தானம் – வாஸோதகதானம் – பிண்டதானம்**

உடலை எரிப்பதால் உடலின் பிடிப்பு விட்டது எனினும் தகனத்தால் உடலில் எரிவும் நாவரட்சியும் பசியும் பிரேதனுக்கு ஏற்படும். உடல் பந்தம் விலகினாலும் வாஸனையாக அமைந்த எண்ணம் விலகாது. நாவரட்சி நீங்க திலோதகத்தால் தர்பணம், வாஸோதகத்தால் தர்பணம் இவற்றை ஆற்றங் கரையிலும் வீட்டின் வாசலிலும் இதற்கென அமைத்த குண்டத்தினுள் செய்து இளநீர் முதலியவற்றை ஸம்பிரதாயப்படி தந்து, பிண்ட பிரதானம் செய்து ஏகோத்தரவிருத்தி சிராத்தமும் நவசிராத்தமும் செய்து அந்த பிண்டத்தை நதியில் கரைத்து ஸ்நானம் செய்து திரும்ப வேண்டும்.

இந்த உதகதானத்திற்கான சொம்பு, வஸ்திரம் இவற்றை 10 நாட்களிலும் காப்பாற்ற வேண்டும். மாற்றக்கூடாது. பிண்டம் சமைக்கும் பாத்திரம், போடும் இடம், ஸ்நானம் பண்ணுமிடம் இவற்றையும் மாற்றக் கூடாது. உதகதானம் செய்வதற்காக வீட்டின் வாசலிலும் ஆற்றங்கரையிலும் உள்ள குண்டத்தை எலி, நாய் முதலியவை முகராமல் காப்பாற்ற வேண்டும். எள்ளும் ஜலமும் கலந்து தருவது திலோதகம். நீரில் நனைத்த துணியை மூன்றாக மடித்துப்பிழிந்து தருவது வாஸோதகம்.

பிண்டத்திற்கான அன்னத்தைப் பொதுவாக இறந்தவரின் பெண் ஸ்நானம் செய்து ஈர ஆடையுடன் சமைத்துத் தருவாள். பித்தளை அல்லது மண்

பாத்திரத்தில் சமைக்க வேண்டும். பிண்டம் குதிரைக் குளம்பளவு இருக்க வேண்டும். பிண்டமாக உருட்டியது பிண்டதானம் ஆகும் வரை உதிரக்கூடாது. உதிர்ந்தாலும், உடைந்தாலும் மறுபடி சமைத்துப் பிண்டம் உருட்டவேண்டும். இதற்கான அடுப்பு, பாத்திரம் இவற்றையும் மாற்றுவதில்லை. ஒரு சிறு கல்லின் மேல் ஆடையாகப்பாவனையுடன் நூல்சுற்றி அதில் பிரேதனை ஆவாகனம் செய்து திலோதகம் முதலானவற்றைச்செய்வர். இதனைப் பாஷாணஸ் தாபனம் என்பர். பாஷாணஸ்தாபனம் செய்தவீடு அது விஸர்ஜனமாகும்வரை ஆசௌசமுள்ளது. திலோதகம் முதல் நாள் 3 தடவை, மறுநாள் 4 தடவை எனத் தினமும் ஒருதடவை கூட்டி 10ம் நாள் 12 தடவை செய்வர். வாஸோதகம் தினமும் 3 தடவையே. வயதில் சிறியவர் முதலில் செய்து பின் மூத்தவர் செய்ய வேண்டும்.

கர்த்தா மாறினால் புதிதாகப் பாஷாணஸ்தாபனம் செய்து அதில் அந்த கர்த்தா முதல்நாள் உதகதானம் முதலியவற்றைச் செய்த பின்னர் அன்றைக்கான உதகதானம் முதலியவற்றை முன்போல வயதில் சிறியவர் தொடங்கி மற்றவர் செய்ய வேண்டும். பாஷாணம் கெட்டுப்போனாலோ, இடம் பெயர்ந்தாலோ மறுபடி ஆவாஹனம் முதல் எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

### ஏகோத்தரவ்ருத்திச்ராத்தம்

பிண்டதானம் ஆனதும் ஏகோத்தரவிருத்தி சிராத்தம் செய்யவேண்டும். நாவரட்சி நீங்குவதற்கு

உதகதானம்போல் பசிநீங்க முதல்நாள் மூவர் சாப்பிடக்கூடிய அளவு, அரிசி, கறிகாய் மறுநாள் நால்வர் சாப்பிடக்கூடிய அளவு என உதகதானம் போல் தினம் ஒருஅளவு அதிகப்படுத்தித்தானம் செய்ய வேண்டும். இது ஏகோத்தரவிருத்தி சிராத்தம் எனப்படும்.

**நவசிராத்தம்**

மரித்தநாளிலிருந்து 1–3–5–7–9–11 என்று ஒற்றைப் படை நாட்களில் நவ சிராத்தம் செய்ய வேண்டும். அரிசி தானம் தருவதே இதற்கான முறை. அந்தந்த நாளில் செய்யமுடியாவிடில் 11ம் நாள் சேர்த்துச்செய்யலாம்.

நவசிராத்தமானதும் பிண்டதானமாகச் செய்ததை வாஸோதகத்திற்கான துணியில் முடிந்து உயர்த்திப் பிடித்துக்கொண்டு ஆற்றில் இறங்கித் தெற்குமுகமாக நின்று பிண்டத்தைப் பின்புறமாக ஆகாயத்தில் விட்டெறியவேண்டும். பின் ஸ்நானம் செய்து முதியவர் முன்செல்ல வீடு திரும்பி காலலம்பி உள்ளே செல்ல வேண்டும்.

தினம் ஒருவேளை சாப்பாடு, கட்டில் விரிப்பு முதலியவற்றைப் பயன்படுத்தாமல் தரையில் படுப்பது முதலிய நியமங்கள் உண்டு. தகன தினத்தில் மரித்த வீட்டில் சமையல் கூடாது.

**ஸஞ்சயனம்**

தகனம் மரித்த அன்றே நடந்தால் மறுநாள் ஸஞ்சயனம் செய்யலாம். அன்றே நடைபெறாவிடில் தகனம் செய்த மறுநாள் செய்யலாம். இதற்குத்

தடங்கல் ஏற்பட்டால் பின்னர் ஒற்றைப்படை தினங்களில் செய்யலாம். காலை ஸங்கவகாலத்தில் (10 மணிக்குள்) செய்வது உத்தமம். நடுப்பகல் மத்தியமம். பிற்பகல் அதமம். மறுநாள் செய்யாமல் வேறுநாளில் செய்வதானால் ஞாயிறு, செவ்வாய், வெள்ளி, சனி கூடாது. பால், ஜலம், நெய், அத்தி இலைக் கொத்து, கண்டங்கத்திரிக்காய், கருப்பு, சிகப்பு நூல், நீர்க்குடம், மண்வெட்டி, அஸ்தி எடுத்து வைக்கப் பானை, இவை தேவை. முதியவர்களை முன்னிட்டு மயானம் சென்று தகனம் செய்த இடம் சென்று மீதமுள்ள அக்னியை ஓரிடத்தில் வளர்த்து ஹோமம் செய்து அக்னியை சமனமடையக் கோர வேண்டும். அக்கினி அணைந்திருந்தால் லௌகிகாக்கினி வளர்த்து அதில் ஹோமம் செய்ய வேண்டும். ஜலத்தில் பாலைக்கலந்து கொண்டு அத்தி இலைக்கொத்தால் மிகக் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிக்க வேண்டும். தெளித்த ஜலம் நெருப்பில் பட்டுக் கொப்புளிக்கவோ உஸ் என சப்தமிடவோ கூடாது. அதனால் கொஞ்சம் கொஞ்சமாகத் தெளிக்கவும். வேறு சரீரம் பெற்றுப் பித்ருலோகம் செல்லும்படி மரித்தவனையும் பித்ருலோகத்திற்கு நல்ல பாதையில் அழைத்துச் செல்லும்படி தேவர்களையும் கோரியபின் கர்த்தா குடத்தில் கொணர்ந்த நீரால் அக்கினி அனைத்தையும் அணையும்படி செய்ய வேண்டும். இரட்டைப்படையல்லாத நீர்க்குடங்கள் நீர் உபயோகப்படுத்த வேண்டும்.

கருப்பு நூலாலும் சிகப்புநூலாலும் கண்டங் கத்திரிக்காயைக் கட்டி அதனை இடது மணிக்கட்டில் கட்டிக்கொண்டு மேற்கு நோக்கிக்குந்தி அமர்ந்து இடதுகாலை ஒருகல்லின்மேல் வைத்துக் கண்ணை மூடிப் பார்க்காமலேயே இடதுகையால் பற்கள், தலை, தோள், கை, இடுப்பு, துடை, முழங்கால், பாதம் இவற்றில் வலத்திலுள்ளதை முதலிலும் இடத்தில் உள்ளதைப்பின்னரும் எடுத்து மந்திரம் சொல்லிக் கண்களைத் திறந்துத் துணியிலோ கலசத்திலோ போடவேண்டும். பிறகு சிதைச் சாம்பலை ஒன்று கூட்டித் தெற்கில் தலைஇருக்கும்படி உடல் உருவாக அமைத்து மயானத்திலுள்ள பூதங்கள் (கண்ணுக்குத் தெரியாத உயிர்கள்) பிரேதன் இவை திருப்தியடைய ஐந்து தின்பண்டங்கள், பொரி கடலை, அப்பம், முறுக்கு, இளநீர் இவற்றைப்படைத்துப்பின் எலும்புக் கலசத்தை மூடி எழுந்துப் பிரேதனை மந்திரத்துடன் வழி அனுப்பிவிட்டு அஸ்தி கரைக்கும் இடம் செல்ல வேண்டும். அங்கு அஸ்திகலசத்திற்கு பால் சந்தன நீர் பஞ்சகவ்யம் முதலியவற்றால் அபிஷேகம் செய்து மண்மூடி புண்ணிய நதிகளில் கரைக்கலாம். அல்லது வன்னி மரத்தடியிலோ, பலாமரத்தடியிலோ, குழிவெட்டி அதிலிட்டு மண்ணால் மூடிக்காப்பாற்றலாம்.

தகனம் செய்த இடத்தில் ஆற்றுவெள்ளம் புகுந்து எலும்பு முதலியவற்றை அடித்துச் சென்றுவிட்டால், மீதியுள்ள சாம்பலையோ அங்குள்ள மண்ணையோ எடுத்து, அக்கினி அணைந்ததற்கான பிராயச்சித்த ஹோமம் முதலானதைச்செய்து ஸஞ்சயனத்தைப்

பாவனையாகச் செய்து குடத்திலிட்டு அடக்கம் செய்யவேண்டும்.

மாதா பிதா மரணத்தின் போது கர்த்தா நேரில் இல்லாதிருந்து வேறொருவர் தகனம் செய்திருந்தால், மறுநாள் வந்த கர்த்தா அந்த அஸ்தியைப் பொறுக்கி அதனையே சரீரமாகப்பாவித்து முறைப்படி தகனம் செய்த பின்னரே ஸஞ்சயனம். மற்றவருக்கு இந்த புனர் தகனம் (மறுபடி தகனம்) இல்லை.

**தர்ப்பஸம்ஸ்காரம்**

அஸ்தி கொணரமுடியாவிடில், தர்ப்பங்களைச் சவம் போல் கட்டி அதனை முறைப்படி தகனம் செய்து பின் ஸஞ்சயனம் செய்வர். தர்ப்பஸம் ஸ்காரத்திலும் புனர்தகனத்திலும் உடன் ஸஞ்சயனம்.

தகனமும் ஸஞ்சயனமும் கௌணகர்த்தாவால் முறைப்படி மந்திரபூர்வமாகச் செய்யப்பட்டிருந்தால், பின்வந்த முக்கியகர்த்தா தகனமும் ஸஞ்சயனமும் செய்ய வேண்டியதில்லை. ஆனால் முறைப்படி கௌணகர்த்தாவால் அவை செய்யப்படாதிருந்தால் முக்கியகர்த்தா தர்ப்ப ஸம்ஸ்காரம் செய்தே மற்றதைச் செய்ய வேண்டும்.

இறந்தவரின் சரீரம் கிடைக்காவிடினும் தலை கால் முதலிய அங்கங்கள் குறைபட்டுக் கிடைத்தாலும் தர்ப்பஸம்ஸ்காரம் செய்வது அவசியம். தர்ப்ப ஸம்ஸ்காரம் செய்யும் போது, பிண்டம் பொங்குதல், சவத்தைச் சுமந்து செல்லும் போது செய்கின்ற மூன்றிடத்தில் வைத்து வழிபிண்டம் தருதல்,

காலைச்சேர்த்துக் கட்டுதல், நவத்வாரத்தில் நெய் விடுதல், வேஷ்டி போர்த்துதல் முதலியவை இல்லை.

தகனம் செய்யப்பட்டு ஸஞ்சயனம் செய்யாமலிருந்தாலும் 11ம் நாள் ஆத்யசிராத்தம் செய்யாமலிருந்தாலும் முக்கியகர்த்தா தர்ப்பஸம்ஸ்காரம் செய்தே மற்றவற்றைத் தொடரவேண்டும்.

அஸ்தியை நாய் நரி முகராமல் பாதுகாக்கச் செய்யவேண்டும்.

மாதா பிதாவைத் தவிர மற்றவரின் ஸஞ்சயனம் வெள்ளியில் கூடாது. வெளியூரில் மரணம் நேரிட்டிருந்தால் ஞாயிறு, செவ்வாய், வெள்ளி, சனி, சதுர்தசி, கர்த்தாவின் ஜன்மானு ஜன்மத்திரிஜன்ம நட்சத்திரங்கள் பூசம் ஆயில்யம் முப்பூரம் மூன்று உத்தரம், சித்திரை, பஞ்சமி, தசமி பௌர்ணமி இவற்றில் கர்மம் தொடங்குவதும் ஸஞ்சயனம் செய்வதும் கூடாது.

சதுர்தசியுடன் கூடிய அமாவாசையிலோ சதுர்தசியிலோ மரணம் நேர்ந்தால் தாய் தந்தை தவிர மற்றவருக்கு அமாவாசையன்றே தகனம் ஸஞ்சயனம் உதகதானம் ஏகோத்தர விருத்திசிராத்தம் பிண்ட பலிப்ரதானம், ஆகியவற்றை 10 நாள் வரை செய்ய வேண்டியதைச்செய்து முடிக்க வேண்டும். 10வது நாள் வரை ஸ்நானம் செய்து மந்திரமில்லாமல் குண்டங்களில் உதக தானம் செய்யவேண்டும். பிரபூதபலியும் பாஷாணோத்தாபனமும் மட்டும் பத்தாம் நாளே. நடுவில் அமாவாசையோ மாதப்பிறப்போ வந்தால் அன்றுடன் முடியும்படி எல்லாவற்றையும் செய்யலாம்.

அல்லது அதுவரை ஒன்றையும் தொடங்காமல் அவற்றிற்குப்பின் தொடங்கிச் செய்யலாம். நவசிராத் தத்தை 11ம் நாள் சேர்த்துச் செய்யலாம். மாதா பிதா விஷயத்தில் இப்படி நடுவில் முடிப்பதும் பின்னர் தொடங்குவதும் இல்லை.

ஸஞ்சயனத்திற்குப்பின் ஸ்நானம் செய்து முதல் நாள் செய்ததுபோல் குண்டங்களில் உதகதானம் முதலியவற்றைச்செய்து பிண்டத்தை முதல் நாள் போட்ட இடத்தில் போட்டு ஸ்னானம் செய்து திரும்பி வரவேண்டும்.

**10 நாட்கள் வரை – கர்த்தா – கிருத்தியம் மாறுதல் ஏற்பட்டால்**

கனிஷ்டனால் தகனம் முதலியவை செய்யப்பட்டு உதகதானம் முதலியவை தொடங்கப்பட்டிருந்தால் மற்ற புத்திரர்களோ ஜ்யேஷ்டனோ ஸஞ்சயனத்திற்கு முன் வந்தால் அவர்கள் வபனம் செய்து கொண்டு ஸஞ்சயனம் செய்து அந்நாள் வரை உள்ள உதகதானம் முதலியதைச் செய்த பின்னரே அன்றைய உதகதானம் முதலியவற்றைச் செய்ய வேண்டும். அவர்கள் ஸஞ்சயனத்திற்குப் பின் வந்தால் கடந்த நாட்களில் செய்ய வேண்டிய உதகதானம் முதலிய வற்றைச் செய்து, மரணச்செய்தி கேட்ட நாளிலிருந்து பத்துநாள் ஆசௌசம் காத்துப்பிறகு 11ம் நாள் காரியம் செய்து ஸபிண்டீகரணம் உரிய நாளில் செய்ய வேண்டும்.

புத்திரனல்லாதவர் கர்த்தாவானால் இந்த நியமங்களில்லை.

முக்கியகர்த்தா வராமல் ஞாதி அல்லாதவன் தகனம் செய்யநேர்ந்து, ஸஞ்சயனத்திற்கு முன் கர்த்தா வந்தால் ஞாதி அல்லாதவனுக்கு ஆசௌசமில்லை. அவன் உதகதானம் செய்ய வேண்டாம். ஸஞ்சயனத்திற்குப் பின் முக்கியகர்த்தா வந்தால் இவனும் ஆசௌசமுள்ள வீட்டில் தங்கிச்சாப்பிட்டால், 10 நாட்கள் ஆசௌசமும் உதகதானமும் உண்டு.

1½ நாள் தீட்டுள்ளவன் தகனம் செய்து ஸஞ்சயனத்திற்கு முன் முக்கிய கர்த்தா வந்து விட்டால், தகனம் செய்தவனுக்கு மூன்று நாட்கள் தீட்டு. ஸஞ்சயனத்திற்குப்பின் முக்கிய கர்த்தா வந்தால் இவனுக்குப் பத்துநாட்கள் ஆசௌசமும் உதகதானமும் உண்டு.

மூன்றுநாள் ஆசௌசமுள்ளவன் தகனம் செய்திருந்தால் முக்கிய கர்த்தா எப்போது வந்தாலும் இவனுக்குப் பத்துநாட்கள் தீட்டும் உதகதானமும் உண்டு. முக்கிய கர்த்தா வராவிடில் ஸஞ்சயனம், உதகதானம், பிண்டப்ரதானம், 11வது நாளில் ஏகோத்திஷ்டம் வரை செய்தால்தான் சுத்தி

கனிஷ்டன் கிரியைகளைச் செய்திருக்கப் பத்தாம் நாளில் முக்கிய கர்த்தா பகலில் வந்தால், வபனம் உதகதானம் பிண்டதானம் பிரபூதபலி வபனம் சாந்திஹோமம் செய்து 11ம்நாளில் ஏகோத்திஷ்டம் செய்து மரணச்செய்தி கேட்டதிலிருந்து 10 நாட்கள் தீட்டு காத்துப்பிறகு ஆவிருத்தாத்ய மாஸிகம் முதலிய வற்றைச் செய்யவேண்டும். புத்திரனைத்தவிர மற்ற முக்கிய கர்த்தாக்கள் 11ம்நாளே சுத்தி அடைவர்.

**பத்தாம் நாளில்**

இதனை தசாஹம் என்பர். இன்று ஞாதிகள் அனைவரும் வபனம் செய்து கொண்டு ஸ்நானம் செய்து விரித்த தலையுடன் ஒரேவஸ்திரத்துடன், தெற்கு முகமாக நதீதீர குண்டத்தில் வயதுக்கிரமமாக 75 திலோதக தானமும் 30 வாஸோதக தானமும் செய்வர். (பத்துநாட்கள் கடந்திருந்தாலும் இந்த வபனமும் தர்ப்பணமும் ஞாதிக்கு உண்டு)

ஞாதிகள் தர்ப்பணம் செய்தபின்னர், கர்த்தா மூன்று தடவை ஸ்னானம் செய்து நதீதீரகுண்டத்தில் மூன்று வாஸோதகமும் பன்னிரண்டு திலோதக தானமும் செய்து, வீட்டிலுள்ள குண்டத்திலும் அதே அளவு செய்து பன்னிரண்டு ஏகோத்தரவிருத்தி சிராத்தமும் செய்து பிரபூதபலி கொடுக்க வேண்டும். அன்று பிரேத ஜீவனுக்குக் கொடுப்பதே பிரபூதபலி.

**பிரபூதபலிதானம்**

அன்று பிரேதஜீவன் கடும்பசிக்கு உள்ளாகி யிருப்பான். தரையில் அவரவர் ஸம்பிரதாயப்படி இரட்டைப்படையல்லாத கோடுகள் உள்ள கோலம் போட்டு தெற்கு நுனியாக வஸ்திரம் விரித்து அதில் தெற்கு நுனியாகத் தர்ப்பம் போட்டு அதில் எள்ளும் ஜலமும் விட்டு மௌனமாக அன்னம் அப்பம் முதலியவற்றையும் மற்ற உணவுப்பொருளையும் வைத்து நடுவில் பெரிய சாத உருண்டையை வைத்து நெய் தேன் தயிர் ஊற்றி எள்ளும் ஜலமும் விட்டு இதனை பிரேத ஜீவன் ஏற்கும்படி கூறி எங்கள் குலம் வளரட்டும் என்று பிரார்த்தித்துத் தலைவிரித்துத்

தெற்கு முகமாக நமஸ்கரிக்க வேண்டும். ஸ்திரீகளும் உணவளித்து வருந்துவர்.

பின் வீட்டிலுள்ள குண்டத்திடம்வந்து பிரேதராக ஆவாஹனம் செய்த பாஷாணத்திலிருந்து பிரேதரை விலகித் தன் ஸ்தானத்திற்குச் செல்லும்படி கோரிக் கண்மூடிக் கல்லை எடுத்துப் பின் கண்திறந்து வஸ்திரத்தில் மூடி கையலம்பி உபவீதியாய் ஆசமனம் செய்து யவை அல்லது நெல்லை கோமயத்துடன் எடுத்து 'எங்கள் குலம் வளரட்டும்' எனக்கோரி அந்தக்குண்டத்தினுள் போட்டு மண் போட்டு அதனை மூடவேண்டும்.

பிராசீனாவீதியாகப் பிண்டத்துடனும் அந்தக் கல்லுடனும் கிளம்பி நதிதீரம் வந்து அங்கும் முன்போல் பாஷாணத்திலிருந்து பிரேதனை வெளியேறும்படி கோரிப் பாஷாணத்தை எடுத்து நெல்லும் கோமயமும் போட்டுக் குண்டத்தை மூடிப் பிண்டத்தையும் கற்களையும் முன்நாட்களில் பிண்டம் போட்ட இடத்திலேயே போட்டு இதுவரை வாஸோதக தானத்திற்குப் பயன்பட்ட வஸ்திரத்தைக் கிழித்தெறிந்து ஸ்நானம் செய்யவேண்டும்.

பிராமணர்களை வணங்கி செய்த கருமம் பலன்பெற வேண்டிப் பின் வபனம் செய்து கொண்டு ஸ்நானம் செய்ய வேண்டும்.

**சாந்தி ஹோமம்**

மாத்யாந்ஹிகம் செய்துவிட்டு, தீட்டு நீங்கு வதற்கான சாந்தி ஹோமம் செய்ய வேண்டும். நொச்சி

மாலை அணிந்து ஞாதிகளும் பக்கத்தில் அமர வேண்டும். ஹோமம் முடிந்ததும் ஞாதிகளும் பெண்களும் முன்செல்ல அவர்களின் பின் கர்த்தா சென்று இதுவரை நடந்துசென்ற பாதையை அழித்து இறந்தவர்க்கும் உயிர்வாழ்பவர்க்குமிடையே இது எல்லை என்ற பாவனையுடன் ஞாதிகளை ஒதுக்கி விட்டுக் கர்த்தா அவர்களுக்குத் தென்புறமாகக் கல்லை நடவேண்டும். ஸுமங்கலிப் பெண்கள் அச்சான்யம் விலகக் கை நிறைய ஜலம் ஏந்திக் கீழே விடவேண்டும். பிறகு கர்த்தாவும் இதனைச்செய்து ஞாதிகளுடன் கண்களுக்கு மையிட்டு அங்கிருந்து அகன்று எங்காவது ஒரு செடியை நடவேண்டும். பின் நொச்சி மாலையை எல்லோரும் அகற்றிவிடுவர்.

**ஆனந்தஹோமம்**

ஞாதிகளுக்கும் தனக்கும் தீட்டு நீங்கி ஆனந்தம் உண்டாக ஆனந்த ஹோமம் செய்ய வேண்டும். பிறகு புண்யாஹவாசனம் செய்து ஆனந்தஹோமத்தின் அக்கினியை எடுத்துக்கொண்டு வீட்டிற்கு வந்து அதனைக்காப்பாற்ற வேண்டும். (அதனைக்கொண்டு விளக்கேற்றி வைப்பர்) அன்றிரவு பொரி அப்பம் முதலானவை வழங்க வேண்டும்.

**பத்தாம் நாளில் வேறு நியமங்கள்**

பத்தாவது நாளில் மரித்தவரைவிட வயதில் சிறியவர்களுக்கு அனைவருக்கும் வபனமுண்டு. மாதாவின் தசாஹத்திற்குள் பிதா இறந்தால் பிதாவின் தசாஹத்தன்றே வபனம். பிதாவின் தசாஹத்திற்குள் மாதா இறந்தாலும் பிதாவின் தசாகத்தன்றே வபனம்.

வயதிற் சிறியவராயினும் இறந்தவர் தந்தையின் சகோதரர், மாமனார், மாமியார், தமையனின் பத்தினி, அத்தை, மாற்றாந்தாய், தாயின் சகோதரர், அவரது மனைவி இவர்களுக்கு ஸம்ஸ்காரம் செய்ய நேரிட்டால் வபனம் உண்டு.

10ம் நாள் வபனம் ஸமானோதகனுக்கு (3 நாட்கள் தீட்டுள்ளவனுக்கு) இல்லை. ஸம்ஸ்காரம் செய்ய நேர்ந்தால் உண்டு.

**11ம் நாள் ஏகாதசாஹவிதி**

11ம் நாள் காலையில் வீட்டைச் சாணிபோட்டு மெழுகித் துணிகளை வண்ணான் மூலம் சுத்தி செய்யச்செய்து ஸங்கவகாலத்தில் ஸ்னானம் செய்து வீடும் தானும் சுத்தியடையப் புண்யாஹவாசனம் செய்து ஜலம் தெளித்து நவசிராத்தம் செய்து விருஷபோத்ஸர்ஜனம் செய்யவேண்டும்.

**விருஷபோத்ஸர்ஜனம்**

அக்கினியை முறைப்படி ஸந்தானம் செய்து கோஸூக்தத்தால் ஹோமம் செய்து ஒரு காளையைக் குளிப்பாட்டி தேவபாவனையுடன் பூஜை செய்து எள் கலந்த நீரைக் குடிக்கச் செய்து அதை மந்திர பூர்வமாகப் பசுக்களிடையே விட்டுவிட வேண்டும். புல்லை மேய்ந்து தேவாலயத்தையும் பிராமண கிருஹங்களையும் சார்ந்த பூமியைவிட்டு மற்ற இடங்களில், இஷ்டப்படி சுற்றிவரும்படி கோரி விருஷபத்தை அவிழ்த்து விடுவர். மரித்தவரின் பிரதே

நிலை நீங்கிடும்படி பிரார்த்தித்து தானங்கள் செய்ய வேண்டும்.

### ஏகோத்திஷ்டசிராத்தம்

ஆத்யமாஸிகம் என்று இதற்குப் பெயர். இன்றும் இதன் பிறகும் 16 சிராத்தங்கள் பிரேதநிலையைத் தாண்டி பித்ருநிலையை அடைய விருப்பவருக்கு நடுவில் பிசாசாக இருக்கும்நிலை நீங்கச் செய்யப் படுகிறது. அவற்றில் இது முதலாவது. இது அக்கினியிலேயே செய்யப்படுகிறது. இது முடிந்ததும் பிண்ட பரதானம் செய்து பூர்த்தி செய்து பிண்டத்தை நீரில் போட்டு ஸ்நானம் செய்யவேண்டும். புண்யாஹ வாசனம் செய்து சுத்தி செய்து கொள்ள வேண்டும்.

கர்மம் செய்யும் போது மட்டும் அசுத்தி. கர்மம் ம்முடிந்ததும் ஸ்நானம் புண்யாஹவாசனம் இவற்றால் சுத்தி. மறுநாள் ஸபிண்டீகரணம்.

### ஸபிண்டீகரணத்திற்கு முன்பு

முக்கிய கர்த்தா வராமல் கனிஷ்டன் முதலானோர் பத்துநாள் கிரியையைச் செய்தபின் பதினோராம் நாள் காலையில் மூத்தவன் வந்தால், வபனம் 10 நாள் உதககதானம் செய்து ஏகோத்திஷ்டம் செய்து மரணச் செய்தி கேட்டதிலிருந்து 10 நாள் ஆசௌசம் காத்துப்பின் உரிய காலத்தில் ஸபிண்டீகரணம் செய்யவேண்டும்.

பத்து நாட்களுக்கான கிரியை வேறொருவர் மூலம் நடைபெற்றிராவிடில், மரணச்செய்தி கேட்ட தினத்திலிருந்து ஆசௌசம், அடியிலிருந்து 10 நாள்

காரியம், 11ம் நாள் ஏகோத்திஷ்டம், பிறகு 45ம் நாளன்றோ, பிறகோ ஸபிண்டீகரணம். 10ம் நாளன்றிரவு வந்தாலும் இவ்விதமே.

மற்ற புத்திரர்கள் உரியகாலத்தில் 11நாள் கருமத்தையும் செய்திருக்க வெளி நாடு சென்றவன் செய்தி கேட்டதும் வபனம் செய்து 10 நாட்கள் உதகதானம் செய்து தீட்டுக்காத்து பிறகு ஸபிண்டீகரணம் செய்யலாம்.

அன்னியனோ கனிஷ்டனோ ஸபிண்டீகரணம் செய்திருந்தால் மூத்தவன் மறுபடி ஸபிண்டீகரணம் செய்ய வேண்டும். மூத்தவன் செய்திருந்தால் கனிஷ்டன் செய்ய வேண்டியதில்லை. இதனால் ஸபிண்டீகரணம் செய்யப்பட்டிருந்தாலும் மூத்தவன் அருகில் இல்லாவிட்டாலும் பாகம் பிரிக்கப்பட்டிருந்தாலும் கனிஷ்டர்கள் தனித் தனியே ஸபிண்டீகரணம் செய்ய வேண்டும். பாகம் பிரிக்கப்படாதிருந்தால் ஜ்யேஷ்டர் ஒருவனே செய்தால் போதும். பாகம் பிரிந்திருந்தாலும், மூத்தவன் செய்யும் போது எல்லோரும் அனுமதித்தால் பொதுத் திரவ்யத்தால் அதில் எல்லோரும் பங்கு கொள்ளலாம். தனித்துச் செய்ய வேண்டியதில்லை.

வேறு தேசத்திலுள்ள புத்திரன் ஒருவருஷத்திற்குப் பிறகு மாதா பிதா மரணச் செய்தியைக் கேட்டால் வபனம் 10 நாள் தீட்டு உதகதானம் முதலியவை செய்து ஸபிண்டீகரணம் செய்ய வேண்டும். மாஸிகம் முதலியவை செய்யத் தேவை இல்லை. வருஷதிதியில் ஆப்திக சிராத்தம் செய்யவேண்டும்.

வேறு தேசத்திலுள்ளவன் வருஷம் முடிவதற்குள் கேட்டால், மீதியுள்ள மாஸிகம் செய்து ஆப்திகம் செய்யலாம்.

மாதா பிதா மரணம் அடைந்து கிரியை மற்றவர் செய்திருக்க, வேறு தேசத்திலிருப்பவன் இதனை ஓராண்டிற்குப் பின் கேட்டால் ஜ்யேஷ்டனாயின், 10 நாட்கள் தீட்டு, உதகதானம் முதலியவை ஸபிண்டீகரணம் உண்டு. கனிஷ்டனாயின் 3 நாள் தீட்டு, உதகதானம் மட்டுமே.

இறந்த திதியோ மாதமோ தெரியாவிடில் செய்தி வந்த மாத திதிகளையே வைத்துக்கொண்டு செய்யலாம்.

ஸபத்னீ மாதாவின் மரணத்தை வருஷத்திற்குப் பின் கேட்டால், 10 நாள் ஆசௌசம் உதகதானம் உண்டு. பிறகானால் 3 நாள். ஆசௌசம். அவளது பிள்ளை அருகில் இல்லாமல் மற்றவளின் பிள்ளை கிரியைகள் செய்யும்போது அவளது பிள்ளை வந்தால், மீதமுள்ளதைச் செய்து பூர்த்தி செய்யலாம். ஸபிண்டீகரணமும் செய்யப்பட்டிருந்தால் இவன் மறுபடி அதனைச்செய்ய வேண்டும்.

ஸபிண்ட ஞாதியின் மரணத்தை 11 நாட்களுக்குப் பின் கேட்டு இவன் முக்கிய கர்த்தாவாகில், தர்ப்பஸம்ஸ்காரம் 3 நாள் உதகதானம், மறுநாள் ஏகோத்திஷ்டம், அதன் மறுநாள் ஸபிண்டீகரணம். 'ஏகோத்திஷ்டம் வரை செய்யப்பட்டிருந்தால் உதக தானமும் ஸபிண்டீகரணமும். ஸபிண்டீகரணமும்

செய்யப்பட்டிருந்தாலும் இவன் மறுபடி ஸபிண்டீ கரணம் செய்யவேண்டும்.

பிதா முதலியவரின் மரணத்தை 11வது தினம் கேட்ட ஜ்யேஷ்டன் தன் ஆசௌசம் முடியும் வரை உதகதானம் மட்டும் செய்ய வேண்டும். பிண்டதானம் செய்யவேண்டியதில்லை.

விதிப்படி தகனம் நடந்தாலும், ஸஞ்சயனம், உதகதானம், ஏகோத்திஷ்டம் நடைபெறாவிடில் மறுபடி தர்ப்பஸம்ஸ்காரம் செய்து கர்மம் முழுவதையும் செய்ய வேண்டும்.

தேசாந்தரம் சென்ற மாதாபிதாக்களைப்பற்றி 15 ஆண்டுகள் வரை தகவல் இல்லாவிடில் அவர்கள் இறந்ததாகப் பாவித்து, நாராயண பலிசெய்து தர்ப்ப ஸம்ஸ்காரம் செய்து 3 நாட்களில் உத்தரகிரியை செய்ய வேண்டும். மற்றவர்களுக்கு 12 வருஷங் களுக்குள் தகவல் தெரியாவிடில் கருமம் முன்போல் செய்ய வேண்டும்.

வெளி நாட்டில் இறந்தவரின் மாதம் பக்ஷம் திதி தெரியாவிடில், ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி, கிருஷ்ணபக்ஷம், ஏகாதசி, அமாவாசை இவற்றில் ஒன்றை வைத்துச் செய்யலாம். கிளம்பிப் போன திதி மாதத்தையோ மரணச்செய்தி தெரிந்த தினத்தையோ அல்லது கிரியை தொடங்கும் திதியையோ சிராத்த திதியாகக் கொள்ளலாம்.

இவருக்கு உத்தரகிரியை செய்தபின் இவர் ஜீவித்திருந்து திரும்பி வந்தால், நெய் தடவி ஸ்னானம்

செய்வித்து ஜாதகர்மம் முதல் விவாஹம் வரை மறுபடி செய்விக்க வேண்டும்.

மரண காலத்தில் கிரியை செய்யமுடியாதபோது ஆடி புரட்டாசி மார்கழி மாசி அச்வதி பூசம் மகம் மிருகசீர்ஷம், ஹஸ்தம் சித்திரை ஸ்வாதி அனுஷம் மூலம் திருவோணம் அவிட்டம் இவற்றில் செய்யத் தொடங்கலாம். செவ்வாய் வெள்ளி கர்த்தாவின் ஜன்மானு ஜன்மத்திரி ஜன்மநக்ஷத்திரங்கள் கூடாது. 45 நாட்களுக்குள் செய்வதானால் நாள் பார்க்கத் தேவை இல்லை.

மாதாவின் ஆசௌசமத்தியில் பிதா இறந்தால், மாதாவின் மரணதினம் முதல் உதகதானம் முதலிய வற்றைச் செய்து 11வது நாள் ஏகோத் தீஷ்டம் செய்யவேண்டியது. பிதாவின் மரண தினம் முதல் 10 நாள் அவரது கிரியையைச் செய்து 11வது நாள் ஏகோத்திஷ்டம் செய்ய வேண்டியது.

பிதாவின் ஆசௌசமத்தியில் மாதா இறந்தால், பிதாவின் தசாஹத்தன்று மாதாவின் உதகதானம் பிண்டதானம் முதலியவற்றை முடித்து, பிதாவின்11வது நாளில் பிதாவிற்கு ஆத்ய சிராத்தம் செய்து மாதாவிற்காக 1½நாள் சௌசம் இருந்து மாதாவின் 11வது தினத்தில் மாதாவின் ஆத்யசிராத்தம் செய்யவேண்டியது.

மாதாவின் ஆசௌசமத்தியில் பிதா இறந்தால் பிதாவின் ஸபிண்டீகரணத்தை 12 வது நாளில் செய்து, மாதாவின் ஸபிண்டீகரணத்தை 45 வது நாள் அல்லது அதன் பிறகு செய்யவேண்டியது. பிதாவின் ஆசௌச

மத்தியில் மாதா இறந்தால், மாதாவின் ஸபிண்டீ கரணத்தை 12வது நாளில் செய்து பிதாவினுடையதை 45வது நாள் அல்லது அதன்பிறகு செய்ய வேண்டும்.

மாதா பிதாக்கள் சேர்ந்தே மரித்தாலும், ஒருவர் தகனத்திற்கு முன் மற்றவர் மரித்தாலும், பிதாவுடன் மாதா அனுமரணம் செய்தாலும், இருவருக்கும் சேர்த்தே கிரியை. சிதை ஒன்று. உதகதானத்திற்குக் குண்டம் ஒன்று. சிலை வாஸோதகம், திலோதகம் தனித்தனி. சாந்தி ஹோமம் விஷ்ணு பாகம் இவை ஒன்று. நிமித்த வரணம், ஸோதகும்ப சிராத்தம், நவசிராத்தம், ஏகோத்தரவிருத்தி சிராத்தம், விருஷபோத்ஸர்ஜனம், பிரேத ஹோமம், அர்க்க்யம், போஜனம், பிண்டம், தக்ஷிணை தனித்தனி.

மாதா பிதா தவிர மற்றவர் சேர்ந்திறந்தால், மரணக்கிரமப்படி அல்லது அது தெரியாவிடில் ஸம்பந்தக்கிரமப்படி கிரியைகள். பத்னி,(பதி) சகோதரன், புத்ரன், பௌத்ரன், சகோதரனின் புத்திரன், மாட்டுப்பெண், சகோதரி என்பது ஸம்பந்தக் கிரமம். இந்த ஸம்பந்த வரிசையையும் தாண்டிய ஸபிண்டராகில், மரணக்கிரமம் தெரியாவிடில், வயதின் கிரமமாயும் கிரியை செய்யலாம்.

இறந்தவள் கர்ப்பிணியாயின், 7 மாதம் கடந்திருந்தால் வயிற்றைக் கீறிச் சிசுவை வெளியே எடுக்க வேண்டும். அது ஜீவித்திருந்தால் அதனை ஸ்னானம் செய்வித்துச் சேர்த்துக் கொள்ளலாம். இறந்திருந்தால் தாயின் காலடியில் அதனைப்புதைத்து இறந்தவளுக்குக் கிரியை செய்யலாம். பிராயச்சித்தம்

உண்டு. பதினோராவது நாளில் பதியும் புத்திரனும் ஜீவித்திருக்க பத்தினி மரித்தால் பசுமாட்டுடன் விருஷபோத்ஸர்ஜனம் செய்ய வேண்டும்.

**ஏகோத்திஷ்டம்**

ஏகோத்திஷ்டத்திற்கு பிராம்மணன் கிடைத்தால் அவனை வரித்து சிராத்தம் செய்யலாம். கிடைக்கா விடில் அக்கினியில் ஹோமமாகச் செய்யலாம்.

11வது நாள் ஆத்யமாஸிகம், 27 வது நாளுக்கு மேல் 3 நாட்களுக்குள் முதல் ஊனமாஸிகம், 40 தினங்களுக்கு மேல் 5 நாட்களுக்குள் த்ரைபக்ஷிகம் 170 நாட்களுக்கு மேல் 10 தினங்களில் ஊனஷாண் மாஸிகம், 340 தினங்களுக்கு மேல் 15 தினங்களில் ஊனாப்திகம், பதினோரு அனுமாஸிகங்கள் என 16 சிராத்தங்களை ஏகோத்திஷ்டம் என்பர். ஊனாப்திகத் திற்குப் பிறகே முறைப்படி ஸபிண்டீகரணம் செய்ய வேண்டும். அதுவரை முக்கியகர்த்தா ஜீவித்திருப்பது நிச்சயமில்லை. ஸபிண்டீகரணத்துக்கு முன் கர்த்தா இறந்தால் அதுவரை செய்த கர்மா பூர்ணமடையாது. அதனால் 11ம் நாளே ஆத்ய மாஸிகத்தைத் தொடர்ந்து மற்ற 15 மாஸிக – ஊனமாஸிகங்களை ஆகர்ஷித்து ஆமமாகச் செய்து விடுவது மரபு. மறுநாள் ஸபிண்டீ கரணம் செய்து இது பூர்த்தியாகிவிடும். பிரேதநிலை நீங்கி பித்ருலோகம் அடைய இது உதவும். ஸபிண்டீகரணம் தான் பித்ருத்தன்மையைத்தருவது. அதற்குமுன் சிராத்தம் செய்வதால் அந்த பிரேத்னை மட்டுமே குறித்துச் செய்யபபடுவதால் இவற்றை ஏகோத்திஷ்டம் என்பர். ஸபிண்டீகரணத்திற்குப் பின்,

முக்கிய காலத்தில் செய்யாத தோஷம் போவதற்காக அவை உரிய காலத்தில் செய்யப்படுகின்றன. ஆனால் அப்போது பிரேத நிலை நீங்கி விடுவதால் ஏகோத்திஷ்டமாகச் செய்யாமல் பார்வண சிராத்தம் போல பிதா பிதரமகர் பிரபிதாமகர் என்ற மூவருக்கும் (மாதாவானால்)மாதா பிதாமஹீ பிர்பிதாமஹீ என்ற மூவருக்கும் வரணம் செய்வர்.

ஸந்யாஸிக்கு பிரேதநிலை இல்லை. அதனால் ஏகோத்திஷ்டமோ ஸபிண்டீகரணமோ இல்லை. ஸபிண்டீகரணத்தன்று பார்வண முறையில் சிராத்தம் செய்வர்.

**ஸபிண்டீகரணம்**

மரணமடைந்தவர் பிரேத நிலை நீங்கியதும் பித்ருநிலை பெற்று பித்ருலோகத்திற்குள் வசிக்கின்றனர். அவர்கள் வஸு ருத்திரர் ஆதித்தியர் என்ற மூவர் வடிவில் இருக்கின்றனர். மரித்தவரின் பிதா வஸுரூபர், மாதா வஸுரூபா. பிதாமஹர் ருத்திரரூபர் பிதாமஹீ ருத்ரரூபா. பிரபிதாமஹர் ஆதித்ய ரூபர். பிரபிதாமஹீ ஆதித்யரூபா. இவர்களுடன் இப்போது மரித்த பிதாவோ மாதாவோ சேர்கின்றார்கள். இவர்கள் வஸு நிலையை மரித்தவருக்கு அளித்து விட்டு, வஸுவாக முன்னிருந்தவர் ருத்ரராகின்றார். ருத்திரராக இருந்தவர் ஆதித்யராகிறார். ஆதித்யராயிருந்தவர் பித்ரு தேவதைகளுடன் ஐக்யமாகி விடுகிறார். இந்த நிலை மாற்றத்திற்கு உதவுவதே ஸபிண்டீகரணம் ஏற்கனவே பிண்டமேற்கத்

தகுதி பெற்றிருந்தவர் ஸபிண்டர். அந்நிலையை மரித்தவருக்கு அளிப்பதே ஸபிண்டீகரணம்.

முக்கிய கர்த்தா பத்தினி இல்லாத விதுரராக இருந்தால், அவருக்கு அடுத்த தம்பி பத்தினி உள்ளவராயின் அவரே ஔபாஸனாக்கினியில் இதற்கான ஹோமங்களைச் செய்வார்.

ஒரே சமயத்தில் மரித்தவருக்கான ஏகோத்திஷ்டமும் அவரது பூர்வபுருஷர்களான மூவருக்குப் பார்வண விதானத்தில் சிராத்தமும் நடைபெறுகிறது. காலர் காமர் என்ற விசுவேதேவர்கள், சிராத்தரக்ஷகரான மஹாவிஷ்ணு, மரித்தவர், மரித்தவரின் பூர்வபுருஷர்கள் மூவர். இவர்களுக்கு வரணம் செய்து ஏகோத்திஷ்ட . பார்வணவிதானங்களால் சிராத்தம். சிராத்த பிராமண போஜனம் வரை செய்து முடித்ததும், சிராத்த பிராமணர்களிடம் மேற்கொண்டு செய்ய வேண்டியதற்கு அனுமதிபெற்று முதலில் ஏகோத்திஷ்டத்திலிருந்த பிரேதபிதாவிற்கு விடைகொடுத்துப்பிறகு மற்றவருக்கும் விடை கொடுத்தனுப்பிவிட்ட மரித்தவரின் மூன்று பூர்வபுருஷர்களுக்கு பிண்ட பிரதானம் செய்து தனியே மரித்தவருக்குப் பிண்டம் வைத்துப்பின் ஏகோத்திஷ்ட சிராத்தத்தில் மரித்தவருக்காக வைத்த அர்க்கியத்தையும் பார்வண சிராத்தத்தில் பூர்வ புருஷர்களுக்காக வைக்கப்பட்ட அர்க்கியத்தையும் மந்திர பூர்வமாய்ச் சேர்த்து, அவர்கள் ஒருமித்துக் கலந்து ஸமாநோதகர்களாகி விட்டதாகப் பாவிக்க வேண்டும். பிரேதத்திற்காக வைத்த பிண்டத்தை மூன்று பாகமாக்கி, பூர்வபுருஷ

பிண்டங்களுடன் சேர்த்து மரித்தவர் ஸபிண்டராகி விட்டவராகப் பாவிக்க வேண்டும். இதனால் பிரேத நிலை நீங்கி பித்ரு நிலை வந்துவிட்டது. பிண்ட ஸம்யோஜனம் செய்யுமுன் கோதானம், நௌகாதானம், தசதானம், பஞ்சதானம், முதலியதானங்களைச் செய்து யமலோகத்தில் யமன் ஸபையில் இருக்கின்ற 12 சிரமணர்களைத் திருப்தி செய்யத் தானம் செய்யப் படுகிறது. பிண்டங்களில் ஆவாஹனம் செய்தவர்களுக்கு விடையளித்துப் பிண்டங்களை நதியில் விட்டு ஸ்நானம் செய்து வீடுதிரும்பி புண்யாஹ வாசனத்தால் சுத்தி பெற வேண்டும். (பார்வண சிராத்தத்தில் கடைசியில் செய்கின்ற தர்ப்பணம் இதில் இல்லை).

**ஸபிண்டீகரணத்தில் கவனிக்கவேண்டியவை:**

ஸபிண்டீகரணம் 12வது நாள் பொதுவாக நடைபெறும். 12 வது நாள் தவறினால் 13, 14, 15, 16, 17, 23வது நாளில் அல்லது 3வது பக்ஷம், 3, 4, 6, 11, 12வது மாதம், மங்களகர்மம் செய்வதற்காக நாந்தீ சிராத்தம் செய்ய வேண்டுமானால் அதற்கு முன் தினம், ஊனாப்திகத்திற்குப் பின்னானால் ஆப்திகத் திற்கு முந்திய தினம், அன்றும் தவறினால் ஆப்திக தினத்தன்று செய்ய வேண்டும். முதல் ஆப்திக தினத்தன்று ஸபிண்டீகரணம் செய்வதானால் ஆப்திக சிராத்தம் தனியாக இல்லை.

ஔபாஸனம் விடுபட்டிருந்தால் காலை அக்னி ஸந்தானம் செய்து ஔபாஸனம் செய்துவிடவேண்டும். நடுப்பகலில் ஸபிண்டீகரணம் செய்ய வேண்டும். மாத்தியான்ஹிகம் செய்தபின்னரே ஸபிண்டீகரணம்.

கர்த்தாவிற்குப் பிதா உயிருடன் இருக்கும் பக்ஷத்தில் அண்ணனுக்குக் கிரியை செய்ய நேர்ந்தால் பிதாவுக்கு முந்திய மூவருக்கு வரணம். மாதா இருந்தால் மாதாவிற்கு முந்திய மூவருக்கு வரணம். பிதாமஹர் உயிருடனிருந்தால் அவரை விட்டு மூவருக்கு என்று வரணம் செய்யும்போது கவனித்துச் செய்ய வேண்டும்.

**சர்மாவும் கோத்திரமும்**

பிதா மாதாவைத் தவிர மற்றவருக்குச் செய்யும் போது மரித்தவரின் பூர்வபுருஷர்கள் மூவரை வரணம் செய்ய வேண்டும். வரணம் செய்யப்படுகின்ற பூர்வ புருஷர் மரித்தவர் முதலியவரின் லௌகிகப்பெயரைக் குறிப்பிடாமல் நாமகரணத்தின் போது வைக்கப்பட்ட சர்மா என்று முடிகின்ற பெயரையே கொள்ள வேண்டும். மாதாமஹர் முதலியவருக்குச்செய்யும்போது அவர்களது கோத்திரத்தைக் குறிப்பிட்டே வரணம் செய்ய நேரும். அதனால் இரு வர்க்கத்துப் பூர்வ புருஷர்களின் 4–5 தலைமுறையினரான ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள நாமகரணத்தின்போது வைக்கப் பெற்ற பெயர்களையும் கோத்திரத்தையும் குடும்பத்தினர் எல்லோரும் அறிந்திருப்பது அவசியம். அந்தப் பெயர்களைக் குறிப்பிடாமல் செய்யப்படுகின்ற கருமங்கள் பலன்தராது.

ஸபிண்டீகரணம் செய்யாதிருந்தால் பிறகு முக்கிய கர்த்தா சுபகர்மா செய்யமுடியாது.

உரியகாலத்தில் ஸபிண்டீகரணம் செய்ய முடியாவிடில் நாள் பார்த்துச் செய்ய வேண்டும். கிருஷ்ண பக்ஷத்துப்

பஞ்சமி அஷ்டமி ஏகாதசி அமாவாசை மஹாலய பக்ஷம் இவை ஏற்றவை.

புத்திரன், தத்தபுத்ரன், பௌத்ரன், பத்னீ (பதி) ஸகோதரன் என்று நெருங்கிய கர்த்தாக்களின் வரிசையில் முன்னுள்ளவர் இல்லாவிடில் பின் உள்ளவர் செய்யலாம்.

மூத்தவனுக்கு மனைவி இல்லையானால், மனைவியுள்ள அடுத்தவன் செய்யலாம். தம்பி இல்லாதவராயின் மனைவி இல்லாத விதுரனும் பிரும்ம சாரியும் செய்யலாம். கர்த்தாவின் பத்தினி ரஜஸ்வலையாயிருந்தால் அவள் ஸ்னானம் செய்து சுத்தமான மறுநாளே செய்ய வேண்டும்.

பத்தினி அனுகூலமில்லாமல் விரோதித்துத் தனித்திருந்தால், அவளை அனுகூலமாக்க முயன்று அனுகூலமாகும் வரை எதிர்பார்க்கலாம். வருஷ முடிவு வரை எதிர்பார்த்தும் அனுகூலமாகாவிடில் ஆப்திகத் துக்குமுன் தனித்துச் செய்யலாம். பத்னி அனுகூலமாக இருந்து பதி தள்ளி வைத்திருந்தால் ஸபிண்டீகரணம் செய்யும் தகுதியை அவன் இழக்கிறான்.

மரித்தவருக்கு ஸந்ததி இருந்தால் அவர்கள் அருகிலில்லாத போது கௌணகர்த்தா 11ம் நாள் ஏகோத்திஷ்டம் வரை செய்யலாம். ஸபிண்டீகரணம் செய்ய முடியாது.

பத்தினி கர்த்தாவானால் வேறு கௌணகர்த்தா இல்லாவிடில் ருத்விக் மூலம் செய்யலாம். ருத்விக்கு உபவீதியாவே இவற்றைச் செய்வார்.

11 நாட்களுக்குள் செய்கின்ற பிரேதசிராத்தமும் ஸபிண்டீகரணமும் நைமித்திக சிராத்தம் என்ற வகையைச் சார்ந்தவை. அமாவாஸ்யையில் செய்கின்ற தர்சசிராத்தம், பிரும்மயஜ்ஞத்தின் அங்கமான தேவர்ஷி பித்ருதர்பணம் இவை நித்தியம் என்ற வகையைச் சார்ந்தவை. நைமித்திகம் செய்ய நேர்ந்தால் நித்தியம் செய்யவேண்டியதில்லை. நித்யம் செய்வதன் பலன் நைமித்திகத்தாலேயே கிடைத்து விடும்.

12வது நாளில் மாதாபிதாக்களுக்கு ஸபிண்டீ கரணம் செய்தால் அன்று வபனமில்லை. 45 நாட்களுக்குப் பிறகு செய்தால் வபனமுண்டு. மனைவி கருத்தரித்திருந்தால் ஸபிண்டீகரணத்திற்கான வபனமில்லை.

## பொதுக்குறிப்பு

1–24 மாதத்திற்குள் இறந்தால் கனனம், உதகதானம் இல்லை. 25–36 மாதங்களுக்குள் இறந்தால் துஷாக்னியில் தகனம், ஸஞ்சயனம், திலோதகம், பிண்டதானம் உண்டு. 37–48 மாதங்களுக்குள் இறந்தால் அவற்றுடன் நாராயணபலியும் உண்டு. 49–90 மாதங்களுக்குள் இறந்தால் ஸஞ்சயனம் மந்திர மில்லாமல் உண்டு. 61–90 மாதங்களுக்குள் இறந்தால், நக்ன சிராத்தம், நவசிராத்தம், ஏகோத்தரவிருத்தி சிராத்தம், விருஷோத்ஸர்ஜனம், ஆத்ய சிராத்தம் இவை மந்திரமில்லாமல் உண்டு. 91வது மாதத் திலிருந்து பாஷாணஸ்தாபனம் முதல் எல்லாம் மந்திரத்துடன் உண்டு.

உபனயனத்திலிருந்து 12 வயது வரை ஸபிண்டீ கரணம் தவிர மற்றவை உண்டு. விவாகமாகிவிட்டால் (வயது பார்க்காமல்) ஆணிற்கும் பெண்ணிற்கும் ஸபிண்டீகரணம் உண்டு. 25வது மாதம் முதல் உபனயனமாகாத ஆணிற்கும் விவாஹம்ாகாத பெண்ணிற்கும் எத்தனை வயதானாலும் துஷாக்னியில் ஏகர்ச்சவிதியால் தகனம். நாராயண பலி உண்டு. ஸபிண்டீகரணம் ஆப்திக பிரத்யாப்திக சிராத்தங்கள் இல்லை. ஸன்யாஸிக்கும் நாராயண பலியே. ஸபிண்டீகரணம் இல்லை. இவற்றிற்கான பல்வேறு முறைகள் தனித்தனியே உள்ளன.

**நாராயண பலி.**

ஸன்யாசி, குழந்தை, துர்மரணமுற்றவர் இவர்களுக்கும் புனர்தகனம் செய்ய நேரிடும்போதும் நாராயண பலி உண்டு.

ஆவிருத்தாத்பமாஸிகம் 11வ்து நாள் செய்ய முடியாமல் போனால் 12, 13, 17வது நாட்களில் செய்யலாம்.

பூர்ண வேதவித்தான ச்ரோத்ரியருக்கு பிரும்மமேத ஸம்ஸ்காரம் என்ற முறைப்படி உயிர்பிரியும் நிலையி லிருந்து தொடங்கி தகனம் முடிய விசேஷமான கிருத்யம் செய்யும் முறை உள்ளது.

**பதிமூன்றாம் நாள் கிருஹயஜ்ஞம்**

உதகசாந்தி, நவக்ரஹஹோமம் முதலானதைச் செய்து சந்தனம் குங்குமம் முதலியமங்களப்பொருள் பெற்று புத்தாடை கட்டிக் கொள்வர். பிராமண

போஜனம் செய்வித்து மங்களமுண்டாகக் கோரி வணங்குவர்.

இந்த கிருஹயஜ்ஞத்தை ஆண்டின் முடிவில் செய்யும் ஆப்திக சிராத்தத்தின் மறுநாளும் மறுபடி செய்வர்.

**மாதாபிதா தீக்ஷை**

மாதாவும் பிதாவும் இறந்த ஓராண்டுவரை க்ஷவரம், அப்பியங்கம், தாம்பூலம், உடல்உறவு கொள்வதில்லை. இதுதான் தீக்ஷை. மூத்தவனுக்கு மட்டும் இந்த நியமமெனச் சிலர். அண்ணன், தந்தையின் சகோதரன், மாதாமஹர் இவர்களது பத்தினி இவர் இறந்தால் 6 மாதம் தீக்ஷை உண்டு. தீக்ஷை முடிந்ததும் நல்ல நாளில் வபனம் முதலியவை செய்து கொள்ளலாம். ஆடி புரட்டாசி மார்கழி மாசி மாதங்களில் தீக்ஷாநிவிருத்தி செய்து கொள்ளக் கூடாது.

ஆஹிதாக்னியாக இருந்தால் தன் மாதா பிதா மரண ஆண்டிலும் வபனம் தவிர மற்றவற்றில் நியமனத்துடன் இருக்க வேண்டும். பர்வங்களில் வபனம் செய்து கொள்ளவேண்டும்.

**மாஸிகம் –அனுமாஸிகம் – ஸோதகும்பம்**

பிரேதநிலையிலிருந்தவர் பித்ரு நிலை அடைய ஓர் ஆண்டு காலம் ஆகும். நமது ஒரு ஆண்டு தேவர்களின் ஒரு நாள். பித்ருக்களும் தேவரே. அதனால் இறந்த தேவதினத்தின் மறுநாள் பித்ருநிலை. பிரேதனான ஜீவன் அதுவரை பல மாறுபாடுகளை

அடைகிறான். பூர்வசரீரவாஸனையால் தாகமும் பசியும் நடு நடுவே பாதிக்கக்கூடும். அந்த பீடை நீங்க ஆண்டு முழுவதும் அனு மாஸிக ஊனமாஸிக தினங்கள் நீங்கலாக தினமும் ஸோதகும்பம் செய்வர். அதற்குப் பிரதிநிதியாக தீர்த்தம் நிரம்பிய பாத்திரத்தையும் இளநீரையும் தானம் செய்வர். இது நித்ய சிராத்தம் எனப்படும். பூர்வசரீர வாஸனைப்படித் தினமும் சாப்பிடுவதும் நீர் பருகுவதும் வாஸனை யாகச் சிலகாலம் தொடரலாம் என்று இதனைச் செய்கின்றனர். அல்லது மாதம் ஒருமுறை மாஸிக சிராத்தத்தின் முன்தினம் செய்வர்.

வருஷ முடிவில் செய்யவேண்டிய ஸபிண்டீ கரணத்தை ஆகர்ஷித்து 12வது நாள் செய்தது போல் 12 அனுமாஸிகங்களையும் 4 ஊன மாஸிகங்களையும் 11ம் நாளே ஆக்ர்ஷித்துச் செய்யப்பட்டது. எனினும் உரிய காலத்தில் கர்த்தா ஜீவித்திருக்கும் வரை ஓர் ஆண்டு முடியும் வரை செய்வர். கர்த்தாவிற்கு வருஷநடுவில் தேகவியோகம் ஏற்பட்டாலும் ஸபிண்டீகரணம் ஆகிவிட்டபடியால் மரித்தவர் பிரேத் நிலை தாண்டி பித்ரு நிலை பெற்று விட்டார் என்பதே ஆகர்ஷணத்தின் முக்கிய நோக்கம்.

ஸபிண்டீகரணத்திற்குப்பின் நடப்பதால் மரித்தவரின் மூன்று பூர்வ புருஷர்களுக்கும் இது செய்யப்படுகிறது. அனுமாஸிகம் அந்தந்த மாதத்து மரித்த திதியில் நடைபெறுகிறது. ஊன மாஸிகத்தை நாள் பார்த்துச் செய்யலாம். 27–30 நாட்களில், 40–45 நாட்களில் 179–180 நாட்களில், 340–355 நாட்களில் ஒருநாள்

என நான்கு ஊனமாஸிகங்கள். பிரதமை, ஷஷ்டி, சதுர்தசி, அமாவாசை, வெள்ளிக்கிழமை, கிருத்திகை, கேட்டை, ஆயில்யம், முப்பூரம் இவைகளில் ஊனமாஸிகம் செய்யக்கூடாது. த்விதியை ஸப்தமி துவாதசி என்ற திதிகள், கிருத்திகை புனர்வசு, உத்தரம், விசாகம், உத்தராடம், பூரட்டாதி என்ற நட்சத்திரங்கள், ஞாயிறு செவ்வாய் சனி என்ற வாரங்கள் இவைகளில். 3 சேர்ந்தால் த்ரிபுஷ்கரம், 2 சேர்ந்தால் துவிபுஷ்கரம். இவற்றிலும் ஊனமாஸிகம் கூடாது.

இதற்கு வேதவித்தான பிராம்மணர் வரணத்திற்குக் கிடைத்தால் நல்லது. ஆனால் பிரேத நிலை பூர்ணமாக நிவிருத்தி ஆகவில்லை என்ற ஐயம் விலகாததால் இதற்கெனச் சற்றுத் தரம் குறைந்தவரை வரிக்க வேண்டிவருகிறது. ஆப்திக ப்ரத்யாப்திக சிராத்தங்களில் வரிக்கபட்டவருக்கும் நியமமும் பிராயச் சித்தமும் உண்டும். அதைவிட இதில் அதிக பிராயச்சித்தம் செய்ய வேண்டி வருகிறது. இதற்குப் பயந்தே வேதமோதியவர் ஏற்றுக் கொள்வதில்லை. கர்மம் ஸபலமாக இவர்கள் ஏற்பதே சிறந்தது. பிராயச் சித்தமாக காயத்திரீ ஜபம் அதிகம் செய்ய வேண்டியிருக்கும்.

ஸோதகும்பமும் பிதா முதலிய மூவரைக் குறித்துச் செய்கின்ற சிராத்தமே. ஆனால் கர்த்தாவிற்கும் போக் தாவிற்கும் பார்வணசிராத்தத்திற்கான நியமங்கள் இல்லை. பிரும்மயஜ்ஞும் தேவபூஜை செய்த பின்னரும் இதனைச்செய்யலாம். 12வது நாளன்று தொடங்கி

ஆப்திகம் வரை இது செய்யப்படுகிறது. இதற்கு வேத வித்துகள் வரணத்தை ஏற்றுக்கொள்கின்றனர். நியமம் தேவை இல்லை என்பதே காரணம்.

அனுமாஸிகங்கள் செய்து வரும்போது வேறு ஆசௌசம் நேர்ந்தால் தீட்டுப்போன தினத்தில் செய்ய வேண்டும்.

இடையில் விவாஹம் முதலிய சுபகர்மம் செய்ய நேர்ந்தால் முக்கியகர்த்தா இனிச் செய்யவேண்டிய அனுமாஸிகங்களை ஆகர்ஷித்து சுபகாரியத்திற்கு முன் நிக்ழ்கின்ற அனுமாஸிகத்தில் சேர்த்துச் செய்யலாம். விவா.ஹாதிகளுக்குப் பிறகு இவற்றை மறுபடி செய்ய வேண்டியதில்லை. ஊன மாஸிகத்தை ஆகர்ஷிப்ப தில்லை. மாதா பிதாவிற்கான அனு மாஸிகமாயின் அதனைத் தொடர்ந்து மறுபடி உரிய காலத்தில் செய்யத்தான் வேண்டும்.

ஜாதகர்மா, நாமகரணம், அன்ன பிராசனம் இவற்றிலும் சகோதரர் முதலானோர் செய்கின்ற பும்ஸன ஸீமந்தத்திலும் ஆகர்ஷிப்பதில்லை.

ஸபிண்டீகரணம் ஆனவர்களுக்கே நாந்தி சிராத்தத்தில் வரணம், விவாஹம் முதலியவற்றில் நாந்தீ சிராத்தம் செய்யவேண்டுமென்பதற்காகவே இந்த ஆகர்ஷணம். ஸபிண்டீகரணம் ஆகாவிடில் அனுமாஸிகங்களிலும் ஊன மாஸிகங்களிலும் பிரேத நிலை நீங்காததால் ஏகோத்திஷ்டமுறைப்படி சிராத்தம். அதனால் ஸபிண்டீகரணம் ஆகும் வரை சுபகர்மம் செய்யும் தகுதி இல்லை. இதனை முன்னிட்டும்

ஸபிண்டீகரணம் முன்னதாகச் செய்வது அவசிய மாகிறது.

**தர்ச சிராத்தம் முதலியவை**

ஆப்திகம் முடிந்த பிறகே அமாவாஸ்யை, மகாளயம், ஸங்கிரமணம் முதலியவற்றை சிராத்தமாகக் செய்யமுடியும். ஆண்டிற்குள் கிரஹணம் ஏற்பட்டால் அன்று தொடங்கி தர்ப்பணம் செய்யலாம். சிராத்தமாகச் செய்வதில்லை. தேவபூஜை, வேறு தேவர்கள் குறித்த ஹோமம் முதலியவை தானம், ஜபம் முதலியவற்றை விரிவின்றிச் செய்யலாம்.

அனுமாஸிகம் ஊனமாஸிகம், ஏகோத்திஷ்டம் ஸபிண்டீகரணம் இவைகளில் அபிச்ரவண மந்திர ஜபம் செய்வதில்லை.

# ஆறாம் பாகம்

## ச்ராத்தம் – 2 பித்ரு திருப்திக்காக

பரலோகம் உண்டு. பித்ருலோகம் உண்டு. அங்கு பித்ருக்கள் வசிக்கின்றனர். அவர்கள் வஸு ருத்திரர் ஆதித்யர் என்ற பிரிவில் அடங்குகின்றனர். நம் முன்னோர்களும் உடல் அழிந்ததும் பிரேத நிலையில் சிலகாலம் இருந்து அவர்களது பின் ஸந்ததிகள் செய்த நற்கர்மங்களின் பயனாகவும் அவர்கள் ஜீவித்திருந்த போது செய்த நற்கர்மங்களின் பயனாகவும், பிரேத நிலை நீங்கியவராய் பித்ருலோகத்தில் வஸு ருத்திரர் ஆதித்யர் என்ற மூன்று பிரிவுகளில் இடம் பெற்றவராக விளங்குகின்றனர். அவர்கள் அனுக்கிரகம் செய்யும் சக்தி படைத்தவர்கள். அவர்களை முறைப்படி வழிபடுவதால் எளிதில் திருப்தி அடையக்கூடியவர்கள்.

நேரிடைச் சந்ததியினரான புத்திரன் பௌத்திரன் சகோதரன் முதலானோரும் அதே கோத்திரத்தில் பிறந்து 7 தலைமுறைக்குட்பட்ட ஞாதிகளும் கோத்திரம் மாறிய பெண் மூலமான சந்ததியரும், மற்ற பலரும் இந்த சிராத்தங்களைச் செய்யலாம். தீட்டு காப்பது, அபரகர்மாவில் தகனம் உதகதானம் ஏகோத்திஷ்டம் முதலிய கர்மங்களில் ஈடுபடுவது போன்றதில் அவர்களுக்குள்ள கடமை முதலியவற்றால் இதை உணரலாம். இதனை சிராத்தம் – முதல் பாகம் உணர்த்துகிறது.

**சிராத்தம் மூன்று பிரிவுள்ளது**

1. நித்தியம் – அமாவாஸ்யையில் செய்கின்ற தர்சசிராத்தம், மஹாளயபக்ஷத்தில் செய்கின்ற மஹாளய சிராத்தம், ஆப்திக சிராத்தம், பிரத்யாப்திக சிராத்தம், தினமும் பிரும்மயஜ்ஞ தேவர்ஷி பித்ருதர்பண அங்கமான பித்ருயஜ்ஞும் இவையாகும். 2. நைமித்திகம் – மாதப்பிறப்பு, கிரஹணம் முதலிய புண்யகாலங்களில் செய்கின்ற சிராத்தம், விவாஹம் முதலியவை நடக்கும்போது செய்கின்ற நாந்தீமுக பித்ருச்ராத்தம். மரித்த 11 நாட்களுக்குள் செய்கின்ற நக்ன – நவ – ஏகோத்தரவ்ருத்தி – ஏகோத்திஷ்ட சிராத்தங்கள், ஸபிண்டீகரணத்தன்று செய்கின்ற ஏகோத்தரம் – பார்வண சிராத்தம், ஊனமாஸிகானு மாஸிகங்கள், ஸோதகும்பம் முதலியவை. 3. காமியம் – மன்வாதி, யுகாதி, கங்கா–யமுனா போன்ற புண்யதீர்த்த யாத்திரையில் செய்யப்படுகின்ற தீர்த்த சிராத்தங்கள் முதலியவை.

**சிராத்தங்களைச் செய்வதால் ஏற்படும் நன்மைகள்:–**

முக்கியமாக (1) எப்போதும் நம்மை வாழ்த்துகின்ற பித்ருக்களுக்குத் திருப்தியுடன் (2) அவர்களுக்குத் துணை வருகின்ற விச்வே தேவர்கள் என்ற தேவப் பிரிவினர் (3) கர்மாக்களைக் காப்பாற்றி நற்பலனைத் தருகின்ற மஹாவிஷ்ணு (4) ஹோமம் முதலியவற்றில் பாகம் பெறுகின்ற அக்கினி முதலிய தேவர்கள் (5) பிராம்மண போஜனம் எங்கு நடந்தாலும் திருப்தி அடைகின்ற ஸ்வர்கவாஸிகளான தேவர்கள் (6) பிண்ட தானத்தாலும் விகிரான்னத்தாலும் வேறுவழியில்

திருப்தியைப் பெற வாய்ப்பில்லாத நரகவாசிகளும், பித்ருலோகம் அடைய இயலாத நிலையில் உள்ளவரும், (7) அன்ன தானத்தால் நம் உற்றார் உறவினர் மற்ற உடன்வசிக்கின்ற மனிதர்கள், (8) காக்கைக்குப் பிண்டம் அளிப்பதால் நாம் அறிந்திராத பித்ருக்கள் எனப்பலர் திருப்தி அடைகின்றனர். அவர்களது திருப்தியின் பலனாக சிராத்தம் செய்பவருக்கு நோயற்றஸந்ததி, செல்வம், வம்சவிருத்தி, ஆரோக்கியம்; ஞானம், இம்மை – மறுமையில் மேன்மை இவைகளும் கிடைக்கின்றன.

சிராத்தம் செய்யாமல் விட்டவர், செய்நன்றி கொன்றவர் ஆகின்றனர். பித்ருசாபம் கூட நேரலாம். பெற்ற சீரையும் செல்வத்தையும் இழந்து துன்புறவும் நேரலாம். பித்ருசாபம் ஸந்ததியைப் பாதிக்கும் என்பர்.

அதனால் சிரத்தையுடன் சிராத்தம் செய்வதை முக்கியக் கடமையாக தைவவழிபாட்டை விட அதிகநியமத்துடனும் ஈடுபாட்டுடனும் செய்வர். வைதிககர்மங்களில் இதற்கு அதிக முக்கியத்துவம் உண்டு.

**பிரத்யாப்திக – ஆப்திக சிராத்தம்**

மரித்த மாதா அல்லது பிதா அல்லது வேறு பந்துவிற்கு முதல் ஆண்டின் இறுதியில் மரித்த மாஸம் பக்ஷம் திதி கூடிய தினத்தில் செய்யப்படுவது ஆப்திகசிராத்தம். இரண்டாவது ஆண்டு முதல் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டிலும் அதே மாதம் பக்ஷம் திதி கூடிய தினத்தில் செய்வது பிரத்யாப்திக சிராத்தம்.

**சிராத்த தேவதைகள்**

வசுக்கள் 8, ருத்திரர்கள் 11, ஆதித்தியர்கள் 12. இவர்கள் வடிவில், சிராத்தத்தை ஏற்கின்ற அவரவரது மூன்று பூர்வபுருஷர்கள் பங்கு பெறுகின்றனர். பிதாவின் சிராத்தமானால், பிதா, பிதாமஹர், பிரபிதாமஹர் என்று மூவர் பூர்வ புருஷர்கள். பிதாமஹர் உயிருடனிருந்தால் பிதா, பிதாவின் (பிது:) பிதாமஹர், பிதாவின் (பிது:) பிரபிதாமஹர் என்ற மூவர். மாதாவின் சிராத்தமானால், மாதா, பிதாமஹீ, பிது: பிரபிதாமஹீ என்ற மூவர். இவர்கள் பித்ருஸ்தானத்தில் வரிக்கப் பெறுகின்றவர்கள். இவ்வாறு மூவர் கணக்கிடப்பெறுகின்றனர்.

விச்வேதேவர் என்ற ஒரு தேவர் கூட்டம் உண்டு. அவர்கள் பன்னிருவர். அவர்களில் ஆப்திகம் பிரத்யாப்திகம் இந்த சிராத்தங்களானால் புரூரவர் ஆர்த்ரவர் என்ற இருவர் பித்ருக்களுக்குத் துணை வருகின்றனர். மஹாளய சிராத்தத்தில் துரு(த்வனி) ருசி(லோசன) என்ற இருவரும், நாந்தீமுக பித்ருசிராத்தத்தில் ஸத்யர், வஸு என்ற இருவரும், ஸபிண்டீகரணசிராத்தத்தில் காலர் காமர் (காமுகர்) என்ற இருவரும். ஸன்யாஸாங்க சிராத்தத்தில் ஸாது, குரு என்ற இருவரும் யாகத்தில் க்ரது, தக்ஷர் என்ற இருவரும் விச்வேதேவர்களாகி பித்ருக்களுக்குத் துணைவருகின்றனர்.

சிராத்தத்தைப் பூர்ண பலன் தரவல்லதாகச் செய்பவரும் சிராத்தத்திற்கு இடையூறுவராமல்

ராக்ஷஸபாதை இல்லாமல் செய்பவரும் சிராத்தஸம் ரக்ஷகரான மஹாவிஷ்ணு.

பித்ருக்கள், விச்வேதேவர் மஹாவிஷ்ணு என்ற மூவரின் ஸ்தானத்தில் மூன்று பிராம்மணர்களை முன்னதாகவே வரித்து அவர்களை நியமத்துடன் இருக்கச்செய்து சிராத்தத்தின்முதல் நாளிலே தன் வீட்டிற்கு அழைத்துச் செல்வர். சிலரது குலாசாரப்படி விஷ்ணுவிற்காக இடம்போட்டு அதில் ஸாளக்ராம சிலை வைத்து விஷ்ணுவாக ஆவாகனம் செய்து இலைபோட்டுப் பரிமாறித் தத்தம் செய்துவிடுவர். பிராம்மணரைத்தனித்து வரிப்பதில்லை. சிராத்தம் முடிந்ததும் அதில் ஒரு பிரும்மசாரியை அமர்த்திப் பூர்ணமாக உணவிட்டு மரியாதை செய்வர். அவர்கள் இருவரை வரிப்பர்.

**சிராத்தம் செய்கின்ற நேரம்**

பகலை 5 பாகமாக்கவும். ஒரு பாகத்திற்கு 6 நாழிகை(2 மணி 24 நிமிடம்) முதற்பகுதி – பிராத: காலம் – காலைநேரம் ஸூரியோதயம் 6 மணிக்கு என்ற கணக்கில் நேரம் குறிக்கப்பட்டுள்ளது. உதயநேரம் மாறுவதற்கேற்ப இதையும் மாற்றிக் கொள்ளவேண்டும். (6 மணி முதல் 8–24 மணிவரை) இரண்டாம் பகுதி ஸங்கவகாலம், முற்பகல் (8–25 முதல் 10–48 மணிவரை) மூன்றாம் பகுதி மத்யாந்ஹகாலம் நடுப்பகல் (10–49 முதல் –1–12 மணிவரை) நான்காம் பகுதி அபராஹ்ணகாலம் பிற்பகல் (1–13 முதல் 3–36 மணிவரை) ஐந்தாம் பகுதி ஸாயாந்ஹகாலம் – மாலை நேரம் (3–37 முதல் 6

மணிவரை). பிராத: காலம் – காயத்ரீ ஜபம் ஒளபாஸனம் முதலியவற்றிற்கான வேளை. மத்யாந்ஹகாலம் – மாத்யாந்ஹிகம் பிரும்மயஜ்ஞம் வைசுவதேவம் தேவபூஜை பித்ருதர்பணம் சிராத்தம் முதலியவற்றிற்கான வேளை. இந்த நடுப்பகலில் முதல் 2 நாழிகை (10–49 முதல் 11–36 மணி) கந்தர்வகாலம். இரண்டாவது 2 நாழி (11–37 முதல் 12–24 மணி) குதபகாலம். மூன்றாவது 2 நாழிகை (12–25 – முதல் 1– 12 வரை ரௌஹிண காலம். இவற்றில் குதபகாலம் என்ற நடுப்பகலே (11–37 முதல் 12–24 மணி) சிராத்தம் தர்ப்பணம் முதலானவற்றிற்கு மிகவும் ஏற்றது.

**சிராத்த திதி**

சிராத்தம் யாரைக் குறித்து செய்யப்படுகிறதோ அவர் இறந்த மாதம் பக்ஷம் திதியில் சிராத்தம் வரும். திதி இருநாட்களில் இருந்தால் என்று அபராஹ்னத்தில் (பிற்பகலில்) திதி அதிகநேரம் வியாபித்துள்ளதோ அது உகந்தது. இருதினங்களிலும் ஸமமாக இருந்தால் முதல் நாள் ஏற்றது. ஒரு மாதத்தில் இரு திதிகள் வந்தால் பிந்திய திதி தான் ஏற்றது. அதில் மாதப்பிறப்பு கலந்தால் முந்தியதிதியில் செய்யவேண்டும். இரு திதிகளிலும் ஸங்கிரமண தோஷம் இருந்தால் பிந்திய திதியில் செய்ய வேண்டும். ஒரே திதியானால் ஸங்கிரமண தோஷமிருந்தாலும் செய்யலாம்.

ஒரு மாதத்தில் திதியே இல்லையானால் முன் மாதத்தின் திதியில் செய்யவேண்டும்.

திதி மறந்துவிட்டால் கிருஷ்ணபக்ஷத்து அஷ்டமி ஏகாதசி அமாவாஸ்யை இவற்றில் ஒன்றில் செய்யலாம். எக்காரணம் கொண்டாவது உரிய திதியில் செய்ய முடியாவிடில் அன்று உபவாஸமிருந்து மறுநாள் செய்யலாம். திதியன்று தீட்டு இருந்தால் தீட்டு போகும் நாளில் செய்யலாம்.

**சிராத்தத்தில் வரிக்கப்படுபவர்**

இருவரையோ மூவரையோ குலமுறைப்படி முன்னதாகவே வரிக்கவேண்டும். வயதில் மூத்தவரை விசுவேதேவராகவும் இளையவரை பித்ருஸ்தானத்திலும் வைக்கவேண்டும். இருவரும் சகோதரராகவோ தந்தையும் புத்திரருமாகவோ இருக்கக் கூடாது. வேதமறியாதவர், நோயாளி, பஹிஷ்டையான மனைவியின் பதி, பத்னி புத்திரனில்லாதவர். (பத்னி இல்லாதவ ராயினும் புத்திரனிருந்தால் வரிக்கலாம்) முன் மூன்று நாட்களுக்குள் சிராத்தத்தில் வரிக்கப்பெற்றவர், என்னை வரிக்கவேண்டும் எனத்தாமே கேட்பவர், 3 மாதத்திற்கு மேற்பட்ட கர்ப்பிணியின் பதி, தன் பெற்றோர் இறந்து ஓர் ஆண்டுமுடியாதவர், மறுநாள் சிராத்தம் செய்ய விருப்பவர், அன்று காலை வபனம் செய்து கொண்டவர், குஷ்டம், சொத்தை நகம், சொத்தைப்பல் உள்ளவர், சிராத்தத்தில் கர்த்தா அல்லது பித்ருக்களானவரது கோத்திரத்தைச் சார்ந்தவர் இவர்களை வரிக்கக்கூடாது. நல்ல வேதவித்து, யோகி, ஞானி, ஸாமவேதி, தௌஹித்ரன் இவர்கள் வரிக்கச்சிறந்தவர். ஒரு கிருஹஸ்தர் மட்டும் கிடைத்தால் ஒரு பிரம்மசாரியை வரித்து

விசுவேதேவராக அமர்த்தலாம். கிருஹஸ்தரை பித்ருஸ்தானத்தில் வரிக்கலாம். பந்து, ஸகோதரர், மந்திரஸம்பந்தமுள்ளவர் கூடாது. தகுந்தவர் கிடைக்கா விடில் மாதாமஹர், மாதுலர், மருமான், மாமனார், குரு, மாப்பிள்ளை, கோத்திரமில்லாத பந்து இவர்களை வரிக்கலாம்.

**கர்த்தா – வரிக்கப்பெற்றவர் – நியமம்**

கர்த்தா சிராத்த மாதம் முழுவதும் நியமத்துடன் இருக்கவேண்டும். அல்லது 5 நாட்களாவது அல்லது சிராத்த பக்ஷத்திலாவது சிராத்தத்திற்குமுன் மூன்று நாளாவது நியமத்துடன் இருக்கவேண்டும். பிறர் வீட்டில் சாப்பிடக்கூடாது. குரு, மாமன், மாமனார், ஸகோதர் வீட்டில் சாப்பிடலாம். வபனம், அப்பியங்கம், ஸ்திரீ ஸங்கம் கூடாது. சிராத்தத்திற்கு முன் சுத்தி பெறச் சிலர் கூஷ்மாண்ட ஹோமம் செய்வர். பாபம் நீக்கித் தூய்மை தரவல்ல சிறந்த மந்திரங்கள் இதில் சொல்லப்படுகின்றன. தூய்மை பெற விரும்புபவர் இதனைச் செய்யலாம். ஔபாஸனம் தடைபட்டிருந்தால் மூன்று நாட்களுக்குமுன் தொடங்கிக் காலை மாலை செய்ய வேண்டும். ஔபாஸனாக்கினியில் தான் சிராத்த ஹோமம் நடக்கிறது. பிரும்மசாரி கர்த்தாவாயின் ஸமிதாதானம் செய்யலாம். அவன் ஸமிதாதான அக்னியில் சிராத்த ஹோமம் செய்ய வேண்டும். மூன்று நாட்களிலும் அணையாதபடி அந்த அக்கினியை உமிக்கு இடையே வைத்துக் குண்டத்தில் பாதுகாக்க வேண்டும். முடியாவிடில் முதல்நாள் மாலையில் ஔபாஸனம் தொடங்க வேண்டும்.

வரிக்கப்பட்டவரை தெய்வமாக நடத்த வேண்டும். அவமதிக்கவோ ஏளனம் செய்யவோ கோபிக்கவோ உத்தரவிடவோ கூடாது. சிராத்த தினத்தன்று கோபமும் அவசரமும் கூடாது. அன்று காலையில் நனைத்து உலர்த்திய உடையை அணியவேண்டும். அன்று தானம் வாங்குவதோ வேறொன்றைக் குறித்துத் தானம் செய்வதோ கூடாது. வேத அத்யயனம் அத்யாபனம் இரண்டும் செய்யக் கூடாது. காலையில் உரிய வேளையில் ஔபாஸனம் செய்துவிட வேண்டும்.

வரிக்கப் பெற்றவர் அன்றும் மறுநாளும் உடலுறவு கொள்ளக் கூடாது. அத்யயனம் பிரதிக்ரஹம் (தானம் வாங்குவது) கூடாது. வரணத்தை ஏற்றுக் கொண்டபின் மீறக்கூடாது. அன்று வபனம் செய்து கொள்ளக்கூடாது.

## சிராத்தத்திற்கு ஏற்றவை

தோல் நீக்கப்பெறாத உளுந்து, கோதுமை, எள், நெய், பசுவின் பால், நெய், தயிர், மோர், கங்காஜலம், தேன், வெள்ளிப்பாத்திரம் மிகவும் ஏற்றவை சொந்த வீட்டில் அல்லது வாடகைத் தருகின்ற வீட்டில் செய்யலாம். பிறர் இடத்தில் செய்யக்கூடாது. பயறு, பாகற்காய், பலாக்காய், மாங்காய், பழுப்பு சர்க்கரை, வெல்லம், கடல்உப்பு, கருணைக்கிழங்கு, சேப்பங் கிழங்கு, இஞ்சி, ஜீரகம், ஏலக்காய், அவரைக்காய், பிரண்டை, தூதுவளை, சர்க்கரைவள்ளிக்கிழங்கு, விளாம்பழம், மின்னக்கீரை, திப்பிலி, சுக்கு, பச்சை கற்பூரம், குங்குமப்பூ, வெள்ளரி இவை ஏற்றவை. தேங்காய், கடுகு, காயம், பூசணிக்காய், மிளகாய்

எலுமிச்சம்பழம், நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், எருமைப்பால், எருமைத்தயிர், எருமை நெய் இவற்றைச் சிலர் சேர்ப்பர். அவரவர் குலாசாரப்படி செய்யலாம்.

காராமணி, கொள்ளு, முருங்கைக்காய், கத்தரிக்காய், துவரம்பருப்பு, சுரைக்காய் மற்றும் நியமமுள்ளவர் உண்ணக் கூடாதவை. இவை தவிர்க்கத் தக்கவை.

உப்பு வெல்லம் நெய் தயிர் பால் இவற்றை ஜலம் தெளித்தும் அலம்பக் கூடியவற்றை அலம்பியும் சேர்க்கவேண்டும்.

**பாகம்**

பஞ்சாக்ஷரியோ அஷ்டாக்ஷரியோ ஜபம் செய்பவர், நீராடி ஈரவஸ்திரத்துடன் கச்சத்துடன் சமைக்க வேண்டும். ஆசாரமில்லாதவர் சமைக்கக்கூடாது. பஹிஷ்டை காலத்தை எதிர்பார்க்கிற ஸ்திரீயும் பஹிஷ்டையாகிக் குளித்த அன்றும் கர்ப்பிணியும் நோயாளியும் ஆகாரமேற்றவரும் சமைக்கக்கூடாது. பேசிக்கொண்டோ, வேறுபணியில் மனத்தைச் செலுத்திக் கொண்டோ அழுதுகொண்டோ தலை விரித்தோ, கோபம் தாபம் முதலியவற்றுடனோ சமைக்கக்கூடாது. பாகஸமயத்தில் மலஜலம் கழிக்க நேர்ந்தால் மறுபடி ஸ்நானம் செய்தே பாகம் செய்ய வேண்டும்.

புதுப்பாத்திரம் அல்லது நன்கு சுத்தி செய்த பாத்திரம் நல்லது. இரும்பு பித்ருக்களை விரட்டும்.

வெள்ளி பித்ருக்களை மகிழ்விக்கும். பித்தளை, வெண்கலப்பாத்திரங்கள் தோஷமற்றவை.

பசுஞ்சாணியால் வீட்டை மெழுக வேண்டும். மணிஒசை, கோலம் கூடாது.

**சிராத்தம் செய்யும் முறை**

தகுந்த பிராமணரை முன்னரேவரித்து, தகுந்த பொருளைக் கொண்டு உணவு தயாரித்துத் தூய்மையுடன் தூய்மையான இடத்தில் தூய்மையுள்ள மனைவி முதலியவருடைய உதவியுடன் மனத்தில் பூர்ண ஈடுபாட்டுடன் அவசரமின்றிச் செய்ய வேண்டும். பூர்ணமான முறைப்படி செய்ய இயலாவிடில் சக்தி உள்ளமட்டும் சிரத்தையுடன் செய்யலாம். எல்லாவற்றிற்கும் பிரதிநிதியுண்டு. சிரத்தைக்குப் பிரதிநிதி இல்லை.

விதிப்படி விஸ்தாரமாய் சிராத்தம் செய்ய இயலாதவன் ஸங்கல்ப விதியாய் ஆபத்காலத்தில் சிராத்தம் செய்யலாம். ஆவாஹனம், அக்னௌகரணம், ஸ்வதாநிநயனம், விகிரம், பிண்டதானம் இவை ஐந்தும் இந்த முறையில் இல்லை.

உணவு தயாரிக்க இயலாத நிலை, தேசாந்தரத்தில் வாசம், ஆபத்து நிலை, மனைவி முதலியவர் உதவ இயலாத நிலை, தீர்த்தயாத்திரை, சந்திர ஸூர்ய கிரஹணம் இவைகளில் ஆமசிராத்தமாகச் செய்யலாம். ஸங்கல்பம் செய்து பூர்ண உணவிற்குத் தேவை யானதைவிட 4 மடங்கு அரிசி பருப்பு காய்கறியைத் தக்ஷிணையுடன் தானம் செய்வதே ஆமசிராத்தம்.

ஆமசிராத்தமும் செய்ய முடியாத போது ஹிரண்ய சிராத்தமாகச் செய்யலாம். ஹிரண்யம் – பணம் பூர்ணமான தக்ஷிணை மூலம் இதனைச்செய்யலாம்.

ஹிரண்யமும் இல்லாதவர் பிண்டதானம் மட்டும் செய்யலாம். பசுவிற்குப்புல் கொடுக்கலாம். ஸ்நானம் செய்து முறைப்படி தர்ப்பணம் செய்யலாம். சிராத்த மந்திரங்களை ஜபிக்கலாம். ஆனால் அன்று முழுவதும் உபவாஸமிருக்க வேண்டும்.

ஆனால் சக்தியுள்ளவன் இந்த மாற்று முறைகளைச் செய்தால் பாபம் நேரும். ஆப்திகம் பிரத்யாப்திகம் இரண்டையும் முழுவிதானத்துடன் செய்வதே நன்மை தரும்.

கர்த்தா பிராமணரை வரித்து அவருக்கு அன்னமிடுவதால், மந்திரத்தால் பலம் பெற்ற அந்த அன்னம் பிதாமுதலியவர் எந்த நிலையை அடைந்திருந்தாலும் அவர்களுக்கேற்ற உணவாக அதுமாறிப் பூர்ணதிருப்தி அளிக்கும். ஆப்திகம் பிரத்யாப்திகம் இவற்றில் அளிக்கும் உணவு அவர்களுக்கு ஓராண்டிற்குத் திருப்தி தரும். தேவநிலை பெற்றிருந்தால் அமிருதமாக அது மாறும். பசுவாயிருந்தால் புல்லாகவும், மனிதனாக இருந்தால் அன்னமும் பானமுமாகும் அந்தந்த ஜீவன் எதனால் திருப்தி அடையுமோ அந்த வடிவிலும் மாறித்திருப்தி அளிக்கும்.

நடுப்பகலில் மாத்யான்னிகம் செய்தபின் ஸங்கல்பம் செய்து முதலில் விசுவேதேவரையும் பின்னர் பித்ருக்களையும் வரிந்து ஆஸனம் பாத்யம் அர்க்யம்

அளித்து கிருஸரம் தாம்பூலம் தந்து அப்யங்கஸ்னானம் செய்து வைக்க வேண்டும். (கிருஸரம் - எள்ளும் வெல்லமும் கலந்த பட்சணம். எள்ளும் வெல்லமும் கலந்து தருவது மரபு). கர்த்தாவும் ஸ்னானம் செய்து அன்று நனைத்து உலர்த்திய ஆடைதரித்துக் காலலம்பி ஸம்பிரதாயப்படி நெற்றிக்கு விபூதி கோபி சந்தனம் முதலியவற்றை அணிந்தோ அணியாமலோ ஆசமனம் செய்து தீர்த்தபாத்திரத்துடன் சிராத்தம் நடக்கின்ற இடத்திற்கு வரவேண்டும். வரிக்கப் பட்டுள்ளவரும் அப்படி நன்கு உலர்ந்த ஆடை அணிந்து கர்த்தாவின் ஸம்பிரதாயப்படி விபூதி முதலியவை தரித்து ஆசமனம் செய்து அமரவேண்டும்.

பரிஷத்திடம் அனுமதி பெற்று தீர்த்த பாத்திரத்துடன் வரிக்கப்பெற்றவர்களை மூன்றுமுறை வலம் வந்து வணங்கி மறுபடி அவர்களை விச்வேதேவராகவும், பித்ருக்களாகவும் (மூன்று பேரை வரிப்பதாயிருந்தால் விஷ்ணுவாகவும்) இருக்கக் கோரவேண்டும்.

பூர்வபுருஷர்களுக்கு அவர்களது நாமகரணத்தின் போது வைக்கப்பட்ட பெயரை ஆணானால் "சர்மா" வுடன் சேர்த்தும் பெண்ணானால் "தா" சேர்த்தும் கோத்திரத்துடன் குறிப்பிடுவது மிகவும் அவசியம்.

(கோத்திரம் தெரியாவிடில் காசியகோத்திரம் என்றும் "சர்மா" - "தா" - தெரியாவிடில் பிருத்வீஸத், அந்தரிஷஸத், திவிஷத் என வஸு - ருத்ர - ஆதித்யஸ்வரூபர்களைக் குறிப்பிடுவதுமுண்டு. இது

வேறு கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் பந்துவுக்குச் செய்கின்ற சிராத்தத்தில் பொருந்தும்).

விச்வேதேவர்களுக்கும் விஷ்ணுவிற்கும் செய்யும் உபசாரம் அஷதையால் உபவீதியாக நேராக விரல்களின் நுனியால் செய்ய வேண்டும். பித்ருக்களுக்கு அளிப்பதை பிராசீனாவீதியாக கையை மறித்துக் கட்டைவிரல் – தர்ஜனிக்கு இடையே வெளியாகும்படி எள்ளுடன் அளிக்க வேண்டும்.

ஆஸனமளித்தபின் பாத்தியமளிப்பர். பசுஞ் சாணியால் மெழுகிய இடத்தில் விச்வேதேவருக்குச் சதுரமாகவும், பித்ருக்களுக்கு மண்டலமாகவும் (விஷ்ணு உண்டானால் அவருக்குச் சதுரமாகவும்) மண்டலமிட்டு இருவரின் (மூவரின்) பாதஜலமும் ஒன்றுடன் மற்றொன்று சேராதவாறு நடுவில் மணலாலோ, ஈரவஸ்திரத்தாலோ அணைகட்டுவர். விசுவேதேவருக்கு உள்ள இடத்தில் தெற்கில் பித்ருக்களுக்குப் பாத்தியம் செய்யஇடம். அந்த இடத்தை தர்ப்பம் சந்தனம் அஷதை எள்ளு முதலிய வற்றால் பூஜைசெய்து முதலில் விசுவேதேவருக்கும் பின் பித்ருக்களுக்கும் காலலம்ப வேண்டும். காலலம்பும் போது பவித்ரத்தை வலது காதில் வைத்துக் கொள்ள வேண்டும். கால்களின் அடியிலும் மேலும் பசுவின் நெய்தடவி கணுக்கால்வரை அலம்ப வேண்டும். கணுக்காலுக்கு மேலும் உள்ளங்காலிலும் ஜலம் விடக்கூடாது. மனைவியோ சகோதரரோ ஜலம் விட வேண்டும். விஷ்ணுவை விசுவேதேவர் இடத்தில் அமர்த்திக் காலலம்பலாம்" காலலம்பிய ஜலத்தைக்

கர்த்தாவும் அவரது மனைவியும் தலையில் தெளித்துத் தான் அதனால் தூய்மை பெற்றதாக உணர வேண்டும். பாத்யம் விட்ட இடத்தின் வடகிழக்கில் கர்த்தாவும், கிழக்கே விச்வேதேவரும் விஷ்ணுவும் வடக்கே பித்ருவரணம் பெற்றவரும் ஆசமனம் செய்து சிராத்தஇடம் வந்து அமர்ந்தபின் ஆவாஹனம் செய்யவேண்டும். அர்க்க்ய ஜலம் மந்திரித்து வைத்து அதனால் அர்க்க்யம் அளித்து வஸ்திரம் அளிக்க வேண்டும்.

வெண்பட்டு அல்லது நூலாலான வஸ்திரம், இடுப்பாடை, உத்தரீயம், திருதீயவஸ்திரம் என்று மூன்று புத்தாடைகளைக் காலையில் நனைத்து உலர்த்திச்சுத்தமாக அளிப்பர். சக்தியில்லாதவர் பூணூலாவது தருவர். பின் பித்ருவரணம் பெற்றிருப்பவரிடம், ஹோமத்திற்காக அன்னத்தை சிராத்தத்திற்குப் பக்வமான அன்னத்திலிருந்து எடுத்துக் கொள்ள அனுமதி கோருவர்.

கிருஹஸ்தன் ஔபாஸனாக்னியை இங்கு கொணர்ந்து முறைப்படி மூட்டி ஹோமம் செய்ய வேண்டும். மனைவியை இழந்தவனாகில் விதுராக்னி ஸந்தான முறையிலும் பிரும்மசாரியாகில் ஸமிதாதான அக்னியிலும் ஹோமம்.

அக்னிக்கு முகாந்தம் வரை உள்ள உபசாரம் செய்து அடுப்பில் பாகமான அன்னத்தை அக்னியில் காட்டி நெய் தெளித்து முறைப்படி பித்ரு பிதாமஹர் ப்ரபிதாமஹர்களுக்கு ஹோமம் செய்து உத்தராங்க

ஹோமம் செய்து முடித்து அக்னியை வணங்க வேண்டும். இது அக்னிமுகமாக நடக்கின்ற பித்ருகர்மம்.

சமைத்தவற்றை இவர்களுக்கு அர்ப்பணம் செய்ய அன்னமிடும் இடத்தைச்சுத்தி செய்வர். எள்ளும் ஜலமும் தெளித்துத் தூய்மை பெற்ற இடத்தில் விசுவேதேவருக்கு சதுரமாக மண்டலமிட்டும் அதற்குத் தெற்கே வட்டமாகப் பித்ருக்களுக்கு மண்டலமிட்டும், கிழக்கே சதுரமாக மண்டலமிட்டு விஷ்ணுவிற்கும் போஜனஸ்தானம் கல்பித்து அதில் வாழை இலை வெள்ளித்தாம்பாளம் புரசிலை இவற்றால் போஜன பாத்திரம் அமைக்க வேண்டும். வாழையிலையாயின் அதன் நுனி கிழிந்திருக்கக்கூடாது. முதுகு நரம்பைக் கிழித்தெடுக்கக் கூடாது. உட்கார்பவரின் இடது கைப்புறத்தில் நுனியிருக்கும்படி இலையைப்பரத்த வேண்டும். இரண்டிலைகளை ஒன்றன் மீது ஒன்று இருக்கும்படி விரிப்பர். (உட்காருபவரின் அருகில் உள்ள இலையில் பழம் பாயஸம் நெய் இனிப்புப் பண்டங்களையும் எதிர்ப்புறம் உள்ள மற்றோர் இலையில் உப்பிலிட்டவை, பட்சணங்களையும் வழங்குவர்.) போஜனஸ்தானத்தில் மூவருக்கும் ஆஸனமிட்டு, இலைக்குக் கீழ் பாத்திராஸனமிட்டு ஜலம் தெளித்துத் துடைத்து நெய்விட்டு அபிகாரம் செய்து ஹோமம் செய்த அன்னத்தின் மீதியை பித்ரு இலையில் வைத்து உபவீதியாக ரக்ஷோக்னஸூக்தம் ஜபித்து அன்னம் தவிர மற்றதைப் பறிமாறச்செய்து விசுவேதேவருக்கு எதிரில் அமர்ந்து அவருக்கு அன்னம் வைக்கச்செய்து அபிகாரம் செய்து மந்திரபூர்வமாக பரிஷேசனமும்

தத்தமும் செய்து புக்த தக்ஷிணை தந்து அவர் விருப்பப்படி பரிசேஷசனம் செய்து கொள்ளக் கோரிவிட்டுப் பித்ரு இலையின் முன் அமர்ந்து அவருக்கு அன்னம் வைக்கச்செய்து அபிகாரம் செய்து மந்திரபூர்வமாக பரிசேஷசனம் தத்தம் புக்த தக்ஷிணாதானம் செய்து கயனின் ஸ்மரணத்துடன் அவர் விருப்பப்படி பரிசேஷசனம் செய்யக்கோர வேண்டும். விஷ்ணு இலையிலும் அன்னம் வைத்து தத்தம் செய்தபின் எள்ளு அக்ஷதை துளசியுடன் கையில் ஜலம் ஏந்தி விசுவேதேவர் பித்ருக்கள் விஷ்ணுவடிவில் அமர்ந்துள்ள பகவான் ஜநார்தனர் ஸ்ரீஹரி திருப்தி அடையட்டும் என்று பித்ருதீர்த்த முறையில் தர்ப்பத்தில் விட்டு கயைசிராத்தம் அக்ஷயவடம் என்று கயாக்ஷேத்ரத்தை 3 தடவை ஸ்மரித்து அமிருதோபஸ்தரணமளித்து பிராணாஹுதி முடிந்ததும் ஹஸ்தோதகமளித்து அவர்களைச் சாப்பிடச்செய்ய வேண்டும்.

அவர்கள் சாப்பிடும்போது சுற்றி ராக்ஷஸ பீடையைத் தடுக்க ரக்ஷோக்ன ஸூக்தம் புருஷஸூக்தம், அபிசிரவண ஸூக்தங்கள், இதிஹாஸ புராணங் களிலுள்ள பித்ருதிருப்திதரவல்ல கங்காவதரணம், வாமனாவதாரசரிதம் முதலியவற்றை அவர்கள் காதுகளில் விழும்படி சொல்லவேண்டும்

அவசரமின்றி இரவில் அவர்களுக்குப் பசிவராதபடி மௌனமாக வேண்டியவற்றைக் குறிப்பால் உணர்த்தியும் வேண்டாதவற்றைத் தடுத்தும் சாப்பிடக் கோரவேண்டும்.

சிராத்தப்பிராமணர் ஒருவரை ஒருவர் தொடக் கூடாது. நெய் பாயஸம் இவற்றை எறியக் கூடாது. மற்றெல்லாவற்றிலும் மீதி வைக்க வேண்டும்.

சிராத்தப் பிராமணர் ஒருவரது எச்சில் மற்றவரது எச்சிலில் கலந்து விட்டால், இருவரும் இலையில் கை வைக்காமல் தூக்கிக் கொள்ள, கீழே இலையை அகற்றி இடத்தைச்சுத்தி செய்துப் புதிதாக இலை போட்டுப் பரிமாறியபின் அதனைப்பரிஷேசனம் செய்து சாப்பிட வேண்டும்

போஜனம் முடிந்ததும் திருப்திகேட்டு அவர்கள் திருப்தி தெரிவித்ததும் விசுவேதேவரின் இலையின் முன் அமர்ந்து கொள்ள வேண்டும். போஜனத்திற் காகச் சமைக்கப்பட்ட அன்னத்தில் உதிரியாக இருகையளவும் விளாம்பழ அளவு ஒரு பிண்டமும் பிடித்து மனைவி கொண்டுவைப்பாள். விசுவேதேவரின் இலைமுன் உபவீதியாக ஜலத்தால் தெற்கிலிருந்து வடக்காகக் கோடிட்டு அதன்மேல் ஒருபிடி உதிரி அன்னத்தை (விகிரத்தை) தெற்கிலிருந்து வடக்காகத் தூவி மேல் ஜலம்விட்டு "அமுதம் பருகுகின்ற வாய்ப்பில்லாதவரும் யாகங்களில் பங்கில்லாதவருமான தேவர்கள் இதனால் திருப்தி பெறட்டும்" என்று கூறிவிட்டு எழுந்து பிரு இலைமுன் அமர்ந்து பிராசீனாவீதியாய் கிழக்கிலிருந்து மேற்காக ஜலத்தால் கோடிட்டு அதன்மேல் உதிரி அன்னத்தைத் தூவி "முறையான உத்தரக்கிரியை பெறாத குலப்பெண்கள் இதனால் திருப்தி அடையட்டும்" என்று கோரி ஜலம்விட்டுப் பிராசீனாவீதியாக பூமியில் விசுவேதேவர்

– பித்ருஇலைகளுக்கிடையே தெற்குநுனியாகத் தர்ப்பம் பரப்பி இடதுகாலை முட்டியிட்டு அமர்ந்து பிண்டத்தை வைத்து "என் குலத்தில் பிறந்து அக்னி இடப்பட்டோ இடப்படாமலோ இறந்தபித்ருக்கள் இதனைப்பெற்று மகிழ்ந்து சிறந்தகதி பெறட்டும்.'' என்றுகோரி எள்ளும் ஜலமும் விட்டு எழுந்து போஜனம் செய்தவர்களுக்கு உத்தராபோசனமளிக்க வேண்டும். பிண்டத்தைக் காக்கைக்கு இடவேண்டும். காக்கை உண்ணத் தொடங்கியதும் முதலில் பித்ருக்களை எழுப்பிப் பின் விசுவேதேவர்களை எழுப்பி அவர் கை கால்கள் அலம்பி ஆசமனம் செய்து வந்ததும் ஆஸனத்தில் அமர்த்தி திருப்தி கேட்டு தக்ஷிணை தாம்பூலம் தந்து மூன்று தடவை குடும்பத்துடன் வலம் வந்து நமஸ்கரிக்க வேண்டும்.

''இன்று செய்த சிராத்தம் முறைப்படி செய்ததாக அமைந்து பலனுள்ளதாக பித்ருக்களுக்குக் குறைவற்ற திருப்தி தருவதாக அமையட்டும்" என்று வேண்ட வேண்டும். அவர்களது அருளாசி பெற்றதும், மீதியுள்ள அன்ன வகைகளைக் கொண்டு பந்துக்களுடன் உணவேற்க அனுமதி கோரவேண்டும்.

''நாங்கள் ஒருவரையும் யாசியோம். யாசிப்பவர் களுக்கு நிறைய தருவோம். எங்களது சிரத்தை எங்களிடமிருந்து விலகக்கூடாது. வேதமும் குலமும் எப்போதும் அறுபடாமல் பெருகட்டும். உணவு நிறையக் கிடைக்கவேண்டும். அதிதிகளும் நிறைய எங்கள் வீட்டிற்கு வரவேண்டும்.' என்று அவர்களிடம் கோரி ஆசி பெறவேண்டும். சந்தனம் புஷ்பம்

முதலியவற்றால் மகிழ்வித்து பித்ருக்களிடமும் விசுவேதேவரிடமும் (ஸ்வஸ்திவாசனம்) ஆசிபெற்று தன் மேல் வஸ்திரத்தைக் கிழக்கு அல்லது வடக்கு நுனியாகப் பூமியில் போட்டு அவர்களின் பாதங்கள் படச்செய்து எடுத்துக்கொண்டு சிரமம் கொடுத்ததைப் பொறுத்தருளும்படி கோர வேண்டும். அவர்களை எல்லைவரை கொண்டுவிட்டு வரவேண்டும்.

சிராத்த ஹோமம் நடைபெற்ற அக்னியை போஜனம் முடிந்து காக்கைக்குப் பிண்டம் வைக்கும் வரை அணையாமல் பாதுகாக்க வேண்டும். அணைந்தால் அன்று உபவாஸமிருந்து மறுநாள் மறுபடி சிராத்தம் செய்ய வேண்டும்.

காக்கை பிண்டத்தைக் கிழக்கே எடுத்தால் செல்வம் பெருகும். தெற்கே எடுத்தால் நோய், மேற்கே எடுத்தால் வெளியூர் பிரயாணம், வடக்கே எடுத்தால் ஆயுள் குறையும் என எண்ணி இதனைச் சகுனம் பார்ப்பது போல் கவனிப்பவரும் உண்டு.

காக்கைக்கு வைத்ததைக் குரங்கோ நாயோ எடுத்தால் சிராத்தம் நஷ்டம். மறுபடி செய்ய நேரும்.

இலைகளை ஸ்வஸ்திவாசனம் ஆசிபெறுமுன் எடுக்க வேண்டும். பிண்டபிரதானம் ஆனபின் இடத்தைச் சுத்தி செய்யவேண்டும். எச்சில் இலையைப் பூமியில் குழிவெட்டிப் புதைக்க வேண்டும். நாய் எலி முதலியவை தீண்டாதபடி பாதுகாக்கவேண்டும். பசுக்களுக்குச்சிலர் அளிப்பர். சிலர் குளத்தில் அல்லது பாழுங்கிணற்றில் போடுவர். அன்றைக்கெல்லாம் அதனை மூடிவைத்திருந்து மறுநாள் பசுவிற்குத்

தருவர். பசுவிற்கு எச்சிலைக் கொடுப்பது முறையல்ல. மண்ணில் புதைப்பதே மேல். வேறு வழி இல்லாவிடில் உசிதமானதைச்செய்யலாம்.

பிராமணர்கள் சென்றதும் தெற்கு நுனியாக தர்ப்பங்களை இருகூறாகப் பரப்பி மாத்ருவர்கத்திற்கும் பித்ருவர்க்கத்திற்கும் இடம் போட்டு எள்ளும் தண்ணீரும் விட்டலம்பி ஹோமம் போஜனம் செய்து மீதமான அன்னத்திலிருந்து 6 பிண்டங்கள் செய்து அதனை மாத்ருவர்க பித்ருவர்கத்திற்கும் அவர்களைச் சார்ந்தவருக்கும் அளித்து பித்ருதீர்த்த முறைப்படி மறித்து எள்ளும் ஜலமும்விட்டு முன்வைத்திருந்த இருஅர்க்கிய பாத்திரங்களையும் சேர்த்து உள்ளங் கையால் மூடி இருவர்க்க பிண்டங்களையும் அப்பிரதக்ஷிணமாக பரிசேஷனம் செய்து தன்குலம் வளரப் பிரார்த்திக்க வேண்டும். பிண்டத்திலுள்ள பித்ரு தேவதைகளையும் வழியனுப்பிப் பிண்டபாத்திரத்தில் உள்ள உதிரி அன்னத்தைக் கர்த்தா முகர்ந்து உபவீதியாகி, ஆசமனம் செய்வர். பிண்டங்களை நீர்நிலையில் விடுவர்.

பிள்ளைப் பேறில்லாதவர் நடுவில் உள்ள பிதாமஹபிண்டத்தை எடுத்து நிவீதியாக மனைவி யிடம் தந்து சாப்பிடச்செய்வர்.

பிண்டத்தை முறைப்படி அகற்றிவிட்டு பிண்டத்தின் கீழ் பரப்பியிருந்த தர்ப்பத்தைச் சேர்த்து எள்ளும் ஜலமும் விட்டு தாய் தந்தை பந்து ஸகோதரர் இல்லாமலுள்ள முன்னோர்கள் இதனால் திருப்தி அடையட்டும் எனக்கோரி, உபவீதியாகிக் கையலம்பி

ஆசமனம் செய்து ஹோமபஸ்மத்தை ரக்ஷையாக நெற்றியிலிட்டு எல்லாவற்றையும் பிரும்மார்ப்பணம் செய்ய வேண்டும்.

அபிச்ரவணம் செய்தவருக்கு தக்ஷிணை ஆசார்ய தக்ஷிணை தந்து பூணூலை மாலையாக்கி ஸ்னானம் செய்தபோது தரித்த வஸ்திரத்தைப் பிழிந்துகொண்டு, "எங்கள் குலத்தில் கோத்திரத்தில் பிறந்து ஸந்ததி இல்லாதிருந்த முன்னோர்களுக்கு இந்த ஜலம் திருப்தி தரட்டும்" என்று கோரவேண்டும். உபவீதியாக ஆசமனம் செய்து பிரும்ம யஜ்ஞம் செய்யவேண்டும். பரேஹனி தர்பணமும் இன்றே செய்வதானால் அதன் பின்னரே பிரும்மயஜ்ஞம்.

சிராத்தத்திற்கு மறுநாள் பரேஹனி தர்ப்பணம் செய்ய வேண்டும். பிதா இருந்து மாத்ருச்ராத்தம் செய்தால் இந்தத் தர்பணம் இல்லை. சிராத்தம் செய்து மிகுந்துள்ள தர்ப்பை எள் இவற்றைக்கொண்டு மறுநாள் (பரே அஹநி) விடியற்காலை பிராம்ம முகூர்த்தத்தில் இதனைச் செய்ய வேண்டும். பல் தேய்க்காமல் தர்ப்பணம் செய்து பிறகு பல் தேய்த்து ஸ்நானம் செய்ய வேண்டும் எனச்சிலர். ஸ்நானம் செய்தே ஈரத்துணியுடன் செய்யலாம் எனச்சிலர். உதயமாகிவிட்டால் ஸ்நானம் ஸந்திசெய்து பிறகு தர்ப்பணம்.

நாந்தீ சிராத்தம், ஆப்திகம், ஸபிண்டீகரணம், அனுமாஸிகம் இவற்றில் இந்த தர்ப்பணமில்லை.

மறுநாள் தர்ப்பணம் செய்ய இயலாவிட்டால் அன்றே பிண்டபிரதானம் ஆனதும் இதனைச்செய்வர்.

இது மத்தியமமே. தர்சதர்பணம் போல் இதனைச் செய்ய வேண்டும். பித்ருவர்க்கத்திற்கு மட்டுமே தர்ப்பணம். மாதாமஹவர்க்கத்திற்கு அல்ல. வரிக்கப் பெற்ற பிராமணர் வாந்தி எடுக்கக்கூடாது. பிண்டம் உடையக்கூடாது. உணவு தயாரிப்பிலும் நோயற்றவரை வரிப்பதிலும் பிண்டம் உருட்டுவதிலும் அக்னியைக் காப்பாற்றுவதிலும் தூய்மையிலும் மிகுந்த கவனம் தேவை.

## இஷ்டபந்தி – பந்துபோஜனம் – பித்ருசேஷம்

கர்த்தா, ஸகோதரர்கள், ஸகோதரி, பெண், புத்திர பௌத்ரர்கள், தௌஹித்ரர்கள், ஸபிண்ட ஞாதிகள் இவர்கள் பித்ருசேஷம் சாப்பிடலாம். ஏகாதசி விரதம் இருந்ததாக ஆகும். ஞாதிகள் ஏகாதசிவிரதம் இருந்தால் சேஷத்தை முகர்ந்தால் சாப்பிட்ட பலனும் உண்டு. உபவாஸமுமிருக்கலாம்.

இறந்து பித்ரு நிலை பெற்றுவிடுகிறபடியால் தன்னைக்காட்டிலும் வயதில் சிறியவர் பத்னி முதலியவரின் சிராத்தசேஷம் ஏற்கத்தக்கதே. விவாஹமாகி, வேறு கோத்திரத்தைச்சேர்ந்த பெண் தன் தாய் தந்தை சகோதரன் இவர்களின் சிராத்த சேஷம் சாப்பிடலாம். ஆனால் விதவையாகில் சாப்பிடுவதில்லை. மாமனார் மாமா இவர்களின் சேஷம் தோஷமில்லை. பழம் கறிகாய் பால் தயிர் நெய் தேன் இவற்றிற்குத் தோஷமில்லை. 3 நாள் தீட்டுள்ள ஞாதிக்குச் சேஷ தோஷம் உண்டு. இவர்களும் ஞாதிகள் அல்லாதவரும் ஆசாரியரும் அபிச்ரவணம்

சொன்னவரும் தனியே சமைத்த உணவைச் சாப்பிடலாம். இது இஷ்டபந்தி.

**மற்றும் சில நியமங்கள்**

உப்பை நேரிடையாகத் தனியே வழங்கக்கூடாது. தாமிர பாத்திரத்தில் வைத்த தயிர் நெய் பால் மோர் இவைகளை வழங்கக்கூடாது. சத்துருவோ நல்ல நண்பனோ வரணத்திற்கேற்றவரல்ல. அப்யங்கம் செய்யக்கூடாத நாட்களில் எண்ணெய்க்குப் பதில் நெல்லிக்கனிகளை அரைத்துக் கொடுக்கலாம். அமாவாசை ஸப்தமி ஞாயிறு இந்நாட்களில் நெல்லிக் கனியும் தவிர்க்கத்தக்கதே. வெண்கலம், வெள்ளி, தாமிரம், இலை தொன்னை இவை அர்க்கியம் – போஜனம் இவற்றில் ஏற்றவை. புரசு இலை உண்கலனாக உபயோகிக்கத்தக்கது.

வெண்ணிற புஷ்பங்கள், தாமரை, அல்லி, ஜாதி, சண்பகம், மல்லிகை, துளசி, தாழை, முல்லை, மரு இவை ஏற்றவை. தாமரை தவிர செந்நிற புஷ்பங்கள் கூடாது.

ஒருகையால் உணவு வழங்கக்கூடாது. பழத்தைத் தவிர மற்றதை வெறுங்கையால் பரிமாறக்கூடாது. பருப்பு பாயஸம் நெய் இவற்றைச் சாப்பிடுபவரின் வலதுகைப்பக்கமும், மற்றதை இடதுபக்கத்திலும் வைக்க வேண்டும்.

அபிச்ரவணம் சொல்பவர் கிடைக்காவிட்டால் தானே இதிஹாஸபுராணங்களை வாசிப்பதும் புருஷ ஸூக்தமாவது சொல்வதும் நல்லது. தினமும்

ஔபாஸனம் செய்பவராயிருந்தால், அன்று மாலை செய்ய வேண்டும். ஔபாஸனத்தைப் பிறரைக் கொண்டு செய்யச் சொல்லலாம். அன்று மத்யான்ன போஜனமானபின் கர்த்தாவோ வரிக்கப்பட்டவரோ வேறொன்றும் சாப்பிடக்கூடாது.

கருப்பு எள் சிராத்தத்தில் மிகவும் அவசியமானதொன்று ராக்ஷஸர்களை விரட்டி பித்ருக்களுக்குத் திருப்தி தரக்கூடியது.

அவரவர் முன்னோர் செய்து வந்த முறையைப் பின்பற்றுவதே சிறந்தது. சிஷ்டாசாரம் குலாசாரம் தேசாசாரம் இவை வேறுபடலாம். ஆனால் தன் குலாசாரத்திற்கு முரண்படாத மற்றவர் ஆசாரத்தை ஏற்கலாம். வீட்டில் அல்லது வெளியிலுள்ள தன்குடும்ப வழக்கம் தெரிந்த பெரியோர்களிடமிருந்து முறைகளை நன்கு அறிந்து கொள்ள வேண்டும். குடும்பத்திலுள்ள அனைவருக்கும் ஒவ்வொருவரின் நாமகரணத்தின் போது வைக்கப்பட்ட பெயர் (சர்மா-தா) தெரிந்திருப்பது அவசியம்.

சமையல் செய்து எல்லாம் ஆறி அலர்ந்து போகக்கூடாது. சுடச்சுட சாப்பிடத்தக்கபடி வழங்குவது அவசியம்.

கர்த்தா தன் உடலில் ரத்தக்கசிவு ஏற்படக்கூடிய எதனையும் செய்யக்கூடாது. குச்சியால் பல்துலக்குவது கூட அன்றும் முதல் நாளும் தவிர்க்கத்தக்கதே.

ஆள்காட்டி விரலாலும் கட்டை விரலாலும் எள்ளை எடுக்கக்கூடாது.

தர்ப்பத்தை இடதுகையால் எடுக்கக்கூடாது. சிராத்தத்தில் வரிக்கப்பட்டவன் அன்று மாலை காயத்திரியை 10 தடவை ஜபித்து மந்திரித்த ஜலம் சாப்பிட்டால் தோஷம் நீங்கி ஸந்தியாவந்தனம் செய்யத்தகுதி பெறுவான்.

### புத்திரர்கள் சேர்ந்து சிராத்தம்

பங்கு பிரிக்கப்பட்டிருந்தால் சகோதரர் தனித்தனியே சிராத்தம் செய்வது நல்லது. பிரிக்கப் படாமலிருந்தாலும் தனித்துக்குடும்பம் நடத்திக் கொண்டிருந்தாலும் தனித்தே சிராத்தம் செய்யலாம். ஒரே குடும்பமாக ஒன்றாக இருந்தாலும் பங்கிடச் சொத்தில்லாவிடினும் தனிச்சிராத்தம் வேண்டாம் தனித்தனியே வாழ்ந்து கொண்டு சிராத்த தினத்தன்று ஒன்று சேர்வது சிராத்தத்திற்கு மட்டுமாக இருந்தால் நல்லதல்ல, தாயார் உயிருடனிருந்தால் அவள் இருக்குமிடத்தில் பித்ரு சிராத்தம் சேர்ந்து செய்வதில் தவறில்லை. மனைவி தன் கணவரின் சிராத்தத்தின் போது பிள்ளையுடனிருப்பது அவசியம்.

மூத்தவர் இருந்தால் அவரருகில் இருந்தால் போதுமென்பது எப்போதும் சேர்ந்திருப்பவர்களுக்கு மட்டுமே. தனித்தனியே சிராத்தம் செய்வதால் பித்ருக்களுக்கு அதிக திருப்தி. தெய்வமாகிவிட்ட பித்ருக்கள் பல இடங்களிலும் ஒரே சமயத்தில் இருக்க முடியும்.

---

# விரதங்களும் பண்டிகைகளும்

வருடப்பிறப்பு முதல் பங்குனி மாதம் முடிய ஒவ்வொரு மாதத்திலும் வரும் விரதங்கள் மற்றும் பண்டிகைகளின் மஹாத்மியம், கொண்டாடும் முறை மற்றும் அவற்றைச் செய்வதினால் கிடைக்கும் விசேஷ பலன்களை மிக அருமையாக விவரமாக விளக்கியுள்ள புத்தகம்.




விலை : ரூ. 35-00